நாட 729
Rs.
37

# துறந்த வாள்

(நாடகம்)

வீரசாவர்க்கர்

மொழி பெயர்ப்பு:

அபிநவம் ராஜேந்திரநாதன்

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

தேனாம்பேட்டை :: சென்னை

# துறந்தவாள்

(நாடகம்)

# அபிநவம் ராஜேந்திரநாதன்

(ம்கடாரு)

# துறந்தவாள்

நாடகம்

UNIVERSITY EXTENSION LIBRARY
12 MAR 1961
MADURAI

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனும்பேட்டை சென்னை-18.

அமுதம்—142
உரிமை பதிவு
முதற்பதிப்பு; செப்டம்பர், 1957

விலை ரூ. 3-20

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18.

# முன்னுரை

ஸ்ரீ விநாயக தாமோதர சாவர்க்கர் இந் நூற்ருண்டின் ஆதி சுதந்திர வீரர்; தியாகமூர்த்தி; தூய வாழ்வினர், அவருடைய தேசீய சித்தாந்தங்கள் சிந்தனையைத் தூண்டக் கூடியவை. நாட்டின் மற்ற தலைவர்கள், மக்களுடைய உள்ளங்களில் தூய தேச பக்தியையும் சுதந்திர ஆர்வத்தையும் வளர்த்திய பெருமை அவருக்கு உண்டு.

இலக்கியத் துறையிலும் அவருடைய மேதை சிறந்து விளங்குகிறது. அவர் இயற்றியுள்ள நாற்பதுக்கும் அதிகமான நூல்களில் சில மட்டும் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியுள்ளன. '1857 சுதந்தர யுத்தம்,' 'ஹிந்து சாம்ராஜ்ய சரித்திரம்' இரண்டும் மிக்க புகழ் பெற்றவை.

மராத்தியில் அவர் இயற்றியுள்ள "சன்யஸ்த கட்க' என்ற நாடகமே இப்போது "துறந்த வாளாக" மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது நவரசங்களும் ததும்பும் நாடகமாகும். பகவான் புத்தரின் பிற்கால வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சிலவற்றையும், அவருடைய தூய அஹிம்சையின் அரசியல் பலன்களையும் இது சித்தரித்துக் காட்டுகிறது. வீரனின் திட நெஞ்சையும், வீர மகளிரின் காதல் வாழ்வையும், பலன் கருதாது செயல் புரியும் ஞானியின் உள்ளத் தெளிவையும் இந் நாடகம் போற்றுகிறது.

தொழிலை ஒழித்துத் துறவறம் பூண்டு, அன்பைத் தழுவிக் கத்தியை யகற்றி மக்கள் வாழ்வாராயின், பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய் இவைகளிலிருந்து விடுபடலாம் என்று புத்த பிரான் போதிக்கிருர். அவர் பிறந்த சாக்கிய நாடு இதைப் பின்பற்ற முயல்கிறது. இவ் வாழ்வு முறை

யில் வீணர் மலிந்து வீரர் மறைவரே என்று கருதிய சேனு பதி விக்ரமசிம்மன் கூட புத்தர் பெருமைக்கு வணங்கித் துறவறம் பூண்டு வாளைத் துறக்கிறுன்.

இந்த வாய்ப்பில் நாட்டின் எதிரிகள் படைபலம் கொண்டு மக்களைத் தாக்கி வாட்டுகிறுர்கள். துறவு பூண்ட நாட்டில் நாட்டுப் பற்றும் வீரமும் அவிந்து கோழைத் தனம் மேலோங்குகிறது. வாளைத் துறந்த நாடு வாளுக்கே இரையாகிறது.

அந்நியர் வாளுக்கு அடி பணிய மறுத்து விக்ரமன் மகஞன வல்லபன் போர் புரிகிறுன்; பகைவர் கையில் சிறைப்படுகிறுன். அவனுடைய இளம் மனைவி சுலோசனு துள்ளி எழுகிறுள். ஆண் உடையும் போர்க் கோலமும் பூண்டு கடும் சமர் புரிகிறுள்.

எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்குமாறு மக்கள் விக்ரமனுக்குத் தூது விடுகிறுர்கள். நாட்டின் பொருட்டும் உலக நன்மையின் பொருட்டும் வாளை ஏந்த புத்த பிரா னிடம் அநுமதி கோரி விக்ரமன் கல்லும் உருக மன்றுடு கிறுன். அஹிம்சை மூர்த்தி இதற்கு இசைகிறுரா? விக்ர மன் அதற்கு மேல் என்ன செய்கிறுன்? வாளைத் துறந்து நாட்டையும் துறந்தாஞ? இல்லை! வாளைத் துறந்த துறவறத் தையே துறந்து விடுகிறுன்!

அப்படியும் நீண்டகால அஹிம்சை நோன்பால் வலி விழுந்த சாக்கிய நாடு எதிரியின் கையில் அழிந்துபோகிறது. இந்த நிலையில் தன் காதலன் தலையே போவதாயினும் சத் துருவைச் சரணடையும் கருத்தை உதறித் தள்ளிவிட்டுச் சுலோசனு போரில் குதிக்கிறுள். அந்தக் கடைசி நாளில் என்னவெல்லாம் நடக்கிறது!

போர் முனையில் தன் அருமை மைந்தனும் மருமகளும் வீர மரணம் எய்தியது கண்டு விக்ரமன் பூரிப்பே அடை கிறுன். எதிரியின் சேனைத் தலைவன் புத்தரையே இழி

வாகப் பேசி அவரை வெட்டிப் போட வாளை ஓங்குகிருன். விக்ரமன் வாள் அவனை வெட்டி வீழ்த்துகிறது. புத்தர் இப்போது என்ன சொல்லுகிருர்? "பற்றற்ற உயர் ஞானி யும் பெருந் தியாகியுமான விக்ரமரே! நிர்வாணத்துக்கு வெகு சமீபமாக வந்தும், அதை அடையப் பெருமல் இழந் தீரே!" என்று வருந்துகிருர். விக்ரமனே அவரை எதிர்த் துத் தம் கருத்தை அழுத்தம் திருத்தமாக வற்புறுத்து கிருன். "இந்தக் குற்றத்துக்காக எனக்கு நிர்வாணம் இல் லாமல் போனுல், அத்தகைய நிர்வாணத்தை நான் எள்ளி நகையாடுகிறேன்!" என்கிருன்.

இதுதான் வீர சாவர்க்கருடைய கொள்கையும். மகா னன்று மக்களுடைய, நாட்டினுடைய மானத்தையும் நலத்தையும் காப்பது; போர் வீரனுடைய வாள்! என்று வலியுறுத்தும் இந்த நாடகத்தின் சொல் அழுத்தம் மொழி பெயர்ப்பிலும் இருப்பதை வாசக நண்பர்கள் காணலாம்.

இந் நாடகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பின் சகல உரி மைகளையும் எமக்கே அருளிய மூல ஆசிரியரை வணங்கு கிறோம். அவர் அநுமதியின் பேரில் சில பகுதிகளை மொழி பெயர்க்காமல் விட்டிருக்கிறோம். 1929-ல் வெளியான மூல நாடகம் இப்போது 28 வருஷங்களுக்குப் பிறகு தமிழாக்கம் பெறுகிறது. இதை வாரந்தோறும் தொடராக வெளி யிட்டு வந்த 'தியாக பூமி'ப் பத்திரிகையாருக்கு எமது நன்றி.

24—8—57

அபிநவம்
**ராஜேந்திரநாதன்.**

தமிழ் மொழி பெயர்ப்பின் புத்தக, நாடக, சினிமா முதலிய எல்லா உரிமைகளும் தமிழ் மொழி பெயர்ப்பு ஆசிரியர்களுக்கே.

இவற்றுக்கு அநுமதி வேண்டுவோர்

ஸ்ரீ A. B. சுப்ரஹ்மண்யம் எம். ஏ. பி. எல்.

கோபிசெட்டிபாளையம் (ஈரோடு மார்க்கம்)

என்ற விலாசத்துக்கு எழுதிக் கொள்க.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| சுத்தோதனர் | — | சாக்கிய நாட்டு மன்னர் |
| சித்தார்த்தர் | — | புத்த பகவான், சுத்தோதனருடைய திருமகன் |
| மகாநாமா | — | சுத்தோதனருக்குப் பின் சாக்கிய மன்னன் |
| வித்யுத்கர்ப்பன் | — | கோசல நாட்டு மன்னன் |
| விக்ரமசிம்மன் | — | சாக்கிய சேனாபதி |
| சண்டன் | — | கோசல சேனாபதி |
| வல்லபன் | — | விக்ரம சிம்மனுடைய மகன் |
| சாகம்பட்டர் | — | சாக்கிய நாட்டு அந்தணன், கேடு கெட்ட ஒரு வீணன். |
| தாகம் சிங்கு | — | ஒரு போர் வீரன், வீணன் |
| சுலோசனை | — | வல்லபனுடைய காதல் மனையாள் |
| நளினீ | — | சுலோசனையின் தோழி |
| க்ஷாரா | — | சாகம்பட்டருடைய மனைவி |

மற்றும் தருமதேவன், சித்தார்த்தருடைய சிஷ்யர்கள், நாட்டியப் பெண்கள், சாக்கிய நாட்டுத் தூதர்கள், சிறுமிகள், போர் வீரர்கள், கோசல வீரர்கள், புத்த பிக்ஷுக்கள், பிக்ஷுணிகள் முதலானோர்.

★

# துறந்த வாள்

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 46 | 6 | சன்யா | சன்யாச |
| 68 | 4 | பேண் | பெண் |
| 75 | 8 | பேசும் | பேச்சும் |
| 83 | 20 | சிந்தனை | நிந்தனை |
| 114 | 14 | ஆவலால் | ஆதலால் |
| 115 | 26 | யளிப்பதே மக்க ளுலகுக்கு | யளிப்பதின்றேல் தீமைக்கு |
| 119 | 24 | ராஜ்யத்தின் உயி | ராஜ்யத்துக்கு |
| 137 | 19 | சாம்ராஜ்யத்தை | சம்சாரத்தை |
| 148 | 2 | உருக்கும் | இருக்கும் |
| 149 | 28 | என்னுடைய | உன்னுடைய |
| 150 | 4 | முன்காலத் | முன்காலச் |
| 163 | 9 | பிடித்து | சலித்து |
| 168 | 22 | அவதிப்புண்ட | அவமதிப்புண்ட |
| 176 | 14 | சேதம் | தேசம் |
| 177 | 4 | அடி | இடி |
| 183 | 17 | மனைவியின் | மணத்தின் |

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# துறந்தவாள்

## அங்கம் 1.

### காட்சி 1.

தவ வனத்தில் தேவியின் கோயில்.

[நாட்டியப் பெண்கள் பாடு கிறார்கள்.]

யாழிசை நன்றானால் நன்றாகும் நடனமே;
யாழிசையை மிகக்கீழ் உயர் படுத்தாதே;
யாழிசை நன்றானால் நன்றாகும் நடனத்தால்
பாழடை நரர்மனம் பறித்தே போவமே
சாலவே முறுக்கினால் சாய்ந்தறுமே தந்தி,
சாலவும் தளர்த்தினால் சாய்ந்திடும் சங்கீதம்;
ஞாலத்திலே இந்த யாழிசை தாழ்வது
போலும் இத்தோலுடல் பான்மை யறிவாயே.

[பெண்கள் பாடிப் போக, சித்தார்த்தரான கௌதமரும் கௌண்டின்யரும் வருகிறார் கள்.]

சித்தார்த்தர் : கௌண்டின்யா, இதுதான் அந்தப் பாட்டு. முன்னொரு நாள் இதைக் கேட்டதும் குரு மந்திரம் போல எமது உள்ளத்தில் பேரொளி

தோன்றியது. அவ்வொளியிலே தவ வனத்தின் இருளிலிருந்தும் நிருவாண மார்க்கத்தைக் கண்டு போதி விருக்ஷத்துக்கு நாம் போக முடிந்தது. உடலையும் ஐம் பொறிகளையும் வருத்தியழிப்பதால் மோக்ஷம் கிட்டும் என்ற கொள்கையைக் கொண்ட தவ மார்க்கத்தின் உண்மையைக் கண்டறிய நிரஞ் சனை நதி தீரத்தில் கடுமையான தேக தண்டனை செய்து வந்தோம். இது யாவரும் அறிந்ததே; மக்கள் யாவரும் பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய் இந்த நான்கு துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற வழியொன்று இருக்கிறதா என்று அறிய ஆவல் கொண்டு இந்தப் பிரதிக்ஞை செய்து கொண்டோம்.

விடுவித்திடுவேனே—உலகை
விட்டகலாத வேதனை நீங்கவே—(வி)
மனித வர்க்கம் இந்த மண்ணுலகிலே
ஜனனமரண சோகம் நீக்கும் அந்த
முயற்சியிலே மண்ணரசும் உறவும் மற்றும்
உயிரும் சிதைவதாயினும் சரியே—(வி)

இத்தகைய உறுதியுடன் துக்க மயமான வாழ் வைத் தியாகம் செய்ய எமது சாக்கிய ராஜ்யத்தையும் இளந்தேவி யசோதரையையும், அன்று பிறந்த மகன் ராகுலனையும், மற்றும் யாவற்றையும் துறந்து இந்த வனத்தில் வந்து தங்கினேம். அந்தக் காலத் தில் தினந்தோறும் தானிய மணியொன்று புசித்து, பட்டினி தாகம் சகித்து, கடும் நோன்பு பூண்டோம். அதனாலும் எமக்கு ஞானம் வரவில்லை. கடைசியில் இரவும் பகலும் மரண வாயிலில் தத்தளித்து, அத னால் ஆராயும் வன்மையையும் இழந்தோம். ஒரு நாள் அந்த வழியாக நாட்டியச் சிறுமிகள் இதே

பாட்டைப் பாடி வந்தார்கள். இதன் பொருள் என்ன தெரியுமா? “வீணையின் கம்பிகளை மிகவும் தளர்த்தினல் இசை எழும்பாது; மிகவும் முறுக்கினல் தந்தியே அறுந்துவிடும். இதைப் போலவே இந்திரியங்களின் நிலைமையும் ஆகும். இந்த உடலாகிய வீணையின் நிலைமையும் இது போன்றதே.”—இந்த ஐம்பொருளாகிய பரிகளை வீரனேபோல் அடக்கி, அவைகளால் நன்மையை மட்டும் பெறும் நிலைமையே மக்களை அறிவு வழியில் செலுத்தி, இன்பத்தைத் தந்து, இறுதியில் நிருவாணத்தையும் அளிக்கும். இந்தக் கொள்கை தோன்றியதும் உடலை வாட்டுவதை நிறுத்தி அன்னத்தை யுண்டோம். தக்க உணவும் கருமமும் கொண்டு போதி விருக்ஷத்தின் நிழலில் சமாதி எய்தி ஞான மார்க்கத்தின் வழியே நிருவாணத்தின் பேரின்பத்தை அநுபவிக்க முடிந்தது. கௌண்டியா, ஹிம்சையே நிறைந்த வேள்வி மார்க்கத்தின் கொள்கை உடல் வருத்தம் நிறைந்த தவ மார்க்கத்தின் சித்தாந்தமேயாகும். ஹிம்சையே நிறைந்த தவ மார்க்கத்தைப் பற்றி ததாகதரான புத்தரின் சித்தாந்தத்தை நீ அறிவாயா ?

கௌண்டின்யர் : புத்த பெருமானே, அறிவேன். வேள்வி முறை எளியதே யாகும்; கடினமன்று. கூடை கூடையாகச் சாணத்தைச் சேர்த்து, உருண்டை செய்து, ஒரு பெரிய தீ மூட்டி, ஆடு மாடுகளின் கால்களைக் கட்டி, அவைகளைக் காய் கறிபோல் ஆனந்தமாக அறுத்துப் போட்டு, அப்படியே அவைகளின் கழுத்து, நெஞ்சு, குடல் இவைகளையெல்லாம் மிக கம்பீரமாக மந்திரம் சொல்லிக்

கொண்டு, சரசர என்று துண்டு துண்டாக்கி, இந்தத் துண்டு இந்திரனுக்கு, இது வருணனுக்கு, என்று சொல்லி, இரத்தப் பெருக்கிலே எரித்துப் போடுகிற விஷயம் தெரியுமே! ஐயா, இப்படி ரத்தக் களரியான யாகத்தினுல் கடவுள் சந்தோஷப்படுவாராளுல் கசாப்புக் கடையினுல் அவருக்கு நிரம்பச் சந்தோஷம் உண்டாகவேண்டுமே. ஐயோ, இது கர்ம காண்டமில்லை; கொலைக் காண்டம், ஐயா, கொலைக் காண்டம்! இதனுல் சந்தோஷமடையும் கடவுளும் ஒரு கடவுளா? அது ஒரு பிசாசு, ராக்ஷசன்தான்! ஆடுகளையும் கன்றுகளையும் கொன்ருல் மோக்ஷம் கிடைக்கும் என்கிருர்களே, அதற்கு என்ன அடையாளம்? யாகத்தினுல் சொர்க்கம் கிடைத்தால் அந்தச் சொர்க்கத்திலும்கூட துக்கமே நிறைந்த தேவர்களின் கதைகளே இருக்கும். அதாவது கடவுளும் வஞ்சனை, கோபம், பயம், துக்கம், அதிருப்தி இவைகளிலிருந்து தப்புவதில்லை. அப்படியாளுல், புத்தபிரானே, மிருகங்களைப் பலி தருவதால் தேவர்களும் பித்ருக்களும் சந்தோஷமடைந்து மோக்ஷத்தைத் தருவார்கள் என்கிற இந்தத் தந்திரத்தை யார் ஏற்படுத்தினுர்களோ அவர்கள் பலே வேலைக்காரர்கள் ஐயா! மக்களைச் சிக்க வைப்பதற்காகவே அப்படிச் செய்திருக்கிருர்கள்.

சித் : இல்லை, இல்லை, நாம் அவ்வாறு சொல்லமாட்டோம். அழிவற்ற, மூலாதார தத்துவத்தைச் சோதித்துணர மக்கள் கையாண்ட முதல் முயற்சியே இதுவாகும். இந்த முயற்சி மெச்சத் தக்கதே. ஆளுல் இந்த முயற்சியின் முறையானது அறிவு மயக்கமே

யாகும் என்று ஆய்ந்துணர்ந்த பின்னரும் அறிவுள்ளவன் இதைக் கையாளுவானு? மெய்வருத்தும் தவத்தாலும் பல கட்டுப்பாடுகளாலும் மனிதனது உடலிலும் ஆற்றலிலும் மாறுதல் தோன்றும் முறையை அறியலாம். ஆனுல் துன்பங்களினின்றும் விடுதலே பெற்று நீண்ட அமைதி எய்துவதற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லே. ஹிம்சை வடிவமான யாகமும், சரீர தண்டனேயான தவமும் நிருவாணத்துக்கு உரிய மார்க்கங்கள் அல்ல. நிருவாணத்தின் மார்க்கமானது ஆசையை ஒழித்தலே. அதற்கு வழி இதுவே. கூடுமட்டும்

அல்லது அகற்றியே நல்லது செய்க;
வல்லவன் புத்தனும் சொல்லுவ திதுவே-

கௌண்: ஐயா, இந்தத் தவ வனத்தில் தாங்கள் எனக்குத் தேக தண்டனேயின் அதிசய வகைகளேக் காட்டுவதாக இருந்தீர்களல்லவா ?

சித்: வா, இப்படி உள்ளே வா—

[திரை திறக்கிறது.]

இதோ, மயிர் மூடிக் கிடக்கும் இந்தக் கேசியைப் பார். தலேமயிரிலிருந்து கால் நகம் வரையிலும் சொல்ல முடியாத பலவித தேக தண்டனே! ஒரு மயிர் நீக்குவதும் பாவம் என்று இவன் நினேக்கிருன். தலே மயிர் முதுகிலும் முகத்திலும், மூக்கு மயிர் மீசை மீதும், மீசை மயிர் தாடி மீதும், தாடியின் மயிர் மார்பு இடுப்பின் மீதிலும்; ஒரே பாசம் மூடிக் கிடப்பதுபோல் மயிர் மயமான உடலேப் பார்த்தாயா ?

கௌண் : ஆனல் இவன் யார்? கோபம் கோபமாக மயிர் ஜடைகளைப் பிடுங்கிக் கொண்டிருக்கிருனே. ஒரு வேளை இவனுக்கும் துக்கம் என்பதே தெரியாது போலும்.

சித் : இவன் வாழ்நாள் முழுதும் மயிர் வளர்த்தும் மார்க்கத்துக்கு நேர் எதிரான மயிர் நீக்கும் மார்க்கத்தைக் கடைப் பிடித்தவன்; உடலில் மயிர் ஒன்று இருந்தாலும் பாவமே ஆகும் என்ற கொள்கையைக் கொண்டவன். அதிலும் அந்த மயிரைக் கத்தி கொண்டு நீக்குவதால் உண்மையான சரீர தண்டனை ஏற்படாது என்றெண்ணி, முதலில் மயிரை நன்ருக வளர்த்துப் பிறகு இப்படிக் கையில் பிடியாகப் பிடித்துக் கொண்டு ஒவ்வொரு மயிராகப் பிடுங்கிக் கொள்ளுகிருன்.

கௌண் : இவன் யார்? இரண்டு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு யாரையோ கூப்பிடுகிருனே என்ன?

சித் : அது பின்பு ஆகட்டும். முதலில் இதைப் பார். இந்தக் கை பிறந்த நாளில் எவ்வாறு தொங்கியதோ அவ்வாறே அதை வாழ்நாள் முழுவதும் வைத்திருப்பதே புண்ணியம் என்று இவன் நினைக்கிருன். கையைச் சற்றேனும் இப்படி மேலாகத் தூக்குவதில்லை. அதனல் அதன் எலும்பு அழிந்துபோய், கையை முன்னும் பின்னும் மேலும் கீழும் தூக்க முடிவதேயில்லை. இதற்கு நேர் விரோதமானதை இங்கே பார். பிறந்த நிலைமைக்கு மாருகக் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிருன். இது இவனுடைய கொள்கை. இந்த இரண்டு கைகளும் ஒருவிதமாக

மேலே தூக்கி யிருப்பதால் மரக்கட்டைகளைப் போல விறைத்துப் போய்விட்டன. ஒன்றுக்கொன்று மாறு பட்ட இந்த மார்க்கங்களில் எது உண்மையானது, எது நன்மையைத் தர வல்லது என்று எவ்வாறு சொல்வது ?

கௌண் : ஆனால் இது என்ன? இவர்கள் இப்படிப் பூமியை நக்கிக்கொண் டிருக்கிறார்களே ?

சித் : இவர்கள் மிருக விரதத்தை அனுஷ்டித்து வருகிறார்கள். சதா காலமும் மிருகங்களைப் போலவே கை கால்களால் நடந்து உட்கார்ந்து படுத்து, புல்லும் தழையும் தின்று பிழைக்கிறார்கள். இதோ இந்த இடத்தைவிட்டு நகருவதே யில்லை என்னும் விரதம் கொண்டவர்களைப் பார். ஒரே இடத்தில் எப்போதும் உட்கார்ந்து கொண்டே யிருக்கிறார்கள். மழையில் நனைந்து, பிறகு புழுதி பிடித்து, புற்றுப் படர்ந்து சர்ப்பங்கள் வந்தாலும் நகர்வதில்லை. யாரேனும் ஏதாவது வாயில் போட்டால் தின்பார்கள். ஒவ்வொரு சமயம் அவர்களின் பேரில் பாம்பு அன்பு காட்டுகிறது. ஒவ்வொரு சமயம் கடித்துக் கொல்லுகிறது. இதை விட்டு எந்நேரமும் நடந்துகொண்டே யிருக்கும் இவனைப் பார். இவன் இடம் விட்டு நகராதவனுக்கு நேர் விரோதமாக எப்போதும் நடந்து கொண்டே யிருப்பான். ஒரே இடத்தில் இருந்தாலும் சுற்றிக்கொண்டே யிருப்பான். ஆனால் அசைவதை மட்டும் நிறுத்துவதில்லை. முன்னால் நடந்து கொண்டே தூங்குவதையும் தூங்கிக் கொண்டே நடப்பதையும் சகஜமாகச் செய்கிறான். மாறுபட்ட முறைகளில் தவம் இயற்றும் இவர்கள் யாவரும்

தத்தமது முறைகளுக்கு ஏற்றவாறு புண்ணியமும் மோக்ஷமும் வருவதாக நினைக்கிறார்கள்.

இப்போது நடை விரதம் புண்ணியம் தருவதானால் நகராத நோன்பு பாவம் பயப்பதாகும்; அன்றி நகராமை புண்ணியமாயின் நகர்வது பாவமாகும். இவ்விருவரில் ஒருவன் தவறவேண்டியது நிச்சயமே. பெரும்பாலும் இருவரும் தவறியவர்களே. ஆனால் கேள். சந்தோஷத்தைத் தரவல்ல விஷயம் ஒன்றுண்டு; பெரிய நாசம் தேடிக் கொள்வதில் இந்தத் தவசிகள் மாறுபட்ட கொள்கைகளைக் கடைப்பிடித்தாலும் ஒருவருக்கொருவர் விரோதித்துக் கொள்ளுவதில்லை. அருகாமையிலிருந்து கொண்டே தத்தமக்கு விருப்பமான சாதனை முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். கௌண்டின்யா, விரதங்களின் முறைகள் எத்தனையென்று நாம் சொல்லட்டும்? கேவலம் சாப்பிடுவதற்காகவே ஐம்பது விரதங்கள். சிலர் சுவையறியும் இந்திரியங்களைக் கொல்வதற்காக ஒவ்வொரு பதார்த்தத்திலும் மிகக் கசப்பான ரசத்தைப் பிழிந்து உண்ணுகிறார்கள். சிலர் சாப்பிடாமல் பட்டினி விரதம் கொண்டவர்களாய் ஒன்றுமே உண்ணாமல் இருந்து வருகிறார்கள். ஆனால் வேறு சிலர் எல்லாம் சாப்பிடுவது என்ற நோன்பை மேற்கொண்டவர்களாய்ப் பசிவேளையில் எது கிடைக்குமோ அதைச் சாப்பிட்டால் புண்ணியம் என்று எதிரே தென்படும் எதையும் அருவருப்பின்றி அமைதியாக அருந்துகிறார்கள். சிலர் பஞ்சாக்னி நடுவே உட்காருகிறார்கள். இன்னும் சிலர் குளிர்ந்த நீரில் எந்நேரமும் கிடக்கிறார்கள். தேக தண்டனை தவத்தில் தலை சிறந்ததாகச் சொல்லப்படும் இதைப் பார். கட்

டைச் செருப்பில் இரும்பு முட்களை யமைத்து அவற்றின் கூரிய நுனிகளைத் தங்கள் பாதத்தில் ஏற்றிக் கொண்டு அப்படியே நடக்கிறார்கள். ஒருவன் மிளகாயைத் தீயில் போட்டு புகையெழுப்பி தூபம் எடுத்துக் கண்களை எரித்துக்கொள்கிறான். மற்றவனோ காய்ந்த இருப்புச்சட்டியின் மீது அமர்ந்து, அந்த துக்கம் போதாதென்று முட்களைத் தின்று, முட்கள் பரப்பிய படுக்கைமீது விழித்தபடியே எப்போதும் படுத்தவாறு இருக்கின்றான். இன்னும்—

கௌண்: எனக்கு இதே போதும் என்று ஆகிவிட்டது. போதி சத்துவரான சித்தார்த்தரே, எனக்கு இந்தக் கடுமையான மார்க்கத்தின் விவரங்களை அறியக் கொஞ்சமேனும் விருப்பமில்லை.

சித்: இவ்வுலகில் மனிதன் பாவம் புரிந்தால் நரகில் பயங்கர தண்டனை அநுபவிப்பான் என்பார்கள். ஆனால் பாவமே அறிந்திராத இந்த மக்கள் அந்த வேதனைகளை உலகில் தாங்களாகவே வலிய அநுபவித்து வருகிறார்கள். மேலும் இத்தகைய துன்பங்களைச் சகித்து வருவதே சரியான மார்க்கம், அதுவே மோக்ஷம் முக்தி என்றும் நினைக்கிறார்கள். இது என்ன புத்தி மயக்கம்! கௌண்டின்யா, உன் தாயாருக்கு உன் மீது அன்பு இருந்ததா?

கௌண்: மஹாராஜரே, நிரம்ப அன்பு இருந்தது. அவளது தாயன்பை எப்படிச் சொல்லமுடியும்?

சித்: அப்படியானால் பசித்தபோது நீ புல் தின்றாய், அல்லது தீயில் கையைச் சுட்டுக் கொண்டாய் என்றால் அவளுக்கு ஆனந்தமாயிருக்குமா? அல்லது நீ

வயிறு நிறைய உண்டு திடமாக நிம்மதியாக இருக்க வேண்டும் என்று அவள் விரும்புவாளா?

கௌண் : நான் உண்டு களித்து நோயின்றி ஆனந்த மாக இருக்க வேண்டும் என்றே அவள் விரும்பு வாள்.

சித் : அவ்வாருனால் இந்த மக்கள் கடவுளைத் தயாளு என்றும் தங்களுக்குத் தாய் தகப்பன் என்றும் எண் ணுவதில்லை. அவ்வாறின்றேல் தன் பக்தர்களைப் பட்டினியால் வாட்டி, காய்ந்த இருப்புத் தட்டில் சுட்டு அவர் சந்தோஷம் அடைவாரா? உயிருக்கு இழைத்த வஞ்சனையால் மகிழ்ச்சியடையும் கடவுளும் ஒரு கடவுளா? அது ஒரு தைத்தியனே ஆகும். உடலை வருத்தியோ, வேள்வியில் உயிர்க் கொலை செய்தோ கடவுளைத் திருப்தி செய்யக் கடும் நோன்பு நடத்திப் பட்டினி கிடப்பது கேவலம் அறியாமையே ஆகும். உலகத்தின் துக்கத்தை நிவாரணம் செய் யவே கிளம்பிய எமக்கோ இக் கடும் நோன்புகளின் துன்பங்களில் மீண்டும் வலிய விழுவது கடுமை யாகவே தோன்றுகிறது.

ஒரு சிஷ்யன் : (உள்ளே வந்து) ததாகதரான புத்த தேவர் தமது ஜன்ம பூமியாகிய கபிலவஸ்துவுக்குப் போக உத்திரவு செய்தபடியே நமது சங்கம் புறப்படு வதற்கு ஆயத்தமாகிறது.

சித் : நல்லது, போ. நமது வயது முதிர்ந்த தந்தை யாகிய சுத்தோதன மன்னர் நாம் அவர் அறியாத வாறு நாடு விட்டுக் காடு சென்ற நாள் முதல் வருந்தி வருந்தி மெலிவுற்று இருக்கிருர். ‘சீக்கிரமே, நான்

சாவதன் முன்னரே, ஒரு முறையேனும் என்னைக் கண்டு போ' என்று அவர் கேட்டுக் கொண்டவாறே நாமும் சாக்கிய ராஜ்யத்தின் தலை நகரத்துக்குப் போக நிச்சயித்திருக்கிறோம். நாம் ஆராய்ந்து தேறிய நான்கு உயர்ந்த உண்மைகளையும் சாக்கிய ராஜ்யத்தில் பரப்புவோம். கோசல நாட்டு அரசனையும் மகத மன்னனையும் போலவே சாக்கிய ராஜ குடும்பத்தையும் சேனைத் தலைவர்களையும் நமது சீடர்களாக்கி இவ்வுலகத்திலிருந்து ஆயுதச் சண்டை, ஹிம்சை, கலகம் இவைகளை எல்லாம் அறவே ஒழித்து, எங்கும் சாந்தியாகிய தரும ராஜ்யத்தை நாட்டுவோம். அது முடியாதாகில் அந்த முயற்சியில் எமது உடலை அர்ப்பணம் செய்வோம். கௌண்டின்யா, இந்த உலகத்தைப்போல துக்கம் ஒன்றும் இல்லை. இதை மட்டும் மனிதன் அறிந்தால் கேவலம் வெளிப் பார்வைக்கு மட்டும் லாபம் காட்டும் போர்களும் கலகங்களும் ஏற்படுமா? விஷத்தை நீக்கும் மாந்திரீகன் பாம்பு கடிக்க வேண்டும் என்று முயற்சி செய்து அந்த வித்தை பழகுவதில்லை. அவ்வாறே உயிரானது உலக உலையிலே குதிக்க முயற்சி செய்யாது. கௌண்டின்யா, உண்மையாகவே இந்த உலக ஆசைபோல் வேறொரு துக்கம் இல்லை. ஆசையற்ற சன்னியாசத்தைப் போன்ற சுகமும் இல்லை. அதோ, தூரத்தில் உள்ள அந்த மலையைப் பார், காட்டுத் தீ எப்படிப் பற்றி எரிகிறது!

*காட்டுத்தீ யப்பால் எரியுது—உயிரை*
*வாட்டி எரித்து நாற்புரமும் பரவுது*
*ஆசைத்தீ யுள்ளே எரியுது—அதில்*
*காசினி யாவும் பற்றி எரியுது.*

## காட்சி 2.

*சாகம்பட்டர் வீடு.*

*க்ஷாரா உட்கார்ந்திருக்கிருள். சாகம்பட்டர் உள்ளே வருகிருர்.*

**சாகம்பட்டர்:** அடி க்ஷாரே, மறுபடியும் சொல்கிறேன். இப்படி இந்த ஆஜாரத்தில் வந்து முழங்காலில் தலையைச் சார்த்திக் குந்தியிருக்கிருயே, வருகிறவன் போகிறவன் எல்லாம் ஆஜாரத்தின் வழியாகத் தானே வருவார்கள்? ஆஜாரம், அதாவது கூடம் என்ருல் வீட்டினுடைய சந்தைக் கூடம்தான். இதில் சும்மா சும்மா வந்து உட்கார்ந்து கொள்கிருயே. இப்படிச் செய்ய வேண்டாம் என்று இரண்டு வார்த்தை சொன்னுல் நீ திட்டுகிருர், அதட்டுகிருர், என்று சொல்லுவாய். பெண்கள் உட்காரும் இடம் என்ருல் அது சமையல் அறைதான்.

**க்ஷாரா:** சும்மா இருங்கள். சண்டைக்கு ஆரம்பித்தாயிற்ரு? ஆஜாரத்தில் உட்காரக்கூடாது என்ருல் நான் என்ன செய்யட்டும்? பெண்களுக்கு இடம் சமையல் அறை என்று சொல்லுகிருர்களா? சொல்லாமல் என்ன? ஆனுல் அந்தச் சமையல் அறையில் சமையல் செய்ய ஒரு தானியமணியாகிலும் நீங்கள் சம்பாதித்துக் கொண்டு வரவில்லையே. அப்படியானுல் அந்தச் சமையல் அறைக்கும் இந்த இடத்துக்கும் என்ன வித்தியாசம் கெட்டுப் போயிற்று? வேறு வீட்டுப் புருஷர்களைப்போல நீங்களும் ஆஜாரத்தில் உட்கார்ந்து கொண்டே தொழில் நடத்திப் பணத்தை கிணுகிணு என்று கொண்டு வந்து

கொட்டியளந்தால் நானும் மற்ற வீட்டுப் பெண் களைப்போல சமையல் அறையிலேயே அடைபட் டிருப்பேன்.

[பாடுகிருள்]

ஜோடி என்ன ஜோடியோ,
போடி எனக்குப் பிடிக்கவில்லை (ஜோ)

நான் அழகு, இவர் விகாரம்,
நான் பசுவே, இவர் நரியே;
குழந்தை போல நான் அப்பாவி,
குரங்குபோல இவரோ பாவி (ஜோ)

தேனேபோல இனிக்கும் என்னைத்
தெரிந்துகொள்ள யாரும் இல்லை;
ஏனே பாரில் எனக்குகந்த
ஆண்பிள்ளை கிடைக்கவில்லை (ஜோ)

சாக: அடி க்ஷாரே. நீ என்ன சொன்னல்தான் என்ன? அழகு என்றும் சுத்தம் என்றும் உருகிக் கொண்டிருக்கிருயே; அது ஏனே? உனக்குகந்த கணவன் என்று ஏங்கிக் கதறுகிருயே அது நான் தான் அடி, சந்தேகம் என்ன? இப்போதாவது தெரிந்ததா? ஏன் அழுகிருய்? உன்னைப்போலவே உன் புருஷனும் இருந்தால் அவனை ஆண் என்று சொன்னலும்கூட உண்மையில் அவன் ஒரு பெண் ணுகத்தான் இருக்க வேண்டும். பெண்களுக்கு எல் லாரும் 'அனுரூபவரப்ராப்திரஸ்து' அதாவது 'உன் னைப்போன்ற கணவன் கிடைக்கட்டும்' என்று ஆசீர்வாதம் பண்ணுகிருர்களே. அதனுடைய தப்பித

மான அர்த்தம் இந்த முட்டாள் பெண்களுக்குத் தெரிவதேயில்லே. பெண்களும் புருஷர்களும் பிறக்கும் போதே சமமாக இருப்பதில்லே என்று எல்லோர்க்கும் தெரிந்திருந்தும் இவர்களே ஜோடி செய்து வருகிருர் கள். ஆனல் கலியாணம் ஆகி விட்டாலோ இரண்டு பேரும் ஜோடிதான். இதனுல்தான் நான் சொல்லு கிறேன். உனக்குக் தகுந்த ஜோடியாக நான் இல்லே என்று—அடி ஜோடி சரியாக இல்லே என்ருல், அதற்குக் கடவுளே நொந்து என்னடி செய்கிறது? பின்னே அது இல்லே என்ருல் இல்லேதான்; வீணுக நொந்து கொள்ளுகிருயே.

க்ஷாரா: என் தலேவிதி அழவேண்டியதுதான். வேறு என்ன இருக்கிறது? புரோகிதரான நீங்கள் உங்களுடைய ஊதாரித்தனத்தாலும் கெட்ட நடத் தையாலும் எல்லாப் பணத்தையும் தொலேத்தாகி விட்டது. பணக்காரர்களின் நாகரிகத்தை விட்டு விட்டுப் பிழைப்பிற்குத் தொழில் இல்லாமல், இப் படிப் புரோகிதனுய் உட்கார்ந்துவிட்டீர்கள். ஆனுலும் இன்னும் நாலு முட்டாள்கள் உங்களேத் தேடிக் கொண்டும் வருகிருர்களே அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. அவர்களுக்காவது சங்கல்பமோ விகல் பமோ சொல்லி நாலு காசு சேர்க்கவேண்டும் என்று நான் சொல்லுகிறேனே. இல்லாவிட்டால் கூப்பிட் டாலும் அவர்கள் இந்தப் பக்கம் வருவார்களா? ஏற் கெனவே இரண்டு முறை அவர்கள் வந்துவிட்டுப் போய் விட்டார்கள். வீட்டிலோ தின்பதற்கு—ஏதா வது இருந்தால்தானே. இப்படிப்பட்ட நிலேமையில் தேடி வருகிறவர்கள் பணக்காரர்களாக இருக்க

வேண்டும் என்று இருந்தால் கஷ்டத்துக்கு என்ன குறைச்சல்? அதைத்தான் தினமும் சொல்லு கிறேன்.

சர்க: அடி க்ஷாரே, நீ சொல்வதிலே உண்மையிருக் கிறது. சரியாகத்தான் சொல்லுகிருய். இந்தக் கேள்வி பணக்காரர்களாய் இருப்பதைப்பற்றி யில்லை. இது சிரத்தையைப்பற்றிய ஒரு பெரிய பிரச்னை. அவரவர்களுக்கு இருப்பதில் தானதருமங்கள் செய் வதற்கு எத்தனை ஊக்கம் இருக்கிறதோ அது அல் லவா பெரிய கேள்வி. சில பணக்காரர்களுக்கு ஒரு சிறு பாக்கைக் கொடுப்பதானுலும் உயிரே போய் விடுகிறது போல இருக்கும். ஆனுல் சில ஏழை களோ உயிர் போவதாக இருந்தாலும் இரண்டு கை களாலும் தக்ஷிணையை வாரிவாரிக் கொடுப்பதை நிறுத்துவதில்லை. அப்படியானுல் தருமத்தில் உள்ள ஊக்கத்தை எப்படி அளப்பது என்ருல் அவனுல் எவ்வளவு தக்ஷிணை கொடுக்கமுடியும் என்பதைப் பொறுத்து இல்லை. ஆனுல் ரொக்கம்ரொக்கமாக எவ் வளவு கொடுக்க ஆசைப்படுகிருன் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஆகவே எவன் அதிக மாகத் தக்ஷிணை கொண்டு வருகிருனே அவனை மட்டும் இங்கு அழைத்துக் கொண்டு வா. சிரத்தை யில்லாத மற்றவர்களை வெளியே போகச் சொல்லு. க்ஷாரே, போய்ச் சொல்லு, உன் எஜமானர் சாகம்பட்டரின் உத்திரவு இதுதான் என்று சொல்லி விடு.

க்ஷாரா: அப்படி தக்ஷிணையின் பேரில் மட்டும் கண் வைத்திருந்தால் எப்படி முடியும்? ஒருவனிடத்தில் தக்ஷிணை இல்லாவிட்டால்—

சாக: அடி, அவனுக்கு சிரத்தையே இல்லை, ஊக்கமே கிடையாது என்றுதான் அர்த்தம்.

க்ஷாரா: ஆனால் தாங்கள் ஏதோ ஏழைப் பிராமணன் என்ருவது வாயிலண்டை பத்து எஜமானர்கள் வருகிருர்களே.

சாக: அடி க்ஷாரே, போதுமடி போதும்! பத்து எஜமானர்கள் வருகிருர்கள் என்று சொல்லுகிருயே. பெண்கள் தங்களுடைய கணவன் ஒருவனைத்தானே எஜமானர் என்று சொல்ல வேண்டும்? உனக்கு நான் ஒரு எஜமானன் போதுமடி போ. இதோ பார். அதிக தக்ஷிணை கொண்டு வந்தாலும் அவன் படிப்பில்லாதவனுக இருக்கவேண்டும். மூக்குக்கு மிஞ்சி மூக்குத்தி இருந்தால் உனக்குப் பிடிக்குமா? அதைப் போலப் புரோகிதனை எனக்கும் என்னைக் காட்டிலும் அதிகம் படித்த எஜமானன் பிடிக்காது போ.

*[பாணன் வருகிருன்]*

சாக: யாரது? பாணனு? ராஜபுத்ரனுன சித்தார்த்தனுடைய—அடே, அதாவது தற்போதைய புத்தனுடைய—சிங்கார அரண்மனையின் தடாகத்துக்குக் காவல் செய்யப் போகவில்லையா? என்ன துரதிருஷ்டசாலியப்பா இந்தச் சித்தார்த்தன்? இவன் இப்போது புத்தனுகி விட்டான். யசோதரையைப் போன்ற இணையற்ற அழகிகளின் பூப் போன்ற படுக்கையை விட்டு, புழுதிக்காட்டில் மண்ணில் புரளுவது அவனுக்கு நிரம்ப நல்லதாகத் தோன்றிவிட்டது.

பாணன்: அவருக்கு என்னவோ நல்லது என்று தோன்றட்டும். ஆனல் அவருடைய பத்தினி யசோ

தரை எப்போதும் ஐயோ அப்பா என்று அழுது கொண்டிருக்கிருளே! பாவம், அவள் நிலைமை வெகு பரிதாபமாக இருக்கிறது.

சாக: அடி வா, க்ஷாரே. கேட்டாயா? புருஷன் விட்டு விட்டுப்போனுல் பெண்களின் நிலைமை இப்படித் தான் கேவலமாகி விடுகிறதடி. அதனுல்தான் சொல் லுகிறேன். என்னை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். இல்லாவிட்டால்—

க்ஷாரா: இல்லாவிட்டால் என்னவாம்? ராஜபுத்திர னைப் போன்ற பராக்ரம புருஷன் கைவிட்டு வனம் போனுல் எல்லாரும் யசோதரையைப் போலக் கஷ் டம்தான் படுவார்கள். அப்படியில்லாமல் யாருக் காவது இப்படி (சாகம்பட்டரை லேசாக முகத்தால் குறித்து) கழுத்தில் வந்து விழுந்து விட்டால், இந்தப் புருஷன்மார்களுக்கு வனவாசம் போகப் புத்தி தோன்ற வேண்டுமே என்று யார்தான் வேண் டிக்கொள்ள மாட்டார்கள்? ஆனுல் எல்லாம் வீண் வெட்டி வேண்டல்தான். வீட்டில் எந்தப் புருஷ னுடன் சகவாசம் செய்தால் இன்பம் வருகிறதோ அவன் வனவாசம் போனுல் துக்கம்தான் வரும். ஆனுல் எவரது காலடியில் என்னைப்போல் வீட்டில் கட்டுண்டு வாழ்வதே வனவாசமாகிறதோ அவர் நாளைக்கு வனவாசம் போவதாயிருந்தால்—அது ஏன் இன்றைக்கே போகக்கூடாதோ? இன்றைக்கே போகிறீர்களா?

சாக: போயேதான் இருப்பேன். ஆனுல் நீ சொல் லுகிறபடி எனக்கு வீட்டில் இருப்பதே வனவசமாக இருப்பதால் வனவாசத்தில் இன்னும் என்ன விசே

ஷம் இருக்கிறது? காட்டில் மட்டும்தானு காட்டுப் பன்றி இருக்கிறது? (க்ஷாரை பக்கம் காட்டி) இங்கே இல்லையா என்ன?

க்ஷாரா: (சாகம்பட்டர் பக்கம் கை காட்டி) இருக்கிறது. சித்தார்த்தனைப்போன்ற—இந்த புத்தரைப் போன்ற —தியாக வீரனைத் தூஷணை செய்கிற இந்த சேற்றிலே வாய் வைக்கிற காரியத்தை—இப்போது செய்கிறீர்களே இந்தக் காரியத்தை—காட்டுப்பன்றியைத் தவிர வேறு யார்தான் செய்ய முடியுமோ?

ச க: தியாக வீரன்? அடி நல்ல தியாக வீரன்! சித்தார்த்தனைப்போல் பிறந்தது முதல் புளித்துப் போகும் வரையில் எல்லாச் சுகத்தையும் அநுபவித்த பிறகு யாருக்குத்தான் வெறுப்பு ஏற்படாது? யசோதரா, மஞ்சுளா, மதுரா, இப்படி ஒருத்தியை விட்டால் ஒருத்தியாக, அநேக இன்பமுக அழகிகளின் குளிர்ந்த ஆலிங்கனத்தில், யௌவனத்தின் பல ரகக் காதல் துறைகளில், முப்பது வருஷம் இராப்பகலாகப் போகங்களை அநுபவித்த பிறகு, அவனுக்குக் கொஞ்சம் விறுவிறுப்புத் தட்டி, காட்டில் இருப்பவைகளோடு கொஞ்சம் குளிர் காய வேண்டும் என்று தோன்றியிருப்பதில் என்ன ஆச்சரியம், என்ன வீரத்தன்மை, இருக்கிறதடி? முப்பது வருஷம் வேண்டாம். அடி முப்பது நாளாவது இத்தகைய இணையற்ற அரண்மனைச் சிங்காரசுந்தரிகளின் சேனைக்கு என்னைச் சேனதிபதியாக்கும் பட்சத்தில், நானும் வனவாசம் போகச் சித்தமாயிருப்பேன். அந்தச் சுகவிலாச பவனத்தில் முப்பது நாள் புரளவேண்டும். அந்த ஒரு மாதத்துக்கு வாடகை என்று சொல்லி, முப்பத்

தியொன்றும் நாளே சந்தோஷமாகப் போவேன். ஆனால் நமது வீட்டின் பவிசுதான் இருக்கிறதே, அது எப்படித் தீரப்போகிறது? என் தலையில் விழுந் தவள் இப்படி யிருக்கிறாள். எனவே எங்களுடைய சுகபோக விலாசங்களாகிய அதிருப்தி யடைந்த பூதங் கள் இன்றைக்கும் வீட்டைச் சுற்றிச் சுற்றித் திரி கின்றன. அடி, க்ஷாரே, இந்தச் சித்தார்த்தன், இந்தப் புத்தன் யசோதரையை விட்டுப் போனதால் உலகத்தில் ஏதாவது குறைந்து விட்டதா? அரண் மனைச் சாப்பாட்டினால் வாய் சற்றுக் கசந்து போய் விட்டது என்று கொஞ்சம் காரம், துவர்ப்பு, புளிப் புள்ள சட்டினியை நாக்கில் தடவிக்கொள்ள எங்கே யாவது இரண்டு நாளைக்குப் போய், பிறகு தானாகவே திரும்பி வந்துவிடுவான். அரசனாக வந்தால் அந்தப் புரத்திலே இராணிமார்கள்; சந்நியாசியாக வந்தால் இராணிகளைச் சந்நியாசினிகள் ஆக்கி விடுவான். எல்லாம் ஒன்றுதானடி. புருஷர்கள் சாதாரண ஸ்திரீயானாலும் சரி, ஸ்திரீ ரத்னமானாலும் சரி, அவர்களைத் தலைமேல் தூக்கித் தாங்கிக் கொண்டே இருப்பார்கள்; வீட்டிலே வாழ்ந்தால் என்ன, வனத் திலே வாழ்ந்தால் என்ன. மனைவி யில்லாமல் இருந் தால் அதிகப்படி நாலு நாள் தனியாக இருப் பார்கள். பிறகு ஐந்தாம் நாள் திரும்பி வந்தே தீரு வார்கள். அதுதானடி பிராயச்சித்தம். தவம் ஜபம் செய்கிறவனானால் என்ன, படித்துச் சந்நியாசியாக இருந்தால் என்ன, யாரையாவது மனைவி என்றாவது, சிஷ்யை என்றாவது பக்கத்தில் வைத் துக்கொள்ள வேண்டும். எப்படி யிருந்தால், என்ன? ஒரு பெண்ணின் தாசர்கள்தானே? அப்படியிருக்க

இந்தச் சித்தார்த்தனுகிய கௌதமனுடைய வனவாசத்தைப்பற்றி இவ்வளவு தூரம் சொல்லி, நம்மைப் போன்ற கிருகஸ்தர்களை இப்படி இழித்துப் பேசி, மனதைப் புண்படுத்த வேண்டாம். இந்தப் புத்தனுகிய வீரன் இன்றைக்கு இல்லாவிட்டால் நாளைக்கு யசோதரையின் பின்னுல் நிற்காவிட்டால் என் பெயரை மாற்றி வைத்து என்ன வேண்டுமானுலும் கூப்பிடு.

க்ஷாரா : சும்மா இருங்கள். பெரிய மனிதன் ஒருவனைப் பார்த்தால் அவனைத் தூஷித்துப் பேசுவதே உங்களுக்கு வழக்கமாகி விட்டது.

சாகம்பட்டர் : சும்மா இருடி. நான் யாரைத் தூஷித்துப் பேசுகிறேனே அவனைப் பெரிய மனிதன் என்று புகழ்வதே உனக்கு வழக்கமாகி விட்டது.

க்ஷாரா : இன்றைக்கு நீங்கள் சித்தார்த்தரை நிந்தியாமல் ஏன் இருப்பீர்கள் ? எது எப்படியாயினும் அழகான பெண்ணுக்கு அவள் புருஷன் தாசன் ஆகிருன் என்று ஒப்புக்கொள்ளுகிறீர்கள் அல்லவா?

சாகம்பட்டர் : ஆமாம். அழகிகளுக்குத் தாசன் தான் ஆனுல் இத்தகைய பிடாரிகளுக்குத் தாசன் அல்ல.

பாணன் : புரோகித மகாராஜரே, எனக்கு வேறு அவசரமான வேலையிருக்கிறது. நான் அரண்மனைக் கோட்டைச் சுவரைக் காவல் காத்து வருவது உங்களுக்குத் தெரியுமே. இளவரசர் சித்தார்த்தர் ஓடிப்போன நாளில் நான்தான் கோட்டை வாயிலைத் திறந்து தந்தேன் என்று என்மேல் பழி ஏற்பட்டிருக்கிறது. ஏதோ ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு

உபாயம் செய்து நானும் காலம் தள்ளி வருகிறேன். ஆனால் காலம் இப்போது என்னைத் தள்ளப் பார்க்கிறது. மகாராஜா அவர்கள் எனக்கும் பிராண தண்டனை கொடுக்கப் போவதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

க்ஷாரா: அப்படியானால் இவரிடமா நீ புத்திமதி கேட்க வந்தாய்?

பாணன்: இல்லையம்மா, கோபித்துக்கொள்ள வேண்டாம். இதை நேர்பண்ணும் விதத்தை வேறிடத்தில் எப்படியாவது தெரிந்து கொள்ளுகிறேன். ஆனால் நமது சுவாமி அவர்கள் சங்கட நிவாரக மந்திரம் ஜபித்து யந்திரம் தருகிறார் என்று ஜனங்கள் சொல்லக் கேட்டேன். அதனால் வந்தேன்.

சாகம்பட்டர்: தேக தண்டனையாகிய சங்கடத்துக்குத் தானே யந்திரம்?

## காட்சி 3.

*சுத்தோதன மஹாராஜர் நின்றுகொண்டிருக்கிறார்.*

சேனாதிபதி விக்ரமசிம்மன்: (நுழைந்து) சுத்தோதனமஹாராஜனுக்கு ஜயம் உண்டாகுக!

சுத்தோதனர்: வாருங்கள், சேனாதிபதி விக்ரமசிம்மரே, வாருங்கள். நேற்று வந்த வியாபாரிகள் சொன்ன விஷயம் உண்மையாக இருக்குமா? பல ஆண்டுகளுக்கு முன் அன்று என்னை விட்டுச் சென்ற என் மகன் சித்தார்த்தன் இப்போது ஒரு ஜகத்குருவின்

பெருமையை அடைந்து, என்னைப் பார்ப்பதற்காகத் திரும்பி வந்துகொண்டிருப்பதாகச் சொன்னார்களே, இது நிச்சயமாக இருக்குமா?

விக்ரமசிம்மர்: நிச்சயமாகத்தான் இருக்கும். உலக மக்களை எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுவிக்கும் லக்ஷியத்துக்காக அவர் இராஜ்யத்தை வெறுத்துப் போனார். பிறகு உடலை வருத்தி வியக்கத்தக்க முறைகளில் கடுந் தவம் செய்தார். ஆனால் தேக தண்டனையால் மட்டும் மோக்ஷத்தை அடைய முடியாது என்று ஞான மார்க்கத்தில் இறங்கி, இறுதியில் சமாதியில் சித்தி பெற்றார். உயர்ந்த நிருவாண பதவியுற்று ஆத்ம சாந்தி யடைந்தும் உலகின் நன்மையை மறவாதவராய் நிருவாண தத்துவத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி நாட்டைச் சுற்றலானார். பிறப்பு, இறப்பு, மூப்பு, நோய் இவற்றினின்றும் மனிதனை விடுவிக்கும் வழி கிட்டி விட்டதென்றே அவர் நம்புகிறார். எண்ணற்ற மக்களும், அரசர்களும், பேரரசர்களும் புத்தரது மார்க்கத்தைப் பின்பற்றலாயினர். கருணை நிறைந்த அவர் காட்டும் அறவழியின் சூத்திரம் இதுதான்:—“பலவகைத் துன்பம் பயக்கும் காரியங்களிலிருந்தும், குணம் தொழில்களால் ஏற்படும் மாறுபாடுகளிலிருந்தும் துக்கமே உண்டாகும் என்று அறிவுடையோர் அறிவர்” என்பதே. இவ்வாறாயின், துன்பமே நிறைந்த உலகைச் சீக்கிரம் விட்டொழிப்பதே விவேகமாகும். மற்றும் சன்னியாசம் கொண்டாலன்றி முழுத் தியாகமும் முடியாது. இதுதான் அவரது கொள்கையாக இருக்கிறது. ஆனால் எனக்கு இதெல்லாம் வேறு வித

மாகத் தோன்றுகிறது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர் துறவறம் வழங்கியுள்ளார். பார்வைக்கு மட்டும் நன்மையாகத் தோன்றும் இதன் பலன் அநர்த்தமே யாகும். இந்த விஷயத்தைப்பற்றி அவருடன் கலந்து பேச இத்தனை நாள் ஆவலுற்றிருந்தேன். இவ்வரிய சந்தர்ப்பம் கடவுள் அருளால் இன்றுதான் கிட்டி வருகிறது. புத்த பகவான் தமது இராஜதானியாகிய கபிலவஸ்துவுக்குத் திரும்பியவராய் இப்போது நகரத்துக்குச் சமீபமாக வந்து சேர்ந்திருக்கிறார்.

சுத்தோதனர் : ஆ! என் மகன் பிரிந்து போய் இன்று ஒன்பது வருஷம் ஆகிறது. இப்போது என்னைப் பார்க்க மீண்டும் வருகிறான். தள்ளாடும் விருத்தாப்பிய காலத்தில் இதுதான் எனக்கு ஊன்றுகோல். அவன் வந்ததும், அவனுக்கு இந்தக் கிரீடத்தைத் தந்து இராஜதீக்ஷை செய்வித்து, நான் சன்னியாச தீக்ஷை எடுத்துக்கொள்வேன். தலைநகரை நன்றாக அலங்கரித்தார்களா? அவன் வந்தவுடன் பேரி, கொம்பு, வாத்தியங்கள்........இதோ முரசொலி கேட்கிறது....ஆனால் அது ஏன் அதற்குள் நின்றுவிட்டது? என் மகனை நான் எப்போது காண்பேன்? அவன் எப்படி வருகிறான்? எனக்கு ஒரு கணம் ஒரு யுகம்போல் இருக்கிறதே?

*[ தூதன் வருகிறான்,]*

விக்ரமசிம்மன் : ஏனடா, ஒருமுறை முரசொலி தொடங்கி மீண்டும் நின்றுவிட்டது? கோட்டைச் சுவரிலிருந்து சித்தார்த்தரைப் பார்க்க முடிகிறதா?

தூதன் : பார்க்க முடிகிறதா என்றா கேட்கிறீர்கள்?

மஹார்ராஜா, அவர் நகரத்தில் பிரவேசம் செய்தா யிற்றே!

சுத்தோதனர்: அவ்வாருயின் என் மகனை வரவேற்கப் பத்து திசையிலும் வாத்தியங்களும் ஜயகோஷங் களும் ஏன் கிளம்பவில்லை? இது எவ்வளவு பெரிய தவறு!

தூதன்: பொறுத்துக்கொள்ள வேண்டும், மஹாராஜா! கோட்டையில் முதலில் எச்சரிக்கை செய்பவன் சித்தார்த்தரைக் கண்டதும் முரசொலி முழக்கினுன்; ஆனுல் அதை அவர் தடுத்துவிட்டார்.. அதனுல் வாயிலில் இருந்த மக்கள் கூச்சலிடத் தொடங்கினர். மீண்டும் முரசொலி முழங்கும்போதெல்லாம் சித்தார்த் தர் தடுத்து விட்டார். இதற்குள் தலைவாசலி லிருந்து இராஜபுத்திரரான சித்தார்த்தர் குறுக்கு வழியாக நகருக்குள்ளே வந்து விட்டார். ஊர்வலத் துக்கு ஏற்பாடாக அலங்கரிக்கப்பட்டிருந்த பாதையை நீக்கி, வேண்டும் என்றே அவர் எளியோரும் தீண்டா தாரும் வாழும் புழுதி படர்ந்த, குறுகலான, நட மாட்டமற்ற தடங்களில் பிச்சை கேட்டுக்கொண்டும், பிச்சை வாங்கிக்கொண்டும் வந்துகொண்டிருக்கிருர். அதனுல் முக்கிய மார்க்கங்களை விட்டு மக்கள் கூட்டம் கூட்டமாக அந்தக் காட்சியைப் பார்த்து வியப்பும் பிரமையும் அடைந்து நிற்கிருர்கள்.

சுத்தோதனர்: ஆ! என்ன? என் மகன், மஹாராஜா வான சுத்தோதனனுடைய தனயன், இந்த சாக்கிய இராஜ்ஜியத்தின் இளவரசன தன்னுடைய தலை நகரில் தீண்டாதார் வாயிலில் பிச்சை எடுத்து வருகிருன்? ஆ! இந்தத் துஷ்டன் இரு குலத்துக்கும்

பழியைக் கொண்டுவந்து விட்டான். க்ஷத்திரிய குலத்தில் பிறந்து, பிச்சையா எடுக்கிறான்? யாருடைய நிழல் பட்டாலும் தீட்டு வருமோ அவர்களிடமா பிச்சை வாங்குகிறான்? ஏனடா, அந்தத் தீண்டாதார்தான் அவனுக்குப் பிச்சையிட எவ்வாறு துணிந்தார்கள்? என் கோபத்தைப்பற்றி அவர்களுக்குப் பயமே தோன்றவில்லையா?

தூதன்: பேரரசரான புத்த தேவருக்கு—

சுத்தோதனர்: யாரடா புத்தன்? எத்தகைய புத்தனடா? அவன் சித்தார்த்த கௌதமன்தானே? அவனை என்முன் சித்தார்த்தனென்றே சொல்ல வேண்டும்.

தூதன்: பொறுத்துக்கொள்ள வேண்டும். அவர் தீண்டாதாரிடமிருந்து பிச்சை யேற்பதைத் தடுப்பதென்றால் அதைச் செய்ய, தங்களைத் தவிர, யாரால் முடியும்?

சுத்தோதனர்: அமைச்சரே, புறப்படுங்கள்! எனது குதிரையை வருவியுங்கள். இந்த அனாசாரத்தை நான் பொறுக்க முடியாது. கிழவனானாலும் சாக்கியர்களுக்கு அரசனல்லவா நான்? பெருமை பொருந்திய இந்த இராஜ்ஜியத்துக்கும் குலத்துக்கும் களங்கம் உண்டாக்கும் இவனது அடத்தை நான் அடக்கியே தீருவேன். கொண்டு வாருங்கள் குதிரையை. போ, போ, உடனே பாதையை விட்டு விலகி நிற்குமாறு ஜனங்களுக்குச் சொல்லுங்கள். இல்லாவிடில் புறப்படும்போதே நான் குதிரையை முடுக்கிக் கடு வேகமாக வரத் தயங்க மாட்டேன்.

## காட்சி 4.

*சாகம் பட்டரது இல்லம்.*

*[அவர் உட்கார்ந்திருக்கிறுர். க்ஷாரா உரக்கக் கூச்சலிட்டு வருகிறுள்.]*

**க்ஷாரா :** காதில் பட்டதா? அரிசி இல்லேங்க அரிசி. இன்றைக்குப் பத்து நாளாச்சு; வீட்டில் நாலு தானியமணி யில்லே. என் தாயார் வீட்டிலிருந்து நான் கொண்டுவந்ததை யெல்லாம் நீங்கள் மூட்டை மூட்டையாகச் சாப்பிட்டு ஏப்பம் விட்டாயிற்று. இனி நாளே முதல் ஒரு பருக்கை கூடத் தரமாட்டோம் என்று அவர்களும் சொல்லியாச்சு. அதனுலே தான் சொல்லுகிறேன். பிராணநாதா, அரிசி இல்லே அரிசி-இப்போதாவது காதில் பட்டதா?

**சாகம் :** அட கஷ்டமே, அப்படியானுல் இப்போது மெள்ள யோசித்துச் சொன்னதை நேற்றே எனக்குச் சொல்லித் தொலேத்திருக்கக் கூடாதா? க்ஷாரே, வேண்டும் என்றே இந்த இழவு பண்ணுகிருய். வேண்டுமானுல் இன்றைக்கே ஆயிரம் ரூபாய் சேர்த்துவைப்பேன்-அடியே, நான் உன் புருஷன், சம்பாதித்து வைக்கிறவன்—ராஜ புத்திரனை சித்தார்த்தன் ஓடிப்போன விஷயத்தில் நான் யந்திரம் தரவில்லேயா. அதற்கு அவனுக்காக ஸுநாஸ் சேட் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிருன். ஆனுல் அந்த அயோக்ய சேட் இன்னும் இன்றுவரை ஒரு பைசா கூடத் தரவில்லே. அவனே விட்டேனு பார்! இதோ ஆயிரம் ரூபாய் வாங்கப் போகிறேன்.

**க்ஷாரா :** ஆமாம், கேட்கிறதுக்கு என்ன? ஆயிரம், பத்தாயிரம், ஆனுல் அவன் தரவேண்டுமே—நீங்கள்

தானே அவனுக்கு ஆயிரம் தரவேண்டும். அவன் அதில் வஜா செய்து கொள்ளத்தான் போகிருன்.

சாகம்: அடி, அது எப்படியோ போய்த் தொலேயட்டும். இன்று ரொக்கமாக ஒரு ஆயிரம் ரூபாய் கடன் வாங்கப் போகிறேன். அந்தச் சேட்டுப் பயலுக்கு மூளே ஏது? பேர்தான் பட்டப்பேர், ஸுநாஸ், ஸுநாஸி (நல்ல மூக்கு உடையவன்)—

க்ஷாரா: ஏன்? அந்தப் பேருக்கு என்னவோ? உண்மையில் அது நன்ருகத்தான் இருக்கிறது. அவன் மூக்குக்கு அழகு என்ன குறைந்து போச்சுதோ?

சாகம்: சட், தூ-அடி! பரபுருஷனுடைய மூக்கு அழகாய் இருந்தால் என்ன, சளி நிறைந்திருந்தால் என்ன, இதைக் கவனிக்கிற உனது கெட்ட வழக்கம் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லே. உன் வயதுக்கு இருபது வருஷம் நன்ருய்க் கழிந்துவிட்டது--இனி மேலாவது போகிற வருகிற பரபுருஷர்களின் முகத்தைப் பார்ப்பது போதுமடி; அந்தத் திருட்டுப் பார்வையை இனிமேல் நிறுத்திவிடு.

க்ஷாரா: அப்படிக் கோபம் வருமானுல் பிராணநாதரே, கொஞ்சம் சாந்தம் அடைய வேண்டும். ஏனென்ருல் அந்த சேட்டின் முகம் நன்ருக இருக்கிறது என்று என்னுடைய இருபதாம் வயதிலேயே திருட்டுப் பார்வையால் அறிந்திருக்கிறேன். இப்போது சரிதானு? ஆட்சேபணேயில்லேயே? திருட்டுப் பார்வை என்கிறீர்களே; வந்துபோகும் ஆடவர்களேப் பெண்கள் பார்த்தால் அதில் திருட்டுப்பார்வை என்ன இருக்கிறது? வீதியில் காக்கை, நாய், ஆடு இவைகளே நாங்கள் பார்ப்பதில்லேயா? அதைப்போலவே உங்

களையும் பார்க்கிறோம். இதில் என்ன திருட்டுப் பார்வை? ஒரு பெண்ணைச்சுற்றி ஐம்பத்தாறு தேச புருஷர்கள் கூடிக்கொண்டு சுயம்வரம் என்று காலித் தனம் செய்கிறார்களே. என்ன அடிதடி, என்ன குத்து, கொலை; செத்த பூனை நாய் இவைகள்கூட உண்மையில் தங்களுடைய மானம் கெட்ட சண்டை களில், சீதாசுயம்வரம், துரௌபதி சுயம்வரம், ருக் மிணி சுயம்வரம், ஏன் நமது சித்தார்த்தரான கௌத மபுத்தருடைய யசோதராவின் சுயம்வரம் இவை களைக் காட்டிலும் எவ்வளவோ மரியாதையாக நடந்து கொள்ளுகின்றன. அப்படி எப்போதாயினும் ஓர் ஆடவனைச் சுற்றி ஐந்தோ ஐம்பதோ பெண்கள் கூடிக்கொண்டு வாயில் ஜலம் ஊற ஆசைப்பட்ட துண்டா? ஏதோ ஒரு புருஷனின் மூக்கு சற்று நிமிர்ந்து எடுப்பாக இருப்பது கண்ணில் விழுந்து விட்டால் அது ஸ்திரீயின் திருட்டுப் பார்வையா? ஆனால் புருஷர்களாகிய உங்களுடைய நூறு கௌர வர்கள் அந்த நிறைந்த சபையில் தங்களது கொழுந்தியாளை நிர்வாணம் செய்யவேண்டும் என்று சேலையை உரித்தார்களே அது நிரம்ப கௌரவமான காரியமோ? (பாடுகிறாள்)

*பெண்களைப் பற்றிப் பேசும்போது*
*வெட்கம் தோன்ற வேண்டாமா?*
*கண்கலங்கி துரௌ பதியும்*
*கதறியழத் சபை நடுவில்*
*மண்கலக்கும் மன்னர் மற்றும்*
*பாட்டன் பூட்டன் யாவரும்*
*விண்கலங் கச்சிரி சிரித்து*
*வழிமறித்து வளைத்து நின்று*

*சேலைகளைந்த் ஆண்கள் சுத்த*
*நாணம் கெட்ட நாய்களே*
*ஏலே, இந்த வேலை பெண்கள்*
*எந்தநாளும் செய்த துண்டோ?*

புராணம் எழுதும் மனுஷருக்கு ஒரு பெண் கிடைத்துவிட்டால், அப்பப்பா, போதும் அவளைப் பற்றி வர்ணிக்க ஆரம்பித்து விடுகிருர்கள். சுந்தரி, சுகேசி, சுமுகி, சுமத்யமா இன்னும் என்னென் னவோ பெயர்கள்-எத்தனை அங்க வர்ணனைகள், நன்னுதல், மெல்லிடையாள், இன்முகத்தாள், இதெல்லாம் சரி! ஆனல் யாராவது என்னை வாழை மரத்தொடையாய்! என்ருல் அவனைப் பாதரக்ஷை யால் அடித்தே போடுவேன்.

சாகம்: நன்ருகச் சொன்னயடி: அம்மே--உன்னை எவனுவது பார்த்து ரம்பையே, ஸிம்ஹ கடியே என் றெல்லாம் சொல்லத் தொடங்கினல் நானும் செருப்பை எடுத்துக் கையிலேந்தி அவனுடைய குருட்டுத்தனத்தைச் சந்தியில் இழுத்துவிடுவேன். ஆனல் ஒருவேளை வேண்டுமானல் யாராவது உன்னைச் சிம்மமுகி என்று சொன்னல் பரவாயில்லை. அப்படியில்லாமல் சுந்தரி, நன்னுதல், பிறைமுகத் தாள், வேல்விழியாள், இப்படியெல்லாம் சொல்லுவ தாவது? இவைகளில் எதுவும் உன் அங்கங்களில் ஏதாவது ஒன்றுக்குத் தனித்தோ அல்லது சேர்ந்தோ பொருந்தாது. அவ்வாறு எவனுவது ஒருதரம் சொல்லிவிட்டால் அவனைச் சும்மா விடுவேன? இந்த ஜன்மத்தில் இனி என்றும் சொல்லமாட்டாதபடி செய்து விடுவேனடி. மற்ற விதத்தில் எப்போதா

வது உன்னைப்பற்றிப் புராணம் எழுதும் சந்தர்ப்பம் ஒன்று வந்தால், தற்போது உன் மனப்படி வர்ணனை செய்ய ஒரு புதிய ரிஷி பிறந்திருக்கிறான். உண்மையில் உன் அதிர்ஷ்டமடி. பழைய காலத்து வியாசரைப்போல் இனி சுமுகி என்று யாராவது சொல்லுவார்கள் என்று பெண்கள் அஞ்சவேண்டாம். இந்தப் புது ரிஷி யாரென்றால் ராஜபுத்ரனான சித்தார்த்தன் என்னும் கௌதமன்தான். இப்போது புத்த பதவியடைந்தவன். உன்னையோ வேறு பெண்ணையோ சுமுகி என்றாவது அல்லது துர்முகி என்றாவது அவன் பெருமை செய்யப்போவதில்லை. காரணம் என்னவென்றால் அவன் உங்கள் முகங்களை அடியோடு பார்க்க விரும்புவதில்லை; ஸ்திரீயின் முகத்தைப் பார்ப்பதே பாவம் என்கிறான். அழுக்கும் சளியும் சுமக்கும் உங்கள் மூக்கு, நாற்றமடிக்கும் வாய், இத்தகைய அமங்களமான பெண் உடலை புத்தன் மிகவும் வெறுக்கிறான். உங்கள் ஸ்திரீகளின் பாப சரீரங்கள் காற்றைக்கூடச் சுத்தமாக இருக்க விடுகிறதில்லை.

க்ஷாரா : போதும், தான் பிறப்பதற்கு இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாகவே ஒரு பிராணி பெண்களைப் பாபயோனி என்று சொல்வதானால் அந்தப் பிராணியைப் புண்ணிய புருஷன் என்று சொல்லுவேன். ஆனால் எப்போது ஒருவன் ஒரு முறை பெண்ணின் வயிற்றில் பிறந்து விட்டானோ அப்போதே அவனை ஸ்திரீகளின் நாற்றப் பிண்டம் என்று சொல்ல வேண்டும். அவ்வாறு அவன் தனக்குத்தானே சாக்ஷாத் நாற்றத்தில் கிடந்த புழு என்

னும் பெருமை பொருந்திய அந்தஸ்தை உண்டாக்கிக் கொள்ளுகிருன். ஸ்திரீகளின் தேகம் அமங்களமானது என்பதால் அவர்கள் காற்றடிக்கும் இடத்திலேனும் இருக்கக் கூடாது என்று சொல்லும் குரு மகாராஜாவைச் சுற்றிலும் அந்த நாற்றம் பொருந்தியவர்களே இருக்கிருர்கள். அவர்களுடைய காற்றில் மலேய மாருதம்போல நல்ல வாசனையொன்றும் இல்லேயே! மங்களமாகவும் இருப்பதில்லேயே. மேலும் அந்த குரு மகாராஜாவின் தேகமோ சொல்ல வேண்டியதில்லே. அப்படியிருக்க, குருவின் உடல் காற்று வீசும் இடத்தில் மற்றவர்கள் ஏன் இருக்கவேண்டுமோ தெரியவில்லே. ஆனுல் அவருடைய பாததீர்த்தத்தை ஜனங்கள் குடித்தாக வேண்டும். பெண்களின் மூக்கிலிருந்து சளி ஒழுகுகிறது. தங்களுடைய வால்மீகி, வியாசர், புத்தர் இவர்களுக்கு ஒருமுறை சளிப்பிடிக்காதா? உலக மக்களின் நோய்களேக் கட்டோடு ஒழிக்கப் பிறந்திருக்கும் அற்புத மனுஷரான அந்தக் கௌதம புத்தபிரானுக்கும் ஒருமுறை ஜலதோஷம் வரும். அப்போது அவருடைய மூக்கிலிருந்து புண்ய ஜலம்தான் வருகிறதோ? பெண்களே நாற்றக்குழி என்று நிந்திப்பவரின் கூட்டத்தில் தான் பரமஹம்சர்கள் தோன்றுகிருர்கள். அவர்கள் எப்போதும் படுக்கையின்மேல் கை கால் விரித்துக் கிடக்கிருர்கள் என்றும், அதிலேதான் தங்களது தேகதர்மம் செய்கிருர்கள் என்றும் சொல்லுகிருர்களே. அந்த மலமூத்திரம் நிறைந்த அதே இடத்தில்தானே அவர்கள் தாங்களும் உண்டு சிஷ்யர்களுக்கும் ஊண் ஊட்டி வருகிருர்கள்—ஆனுல் அது குரு மகாராஜாவின் அழுக்கு, அது பிரசாதம்!

தாங்களும் போயிருந்தீர்களே, சற்றேனும் அநுபவித்திருப்பீர்கள் அல்லவா? இத்தகைய புருஷர்களைக் காட்டிலும் செத்த பன்றியும் தேவலையே. உஸ், அம்மாடீ, ஆமாம். மறந்தே போய்விட்டது. பெண்கள் விஷயத்தில் புத்தர் என்னென்ன சொல்லுகிறாரோ அவ்வளவையும் அளந்தீர்களே, ஆனல் அதற்குப் பதிலாகப் பெண்கள் புத்தருக்கு என்ன சீர் வரிசைகள் வழங்குகிறார்கள் என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே. நேற்று மகத தேசத்து ஸ்திரீ யொருத்தி வந்திருந்தாள். அவர்களுடைய ஊரில் புத்தர் வந்திருந்தாராம். அப்போது அவர் பிச்சை போட்டவர்களுடைய குழந்தை குட்டிகளைத் தமது பிச்சை யெடுக்கும் சங்கத்தில் சேர்த்துக் கொண்டு போய் விட்டாராம். அவர்களது வீடுகளெல்லாம் நாசமாகப் போய்விட்டனவாம். தங்கள் குரு உலகம் முழுவதையும் நோயிலிருந்து காப்பாற்றிக் குணப்படுத்தி விடுவதாக அவரது சிஷ்ய கூட்டங்கள் பறை சாற்றுகின்றார்களே, அதே குருவுக்குத் தங்கள் ஊரில் சளி பிடித்து அவர் கஷ்டப்பட்டதையெல்லாம் அவர்கள் பார்த்ததில்லையே? அப்போது அங்கேயிருந்த குழந்தை குட்டிகளும் அவர்மீது விளையாட்டாகப் பாடத் தொடங்கினர்களாம், அந்த அம்மாள் ஒரு பாட்டுப் பாடியும் காட்டினாள்.

[பாடுகிறாள்]

*அம்மா, பிச்சைபோடம்மா—குருவுக்கு*
*அம்மா, பிச்சை போடம்மா*
*சும்மா யோசனை வேண்டாம்—குருவுக்கு*
*அம்மா பிச்சை போடம்மா*

*அவர் ஒரு பிச்சைக்காரர்; பிச்சை*
*அளித்திடுவோரைக் காத்திடுவாரே*
*ஜகத்தை யெழுப்பிடவந்தார், ஆனால்*
*சளி பிடித்தேபாவம் செத்துவிட்டாரே* (அம்மா)

சாக: இப்படி கர்ஜனை செய்கிறாயே, உன்னைச் சும்மா சிம்மமுகி என்று சொல்லவில்லை. அடியே, இப்போது சற்று கோமுகியாக இருடி. அதையும் சற்று நான் பார்க்கிறேன். பசுவைப்போல கொஞ்சம் முகத்தை வைத்துக்கொண்டு உன் திருவாயைச் சிறிது போதாவது மூடி வைத்திரு.

## காட்சி 5

*புத்தர் பிச்சையெடுத்துக்கொண்டே போக, நகர ஜனங்கள் நிற்கிறார்கள். இதற்குள் சுத்தோதன அரசர் வருகிறார்.*

சுத்: எங்கே அந்த சித்தார்த்தன்? ராஜ வம்சத்துக்கே பழி கொண்டு வந்த அந்த சித்தார்த்தன் எங்கே இருக்கிறான்?

சித்: இதோ இங்கே இருக்கிறேன், மகாராஜா. முன்னமே உங்களுக்கு துக்கம் உண்டாகக் காரணமாக இருந்தேன். இப்பொழுதோ உங்கள் குலத்துக்கே களங்கம் ஏற்படக் காரணமாக இருக்கிறேன். அத்தகைய சித்தார்த்தன் தந்தையான உங்களுக்கு நமஸ்காரம் செய்து இதோ இங்கே நிற்கிறேன்.

சுத்: குழந்தாய் சித்தார்த்தா, என் மகனே, இவ்வாறு நீ மீண்டும் என் ராஜதானிக்குச் சுகமே திரும்பி வந்

தைதக் கண்டு என் உள்ளத்தில் தோன்றியுள்ள இன்பப் பெருக்கில், நீ பிச்சையெடுப்பதால் உண்டான கோபம் எல்லாம் முழுகி மறைந்து போய்விட்டது. அடே, என் மகன் எவ்வளவு பணிவு காட்டுகிருன்! உலகமே மகான் என்று போற்றும் உயர்ந்த பதவி பெற்றும், அரசர்களுக்கும் பேரரசர்களுக்கும் குருவாக விளங்கி நின்றும், அவன் தனது புத்திர தர்மத்தை மறக்கவில்லை. அந்த தூதன் ஏதோ சும்மா சொன்ஞன் என்று நான் வீணுகக் கோபித்து கொண்டேன். பிக்ஷுக்களின் தர்மத்தின்படி நீ ராஜதானியில் பிச்சையெடுத்துக்கொண்டே குறுக்கு வழியில் வந்து சேர்ந்திருக்கிருயா? இவ்வளவு தானே?

தூதன் : (தனக்குள்) இதைத் தவிர நான்தான், என்ன, அதிகமாகச் சொல்லிவிட்டேனே? தப்பிதம் கோபம் கொண்ட தந்தையிடம் இல்லை, பணிவு கொண்ட மகனிடத்தும் இல்லை; அது தூதனுடையதே. தூதன் என்ருலே இருபுறமும் அடி வாங்குகிற மிருதங்கம்தானே!

சுத் : என் காதல் மைந்தா, நீ வந்து சேர்ந்ததால் முன்னிருந்த துயரமெல்லாம் மறந்தேன். சித்தார்த்தா, என்னையும் இராஜ்யத்தையும் விட்டு, நீ தவம் செய்யச் சென்ற இந்த ஒன்பது ஆண்டுகளாக எந்த தினத்தை ஆவலுடன் எதிர் பார்த்து ராஜ்ய பாரத்தை ஏற்று வந்ததேனே அந்த நன்ஞள் இன்று கிட்டியது. உன் கிழட்டுத் தகப்பனின் ராஜ்ய பாரம் இதோ இருக்கிறது. விநயம் நிறைந்த தனய, இப்போது இதை திறமை பொருந்திய உனது சிரத்

தின் மீது தரித்து, என்னைக் கவலையினின்றும் விடுவிப்பாயாக. இது சாக்கியரின் மகுடம். இரத்தினங்கள் இழைத்த கிரீடம். இளவரசே, இதை உன் தலை மீது அணிவிக்கப் போகிறேன். இளமை பொருந்திய ராஜபுத்திர, இந்தக் கிரீடம் உனக்கு வெகு அழகாய் அமைந்துள்ளது. கிழவனாகிய எனக்கோ மொட்டைத் தலைதான் அழகைத் தரும். யௌவனம் நிறைந்த பிராயத்தில் நீ மொட்டை தரித்ததாலும், மூப்பு நிறைந்த பிராயத்தில் நான் மகுடம் தரித்ததாலும், சாஸ்திர விதிக்கு விரோதமாக ஏற்பட்டுள்ள களங்கத்திலிருந்து இந்த ராஜ குலத்தை விடுவிப்பாயாக. இதோ இந்தக் கிரீடத்தை ஏற்றுக் கொள்; அந்தக் கமண்டலத்தை இங்கே இப்படிக் கொடு.

சித் : மகாராஜா, கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும். என் தலைமீது வேறு சுமை ஏறாதிருந்தால் ஒருக்கால் இந்த கிரீடத்தை ஏற்றிருக்கலாம். ஆனாலும் அப்போதும் இது முடியாத காரியமே. பிள்ளைப் பிராயம் முதல் எவ்வெப்போது காடு தோட்டங்களில் வியர்வை நனைக்கும் வேளைகளில் வறியோரைக் கண்டேனோ, எவ்வெப்போது நாட்டின் செல்வத்தின் பொருட்டு போர்களில் காயமடைந்த சேனை வீரர்களின் உடலெல்லாம் இரத்தம் நனைவதைக் கண்டேனோ, அவ்வப்போது ராஜ மகுடத்தை நினைந்து நான் நடுங்கியதுண்டு. இந்தக் கிரீடத்தில் காணும் ஒவ்வொரு பச்சைக் கல்லிலும் உழவரின் வியர்வையே காண்கிறது; இதன் ஒவ்வொரு சிகப்புக் கல்லிலும் யுத்த முனையில் வீரர்கள் சிந்திய இரத்

தத் துளிகளையே காண்கிறேன். மன்னரின் பேராசையே, அரக்கியைப் போல், பாட்டாளிகளின் இரத்தத்தைக் குடித்து வருகிறது. இந்தக் கிரீடமோ அவ்வரக்கியின் கையில் இரத்தம் ஊற்றிய கிண்ணமாய் அமைந்துள்ளது. ஏ மகுடமே! நீ இரத்தம் நிரம்பியுள்ளவன். கமண்டலமோ சுத்தமான குடிநீர் நிறைந்தது. இந்தத் துணிப்பையோ தானிய மணிகள் நிறைந்தது. இவைகள் உன்னைக் காட்டிலும்சிறந்தனவே. எளியோர் உண்பதற்கும் குடிப்பதற்கும் உதவுவன. உண்ணவும் அருந்தவும் உதவாத உனது மணிகள் வெறும் கல் துண்டுகளே. இரக்கமற்ற கற்களை இரத்தினங்கள் என்று குப்பையிலிருந்து தீய மக்கள் கூட்டி வைத்தார்கள். அவைகள் அந்தக் குப்பையிலே போய் விழட்டும்.

## காட்சி 6

*[கிரீடத்தை வீசி யெறிகிறார். பணியாட்கள் அதை விழாமல் பிடித்துக் கொள்ளுகிறார்கள்.]*

(பாடுகிறார்)

*மன்னர் முடி மீதமர்ந்த மகுடமே, மணி மகுடமே, இங்கு*
*உன்னைவிடச் சிறந்திந்த முனிவர் கமண்டலமே—*
*என்ன விலையுனக் கிருந்தாலும் என்ன? மணிகள்*
*மின்னி மயக்குவதால் மதிப்பும் உயர்ந்திடுமா?*
*மன்னர் மேல் நிழல்பரப்பும் குடையே, வெண்குடையே, உன்*
*தன்னலச் சாயலிலே தீயின் வெப்பம் தாக்குதடா—*
*மன்னுயிரை வாட்டும் துயர் சின்னமே, உனது*
*புன்னகை மாயத்திலே பொங்குவது துன்பமடா—*

மகாராஜா, இந்த மகுடத்தை நீக்கி தூர எறிந்தா லன்றி இவ்வுலக நன்மையாகிய பாரத்தைத் தாங்க இந்தத் தலையும் வல்லமை பெறுமா?

சுத் : ஆனல் சித்தார்த்த, நீ பிறந்துள்ள அரசர் குலத் தின் மகுடத்தை அணிவது உன் கடமையன்ரே? அடே! இந்தப் பிச்சைத் தொழிலாவது வேண்டாம். இது உன் குல தர்மம் அன்று.

சித் : மகாராஜா, பிச்சை ஏற்பது உங்கள் குல தர்மம் அன்று என்று சொல்லலாம். ஆனல் என் குல தர்ம மாகவே இருந்து வருகிறது.

சுத் : அடே என்ன சொன்னய்? இந்தச் சாக்கியர் குலத்தில் மகா சாமந்தர் என்று புகழ்பெற்ற இருபத் திரண்டு முன்ஞேர்கள், இருபத்திரண்டு மகுடாதிபர் களின் தலை முறைகள் தோன்றியுள்ளன. அவர் களில் ஒருவரேனும் பிச்சை யேற்றதில்லையே. அவ் வாறிருக்க பிச்சை புகுவதே உன் குலதர்மம் என் கிருயே, அது எவ்வாறு?

சித் : மகாராஜா, நீங்கள் சொன்னது கௌதமனு டைய குல தர்மம்தான். ஆனல் இப்பொழுது நானே சித்தார்த்த கௌதமனுக இராமல் புத்தனுக இருக்கிறேன். மற்றும் எனக்கு முன் இந்த புத்தர் வரிசையில் இருந்த யாவரும் பிச்சைத் தொழிலையே செய்து வந்திருக்கிருர்கள்.

சுத் : அவ்வாறு பிச்சையெடுத்தாலும் சீடர் குழாத் துடன் அரண்மனையில் அல்லாமல் முதன் முதலில் இங்கு ஏன் வரவேண்டும்? அடே! தீண்டாதார் சேரி

சந்துக்களில் துண்டுகளைப் பொறுக்கித் திரிவதற்குக் காரணம் என்ன?

சித் : மகாராஜா, நோய்களுக்கு உகந்த நல்ல மருந்துகள் வைத்தியனிடம் இருந்தால் அவன் முதலில் யாருடைய வீடுகளுக்குப் முதலில் போகவேண்டும்? நோயின்றி திடமாக இருப்பவர்களின் வீட்டுக்கா, அன்றி நோயுற்று வருந்துவோரின் வீட்டுக்கா?

சுத் : சந்தேகம் என்ன? நோயால் வருந்துவோரின் வீட்டுக்குத்தான்.

சித் : அவ்வாறயின் நான் முதலில் அரண்மனைக்குச் செல்லாமல் எளிய தீண்டா மக்களின் சேரிக்கு வந்தது நியாயமே ஆகும். மகாராஜா! அரும் சாதனைகளால் மக்களின் கொடும் துன்பத்தை நீக்கவல்ல உயர் மருந்து எனக்குக் கிடைத்துள்ளது. மேலும் மக்களில் இத் தீண்டாதாரே கொடுந் துன்பத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். உண்ண உணவு இல்லை, அருந்த நீர் இல்லை, வசிக்க இடம் இல்லை. ஐயோ, அன்புடன் இவ்வெளியவர்களின் முதுகில் தடவித் தந்து ஆறுதல் சொல்லவும் ஒருவர் இல்லையே! உயர் குலத்தவர்கள் ஊரில் திரியும் நாய்களை அன்புடன் தடவுவதை நான் பார்த்திருக்கிறேன். வீட்டில் வளரும் நாய் குட்டிகளை அவர்கள் கையில் ஏந்திக் கொஞ்சி விளையாடுகிறார்கள். ஆனல் இந்த எளிய ஏழைகளின் அழகிய குழந்தைகளுக்கு அவர்கள் பரிவு காட்டுவதில்லை. அவர்களுக்கு இச்சிறுவர்களின் நிழலும் தீட்டு. மக்களுலகில் இவர்களைக் காட்டிலும் இன்னலுற்றவரை நான் பார்த்ததில்லை. இதன் பொருட்டே முதலில் இவ்வறியோரின் துன்

பத்தை நீக்கி, அவர்களுக்கு மோக்ஷ சுகத்தின் சுவை காட்டவல்ல உபாயத்தைச் சொல்லவே நான் போனேன். மகாராஜா, இதில் தகாத காரியம் என்ன இருக்கிறது?

சுத் : இந்த ஆராய்ச்சி, இந்த விசாரம், மிக்க பெருந் தன்மையைக் காட்டுவது உண்மைதான். ஆனால் அவர்களிடமிருந்து பிச்சைச் சோறு ஏற்பதையாவது தவிர்க்கலாமல்லவா? அவர்களது அசுத்தமான—

சித் : அசுத்தத்தைப் பற்றியா சொல்லுகிறீர்கள்? அப்படியானால் சொல்லுகிறேன். அரசரின் உடலில் போலவே தீண்டாதார் உடலிலும் அசுத்தமானது பெரும்பாலும் இரத்தத்தைப் பற்றியதே. சுத்தமாயினும், அசுத்தமாயினும் இதே நிறம், இதே இரத்தம், இதே உருவம், இதே குணம். அவர்கள் எவ்விதத்திலும் மனிதர்களாகவே இருக்கிறார்கள். மகாராஜா, கழுவினால் அவர்களது கைகளும் சுத்தமாகின்றன. அதே அரிசியை இதே நீரில் கழுவி, இத்தகைய கைகளால், இதே நெருப்பில் அவர்கள் வைத்தால் இதே விதம் உங்களுடைய சுத்தமான சோற்றைப் போலவே, தீண்டாதார் வீட்டிலும் வேகின்றது. அவ்வாறே சுத்தமான சோற்றை, சுத்தமான எண்ணத்தோடு, அவர்கள் போட்டார்கள்; நான் ஏற்றுக் கொண்டேன். வெறுங் கையால் அன்புடன் முதுகை நான் தடவினால் இந்த எளிய ஜீவன்களுக்கு சுவர்க்கத்துக்கு நிகரான பேரின்பம் உண்டாகிறது. இந்த அளவில் கையால் தடவியேனும் உயர் குலத்தோர் தமது அன்பைக் காட்டாராயின்

கீழ் மக்கள் கடைத் தேறுவதுதான் எவ்வாறு? மகா ராஜா, ஜாதி ஆணவத்தால்தான் மனிதன் தன் இனத்தாருக்குக் கொடிய பகையாகிறுன். இந்தக் காரணத்தால்தான் ததாகதரான புத்தர் கேவலம் குணத்தையும் ஒழுக்கத்தையும் கொண்டே மனித னின் தகுதியைச் சீர்தூக்கிப் பார்க்கிருர்; வெறும் பிறப்பைக் கொண்டு அல்ல. பிறப்பிஞல் உயர்ந்த அந்தணர்களிலும் அரசர்களிலும், தாழ்ந்தவர்கள் இருக்கிருர்கள்; பிறப்பிஞல் தாழ்மையுற்ற தீண்டா தார்களிலும், அந்தணர்களும் அரசர்களும் இருக் கிருர்கள். தனியே வெப்பமுற்ற உயிர்களுக்கு, புத் தர் தந்த அமுதத்தால் வேட்கை தணிகிறது. இதில் வகுப்பு வாதத்துக்கு இடம் இல்லே.

(பாடுகிருர்)

*கார்காலம் வந்ததே—உயிர் கருணேயினுல் முகில்*
*சரணம் தந்ததென்ன நீர்மாரிப் பொழிந்ததே (கா)*
*காய்ந்துலர்ந்த குவலயம் குளிர்ந்திட*
*மாய்ந்து வெந்த புல்லயரும் உயிர் பெற (கா)*

சுத்: உண்மையில் நீ இவ்வுலகில் எங்கும் காணமுடி யாத ஒரு ஆத்மாவாக இருக்கிருய். நீ எனக்கு மக ஞய்ப் பிறந்ததால் என் குலமே கடைத்தேறிவிட் டது. சித்தார்த்தா, இல்லே, புத்தனே, இப்போது சீடர்களுடன் ஒரு முறையாவது பிச்சையேற்க என் அரண்மனேக்கு வரவேண்டும்; அவ்வாறே ஒருமுறை யாவது எனது உயர்சீலம் பொருந்தும் மருமகளும், உன்னேப் பிரிந்து வருந்தும் உன் மனேவியுமான யசோதரா தேவியைச் சந்திக்கவேண்டும்,

சித்: மகாராஜாவின் இச்சைப்படியே ஆகட்டும்.
(புத்தர் மேனேக்கி நடக்க, சீடர்கள்

*புத்தம் சரணம் கச்சாமி,*
*தர்மம் சரணம் கச்சாமி,*
*சங்கம் சரணம் கச்சாமி*

அதாவது
புத்தனே புகல்;
தருமமே புகல்;
சங்கமே புகல்.

என்று சொல்லியவாறு பின்னே போகிறார்கள்.)

## காட்சி 7

*புத்தரும் சீடர்களும் விக்கிரமசிம்மரும் உட்கார்ந்திருக்கிறார்கள்.*

**புத்தர்:** சேனாபதி விக்ரமதேவரே, தாங்கள் இந்தச் சாக்கிய ராஜ்யத்தின் படைத் தலைவராக இருக்கிறீர்கள். மற்றும் இந்நாட்டின் உயர் ஞானியாகவும் விளங்குகிறீர்கள். சிறுவயதிலேயே வேள்வி, தவம், தானம் இவை இயற்றி உண்மையான தத்துவங்களை ஆராய்ந்து சித்தியும் அடைந்தீர்கள். இவை யாவும் நான் அறிவேன். இந்தக் காரணத்தால் சாக்கியரிடம், அதிலும் குறிப்பாக உங்களிடம், எனது மதத்தை விளக்க விரும்புகிறேன். தர்மசக்கரமாகிய எனது மதத்தை உலகெங்கும் பரப்பி மக்களைத் துக்கத்திலிருந்து விடுவிக்கும் இந்தப் பெரும் பணியில் தங்களது ஒத்துழைப்பை நாடுகிறேன். நான் கபில வஸ்துவுக்குத் திரும்பி வந்ததின் முக்கிய கருத்தும்

இதுவே. சன்யாச தீக்ஷை பெற்று தாங்கள் இந்த பிக்ஷு சங்கத்தில் சேர வேண்டும் என்பதே என்னு டைய ஆசை. ஐயா, இவ்வுலகமானது சுவர்க்கத் தைப் போலிராமல் ஆசையென்னும் தீயில் எரிந்து கொண்டிருக்கிறது. கக்கிய பொருள் என அதை அறிவால் உணர்ந்து ஒழித்துவிட வேண்டும். வலை யில் சிக்கிய சீவன் மீண்டும் அதில் அகப்படுமா? நோய் குணமான பிறகு அதனை மீண்டும் விரும்பு வாரும் உண்டோ ? இதுவே போல் ஞானம் தோன் றியதும் இந்த சம்சாரத்தில் திளைத்திருக்க எவனும் விரும்புவதில்லை. இப்படியிருக்க தங்களைப் போன்ற அறிவாளிகளும் சித்தர்களும் இந்தச் சம்சாரத்தில்—அதிலும் காயமும் மரணமும் நிறைந்த கேவலமான போர்த் தொழிலில்—சகித்துக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருவதின் மர்மம் என்ன என்று எனக்குப் புலப்படவில்லை.

விக்ரமர் : எவ்வாறு என்று கேட்கிறீர்கள் ? சுவாமி, பிறப்பு, இறப்பு துன்பங்கள் நிறைந்த இவ்வுடலில் —இந்தத் துன்பங்களையே களைந்தெறிந்து நிர்வா ணம் எய்திய பிறகு—தாங்கள் எவ்வாறு இருக்க முடிகிறதோ அவ்வாறேதான். ததாகதரான தங்க ளிடம் ஒரு விஷயத்தைக் கேட்கிறேன். நிர்வாணம் எய்திய பிறகு, அந்த உயர்ந்த ஞானத்துடன் இருந்துகொண்டு, ஆசைகளை ஒழித்த நிலையில், இந்த பூதவுடல் உருகிப் பிரிந்து மயங்கிக் கானல் நீரைப்போல் ஆகாதிருப்பதுண்டா ? இல்லை என் றால் அறிவின் வலிவால் அழிவை நாடி தற்கொலை செய்து உடல் என்னும் தளையைத் தகர்த்திடுதல்

தகுந்ததாகுமோ? அவ்வாறின்றேல் முக்தி யெய்திய புத்தர்களுக்கும் உடலைச் சுமப்பது அவசியமல்லவா? முக்தி நிலையில் உடல் இல்லை என்றாலும் மரணபரியந்தம் பூதவுடலைச் சுமக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு சுமக்க வேண்டியிருப்பதால் உடலைப்பற்றிய வேலைகளைச் செய்தே தீர வேண்டுமல்லவா? அதிலும் தங்களைப் போன்ற மகாத்மாக்கள் மோக்ஷ சுகத்தையநுபவித்துக்கொண்டே காட்டில் தனித்துத் திரியாமல், துன்புற்றோரின் இன்னல் கண்டு மனம் உருகி, மக்களுக்கு அழிவற்ற இன்பத்தைப் புகட்ட, இந்த உபதேசம், இந்தப் பிரசாரம், இந்த சிஷ்யகோடிகள், வாத விவாதம், இந்த மடம், மடாதிபதி பதவி ஆகிய இந்தப் பெரிய பிரபஞ்சத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பது ஏனோ?

புத்தர் : சேனாபதியே, நிர்வாண நிலையெய்திய பிறகு உடல் துன்பமற்று விடுவதில்லை. இது உண்மையே. ஆனால் நீங்கள் மேலும் கேட்கிறீர்கள். நிர்வாணமடைந்த பிறகு உடலை பலாத்காரமாக வலிய அழித்துவிடலாகுமா என்று கேட்கிறீர்கள். அதற்குத் ததாகதரின் விடை மிகத் தெளிவாக இருக்கிறது. அதாவது பலாத்காரமாக தேகத்தை நாசம் செய்வது ஒரு புதிய காரியமாக இருப்பதால் அது மறுபிறப்புக்கு ஏதுவாகிறது. பிறப்பு இறப்பு இரண்டையும் கடந்து அப்பால் செல்வதுதான் ததாகதரின் நோக்கம். ஆதலாலே அவரும் தேகத்தைத் தியாகம் செய்யவில்லை. முன் செய்த கர்மாக்களின் பயனால் ஏற்பட்ட இவ்வுடல் நிலை—இந்த தேக கதி—தானாகவே தீரும் போது தீரும். உடல் அழிய வெகு தூரம் இருந்தா

லும் அதை வருத்தியழிப்பது ததாகதருக்குச் சம்மத மன்று—நடுமார்க்கமாகிய இவ்வழியே பொன்னே போன்று சிறந்ததாகும். மேலும் தேகத்தை வாட்டும் உண்மையான தவமும் இதுதான். அதாவது உடலை நோயின்றி காத்து உழைப்புக்குத்தக்க வலிவு உள்ள தாக வைத்துக்கொண்டு, மக்களின் நன்மையை எப்பொழுதும் ஊன்றி கவனித்து, அவர்களின் உதவிக்கு இவ்வுடலை அர்ப்பணம் செய்து விடுவதே உயர்ந்த முறையாகும். முக்தியடைந்தவருக்கு தயையே மனைவியாகும். இன்னலுற்று வெந்து வருந்தும் மக்களிடம் தயையால் தூண்டப்பட்டு அவர்கள்மீது, நிர்வாணத்தின் குளிர்ந்த அமுத நீரை இடைவிடாமல் தெளித்து வருவதே சன்யாசி களின் சம்சாரம் ஆகும்.

விக்ரமர் : அப்படியானல் சன்யாசிகளுக்கும் சம்சாரம் இருக்கத்தான் செய்கிறது. முக்தியடைந்ததும் தேக நாசம் செய்துகொள்ளக் கூடாது என்றும், அதற்குக் காரணம் மறுபிறப்பு, கர்மம், கர்ம பலன் முதலிய லௌகிகமற்ற கொள்கைளை விவரித்தீர்கள். இந்த விஷயங்களைப்பற்றிய ஆராய்ச்சி எனது குறிப்பான எண்ணத்துக்குப் பொருந்தாது என்று விட்டு விடு கிறேன். மேலும் யாருக்குத் தானுகவே நிர்வாண நிலை உண்மையில் ஏற்பட்டு தற்பிரீதியும் சுய தெளி வும் உள்ளதோ, அவர்களுக்கும் தற்போது தேக நாசம் செய்துகொள்ள விருப்பம் இல்லை என்றே தெரிகிறது. தங்களைப் போன்ற பெரியோர்கள் உயிர் உள்ளளவும் உடலைத் தாங்குகிருர்கள். அவர்கள் பரோபகாரத்தால் தூண்டப்பட்டுத் துறவறம் பூண்டு

வாழ்க்கையில் சாதிக்க வேண்டிய காரியங்களின் தற்போதைய காரணம் தன்மை, முடிவு, மாறுபாடு இவைகளை ஆராய ஆவல் கொண்டிருக்கிறேன். நான் ததாகதரை வினவ விரும்புகிறேன். மடங்களில் வசித்துக்கொண்டு உண்பதும் உறங்குவதுமாக சிலர் இருக்கிறார்கள். ஆனால் இன்னும் சிலர் தத்தம் வீடுகளில் இருந்துகொண்டே கட்டுப்பாடுடன் கடமைகளைச் செய்து வருகிறார்கள். இவ்விரு திறத்தாரில் மடத்தில் இருப்பவர்கள் துறவறம் பூண்டு, பற்றற்று கிடைத்ததையேற்று, அகங்காரமாகிய சுய எண்ணத்தைக் களைந்து, பிறர்க்குதவுவதற்கென்றே வாழ்கிறார்கள். இல்லறம் பூண்டு வீட்டில் இருந்து வரும் கிரகஸ்தர்கள் அவ்வாறு செய்வதில்லை. தங்களுடைய சித்தாந்தம் கூறும் முக்கிய வித்தியாசம் இதுதானா ?

புத்தர் : ஆம்.

விக்ரமர் : ஆனால் ஐயா, பற்றற்ற மனத்துடன் பிறர் உதவிக்கென்றே தனதுடலை அர்ப்பணம் செய்யும் ஞானியொருவன் வீட்டில் வாழ்ந்து வருவானாயின் அவனுக்கும் மடத்தில் வசிப்பவனுக்கும் இடையே மாறுபாடு மறையலாகுமல்லவா ?

புத்தர் : வீட்டில் இருந்துகொண்டே உடல் பற்றுகளை அறுத்திட முடியும் என்பதையும், மடத்திலும் ஆசைகள் தலைதூக்குகின்றன என்பதையும் நான் அறிவேன். ஆனால் வீட்டில் ஓங்கும் ஆசைகள் அளவற்றவை என்பதை யாவரும் அறிவார்கள்

விக்ரமர் : சாதகர்கள் அவ்வாறு அஞ்சலாம். ஆனால் முக்தர்களுக்கு அத்தகைய பயம் இல்லை. ஏனெனில்

பற்றுக்களின் பயம் எவர் மனத்தில் தோன்றுகிறதோ அவர்கள் சாதகர்களேயன்றி சித்தர்களல்லர். இப்போது இன்னலுற்றவர்களுக்கு தயை காட்டவும், பரோபகாரத்துக்காகவும், தர்மப் பிரசாரம் செய்து உலக சேவை செய்யவும், சன்யா தீக்ஷை பெற்று மடத்தில் துறவற வாழ்வு நடத்தி வருவோரும், கிரகஸ்தர்களாகவே இருந்து வருகிறார்கள். இந்த முக்கியப் பிரச்னையில் தங்களது விளக்கவுரையை வேண்டுகிறேன். தேகமற்ற சன்யாச ஆச்ரமத்துக்கும் தேகமற்ற கிரகஸ்தாச்ரமத்துக்கும்—அதாவது துறவறத்துக்கும் இல்லறத்துக்கும் - இடையேயுள்ள வித்தியாசம் இதுதானே? அதாவது துறவற வாழ்வில் விவசாயியும் யுத்த வீரனும் அளவுக்கு மீறித் தியாகம் செய்ய வேண்டிவரும். இல்லற வாழ்வில் அப்படி வராது என்றுதானே அர்த்தம்? விவசாயிக்குப் பொருளீட்டி காப்பாற்றும் தொல்லை: காமம் உள்ளோனுக்கு மக்கட் பேற்றின் தொல்லை; வீரனுக்குப் போரின் தொல்லையிருப்பதால் இவைகளே முக்கியமாகத் தோன்றுகின்றன.

புத்தர்: நீங்கள் சொல்லும் வித்தியாசம் நடைமுறையில் உண்மையே.

விக்ரமர்: ததாகதரே!, அவ்வாறாயின் துறவற வாழ்க்கையில் இருப்பதைவிட இல்லற வாழ்க்கையை நடத்தி வருவதானால் முக்தர்களால் பரோபகாரம் அதிகமாகவே செய்ய முடியும் என்றே எனக்குத் தோன்றுகிறது. இது மாத்திரம் அல்ல. பரோபகாரத்தின் பெயரால் தகுதியுள்ளவனும் தகுதியற்றவனும் பிக்ஷு சங்கத்தில் சேருவதால் உபகாரத்

தைக் காட்டிலும் அபகாரமே செய்யமுடிகிறது. எட்டு வயதுடைய உங்கள் இளங்குமாரனாகிய ராஹுலனை நேற்று பிக்ஷு சங்கத்தில் சேர்த்துக் கொண்டீர்கள். இப்போது அச்சிறுவனுக்கு சம்சாரம், சன்யாசம் இவைகளைப்பற்றி என்ன தெரிய முடியும்? விளையாட்டைப்போல் அவனை முற்றும் துறந்த பிக்ஷு சங்கத்தில் சேர்த்ததால் என்னென்ன அனர்த்தங்கள் நேரிட இருக்கின்றன! பாருங்கள். இந்த சாக்கிய ராஜ்யத்தின் காரியத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். தாங்களோ முற்றும் துறந்தவர் ஆனீர்கள்; ராஜபுத்திரர்களான ஆனந்தன், தேவதத்தன் இருவர்களுக்கும் சன்யாசம் வழங்கினீர்கள்; கடைசியில் ஏழெட்டு வயது நிரம்பாத ராஜகுமாரன் ராஹுலனையும் பிக்ஷு சங்கத்தில் ஏற்றுக்கொண்டீர்கள். அதனால் சாக்கியர்களின் ராஜ்யம் மரணத்தருவாயில் இருந்து வருகிறது. அவர்களது ராஜவம்சக் கொடியின் கடைசி அரும்பையும் கிள்ளி எறிந்து விட்டீர்கள். சாமந்த குலத்து உத்தம புருஷர்கள் யாவரும் துறவிகள் ஆயினர். இந்த ராஜ்யத்தில் தகுதியும் நற்குணமும் உள்ள உத்தம சந்ததி முடிந்துவிட்டது. தகுதியின்மையும் துர்க்குணமும் நிரம்பிய ஜனங்களின் சந்ததிகளே தழைத்து வருகின்றன. இத்தகைய நிலைமையில் சிறந்த விதைகளைப் பொறுக்கி எறிந்து விட்டு, உபயோகமற்ற விதைகளை விதைக்கும் விவசாயியின் பயிர் அடையும் கெட்ட திசையையே அந்த சாக்கிய ஜாதியும் அடையப் போகிறது, துறவறத்தில் சிற்றின்பத்தை நீக்குவதால் குழந்தைப்பேறு அற்றுப் போய்விடுகிறது. துறவறத்தை உயர் மக்கள் மேற்கொள்ளுவதால் நற்குடிகள் மெலிவுற்று

நாசமுறுவதால் உலக அழிவும் ஏற்படலாகிறது. தங்களுடைய பிரசாரம் இப்படியே நடந்து வருமானல் ஆயிரக்கணக்கான மக்கள் ஏர்களைக் கைவிட்டு, கடைகளை மூடி, தொழில்களையும் துறந்து விடுவார்கள். பிறரது முயற்சியினலும் உழைப்பினலும் வாழ்ந்து வரும் பிக்ஷு சங்கத்தில் பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை பெருக்கிக் கொண்டே வரும். அந்தோ! கலப்பையைக் கைவிடுவதும் சன்யாசதருமத்தின் இரண்டாவது விதியாகிவிட்டது. மற்றவர்கள் இறப்பதனலும் உழுதே தீரவேண்டும். திரிந்து கொண்டே அந்தச் சோற்றைச் சாப்பிடுவது சன்யாச தருமத்தில் பாவம் ஆகாது. ஆனல் பயிர்தொழில் செய்வது பாவம்! ஏனென்ருல் கலப்பையினல் உயிர்கள் பல இறந்துவிடுகின்றனவாதலால் பயிர்த் தொழில் ஹிம்ஸைக்கு மூலகாரணமாகிறது. இந்தப் பாவமயமான ஏர்த்தொழிலை சன்யாசி செய்யமாட்டான். பிறரைக்கொண்டு இந்தப் பாவத் தொழிலைச் செய்வித்தாலும், இந்தப்பாவத்திலிருந்து முளைத்த உணவை மாத்திரம் தள்ளிவிட மாட்டான். இவ்வாறு பிறரை ஏமாற்றித் திரிவதைக் காட்டிலும் சன்யாசி தானே விவசாயம் செய்து உண்டு வருவானயின் அவனது பாவம் குறைந்தேயிருக்கும்.

புத்தர் : அப்படியா சொல்லுகிறீர்கள் ? சேனதிபதி விக்ரமரே, என்னைப் போன்ற சன்யாசிகள் இவ்வாறல்லவா இருக்கிருர்கள்—நாங்கள் இந்தப் பிறப்பாகிய மயக்கம் என்னும் காட்டைச் சுத்தி செய்து மனமாகிய நிலத்தில், ஞானமாகிய கலப்பையால் உழுகிருேம். நீதிமுறையென்பது எங்கள் கலப்பை

யின் மேழி. முயற்சி ஒழுக்கம் இவ்விரண்டும் அதன் எருதுகள், நல்லறம் என்னும் விதைகளை விதைத்து நல்தொழில் நிறைந்த நீரைப் பாய்ச்சுகிறோம். கடைசியில் கிடைக்கும் பயிரோ துக்கம் யாவையும் நீக்கும் அழிவற்ற வாழ்வுதான்.

விக்ரமர்: ஆனால் மகாராஜரே, தங்களைப்போல இத் தகைய விவசாயிகள்—சமூக நன்மைக்கு உறைவிட மாகிய சாசுவத பலனையே கருதி முழுமனதை அக் குறிக்கோளில் நாட்டும் உழவர்கள்—எத்தனை பேர் களை இந்த தங்களது சன்யாச சங்கத்தில் காண முடி யும்? அத்தகையவர்கள் இவ்வுலகில்தான் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? ஒருவர், இருவர், அதிக மாக இருந்தால் மூவர்—இந்தச் சிலரது காவிக் கொடியின் கீழ், முயற்சியற்ற நூற்றுக்கணக்கான சன்யாசிகளும் பிக்ஷுக்களும் வைராகிகளும், கீழ் மக் களே நிரம்பிய சந்தைக் கூட்டத்தைப்போல் திரண்டு இருக்கிறார்களே. இத்தனை பேர்களும் உழைப்பற்று உண்டு திரியும் நிலையில் இருக்க வேண்டுமானால் இராஜ்யத்தின் பொருளாதார சக்தி எவ்வளவு குறைந்து போக வேண்டியிருக்கிறது. அதைப் பாருங்கள் துறவறம் பூணும் ஒவ்வொருவனாலும் உலகிலே இருவரது சம்பாத்தியம் குறைவுபடுகிறது. ஒன்று அந்தத் துறவியினது. மற்றொன்று அந்தத் துறவியை போஷிக்கும் விவசாயினது. துறவி என் பவன் ஒவ்வொரு தொழிலின் பலனையும் உறிஞ்சும் சமூகத்தின் வரிச்சுமையே ஆவான். இந்த உங்கள் சங்கத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். இதில் எட்டு வயது நிரம்பாத சிறுவர்கள் ஆயிரக் கணக்கில் இருக்

4

கிறார்கள். இதைப்போல அநேக ஆண்டுகள் நடந்து வருமாஞல் இவர்களின் எண்ணிக்கை லக்ஷக்கணக் காகப் பெருகிவிடும் இந்தத்துறவிகளுக்கும் வாழ்க் கையின் அவசியங்கள் குறைவில்லை. இல்லறத்தார் களைப்போல ஆடைகள் பலவேண்டாவாயினும் இத் துறவிகளுக்கும் வஸ்திரங்கள் வேண்டும். பெரிய மாளிகைகள் இல்லாவிடினும் விஹாரங்களாவது வேண்டும். வீடுகள் இல்லாவிடினும் மடங்களாவது வேண்டும். லட்டு இல்லாவிட்டாலும் ரொட்டித் துண் டாவது வேண்டும். இன்னும் செருப்பு வேண்டும் போர்வை வேண்டும். வைத்தியன் வேண்டும். மருந்துகள் வேண்டும். பாத்திரங்கள் வேண்டும்— ஏன், சண்டைகளும் வேண்டும். தங்களுடைய சங் கத்திலே கட்சிப் பிரதி கட்சியின் காரணமாக ஏற் பட்ட பல சண்டைகளில் சங்கமே கலைந்து விடுமோ என்று நீங்கள் பயப்பட்டதில்லையா? சுவாமி, எந்த வீட்டில் ஒரு சகோதரன் உழைத்துப் பொருளீட்டி வர மற்றைய நான்கு பேர்கள் சோம்பித்திரிவார் களோ அந்த வீடு அதோகதியடைந்து அழிவுறு வது திண்ணமன்றோ ? அதைப்போல லக்ஷக்கணக் கானவர்கள் உழைப்பால் சம்பாதியாமல் சோம்பித் திரிவாரேயாயின் அவர்களை போஷித்து வரும் பாரத்திஞல் சமுதாயமே பல தலைமுறைகளாக அஞ்சி திகில் அடைந்து இழிந்து போகாமல் இருக்க முடி யுமா ? பொருளீட்டும் முயற்சியை கைவிடும்படி உழ வரைத் தூண்டும் சன்யாச ஆசிரமத்தின் இரண்டா வது பிரதிக்ஞை இருக்கிறதே, இதன் முடிவு வெகு பயங்கரமாக இருக்கிறது. இதஞல் க்ஷேமத்துக்குப் பதிலாக உலகுக்கு நாசமே உண்டாகும்,

புத்தர்: ஆனால் சேனைத் தலைவரே, பௌதிகச் சம்பத்து ஆகிய இந்தச் செல்வம் உண்மையானதன்று. இப் பிறவியில் உலகிலே உயர்வையடைவது புருஷார்த்தமாகாது. இவ்வுலகத்தையும் உலக வாழ்வையும் கடந்த தன்மையே பிறவியின் பயனாகும். உலக சம்பந்தமற்ற உன்னதியே உண்மையான புருஷார்த்தமாகும். இந்த அடிப்படையான தத்துவத்தை தாங்கள் மறந்துவிட்டீர்களே.

விக்ரமர்: இல்லை, இல்லை. நீங்கள்தான் சரி என்று ஒப்புக்கொண்டிருக்கிறீர்களே. அதாவது நிருவாணம் அடையும் பொருட்டோ அல்லது அது அடைந்த பிறகோ முக்கியத் தருமத்தை இல்லறத்திலிருந்தே செய்யலாம் என்று. இவ்வாறு இருமுறை வாழ்க்கையிலும் ஆத்மார்த்த நன்மை கிடைப்பதாயின் எந்த வாழ்க்கையில் லௌகிக நன்மையும் லாபமும் அதிகமாகக் கிடைக்கும் என்பதை கவனிக்க வேண்டும். இன்னும் நான் என்ன சொல்ல வேண்டும்? துறவறவுலகைக் காட்டிலும் இல்லறவுலகே அவசியமானது. இந்தப் பயிர் விளைந்தால்தானே பிச்சையேற்பவன் சாப்பிட முடியும்? ஒருவன் பற்றற்றவனாகிவிட்டால் தனது நேரத்தை அவன் பிச்சை புகுவதில் கழித்தால் என்ன, அல்லது பயிர்த் தொழிலில் கழித்தால் என்ன? ஒரே மாதிரியான பற்றுதலை உண்டாக்குமா அல்லது உண்டாக்காதா? ஆதலால் நான் சொல்லுவதெல்லாம் இதுவே தங்களைப்போன்ற முக்தர்களும், சன்யாச ஆசிரமத்தில் மாறுபட்ட பிரதிக்ஞைத் தளைகளில் சிக்கிக்கொள்ளாமல், கிரஹஸ்தனது இயற்கையான முறையைக்

கொண்டே, உலகின் நன்மைக்காக வாழ்வைக் கழிப்பீராயின் மிகுந்த நன்மையை இவ்வுலக மக்களுக்குச் செய்யமுடியும். மேலும் தங்களைப் போன்ற மகான்கள் பரலோக நன்மையை கவனிப்பது சரியென்றாலும் மற்ற ஜனங்கள் சன்யாச ஆசிரமத்தில் பிரவேசிப்பதை என்றென்றும் தடுத்தே தீரவேண்டும். ஏனெனில் பற்றுள்ள உழவன் இந்த இரண்டு பிரதிக்ஞைகளை எடுத்துக்கொண்டு மிகுந்த தியாகம் செய்தே சன்யாசம் பெற வேண்டியிருக்கிறது. அதனால் ராஜ்யத்தில் குடிகளின் எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் குறைவு தோன்றி நன்மைக்குப் பதிலாக தீமையே உண்டாகிறது என்று நான் திரும்பவும் சொல்லுவேன். இதனால் சமூகத்துக்கு பயங்கரமான ஹானியுண்டாகும். இராஜ்யத்துக்கும் கொடிய நாசமேயுண்டாகும்.

விக்ரமர்: சன்யாசத்தின் மூன்றாவது பிரதிக்ஞை வாளைத் தியாகம் செய்வது, அதாவது அதைத் துறந்து கைவிடுவது. இது எவ்வளவு மதியீனம், பாருங்கள். அஹிம்சையில் அறிவிழந்து அளவு மீறிய நம்பிக்கையில் பிடிவாதம் செய்வது விவேகமாகுமா? சுவாமி, இது புத்தி சூனியமே. அளவு கடந்த அஹிம்சை அளவுமீறிய ஆத்ம நாசமேயாகும்; தற்கொலையேயாகும். இந்தத் தற்கொலை ஹிம்சையே ஆகுமாதலால் மட்டற்ற ஹிம்சையிலேயே முடியும். இது அஹிம்சையின் விசித்திர விளைவு.

புத்தர்: ஆனால் அளவு மீறிய அஹிம்சையை நாங்கள் அடியோடு ஆதரிக்கவில்லையே. நல்லோ

ரைக்காப்பதன் பொருட்டு தீயோரின் வலியையும் கொடுமையையும் எதிர்க்கும் ஹிம்சையானது ஹிம்சையே அன்று; அது ஹிம்சையை அடியோடு துலேக்கும் புண்ணிய காரியமேயாகும். இதுவே ததாகரின் அபிப்பிராயம். ஆனல் இது கிரஹஸ்தனது கடமையேயன்றி சன்யாச ஆசிரமத்துக்குப் பொருந்தாது.

விக்ரமர்: அதற்காகவே நானும் சொல்லுகிறேன். நீதியைக்காக்கும் வாளினே நீக்குதலேயே பெரிய பிரசாரமாகக்கொண்ட இந்தத் துறவற ஆசிரமம் குறுகிய நோக்கம் உடையதாகும். இந்த ஆசிரமத்தை ராஜ்யத்தில் கட்டாயப்படுத்திப் புகுத்துவதால் பேராபத்தேயுண்டாகும். ஏரைப் பிடிப்பதில்லே; ஆயுதங்களேத் தாங்குவதில்லே என்று இவ்வாறு சபதங்கள் கொண்டு மக்கள் யாவரும் வீடுகளேத் துறந்து மடங்களில் தங்கிவரும் சன்யாசமயமான ராஜ்யம் இன்று இல்லாவிடினும் நாளேக்கு சோறு இல்லாமல் பட்டினியாய் வாடியே தீரும்; அதன் மக்கள் வலிவு குன்றியே போவார்கள்; அதுவும் அயலாரின் ஆக்கிரமிப்புப் பிடியில் அகப்பட்டு தத்தளித்ததே மடியும் முக்தியெய்திய நிலேயிலும் உலக நன்மையின் பொருட்டு தருமப் பிரசாரத்துக்காகச் சங்க ஏற்பாடுகளேச் செய்து வருகின்றீர்களே! உங்கள் முயற்சிகள் யாவும் வீணே ஆகும். ஏனெனில் நீங்கள் துறவற வாழ்க்கை முறையை ஆதரிக்கிறீர்கள். அதனல் உலகம் சிதறியே போகும். மற்றும் தங்களது மகத்தான தரும இயக்கம், சங்கம், லக்ஷக்கணக்கான பிக்ஷுக்கூட்டம், இந்த சாதனே, சமாதி தவவனங்

கள், சன்யாச உலகு இவை யாவும் காட்டு விலங்கு களினும் கொடிய அரக்கர்களின் குருதி தோய்ந்த நகங்களால் கிழிந்து பிளவுண்டு அழிவே அடையும்.

புத்தர் : ஆனால் சேனைத் தலைவரே, துறவியின் கையி லும் பாணம் ஒன்றுண்டு! வாள் ஒன்று உண்டு. அது இரும்பினால் செய்யப்பட்ட தன்று; என்றாலும் அதே காரணத்தால் இரும்பைக் காட்டிலும் மிக்க பலனையளிக்கவல்லது. துறவி கொள்ளும் இவ்வா ளின் பெயர் க்ஷமை, பொறுமை, அதாவது மன் னித்தல் என்பது விக்ரமரே பொறுமை எனும் வாளா னது எவன் கரத்திலிருக்குமோ அவனைப் பகைவன் என்ன செய்ய முடியும்?

விக்ரமர் : என்னவா? வதம்—பிராண நாசம்—எவனுக் குத் தண்டனை வழங்கும் சக்தியிருக்கிறதோ அவ னுக்கே க்ஷமிக்க, பொறுத்துக் கொண்டு மன்னித் திட, சக்தியிருக்கும். தண்டிக்க வல்லமையற்ற பல வீனனின் பொறுமையைச் சரணாகதி யென்றே சொல்லுவார்கள், அது வாள் அன்று. பசித்து ரத் தத்தை நாடிவரும் புலிக்கு முன்பாக பசுமாடு சும்மா நின்றுவிடுகிறது. அது பொறுமை, க்ஷமை, என்ற வேதாந்தத்தைக் கையில் கொண்டிருந்த போதிலும், அந்த ஆயுதத்தைக் கண்டு புலியானது அஞ்சி கிடுகிடுத்து அதை விட்டுவிடுமா? அந்தப்பசு 'நான் மன்னித்து விடுகிறேன்' என்று சொன்னாலும் புலி அதை தின்னவேயிருந்தது — இல்லை — சரணாகதி யடைகிறேன் என்று மன்றாடிக் கெஞ்சினாலும் புலி அதைத் தின்றே தீரும்—கொடிய பகைவர்களிடம் பொறுமை காட்டுவதால் அவர்களை ஆக்கிரமிப்பிலி

ருந்தும் திருப்பிவிடலாம் என்று எந்த ராஜ்யமும் நினைப்பது அவிவேகமாகும். அவர்கள் அந்தப் பொறுமையைப் பலவீனமென்றே அறிந்து அதனால் மேன்மேலும் மானபங்கம் செய்து கோபமே காட்டுவார்கள். இக்கொடிய சத்துருக்களிடம் சமாதானத்தை யாசிப்பதால் பெருத்த ஏமாற்றமே விளையும் இத்தகைய உதாரணங்களையே சரித்திரம் நமக்குக் காட்டுகிறது. அந்தோ, இன்றைக்கும் அதையே காட்டுகிறது. பாருங்கள். இந்த தங்களுடைய சாக்கிய ராஜ்யமானது குடிகளின் பலத்தையே ஆதாரமாகக் கொண்டது. இதற்கு ஒருபுறம் முடிவேந்தரின் அரசபலத்தைக்கொண்ட கோசல நாடு. மற்றொரு புறம் அதே பலத்தைக்கொண்ட மகத நாடு. புகழ் பெற்ற வலிவுமிக்க இவ்விரு அரசர்களின் ராஜ்யங்களுக்கும் இடையே இந்தச் சாக்கிய ராஜ்யம் குடிகளின் வலிவையே நம்பியிருக்கிறது. இந்த விநாடியில் நாம் வலிவில் சற்றே குறைவுண்டானாலும் இவ்விரு பருந்துகளில் ஒன்றுக்காவது இரையாகி வீழ்வோம். இத்தகைய நிலையில் 'யுத்தம் கேவல ஜீவனம்' என்றும், ஆயுதம் தாங்குவது கூடாது என்றும் மக்களிடையே சொல்லி, வாளைத் துறப்பதால் தான் புத்தரது அருள் கிட்டும் என்ற, மாறுபட்ட எண்ணத்தைப் பரப்புவது பெருத்த ஆத்ம நாசத்தையே விளைவிக்க வல்லதாகும் என்பதே என்னுடைய அபிப்ராயம்.

புத்தர்: அப்படியா? இந்தச் சாக்கிய ராஜ்யத்துக்கு மட்டும் தனியாகத் துறவறத்தையும் போரொழிப்பையும் நான் உபதேசிப்பதானால் நீங்கள் கூறியவாறு

அஞ்சத்தக்கநிலை ஏற்படலாம். ஆனால் நானே நீங்கள் சொல்லிய முடியரசு ராஜ்யங்களுக்கும் போரொழிப்பையே வற்புறுத்தியிருக்கிறேன். இதைப்பாருங்கள். கேவலம் தங்களது மிருகபலத்தை நாட்டுவதன் பொருட்டு மக்கள் ஒருவரையொருவர் வாளால் வெட்டி வீழ்த்துவது நாணத்தகுந்த விஷயமல்லலவா? இவ்வுலகிலுள்ள ராஜ்யங்கள் யாவும் ஒருமித்து, நாணத்தக்க போர் வேட்கையினின்றும் மீளுவதென்றே முடிவுசெய்து, எமது தருமத்தின் அன்பு, பொறுமை, சாந்தி, அஹிம்சை என்னும் உன்னதக் கோட்பாடுகளைத் தழுவுவாரேயானால், தனிப்பட்ட மனிதனோ ராஜ்யமோ அஞ்சிடக் காரணமே யிராது அல்லவா? இதைப் பாருங்கள். ததாகதர் இந்தச் சங்கத்தைத் தொடங்கிப் பத்து ஆண்டுகள் இன்னும் ஆகவில்லை. இதற்குள் நீங்கள் அஞ்சும் கோசல நாட்டுக் கோமகனான பிரத்தோதனும் மகத நாட்டு மன்னனான பிம்பிசாரனும் ததாகதரான புத்தரின் தருமதீக்ஷை பெற்று நமது சீடர்களாயிருக்கிறார்கள். சாக்கிய ராஜ்யத்துப் பெருமக்களில் மேம்பட்ட சேனாபதி விக்ரமசிம்மரான நீங்களும் எமது சாதாரணச் சீடராகச் சம்மதிப்பதைவிட நேரடியான பிக்ஷு வாழ்வையே ஆணிவேராகக்கொண்டு இந்த தருமத்தைப் பரப்புவதென்று புறப்படுவீர்களாயின் அந்த எல்லா ராஜ்யங்களுக்கும் எமது உபதேசத்தில் நம்பிக்கையேற்படும். மக்களின் உள்ளத்தில் போரின் தேவையே தோன்றாமல் அதன்மீது வெறுப்பே தோன்றும். மற்றும் மக்களுலகினின்றும் போரினை வேருடன் களைந்தெறியும் பெரும் பணியில் தாங்களும் பெரும் பங்குடையவராவீர். விக்ரமரே, உலகி

னின்றும் கலகக் குருதியை அகற்றுவதே எமது நோக்கம். இதில் தாங்களும் ஒத்துழைத்து முழு முயற்சியும் தியாகமும் செய்வது பெருங்கடமை யல்லவா?

விக்ரமர் : இருக்கலாம் சுவாமி, ஆனல் இவ்வித சாதனைகளால் அது சாத்தியப்படுமா என்று ஐயம் தோன்றுகிறது.

புத்தர் : சேனுபதியே, ஐயத்தையகற்றிச் சற்று ஊக்கம் காட்டுங்கள். எமக்கு உங்கள் உதவி கிட்டுமாயின் இருபது இருபத்தைந்து ஆண்டுகளில் இந்த நமது பாரத தேசத்திலாவது ஆயுத யுத்தம் முடிவு பெற்று மறைந்து விடுவதைக் காண்பீர்கள்.

விக்ரமர் : அவ்வாறே ஈசன் அருள் புரிவாராக. மனித ஜாதிக்கு பயங்கரச் சத்துரு மனிதனேயாவான் என்பது உண்மையே. மனித ஜாதியின் மீதுள்ள இக் களங்கத்தை வெகு விரைவில் நீக்கி, மக்களுலகில் அமைதியின் ஆட்சியை—சாந்தியின் சாம்ராஜ்யத்தை—நாட்டும் பெருமை எங்கள் சாக்கிய சிம்மரான ததாகத புத்தருக்கே கிட்டுவதாக; ஆனல் துறவரசே எனது அச்சத்தை மறைத்திடாமல் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் இவ்வுலகில் ஆயுத பலத்தின் பெருமையே போற்றப்பட்டு வரும்; ரத்தவெறி பிடித்த சாம்ராஜ்யத்தின் வெற்றிப்பரியே உலகில் தாண்டவமாடி வரும். அப்போது, சாந்தி யுகக்கனவை யுலகில் நாட்டும் பொருட்டு யாவருக்கும் முந்தியே படையை யகற்றியவர்கள் அந்தச் சாம்ராஜ்யப்பரியின் குளம்புகளில் மிதியுண்டு, பிறர்

தயவை நம்பி வாழ்வதால் நிலையற்று நசுங்குண்டு, அஹிம்சை எனும் தூண்டிலை விழுங்கி, ஹிம்சை வலையில் விழுந்து வருந்துவார்கள். அப்போதன்றே விளங்கும்—துறவறத்தையே மேற்கொண்டு லக்ஷக் கணக்கான மக்கள் ஆயுதத்தைக் கைவிட்டதால் தைரியமற்று தத்தளிப்பதின் விபரீத விளைவு அப்போதன்றே தெரியும். அதனால் இன்னும் இருபத்தைந்து தலைமுறை வரையில் இந்த நமது பாரதபூமி அநுபவிக்கவேண்டிய பயங்கர விதியின் மர்மம் அப்போதல்லவா புரியும். நான் ஒத்துழையாத காரணத்தால் உயர் துறவியான புத்தரின் இயக்கம் உலகின் கண்ணே கைகூடவில்லை என்று யாரும் நினைக்கலாகாது என்ற எண்ணத்தினல் உங்களது விருப்பத்துக்கு இணங்குகிறேன். மேலும் இந்த பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து கொள்கிறேன்.

(உறையிலிருந்து வாளை எடுத்து)

சாக்கியரின் சேவையில் இந்நாள்வரை நான் சுமந்து வந்த இந்த வாளையும், எனது ஒரே மகனை வல்லபனையும் என் சாக்கிய சாம்ராஜ்யத்தின் மடியில் கிடத்திவிட்டு சன்யாச ஆசிரமத்தை ஏற்றுக் கொள்கிறேன்.

புத்தர்: சேனைத் தலைவரே, உலகின் நன்மைக்காக நீங்கள் செய்துள்ள பெரும் தியாகம் விண்ணவராலும் வியந்து போற்றத் தக்கதேயாகும். மண்ணுலகில் தயை, அன்பு, சாந்தி இவற்றின் சாம்ராஜ்யத்தை நாட்டுவதன் பொருட்டு நீங்கள் காட்டும் பெருமுயற்சி மக்கள் சரித்திரத்தில் திண்ணென விளங்குவதாக. இதன் விளைவு எவ்வாருகுமோ

என்று அஞ்சிய நீங்கள் நற்பயனையே காண்பீராக.... வாருங்கள் சாரிபுத்திரரே சங்காகாரத்தில் இவ்வுத் தம சீலருக்குச் சங்கதீக்ஷை வழங்குவீராக,

(பாடுகிறார்)

*படையுலகில் சாந்தியுகம் கடைசியாகத் தோன்றுதே;*
*தடையில்லாமல் அடிதடியும் விடைபெற்றுப் போகுதே*
*மடைதிறந்த கருணையினி நடைபெற்றுலாவுதே;*
*சடைபோல பற்றும்தனை யுடைந்து துகளாகுதே:*
*இடையில்லாமல் உலகுதனைக் குடைந்தபோரும் மறையுதே;*
*கொடையாளர் கரமேந்தும் குடையின்நிழல் பரவுதே.*

[எல்லோரும் ''புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி'' (புத்தனே புகல்; தருமமே புகல்; சங்கமே புகல்) என்று கோஷித்தவண்ணம் போகிறார்கள்.]

முதல் அங்கம் முற்றும்.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# அங்கம் 2

## காட்சி 1

*சுலோசனையும் வல்லபனும் அரண்மனையில் உட கார்ந்திருக்கிறார்கள்.*

**சுலோசனை :** எனது வல்லபரே, ஆ! இதுவரை இப்ப டிப் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதில்லை. இன்று சொல்லிவிட்டேனே. எனது பிராணநாதரே யென்ற அர்த்தத்தில்தான் கூப்பிட்டேன். ஆனால் அது உங் களுடைய பெயராகவேயிருந்து விட்டதால் கண வரின் பெயரைச் சொல்லியவளாகி விட்டேன். ஆ! இதனால் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளவில்லை என் மீது குற்றம் கூறுவார்களே. என்ன செய்வது? உங்கள் அன்புக்கு பாத்திரமான ஒரு பெண் தனது காதலையெடுத்துக் காட்டும் இந்தப் பெயரைச் சொல் லக் கூடாதென்றால் அந்தக் குற்றம் அந்தப் பெயரை உங்களுக்கு வைத்தார்களே, அந்த உங்க ளுடைய பெற்றோர்களையே சேரும். இது உண்மை தானே?

**வல்லபன் :** ஆஹா, சொல்லம்மா, சொல்லு—எனது சுலோசனா....ஆ! உன் பெயரைச் சொல்லி விட் டேனே—என்ன செய்வது? வேண்டுமென்றே அப் படிச் சொல்லவில்லையம்மா—காதலைத் தூண்டும் உனது கண்களின் சிறப்பையே சொன்னேன்

ஆனல் மனைவியின் பெயரைச் சொல்லியவனகிவிட்டேனே. ஆ! இதனல் நல்லொழுக்கத்தை மேற்கொள்ளவில்லை யென்று என் மீது குற்றம் கூறுவார்களே. என்ன செய்வது? இதில் தவறு இருந்தால் அது இந்தப் பெயரை உனக்கு இட்ட உனது பெற்றோர்களையே சேரும். அவர்கள் இத்தகைய அழகிய கண்களை யுனக்குத் தந்து, அதனுடன் நில்லாமல் சுலோசனை யென்று பெயரும் சூட்டி, நல்லதையே எடுத்துக்கொள்ளும் என்னைப்போன்ற காதல் மக்களுக்கு உன் கண்களின் அழகை வர்ணித்துச் சொல்ல வகையில்லாமல் செய்து விட்டார்களே.

சுலோசனை : போங்கள். என் வார்த்தைகளைக் கொண்டே என்னை மடக்கி கேலி செய்வது இருக்கட்டும் பெண்களின் இன்பத்தைப் போல் பதவியும் சுதந்திரமும் வருமா? எங்களது காதல் இன்பத்துக்குத்தானே இந்த ஆண் சிங்கங்கள் பறக்கிருர்கள்.

வல்லபன் : உங்கள் காதலை நாங்கள் ஒருமுறை திருடினல் எங்கள் லக்ஷியத்தை நீங்கள் நூறுபங்கு திருடி நிரப்பிக் கொள்ளுகிறீர்களே. சிக்கினல் தொலைந்தது.

சுலோசனை : அதனல்தான் எனக்கும் தோன்றுகிறது. தங்களுக்கு வரவர என்னைப் பற்றி லக்ஷியமே முற்றும் குறைய ஆரம்பித்திருக்கிறது. இந்தச் சாக்கிய ராஜ்யத்தின் சேனதிபதிப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பிறகு தங்களுக்கு என்மீது இருந்த அன்பெல்லாம் எங்கோ மாயமாய் மறைந்து விட்டதே. இது

உண்மைதானே? நானும் நேற்று முதல் பார்த்து வருகிறேன். இன்று நமது பிரீதி சங்கமத்தின் வருஷதினம் என்று உங்களுக்கு நினைவு இருந்ததா? ஆ, இன்று நமது காதல் மணத்தின் முதல் வளர்ப்பு நாள் அல்லவா? நாதா, எனது உள்ளத்தில் காம தேவனுக்குப் பூஜை செய்ய விரும்புகிறேன்.

(பாடுகிருள்)

*பரமேசன் முனிவுக்குப் பலியாகி மறைந்தாலும்*
*கிரிராஜன் மகளுக்கவர் கருணை புரிந்தார்; அதனுல்*
*முருகவேள் தோன்றினரே, விண்ணுலகைக் காத்தாரே;*
*மதவேளே வாழியவே, மாதர் நலம் வாழியவே—*
*நாரியர்க்கு வெற்றி நல்கி. நிந்தனையறியாத*
*வீரர்குலம் வற்ருமல் பாரதத்தைக் காத்திடுவீர்.*
*வீரர்வித்து வாழியவே, வேத முறை வாழியவே,*
*மாரவேள் வாழியவே, மாதர் நலம் வாழியவே—*

வல்லபன்: அடேயப்பா காமனது பலத்திஞல் அத்தனை வலிவுற்ற நீங்கள், பின்பு காமதேவனது பூஜைக் காக வலிவற்ற எங்களைக் கெஞ்சிக் கேட்பது மட்டும் என்ன காரணத்தாலோ?

சுலோசனை: ஆ! அதுவா? இப்போது சாக்கிய ராஜ்யத்துச் சேனுபதியாகிவிட்டீர்களல்லவா? உங்கள் அந்தஸ்தைப் பெருமைப்படுத்துவதற்குத்தான். இப்போதெல்லாம் என் மீது தங்களுக்குச் சாமானிய தயைகூட மிஞ்சவில்லை. என் கவனமெல்லாம் பறந்தோடி விட்டது. வீரபுருஷர்களின் இடையில் வாள் என்னும் எழில் மிகுந்த அணங்கு ஒரு முறை ஏறி, அதன் இன்பத்தை அவர்கள் ஒருமுறை ருசிபார்த்து அறிந்துவிட்டால், என்னைப்போன்ற அபலைகளிடம்

இருந்த இன்பமும் அன்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. அந்த வாள் அணங்கு மீண்டும் உங்கள் கரத்தில் எப்போது ஏறுவளோ? அறியேன். உங்களையும் அந்த அணங்கையும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன், சுவாமி, இந்த மங்கள முகூர்த்தத்தில் காமனை பூஜிக்க விரும்புகிறேன்.

**வல்லபன் :** உண்மையாகவே இன்று நமது பிரீதி சங்கமத்தின் பிறந்த நாள்தானு? ஆ! எவ்வளவு ஆனந்தத்தையளிக்கும் சொல் இது! அப்படியானல் நீ விரும்பியவாறு இப்போது பூஜை செய்வதுஅவசியமே. நமது காதலின் கனி திரண்டு பக்குவம் பெற்று வருவதை அப்புறம் சொல்லுகிறேன்.

**சுலோசனை :** பார்த்தீர்களா?—இந்தப் புருஷர்களுடைய வெறும் விநோத விளையாட்டு எனக்குப் பிடிக்கிறதில்லை. மாமா (மாமனர்) மட்டும் இன்று இங்கேயிருந்திருந்தால்....

**வல்லபன் :** உஸ்!....உன் முகத்தைக்கூடப் பார்க்கமாட்டார். ஏனென்ருல் அவர் ஒரு புகழ் பெற்ற துறவி. பெண்களைப்பற்றிச் சன்னியாசிகள் நினைப்பதே பாவம் என்பார்களே.

**சுலோசனை :** ஆனல் என் மாமன் அத்தகைய அல்ப புத்தியுள்ளவராக இருக்கமாட்டார். இரகசியமாகவே கடிதம் அனுப்பி, யாரும் அறியாதவாறு என் உள்ளத்தையும் திருடிய எனது காதலரின் தந்தையரிடம் அல்ப புத்தியும் குறுகிய நோக்கமும் இருக்க முடியாது.

வல்லபன் : அப்படியானல் அதற்கு உதாரணமாக அவரிடமிருந்து கடிதமும் இதோ வந்திருக்கிறது. (கடிதத்தை முன்னல் நீட்டி) இந்தக் கடிதம் இன்று தான் வந்தது. ஆ! இத்தனை காலம் கழித்து அவரிட மிருந்து வந்துள்ள இந்தக் கடிதத்தால் என்னுள்ளம் பரவசமடைந்து சந்தோஷப் படுகிறது, சுலோசன. என் பிதாவான சேனபதி விக்ரமசிம்மர், இந்தச் சாக்கிய ராஜ்யத்தின் ஆற்றல் மிகுந்த பண்டைப் படைத் தலைவர். புத்த பகவானின் வேண்டுகோளின்படியே புத்த சங்கத்தில் சேர்ந்து இன்று ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அப்போது எனக்கு அதிகமிருந்தால் இரண்டு வயதிருக்கும். அன்று முதல் இன்று முடிய, எனக்குத் தெரிந்த வரையில் இத்தகைய கடிதங்கள், இரண்டோ மூன்ருே மட்டும் வந்திருக்கின்றன. ஒரு கடிதத்தை சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னர் எனதருமைத் தாயார் சிவலோகம் சென்றபோது என்னைத் துயரினின்றும் தேற்றுவதற்காக எழுதியிருந்தார். இப்போது என்னை வாழ்த்துவதற்காக இந்தக் கடிதம்........

சுலோசனை : வாழ்த்துவதற்காகவா? எந்த விஷயத்தில் வாழ்த்துக்கள்? தங்களுடைய காதல் மணத்தின் செய்தி அவருக்கு எட்டி விட்டது போலத் தோன்று கிறதே. அன்பரே, உண்மையைச் சொல்லுங்கள் இந்த சம்பவத்தைக் கேட்டு மாமன் கோபித்துக் கொள்ளவில்லையே? தவவொழுக்கத்தைத் தழுவிய துறவி, அதிலும் பெண்களைப் பார்வையிலிருந்தும் விலக்கும் புத்தபகவானுடைய பிக்ஷு, என்ருலே பெண்களாகிய எங்களுக்குச் சப்த நாடியும் அடங்கி

விடுகிறது. என்ன எழுதியிருக்கிருர்? உண்மையை மறைக்காதீர்கள். எதை வாழ்த்தி யெழுதி யிருக் கிருர்?

வல்லபன் : என்னையே வாழ்த்தி யெழுதியிருக்கிருர். சாக்கிய மக்களின் சேனைத் தலைமையை அவர் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னம் துறந்தாரே, அந்தத் தலைமைப் பதவியில் என்னை யின்று நியமித் திருப்பதை யறிந்து வாழ்த்துகிருர். மேலும் உன்னை நான் மணம் புரிந்து கொண்டேன் என்று ... ...

சுலோசனை : என்று என்ன? கோபித்துக்கொண்டாரா? சொல்லுங்களேன் - சொல்ல மாட்டீர்களா? எனக்குத் தெரியும்—அவர் கோபித்துக் கொள்ளமாட்டார்— நான் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கு வேன். நான் அந்தக் கடிதத்தைப் பார்க்கலாமா? போங்கள்....கொடுக்கமாட்டீர்களா?

[போக ஆரம்பிக்கிருள்.]

வல்லபன் : அடி பைத்தியமே இதைக் கேட்ட பிறகு போ. அவர் கோபம் கொள்ளவில்லை. நான் விவாகம் செய்துகொண்டதில்—அதிலும் உன்னைப் போன்ற தேவியை, யசோதராவின் கோலியன் குலத்துக் காரிகையை —

சுலோசனை : இல்லையில்லை, அப்படியில்லை. அப்படி யானுல் கடிதத்தைக் காட்டுங்கள். இந்த உங்க ளுடைய விரிவான பிரசங்கத்தில் எனக்கு நம்பிக்கையே யில்லை. காட்டமாட்டீர்களா? பாருங் கள் நான் போகிறேன் இதைக் கேட்டு வாங்க நான் மறுபடியும் வரமாட்டேன்.

வல்லபன் : கலியாணத்தின் ஆண்டு நிறைவு நாளில் இந்த முதல் முளே தோன்றி யிருக்கிறதே. இது சண்டைப் பிடிக்கும் சுபாவம் போலும். அம்மாவைப் போல சண்டைக்காரப் பயலே பிறக்கப் போகிருன் போலும். ஏ! சுலோசனு, இல்லே—கொஞ்சம் பொறு—அப்பனேப் போலச் சண்டைக்காரப் பயல்-இப்போது சரிதானே? சரி, அப்படியுமல்ல—பையனேயல்ல, பெண்தான், இல்லே-இதோ இந்தா கடிதம்.

சுலோசனே : கொடுங்கள் நாமிருவரும் சேர்ந்து படிப்போம். இல்லே, பிராணநாதா, நீங்களே வாசியுங்கள், வாசிக்க மாட்டீர்களா?—

வல்லபன் : அப்படியே ஆகட்டும். (கடிதத்தைப் பிரித்துப் படிக்கிருன்).

'எனதன்புடைய மகனே, வல்லபா, நமது சாக்கியக் குடியரசின் மக்கள் உனக்குச் சேனபதியின் பதவியைத் தந்திருக்கும் செய்தி இப்போதுதான் எனக்குக் கிட்டியது. புகழ்பெற்ற கோலியன் குலத்துப் பெண் மணியை நீ மணம் செய்துகொண்ட செய்தி இதற்கு முன்னரே தெரிந்தது. உன்னேயும் உனது காதல் கிழத்தியையும் நான் மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன். காதலியையும் வாளினேயும் கரத்தில் ஏந்தும் வழக்கத்தைச் சாதாரணமாகத் துறவிகள் கைவிட வேண்டிய ' தமோ குணம் ' என்று சொல்லுவார்கள். அதனுல் இந்தச் செய்தியை யறிந்தால் துறவு நிலேயேற்ற தகப்பனுன எனக்குத் திருப்தி யுண்டாகாது என்று நீங்கள் அச்சம் கொண்டிருக்கலாம். ஆனுல் இல்லறத்தே நின்ற தம்பதி நிலேயும்

படைத்தலைமைப் பதவியும் கிட்டிய உனது பாக்கியத்தை நான் வாழ்த்துகிறேன். இதை நீங்களும் சாக்கிய ராஜ்யத்து மற்ற இளைஞர்களும் அறிய வேண்டும் என்றே நானும் எனது ஆசிகளை இந்தக் கடிதத்தின் மூலம் அனுப்பி யிருக்கிறேன்.

சுலோசனை : (பெருமூச்சுவிட்டு) ஆ! எனது மாமனர் எத்தனை தயாளு! இன்றுவரை என்னை அவர் பார்த்ததுகூட இல்லையே, ஆனலும் எத்தனை யன்பு! மேலே படிக்க மாட்டீர்களா?

வல்லபன் : இக்கடிதத்தின் பிற்பகுதியிலும் ஆழ்ந்த கருத்துக்கள் கம்பீரமாக அமைந்திருக்கின்றன.

சுலோசனை : அப்படியானல் அதை உள்ளது உள்ள படியே கம்பீரமாகப் படியுங்கள். நடுவே உங்களுடைய சொந்தச் சரக்கு ஒன்றும் சேர்க்கக்கூடாது.

வல்லபன் : அது கஷ்டமாக இருக்கிறது. ஒருகால் கடல்நீரில் கொப்புளித்து வாயை இனிக்கச் செய்ய முடியலாம். ஆனல் பெண்களின் முன்னிலையில் நிமிர்ந்து நின்று கம்பீரமானவைகளைத் தொடர்ச்சியாக வாசிப்பது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. என்ன செய்தாலும், உன்னைப் பார்த்த பிறகு எனக்குக் கொஞ்சம் சிரிப்பு வந்துவிடுகிறதே.

[பாடுகிருன்.]

*பிரமதேவன் முதலில் பெண்ணைப்*
*படைத்த தேனையா?—எந்த*
*சிரமமிருந்தாலும் ஒரு*
*சிரிப்புத் தோன்றவே—ஒரு*
*சிரிப்புத் தோன்றவே.*

கண்ணில் காரம் பட்டாலும்
கண்ணீர் நிறுத்தலாம்—ஆனால்
பெண்ணொருத்தி பட்டுவிட்டால்
சிரிப்புத் தப்புமா? புன்
சிரிப்புத் தப்புமா?

சுலோசனை : நான் என்ன அப்படி நீங்கள் பார்த்துச் சிரிக்கும்படியான ஜந்துவாகிவிட்டேனா? அப்படியானால் என் முன்னிலையில் அதைப் படிப்பதில்லையா? அப்படியே இருக்கட்டும். உங்களைக் கேட்க வேண்டுமென்று நிரம்ப நாட்களாக எனக்கு ஆசையிருக்கிறது. சுவாமி, தங்கள் உடலில் நான் அரைப்பங்கு அல்லவா ?

வல்லபன் : அப்படியானால் இந்தக் கடிதத்தைக் கிழித்து அரைப் பங்கை நீ எடுத்துக்கொள், எப்படியாவது உன் பகுதியைச் சரியாக வாசி—இல்லை. கோபிக்காதே. மேலே படிக்கிறேன். அப்பா எழுதியிருக்கிறார்.

'இத்தகைய துறவுமுறை புலன்களை வெல்லுவதாகாது. இது இந்திரிய நாசமேயாகும். துறவியும் கண்ணைப் பிடுங்கிக்கொண்டு குருடாவதில்லை; கை கால்களை வெட்டி நொண்டியாவதில்லை. அவ்வாறாயின் இத்தகைய துறவறப் பான்மையை உடலின் பொறி புலன்கள் யாவற்றிற்கும் மேற்கொள்ளுதலே சரியாகும். தாம்பத்திய இல்லற முறை ஐம்பொறிகளுக்கும் புலன்களுக்கும் இயல்பாகவே அமைந்திருப்பதால் அதில் குற்றம் காண்பது சரியாகாது. மற்றும் அது சமூகம் இயங்குவதற்கும் அவசியமாகிறது. ஆதலால் மணவாழ்வைத் துறப்பதால்தான் தூய்மை

யும் புண்ணியமும் தோன்றும் என்று சொல்லுவது பொய்யாகும். துறவியாவதால் ஒருவன் மற்றவர்களிலும் மேம்பட்டவன் ஆகிறான் என்று நம்புவது பிசகானதே. புத்தரைப்போன்ற பெரியோர்கள் துறவறத்தில் இல்லாமல் இல்லறத்தில் இருந்து வந்தாலும் உலகமே போற்றவல்ல உத்தமராகவே, தூயவராகவே இருப்பார்கள். ஆதலால் மகனே, வல்லபா, மனத்தில் சங்கோசம் கொள்ளாமல் இல்லற வாழ்வைச் சரியான முறையில் கடைப்பிடித்து ஒழுகுவாயாக. உனது தர்மபத்னியின் வயிற்றில் ஆற்றலும் கீழ்ப்படிதலும் உள்ள குழந்தைகள் பிறந்து அவனுக்குப் புகழையளிப்பார்களாக! உலக நன்மைக்காக நீ கரத்தில் ஏந்தியுள்ள வாள் தீயோரை தண்டிப்பதில் திறமும் திடமும் உடையதாகுக! மற்றும் வேள்வியுருவான இல்வாழ்க்கையை நடத்துவதில் இல்லற இன்பங்கள் யாவும் உனது கால்களுக்கு விலங்கிடாமல் வேள்வித் தீயை வளர்க்கும் ஆகுதிகளாக, பலிதானமாக, அமைவனவாக! இவ்வாறு இல்லறமானது துறவறத்தினும் தூய்மையுற்றதும் உலகுக்கு நன்மை பயப்பதுவாயும் உள்ளது' கேட்டாயா சுலோசனா, இது எத்தனை பெருந்தன்மையான சிந்தனை!

*[பாடுகிறான்.]*

அறம் வளர்க்கும் இல்லற வாழ்வும் விளையாட்டுத்தானா—கால்
விலங்கீடுதானா? உண்மை பலிதானம்தானா?
இல்லற வாழ்வில் வெற்றி யென்பதும்
துறவறசீலம்—இன்பம் துய்ப்பதின் விசாரம்—உயர்
தியாகம் கனிந்த வீரம்.

சுலோசனை : இத்தகைய சான்றோர்களையே உண்மையான துறவற ஞானி என்று உலகம் அழைக்கிறது. என் மாமனுர் தெய்வீக புருஷர். அவரது சிந்தனைகள் பெருந்தன்மை வாய்ந்தவை ஆனுல் காதலரே. கடிதத்தின் இறுதியில் விலங்கு என்று கண்டித்திருக்கிறதே அது யாரைக் குறிப்பதோ?

வல்லபன் : யாரை என்று கேட்கிருய்? பெண்களையே தான் குறிக்கிறது. பெண்களே ஆடவர்களின் கால்களுக்கு விலங்காகிருர்கள்.

சுலோசனை : அப்படியா? நல்லது. நாதா, புத்தர் உலகில் சிறந்த உத்தமர்—மஹாத்மா—அல்லவா?

வல்லபன் : அதில் என்ன சந்தேகம்? ஆனுல் பெண்களாகிய விலங்குகளைத் தமது காலிலிருந்து களைந் தெரிந்துவிட்ட காரணத்தால்தான் அவர் உலகம் போற்றும் பெரியார் ஆகிருர்.

சுலோசனை : அதுவல்ல நான் கேட்பது. இதற்குத் தகுந்த விடையைச் சொல்லுங்கள், சுத்தோதன மகாராஜா—அதாவது நமது புத்த பகவானுடைய தந்தையார் இருந்தாரே அவர்—மாயாதேவி அதாவது புத்த பகவானுடைய தாயாராகிய விலங்கை ஒருக்கால் தமது காலிலிருந்து கழற்றி நீக்கியிருந்தால் இந்த உங்களுடைய உலகில் உயர்ந்த புத்தரைப் பற்றி உலகத்துக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்? ஆதலால் புத்த பகவான் உலகில் நன்மையை நாட்டிய புண்ணியத்தில் பகுதியாவது இந்தப் பெண்களுக்குச் சேர வேண்டியதாகும். பெண்ணுெருத்தியில்லாதிருந்தால் இத்தனைப் பெரியவர் உலகில் எப்

படித்தோன்றி செயலாற்றிருக்க முடியும்? தசரத சக்ரவர்த்தியின் வாழ்க்கையில் கௌசல்யாதேவியின் காதல் பிணைந்திருந்ததால்தான் ஸ்ரீராமனை அடைய முடிந்தது. வசுதேவர் ஒருகால் இளமையில் துறவற மேற்றிருந்தால் ஸ்ரீகிருஷ்ணன் பிருந்தாவனத்துப் புல்லைப்போல் முளைத்திருக்க முடியுமா?

வல்லபன் : மேலும் இதிலிருந்து என்ன தெரிகிறது என்ருல் பெண்களைச் சுலபமாகக் களைந்தெறியும் பொருள்கள் என்று ஆண்கள் எண்ணுவது தவறு. அதாவது பெண்கள் ஆண்களின் கால் விலங்குக ளல்ல என்று தானே ஏற்படுகிறது? அது அடியோடு இல்லாதிருந்தால் ஒருவேளை புருஷஜாதி இன்னும் அதிக இன்பமாக இருந்திருக்க முடியும் என்று சொல்லுவதிலாவது தவறு இல்லையே.

சுலோசனை : நல்லது. இந்த விஷயத்தை விட்டுவிடுங் கள். பேச்சுக்குப்பேச்சு நினைவூட்டவே இன்னென்று கேட்க விரும்புகின்றேன், விஷயத்தை மாற்றிப்பேசு கிறேன் என்று சிரிக்கக்கூடாது. தாங்கள் இப்போது சேனுதிபதியாகி விட்டீர்களல்லவா? அதனுல் எனக்கு இப்போது ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. சேனை யிலும் போர்வீரர்களுக்கென்று சிறைச்சாலையமைத்து அதில் விலங்கு போட்டு கடுமையான தண்டனைகளை யும் வழங்குகிருர்களாமே. இது உண்மையா?

வல்லபன் : முற்றிலும் உண்மைதான். ஆனுல் திருடன், கொள்ளைக்காரன் போன்ற குற்றவாளிகளைத் தற்கா லத்துக் கென்ருவது விலங்கிட்டு வைக்கவேண்டு அவசியமல்லவா?

சுலோசனை : அப்படியானல் தீயகுற்றம் இழைத்தவருக்கு மட்டுமே விலங்கை மாட்டுகிருர்கள் என்று சொல்லுங்கள். நினைத்தவர்களுக்கெல்லாம் தங்கள் இஷ்டப்படி விலங்கை மாட்டிவிடமாட்டார்களே?

வல்லபன் : சீ, அத்தகைய அநியாயம் எங்கேனும் நடக்குமா? துஷ்டர்களுக்கு மாத்திரமே விலங்கு.

சுலோசனை : அப்படியானல் அன்பரே, நீங்களே சொல்லுங்கள். மக்களே விலங்குகளை நல்லோருக்கு இடாமல் தீயோருக்கே இடும்போது, அவர்களைக் காட்டிலும் நியாயத்தை அதிகமாக கவனித்து வரும் கடவுள், எதற்காக பெண்களாகிய விலங்குகளை ஆண்களின் கால்களில் பூட்டியிருக்க வேண்டும்? இந்த ஆண்கள் போன பிறவிகளில் ஏதோ பெருந்தவறுகளை—கொலை, களவு, கொள்ளை போன்ற குற்றங்களை—செய்தே யிருக்கவேண்டும். ஆதலால் பெண் என்னும் விலங்கைப் பூட்டிக்கொள்ளும் ஆண்கள் திருடர், கொலையாளர், பாதகர், அயோக்கியர் என்ற பட்டங்களைத் தாமே சூட்டிக்கொள்ளுகிருர்கள் தெரிந்ததா சுவாமி? தெரிந்தா? விலங்கு என்ருல் விலங்கேதான், ஆண்களோ கட்டுக்கடங்காத காட்டு யானைகளைப் போன்றிருப்பதால் அவர்களின் கால்களில் விலங்குச் சங்கிலிகளை மாட்டிப் பழக்க வேண்டியதேவை ஏற்படுகிறது. அவ்வாறு பெண்கள் இருப்பதால்தான் ஆண்கள் ஒழுக்கமான வழிகளில், பிசகாமல் செல்ல முடிகிறது. இந்த விலங்குகள் இவ்வாறு இல்லை என்ருல் ஆண்கள் யாவரும் அவிழ்த்துவிட்ட பைத்தியக் குதிரைகளைப்போல் தீய பாதைகளில் பிறரது தூண்டுதலின்றித் தாங்களே வலிய புழு

தியையெழுப்பிக்கொண்டு ஓடித்திரிவார்கள்? சரி தானே? இப்போது நீங்கள் தோற்றுப் போனதை ஒப்புக்கொள்ளுகிறீர்களா? அடடா, சாக்கியன் புகழ் பெற்ற ஆற்றல் வாய்ந்த படைத்தலைவரை கடைசி யில் பெண்ணொருத்தி வென்றுவிட்டாளே.

வல்லபன் : இது நல்ல அறிகுறி. நமது அன்பின்விதை வளரத் தொடங்கிய இந்த ஆண்டு நிறைவில் என் காதலிக்கு திக்குவிஜயத்தின் ஆசை தோன்றியிருப்ப தைப் பார்த்தால், என் மகன் உண்மையில் சக்ரவர்த் தியாகப் போகிறான் என்று—

சுலோசனை : உஸ்—மீண்டும் அதே வார்த்தை,

பணிப்பெண் : (உள்ளே வந்து) உங்கள் தனிமையில் குறுக்கே வந்ததை மன்னிக்கவேண்டும். ஏதோ ஒரு அவசர வேலையின் பொருட்டு சேனாதிபதி வல்லப சிம்மரைத் தாமதியாமல் உடனே அழைத்து வரு மாறு கட்டளை வந்திருக்கிறது. தூதன் வெளியே நிற்கிறான்.

வல்லபன் : சகியே, நான் இப்போது கண்டிப்பாக உடனே போகவேண்டும். துஷ்டனான கோசல நாட்டு அரசன் வித்யுத்கர்ப்பன் புகழிலே பேராசை வைத்து ஏதோ அல்பகாரணத்தைச் சாக்காகக் கொண்டு நமது சாக்கிய ராஜ்யத்தின்மீது படை யெடுக்க விரும்புகிறான், அவனிடம் எப்படியாவது நட்புறவைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று நேற்று முடிவுசெய்யப்பட்டது. இதற்குள் திடீரென்று என்ன சேதி வந்ததோ? நான் உடனே போகவேண்டும்.

சுலோசனை : அப்படியானால் ஒரு நாழிகையாவது தாமதியுங்கள். காமதேவனுடைய பூஜையை முடிக்க வேண்டும். இந்த மாலையையும் தொடுத்தாகி வருகிறது. இன்றைக்கு—

வல்லபன் : பார்த்தாயா? கடமையுள்ளவர்களுக்குக் கால் விலங்கு—

சுலோசனை : (அவரது வாயின்மீது கையை வைத்து) உஸ், போதும்—நீங்கள் இப்பொழுது எப்படிப் போகமுடியும்? நன்றாயிருக்கிறது. எங்களைத் தூண்டி விட்டு, தங்கள் எண்ணங்களையே முடித்துக்கொள்ளுவதுதான் புருஷர்களின் தந்திரம் போலும். இது நியாயமாகாது. பெண்கள் கடமைக்கு விலங்கா அல்லது கடமையைப் பூர்த்தி செய்பவர்களா என்ற விஷயம் நல்ல காலம் வந்தால்தான் தெரியும்.

வல்லபன் ; அப்படியானால் அந்த நல்லகாலம் இப்போதே என்று நினைத்துச் சந்தோஷமாய், சிரித்த முகத்தோடு, எனக்கு உத்திரவு கொடு. பார்க்கலாம்.

சுலோசனை : நான் இன்றைக்கு சந்தோஷத்துடன் உத்திரவு தரமாட்டேன். தாங்கள் போவதானால் சபை முடிந்தவுடன் வேறு எங்கும் போகாமல் நேராக இவ்விடமே வந்து பூஜையை முடித்துத் தர வேண்டும். அப்போதுதான் சிரித்த முகத்துடன் வரவேற்பேன்.

வல்லபன் : அவ்வாறே நான் போய் உடனே திரும்பி வருகிறேன்.

சுலோசனை : நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஒரு ஆட்டம் ஆடலாம் என்று இன்றைக்கு இந்தச் சொக்கட்டான் பலகையை எவ்வளவு நன்றாக வைத்திருந்தேன்,

[பாடுகிறாள்]

*போங்கள், ஐயா சரிபோங்கள்—ஒரு*
*பேசும் இல்லை, இனி போங்கள்*
*வாங்கள் ஐயா என்று சொல்லிஒரு*
*வம்பு பேச யாரும் இல்லை*
*பட்டுப்பாயை விரித்துப்போட்டு—அதில்*
*கட்டமுள்ள பலகை கூட்டி-நல்ல*
*வட்டமான காய்களையும் வைத்தேன்—சுத்த*
*நஷ்டமாகவே எல்லாம் போச்சே!*
*கொஞ்சமேனும் குலாவியே—சின்னக்*
*குழந்தையைப்போல் விளையாடியே—கொஞ்சம்*
*கொஞ்சிக் கணமேனும் கூடினல்—உங்கள்*
*கண்ணியமெல்லாம் பறந்தோடுமா?*

## காட்சி 2

சாகம்பட்டர் : அட இழவே, எங்கேயோ ஓடித்தொலைந்த அந்தக் கலகக்காரப் புத்தன் இத்தனை நாள் கழித்து இப்போது நமது கபிலவஸ்துவுக்கு இப்படி வந்து தொலைவானேன். இந்த ராஜதானியைப் பாழாக்கி விட்ட பிறகே வேறு காரியத்தைக் கவனிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறான்போலவே தோன்றுகிறது. முதன் முதலில் இந்தப் புண்ணிய

வான் ஊரை மிதித்தவுடனே அப்பனைத் துடைத்து விட்டான். வயதான கிழவன் சுத்தோதன ராஜன் போனதுதான் சரி என்றால் இந்தச் சன்யாசிப் பேர்வழி ராஜ வம்சத்துக்கே வேட்டு வைத்து விட்டான். தான் பிக்ஷுஸ்மரணனாகி ஒழியட்டும். தனது சின்னப் பையன் ராஹுல யுவராஜனையும் பிக்ஷுவாக்கிவிட்டு, தேவதத்தன், ஆனந்தன் முதலிய தன் தம்பிமார்கள் எல்லாருக்குமே தனது பிக்ஷு தர்மத்தின் தீக்ஷை செய்து இருக்கிறான். இவன் இதோடு நின்றபாடில்லை. இந்தச் சாக்கியக் குடியரசைக் கோசல மகத ராஜ்யங்களின் பேராசைப் பிடியிலிருந்தும் காப்பாற்றி வந்த நமது விக்ரமசிம்மனையும் இந்தத் திருவாளர் அரசர் இருக்கிறாரே, அது தான் நமது திருவாளர் பிக்ஷு, இந்த புத்தன், அவனையும் சன்யாசியாக்கிவிட்டான். அடே, அந்த விக்ரமசிம்மனுக்குத்தான் எப்படி மனம் வந்ததோ தெரியவில்லை. தனது சின்னஞ் சிறு குமாரன் வல்லபனைத் திக்கில்லாத அனாதையாக்கிவிட்டுக் காஷாயம் எடுத்துக் கொண்டானே. என்ன விபரீதம்! இந்த புத்தனிடம் ஏதோ ஒரு ஆகர்ஷண சக்தியிருக்கிறதடா.

தாகம்சிங்கு: (பிரவேசித்து) சாகம்பட்டரே, இப்போது தான் புத்தப் பயித்தியம் தலைக்குமேல் ஏறியிருக்கிறது. இதைக் கேள். இந்த புத்தன் தன் மனைவி யசோதரையையும் தாயாரான மஹாபிரஜாபதியையும்கூட சாமியாராக்கிவிட்டிருக்கிறான். இந்தச் சன்யாசிகளைப்போல அந்த ராஜஸ்திரீகளுக்கும் மொட்டையடித்து காவியாடை தந்து முழுக்க

முழுக்கச் சாமியார் வேஷம் போட்டிருக்கிருன். எல்லாம் வேண்டுமென்றே பிடிவாதத்தோடு செய்து வருகிருன்.

**சாகம்பட்டர்:** ஆமாமடா, எல்லாம் தெரியும். இந்தப் பெண்கள் இருக்கிருர்களே, பிக்ஷுணிகள், சிஷ்யிணிகள், சன்யாசினிகள்: இவர்களுடைய கூட்டமும் வேண்டுமடா. இவர்களும் ஆண்களோடு, அதுதான் அந்தச் சன்யாசிகளோடு, மடத்தில் இருந்து கொண்டு, அவர்களோடு ஊர் ஊராகத் திரிந்து கொண்டு இருக்கவேண்டும் என்றுதான் இப்படிச் செய்திருக்கிருன். அடே, நான் சொல்வதைச் சற்று உன் மூளைக்குள் வாங்கிக்கொள். எப்போது இந்த மகாராஜன் சித்தார்த்தன், அதுதானடா இந்த இன்றைய புத்தன், யசோதரையைக் கைவிட்டுப் போனுனே, அப்போதே நானும் என்னுடைய அந்த அவளும் மேலே நடக்கப் போகிறதையெல்லாம் யோசித்து முடிவு செய்தோம். அவள் மகா புத்தி சாலி. அப்போது உயிரோடு இருந்தாளடா. இப்போது போய்விட்டாள்—போயே விட்டாள்—உம்—நானும் அவளும் யோசித்தோம். இந்த சூரப்புலி நாலுநாள் அலைந்து திரிந்து வரட்டும். பிறகு இந்த வேஷத்தோடோ அந்த வேஷத்தோடோ' தன்னைப்போல யசோதரையைத் தேடிக்கொண்டு ஓடி வருவான் என்று எங்களுக்கு நன்ருகத் தெரியும். யசோதரையை மட்டும் அல்ல, அந்த அரண்மனைப் பெண் அத்தனை பேர்களையும் இவன் பிச்சைக்காரிகள் ஆக்கிவிடுவான் என்று அப்போதே தெரியும். அப்படியே ஒவ்வொரு எழுத்தும் உண்மையாகிவிட்

டது. அடே, நான் உண்மையில் ஒரு பெரிய ஜோசியன். சும்மாவா என்னுடைய தாயத்து, மந்திரங்களில் ஜனங்கள் கெட்டியாக நம்புகிறார்கள். தாகம் சிங்கா, நீ புத்தனுடைய சாக்கியஜாதி க்ஷத்திரியனுயிற்றே. நீ ஏன் அவனுடன் சேர்ந்து பிக்ஷுவாக வில்லை? அடே, உனக்குத்தான் வீடும் இல்லை, வாசலும் இல்லை; பணமும் இல்லை பெண்ஜாதியும் இல்லையே.

தாகம்சிங்கு : இன்று வரை இந்த பிக்ஷுசங்கத்தைக் கண்டால் பயந்துகொண்டே வருகிறேன். பிக்ஷு என்ருல் பிச்சையெடுப்பவன் என்றுதானே அர்த்தம்? அவன் தலைவிதி பகலில் பணம் இல்லை, இரவில் பெண்டாட்டியில்லை. வீடுவீடாய் திரிந்துகொண்டு, எலும்பும் தோலுமாய் இரந்து குடிக்கிருனே அவனைத்தானே பிக்ஷு, பிச்சைக்காரன் என்று சொல்லி வந்தோம். பிக்ஷு என்ருல் இன்று வரையிலும் இப்படித்தான் நினைத்து வந்திருக்கிறேன்: ஆனுல் இப்போது பார்த்தாலோ ஒரு பக்கம் புத்தனுடைய செல்வ வாழ்க்கை, இன்னொரு புறம் இந்த பிக்ஷுக்களுடைய செல்வ வாழ்க்கை. அடே, அவர்களில் மிக்க கேவலத்தில் கேவலமான பிக்ஷுவும் என்னைக் காட்டிலும் நன்ருகத் தின்று குடித்துச் சுகமாகக் காணப்படுகிருன்.

சாகம்பட்டர் : மேலும் தற்போது சிஷ்யைகளுடைய அழகிய கூட்டங்களையும் ஒவ்வொரு மடத்திலும் போஷித்து வருகிருர்கள். அதனுல் இந்த பிக்ஷுக்கள் வெறுமே தின்று குடித்து மட்டும் இல்லாமல்

நல்ல சுகத்தையும் அநுபவித்து வருகிறார்கள். அடே, என்னுடைய இவள் இப்போது இல்லை. அவள் மட்டும் உயிரோடு இருந்தால் அவளுடன் கூட மைத்துனன்மார்கள், மச்சினிமார்கள் எல்லாரோடும், இந்த சம்சாரத்தின் சுகபோகங்களையெல்லாம் அரைக்காசுச் செலவில்லாமல் ஜம்மென்று அநுபவிக்கப் போயிருப்பேனே.

தாகம்சிங்கு : இதெல்லாம் உங்களுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால் அரசச் செல்வங்களை அநுபவிக்கப் பிறந்துள்ள க்ஷத்திரியர்களாகிய எங்களுக்கு பிச்சையேற்கும் பிழைப்பு நிரம்ப வெட்கமாக இருக்கிறதே.

சாகம்பட்டர் : அதனாலேதான் நானும் சொல்லுகிறேன். இந்தப் பிச்சைத் தொழிலை பிராமணர்கள் ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்னாடியே அரசச் செல்வமுடைய இந்தச் க்ஷத்திரிய சித்தார்த்தன் இதைத் தொடங்கி விட்டான் அட, பைத்தியமே, இந்த மார்க்கம்தான் க்ஷத்திரியர்களுக்கு ஏற்பட்டுள்ள சாவைப் போக்கும்படியான மாத்திரை, மிருத்யுஞ்ஜய மாத்திரை! புத்தர்மதத்தில் சேருடா, இந்த முறையில்தான் மரணத்திலிருந்து தப்பமுடியும் என்று இந்த மகாத்மியத்தை புத்தனின் சிஷ்யர்கள் வீடுவீடாகச் சொல்லித் திரிகிறார்களே. அது உன் காதில் படவில்லையா? பிராமணனுக்கு எப்படி வேண்டுமானாலும் சாவு வரலாம். ஆனால் இந்த க்ஷத்திரியர்களின் மரணமோ புத்த யமனின் காலடியில் கட்டியிருக்கிறது. க்ஷத்திரியன் ஒரு பாம்பைப்போல இருக்கிறான். வெளியே வந்தால் யாரையாவது கடிக்காமல்

இருக்கமாட்டான். யாராவது அவனைப் பார்த்துவிட்டால் கொல்லாமலும் இருக்கமாட்டார்கள். வேறு வழியில்லை. ஆனால் இந்த க்ஷத்திரியன் அறையிலிருந்து கத்தியை அகற்றித்தூர எறிந்து, தனது போர் வேஷத்தையும் களைந்துவிட்டு, காஷாயத்தைப் போர்த்துக்கொண்டால், பிறகு சண்டையின் முகத்தில் விழிக்கவேண்டியதில்லை—சாக்கிய ராஜ்யத்தின்மீது கோசல ராஜனே அல்லது மகத ராஜனே படையெடுத்து வரட்டுமே. முன்பெல்லாம் அரசச் செல்வத்தை அநுபவிக்கவேண்டும் என்று க்ஷத்திரியர்கள் சண்டைக்கும் போகவேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுதோ புத்தனுடைய முறைப்படி பிக்ஷு தீக்ஷை எடுத்துக்கொண்டால் போதும். அவர்கள் மரணத்தின் வாயிலிருந்து சுலபமாகத் தப்பிவிடலாம். அடே அந்த அரசச் செல்வம் ராஜபோகம் எல்லாம் இப்போது மடத்திலேயே திருப்தியாகக் கிடைக்கிறது. இப்படி க்ஷத்திரியர்களுக்கு இரண்டு மடங்கு அநுகூலமும் லாபமும் இருக்கிறது. புத்தனைச் சரணமடைந்தால் சாவு நீங்கிவிடும். இது உண்மை. இதனால்தான் அந்தக் காலத்தில் அந்தச் சேனாதிபதி விக்ரமசிம்மனும் இதில் சேர்ந்து கொண்டான்—தாகம்சிங்கு, கொஞ்சம் பொறுமையாயிரு—இதோ! அந்த பிக்ஷுக்களின் வெட்டுக்கிளி கூட்டத்திலுள்ள ஒரு வெட்டுக்கிளி இங்கே வருகிறான் பார். தன்னுடைய மார்க்கத்தைப் பற்றி அவன் என்னதான் சொல்லுகிறான் பார்ப்போம். அட, சனியனே, இவன் ஒரு பட்டிக்காட்டு ஒற்றைக் கண்ணனாக இருக்கிறானே. இருந்தாலும் என்ன என்று கேட்போம்.

## காட்சி 3

காணுபிக்ஷு : (பிரவேசித்து) புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி; (பிச்சை பாத்திரத்தை நீட்டுகிருன்)

சாகம்பட்டர் : பிக்ஷுவே, உங்களுடைய மார்க்கத்தில் சேர்ந்திருப்பதால் என்ன லாபம் கிடைக்கிறது.

காணுபிக்ஷு : லாபமா? வயிறு நிறைய தவருமல் உணவு கிடைக்கிறது. மேலும் பிறப்பு, வியாதி, மூப்பு, சாவு இவைகளிலிருந்தும் மனிதன் விடுதலே பெறுகிருன்.

சாகம்பட்டர் : அதெல்லாம் இருக்கட்டும். வியாதியிலிருந்து விடுதலே என்ருயே, இதில் நீ சேர்ந்த பிறகு அந்தக் குருட்டுக் கண் குணமடைந்து பார்வை பெறவில்லேயே. உன் குரு இதற்கு என்ன சொன்ஞர்?

காணுபிக்ஷு : ஐயா, நான் புது பிக்ஷு. எனக்கு அந்த முதல் குருவைப்பற்றித் தெரியாது. சின்ன குரு எனக்குச் சொன்னதாவது, 'மகனே, இந்த ஒரு கண்ணிஞல் இந்த உலகில் இத்தனே துன்பங்களே யும் பார்த்தது போதாதா? உனக்குப் போதும் என்று தோன்றவில்லேயா? இன்ஞெரு கண்ணும் இருந்தால் துன்பங்கள் முழுவதையும் பார்க்கவேண்டியிருக்குமே. உன்னுடைய முன் பிறவிகளின் புண்ணியத்திஞல்தான் ஒரு கண்ணுக்குப் பார்வை கிட்டவில்லே அதஞல் நாற்றக் குப்பையாகிய இந்த உலகில் துன்பங்களில் பகுதியைப் பார்க்கும் கஷ்டம் தாஞகவே, கழிந்தது. ஒரு கண்ணின் பார்வையால் மட்டும் இத்தனே துக்கங்களேயும் பார்க்கிருயே. இரண்டு கண்களுக்கும் பார்வை இருந்திருந்தால்

இதனிலும் அதிகமான துன்பங்களையும் பார்த்து கண்கள் இரண்டும் கூசிப்போய் முழுக்குருடனாகி யிருப்பாயே' என்று அவர் சொன்னார்.

தாகம்சிங்கு: ஏண்டா, பிக்ஷு, கடாபோல ஆசாமி கொழுக்கு முழுக்காக இருக்கிறாயே. பிச்சை கேட்க வெட்கம் வருகிறதில்லையா? ஜனங்கள் இகழ்ந்து இடித்துத் தள்ளி கேலி செய்து அல்லவா பிச்சை தருகிறார்கள்?

காணுபிக்ஷு: அதெல்லாம் அந்தக்காலம், ஐயா, முதன் முதலில் வெறும் பிச்சைக்காரனாக நான் பிச்சைக் கேட்டு வந்தபோது எனக்கு வெட்கமாகத்தான் இருந்தது, அப்போதெல்லாம் ஜனங்களும் என்னை இகழ்ந்து இடித்துத் தள்ளினார்கள். ஆனால் அந்தக் காலம் எல்லாம் மாறிப்போய்விட்டது. இந்த நாட்க ளிலோ நான் பிக்ஷுவாக பிச்சை வாங்குகிறேன். அதனால் இப்போது ஜனங்கள் தாங்களாகவே வலிய வந்து பிச்சை வழங்குகிறார்கள். ஐயா, சாதாரண பிச்சைக்காரனுக்குப் பிச்சை போடுகிறவர்கள் அவ னுக்கு உபகாரம் செய்கிறார்கள். ஆனால் அவன் பிக்ஷுவாகி பிச்சையேற்றால், அதனால் அவன் பிச்சையிடுவோருக்கே உபகாரம் செய்பவன் ஆகி றான் என்றல்லவா சொல்லுகிறார்கள்?

சாகம்பட்டர்: நல்லது. உனது தர்மத்தின் சாரம்தான் என்ன? சொல்லு.

காணுபிக்ஷு: வேதத்தை நிந்திக்கவேண்டும். பிராம ணர்களை தூஷிக்கவேண்டும். அவர்களின் வயிற்றை நிரப்புவதை நிறுத்தி பிக்ஷுக்களான எங்கள்

வயிற்றை நிரப்புங்கள் என்று மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டும்.

சாகம்பட்டர் : அப்படியானால் நான் பிராமணனாயிற்றே. என் வாசலில் நின்று பிச்சை கேட்காதே, ஓடிப்போ உடனே! நின்றால் இன்னொரு கண்ணும் பறந்து விடும்.

காணுபிக்ஷு : (தூர விலகிப்போய் தனக்குள்) அடேடே, இவன் ஒரு பிராமணன் என்று முன்னாடியே தெரிய வில்லையே. இன்னொரு கண்ணும் இருந்தால் சட்டைக்குள் இருந்தாலும் அவனது பூணூலைப் பார்த்திருப்பேனே. புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி.

*[போகிறான்]*

சாகம்பட்டர் : சீக்கிரம் ஓடித்தொலை........அடே, தாகம் சிங்கு வயிறு நிறைய சோறு கிடைக்கிறது என்று தானே இந்த ஒற்றைக் கண்ணன் புத்த சங்கத்தில் சேர்ந்ததாகச் சொன்னான். நீயும் அதில் சேருவதற்கு அந்தக் காரணம் போதாதா?

தாகம்சிங்கு : மற்றபடி வேதத்தை சிந்தனை செய்வதை அந்தச் சங்கத்தின் முக்கிய கொள்கையாகச் சொன்னானே. அது எப்படி முடியும்?

சாகம்பட்டர் : அடே, வேதங்களின் முகத்தை நீ கண்டதும் இல்லை. உன்னுடைய முகத்தையும் அவைகள் பார்த்ததில்லை. முகம் பார்க்காத ஒருவனைப் புகழ்ந்தால் என்ன? இகழ்ந்தால் என்ன? அடே, இதோ இன்னொரு வெட்டுக்கிளி வருகிறான். இவனையும் கொஞ்சம் விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிறேன்.

இரண்டாம்பிக்ஷு : (பிரவேசித்து) புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி.

சாகம்பட்டர் : சங்கத்தில் சேருவதற்குமுன் அதன் தர்மத்தைப் பற்றித் தெரியவேண்டும். இந்த தர்மத்துக்கு மேலே உட்கார்ந்திருக்கும் அந்தப் பேர்வழி புத்தன் யார்? தர்மம் தர்மம் என்று சொல்லிக் கொண்டு குண்டர்களாகிய பிக்ஷுக்கள் கொழுத்துத் திரிகிறீர்களே. உங்களுடைய குருவான புத்தனும் மற்ற தர்மங்களை தூஷித்துத் திரிகிறனே. பிராமணர்களை தூஷிப்பதே உங்கள் தர்மத்தின் முக்கிய கோட்பாடாக இருக்கிறது என்பதை இப்போதுதான் அறிந்தேன்.

இரண்டாம்பிக்ஷு : சீச்சீ, என்ன பொருத்தமில்லாத பேச்சு! நீங்கள் சொல்லுவது பிசகு.

சாகம்பட்டர் : இருக்கலாம். உனக்கு முன்னடி வந்த பிக்ஷுவின் ஒற்றைக்கண் மூலமாகத்தான் உங்களுடைய தர்மத்தைப் பார்த்திருந்தேன். இப்போது உன்னுடைய இரண்டு கண்களாலும் அதைப் பார்த்தால் பிசகு ஏற்படாதல்லவா?

இரண்டாவதுபிக்ஷு : ஹே, புண்ணியவானே. புத்தரின் உபதேசம் நிலவைப்போல் குளிர்ச்சியுற்றதாகும். கடுஞ்சொல்கூறி பிறரை நாங்கள் வருத்துவதில்லை. பணிவுற்ற சொற்களால் கடுமையை யகற்றவே விரும்புகிறோம். புத்த பகவான் பிராமணர்களை நிந்திப்பதில்லை; அவர்களுக்கு அவர் ஆதரவே அளிக்கிறர். அவரது முக்கிய சிஷ்யர்களில் பலர் பிராமணர்களாயிற்றே. புத்த பகவான் சொல்லுவது இது

தான். பரோபகார விரதம், அகங்காரமில்லாமை, பிரம்ம வித்தை இவை எவனுக்கு உண்டோ அவனே பிராமணன். அவனே இவ்வுலகம் போற்றியே தீரும். குணத்தினல் ஒருவன் பிராமணன் ஆகிருன், பிறவி யால் இல்லே. ஐயா, தீண்டாதார் என்று நாம் ஒதுக்குவோரையும் புத்த பகவான் அன்புடன் தழுவு கிருர். அவரது அன்பும் அருளும் கடல்போல் பரந் தது. மூவகைத் துன்பங்களிலிருந்தும் விடுதலே விரும்பும் மக்களே, சொல்லுங்கள். புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி

[போகிருன்]

சாகம்பட்டர்: அட, இவன் பிச்சைக்குக்கூட காத்தி ருக்கவில்லேயே!

தாகம்சிங்கு: இவனுடைய எண்ணங்கள் எவ்வளவு கம்பீரமானவை! இத்தகைய சங்க விருக்ஷத்தில் நீங் களும் நானும் எந்த இலேக்குச் சமானம்?

சாகம்பட்டர்: அப்படியா? நானும் கம்பீரமான எண் ணத்தையே கொள்ளுகிறேன். இந்தச் சங்கத்தில் சேருவதால் எத்தனேயோ லாபம் கிடைக்கும்படி செய் துவிடுகிறேன் இதில் சேர்ந்தால் பிறப்பு நீங்குகிறது; அதுதான் இந்த ஜன்மமோ வந்தாகிவிட்டது. இன் ஞெருபிறவி வருவதைப்பற்றியும் இந்த ஜன்மத்தில் பயமும் இல்லே.

தாகம்சிங்கு: மரணம் நீங்கிவிடுகிறதா? இது ஆச்சரிய மாக இருக்கிறதே.

சாகம்பட்டர்: ஆமாம். சங்கத்தில் சேருவதால் க்ஷத்தி ரியன் யுத்த மரணத்தின் பிடியிலிருந்து தப்பி விடுகி

ருன். சந்தேகமேயில்லை. ஆனால் படுக்கையிலும் வரக்கூடிய சாவிலிருந்து தப்ப வழியுண்டா? மரணம் நீங்குகிறது என்ருல் யாருடைய மரணம்? நமது மரணம் மட்டும் அன்றி நமது சத்துருக்களின் மரணமும் நீங்கிவிடுமே! என்னைப் போலவே எல்லா மனிதர்களுக்கும் மரணம் நீங்கிவிட்டால்-அட, இதென்ன குழப்பமாகத் தோன்றுகிறது. நான் சிரஞ்சீவியாகப் போகிறேன். அதேபோல் எல்லோரும் மரணம் நீங்கி என்றென்றும் உயிரோடு இருப்பார்கள். ஆனால் அந்த எல்லோரும் தின்னவும் குடிக்கவும் வேண்டுமே, கேவலம் மரணம் நீங்கினுல் மட்டும் போதுமா? பஞ்சம், வறுமை இவைகளும் நீங்கவேண்டும். அப்போதும் கஷ்டமேதான்.அடே, பிறந்த ஒவ்வொருவனும் சிரஞ்சீவியாகிக் கொண்டே போனல் அப்புறம் இந்த உலகில் நிற்பதற்குக்கூட காலியிடமே கிடைக்காதே. நான், நீ, நீங்கள், அவன், அவள், அவர்கள், இவன், இவள், இவர்கள், எங்களுடைய-எங்கள் எல்லோருடைய பையன்கள், பேரன்கள், கொள்ளுப் பேரன்மார்கள், அவர்களுடைய குழந்தை குட்டிகள், மாட்டுப் பெண்கள், குமாரத்திகள், மருமக்கள்மார்கள், அவர்களுடைய குஞ்சுகள், அந்தக் குஞ்சுகளுடைய பிஞ்சுகள், அவர்களுடைய மாட்டுப் பெண்கள், குமாரத்திகள், மருமக்கள்மார்கள்—ஒவ்வொருவர் வீட்டிலும் ஏழேழு, இல்லை எழுபது எழுபது, தலைமுறையின் முன்னேர்கள், அதாவது மூதாதைகள், அவர்களின் சந்ததிகள் எல்லோரும் உயிரோடு ஒருமித்து ஒரே பந்தியில் வரிசையாக உட்கார்ந்து சாப்பிடப் போகிருர்கள். அடே, தாகம் சிங்கு, கணக்குப்போடு; அவர்களுடைய சமையல்—

அந்த எழுபதாவது தலைமுறையின் முப்பாட்டிகளின் முப்பாட்டிகள். இன்னும் எத்தனையோ பேர்கள் பெரிய மாமியாரம்மா என்று உட்காரப் போகிருர் கள். மேலும் அவர்களுக்குப் பின்னே விளையாடும் கொள்ளுப் பேத்திகளினுடைய கொள்ளுப் பேத்தி களின் கொள்ளுப்பேத்திகளின் எள்ளுப் பேத்தி கள் ....அம்மாடி, மூச்சு திணறுகிறதப்பா,—அடே இத்தனை குடும்பங்களையும், வெறும் பேத்திமார்களின் பெயர்களை மட்டும்கூட, சொல்லச் சொல்ல அப்ப டியே நின்று மயக்கம் தட்டுகிறதடா. தவிர ஒவ் வொருவருக்கும் வைத்துக் கூப்பிட பெயர்களே போதாதே. அப்படியிருக்க அன்ன வஸ்திரத்துக்கு எங்கே போதப் போகிறது? இதற்கும் இவர்கள் தம் பட்டம் அடிக்கும் வார்த்தைக்கும் எவ்வளவு தூரம்? சீ, இந்த புத்தன் மட்டும் உண்மையில் சாவை ஒழிக் கும் வழியை காட்டியிருந்தால் ஜனங்களே மர ணத்தை வலிய இழுத்துக் கொள்வார்கள். அது நிற்க, சாவு ஒழிந்தால் சுடலைக்கு விறகு விற்றுவரும் பேர்வழிகளின் பிழைப்பே போய்விடுமே. பார், இந்த புத்த தர்மத்தின் குறைகள் எல்லாம் எனக்கு எவ்வளவு தெளிவாகத் தெரிய வருகின்றன. கொஞ்சம் பொறு; இந்த புத்தனுக்கு எதிராக இன் ெருரு புதிய மதத்தை நானே ஸ்தாபிக்கட்டுமா?........ அது அவ்வளவு சரியாக இருக்குமா?

தாகம்சிங்கு: அதனுலேதான் சொல்லுகிறேன். இந்த விஷயத்தை விட்டுடு. உன்னுடைய ஆராய்ச்சிகள் எல்லாம் என் மூளைக்குள்ளே புகுந்து எனக்கு மயக்க மும் கிறுகிறுப்பும் தட்டுகிறது. ஏதோ ஒரு அரு

வருப்பு உண்டாகிறது. நாளைக்கு வரும் மரணம் இன்றே வந்து தொலைந்தாலும் பரவாயில்லையப்பா. இதற்காகச் சங்கத்தில் சேரமாட்டேன்.

சாகம்பட்டர்: சே, சே, அதேன் அப்படி? மரணத்தைப் போக்க விரும்பாமல் விழித்துக்கொண்டே அதனுடன் விளையாட விரும்புகிறாயா? பிக்ஷுவாகி சங்கத்தில் சேர்ந்தால் நிறைய சாப்பாடு, நிறைய பக்ஷண விதங்கள், பின் பிக்ஷுணி விதங்களும் நிறைய கிடைக்குமே—அதைவிட்டு பாடுபட்டு, உழைத்து, களைத்து, சோர்ந்து, மெலிந்து, வாடி, வதங்கி, உலர்ந்து இதெல்லாம் யாருக்கடா வேண்டும்? எப்படியாவது வயிற்றை நிரப்பிக் கொள்ளவேண்டும். அவ்வளவு தானே? வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் வயிற்றை நிரப்பிக் கொள்ளலாம். இப்படி வா, நான் இந்த சங்கத்தில் சேரப்போகிறேன்.

தாகம்சிங்கு: நானும் வருகிறேன். க்ஷத்திரியன் என்று சொல்லிக்கொண்டு திரிந்து சண்டையில் செத்துப் போவதைக் காட்டிலும் பிக்ஷுவாக இருந்தால் சுகமாக, அமைதியாக, பயமில்லாமல் இருக்கலாம்.

சாகம்பட்டர்: அப்படியானால் சொல்லு புத்தம் சரணம் கச்சாமி, அடே, தாகம்சிங்கு, புத்த சங்கத்தில் நிறைய பிச்சை கிடைக்கிறது உண்மைதானே? சொல்லு.

தாகம்சிங்கு: அடே, என்னுடைய அந்த செத்துப் போன தர்ம பத்தினியின்மீது சத்தியம் செய்கிறேன். இது உண்மைதான். இல்லை என்றால் நான் ஏன்

அவசரப்பட்டு இந்த பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து கொள்ள வேண்டும்? ஒரு கவலையும் இல்லாமல் கிர ஹஸ்தனுகவே இருக்கமாட்டேனு?

சாகம்பட்டர் : அப்படியானுல் சொல்லு. அந்தக் கடைசி பிரதிக்ஞையும் சொல்லு. அதுதான் சங்கம் சரணம் கச்சாமி.

## காட்சி 4

*சேனுபதி வல்லப சிம்மன் மகாராஜாவாகிய மஹா நாமாவை வணங்கிக் கொண்டு வருகிருன்.*

வல்லபன் : மகாராஜா மஹாநாமாவுக்கும் சாக்கிய ராஜ்யத்துக்கும் வெற்றியுண்டாகட்டும்.

மஹாநாமா : வாருங்கள், படைத்தலைவரே, நாம் யாவரும் என்றும் நினைத்திராத சங்கட நிலைமை இன்று திடீரென்று நமது சாக்கிய ராஜ்யத்துக்குத் தோன்றியிருக்கிறது. இந்தக் கடிதம் கொண்டு வந்திருக்கும் செய்தி நம்மை திடுக்கிடச் செய்கிறது. இத்தனை நாட்களாக நம்மிடம் நட்பையே காட்டி நம்மைப் பொய்யான அமைதியில் நாட்டியிருந்த கோசல நாட்டு அரசன் வித்யுத்கர்ப்பன் இன்று திடீரென்று சாக்ய ராஜ்யத்தின் மீது மூன்று புறங்களிலிருந்தும் படைகளை ஏவி புயல் காற்றைப்போல் முன்னேறி வருகிருன். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் நமதரசர் சுத்தோதனர் காலமானுர். அவரது மைந்தரான சித்தார்த்தரோ தந்தையார் இருக்கும் போதே யாவையும் துறந்து புத்தரானுர். அத்துடன் நில்லாமல் தன் மகன் ராகுலனையும், தம்பி

ஆனந்தன். சிற்றப்பன் மகன் தேவதத்தன். மனைவி யசோதரை, இன்னும் அவளது தாயார், ராஜ்யத்தின் அதிகாரிகள் வீரர்கள் யாவருக்கும் சன்யாச தீக்ஷை வழங்கித் தமது சங்கத்தில் சேர்த்துக்கொண்டார்; மற்றும் இந்த ராஜ்யத்தைக் காத்துவந்த விக்ரம சிம்மரையும் துறவி ஆசிரமத்தில் சேர்த்துக் கொண்டார், ஏனென்றால் புத்தபகவானின் சித்தாந்தம் வேறுவிதமாக இருந்தது, உலகில் ராஜ்யங்கள் யாவும் தாமாகவே ஆயுதங்களை அகற்றிவிட்டு மக்கள் யாவரும் ஆயுதம் தரிப்பதையே கொடும் பாவம் என்று உணர்ந்து கைவிட்டால், இம்மண்ணுலகில் யுத்தம் மறைந்து சாந்தியின் சாம்ராஜ்யமே ஓங்கும் என்றும், அதைத் தமது வாழ்க்கையிலேயே கண் கூடாகக் காணலாம் என்றும் அவர் நம்பினார். இந்தக் கற்பனைக் காட்சியில் ராஜ்யத்தின் வீரர்கள் யாவரும் மயங்கி. புத்தரைப் பின்பற்றி, துறவற வாழ்வை மேற் கொண்டனர். அதனால் இந்நாட்டில் வீரம் என்றதே மறைந்து விட்டது, மக்கள் வீரத்தைப் பாவம் என்று நினைக்கவும் தலைப்பட்டு, போர்த் தொழிலைக் கொடுமையென்று புறக்கணித்தார்கள். இந்த பலமற்ற நிலைமையில் ராஜ்யத்து மக்கள் என்னை அரசனாக்கி அரியணைமீது அமர்த்தினார்கள். நானும் புத்தபகவானின் சீடனாயிருந்தவனாதலால் படைபலத்தைப் புறக்கணித்தே வந்திருக்கிறேன், ஐயோ, இவை யாவும் பொறுக்கத் தக்கதல்ல. இவைகளின் பலனையே இன்று நாம் அநுபவிக்கிறோம்.

வல்லபன் : சாக்கியரே, கவலை வேண்டாம். உங்களுக்கு இந்த நிலையிலும் எதிரியைப் போரில் வெல்ல வல்ல

மையிருக்கிறது. நன் கேட்பதெல்லாம் இது ஒன்று தான், இந்த யுத்தம் முடியும் வரையில் சாக்கிய ராஜ்யத்தின் அதிகாரம் முழுவதையும் ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும். இந்நிலையில் எவரது ஆண்மையிலும் நேர்மையிலும் மக்களுக்கு நம்பிக்கையுண்டோ அவரைச் சர்வாதிகாரி யாக்குவோம். போர் காலத்தில் பலபேர் பலவிதம் செய்வதைக் காட்டிலும் அதிகாரம் யாவையும் ஒருமித்து ஒருவரது கையில் திரட்டியமைத்து அவரது தலைமையில் அவரது கட்டளைப் படியே செயலாற்றி வருவோமானல் பகைவரை எதிர்த்துப் போராடி முடிவில் வெற்றியையும் காண முடியும். அத்தகைய வீரர் பெருமான் ஒருவர் இன்று இருக்கிருரா?

ஒரு சேனை அதிகாரி: இருக்கிருர். நல்லகாலமாக அத்தகைய ஆண் தகையாளர் சாக்கியருள் இன்னும் உயிரோடு இருக்கிருர். அவரது வாள்வீச்சில் கோசல நாட்டுப் படைகள் துண்டுபட்டு விழுந்ததுண்டு. அவரது குரலைக் கேட்டால் இன்றும் சாக்கிய ராஜ்ய மக்களுக்குத் தன்னம்பிக்கை தானுகவே பொங்கியெழும். அத்தகைய வீரரத்தினம் இன்னும் இருக்கிருர். ஆனல் ஐயோ, அவர் துறவியாக வல்லவா இருக்கிருர்? அவர்தான் நமது இளம் படைத்தலைவரான வல்லபரின் வயது முதிர்ந்த தந்தையார், நமது சாக்கிய ராஜ்யத்தின் பாட்டனை பீஷ்மர்; நமது பழைய சேனுதிபதி விக்ரமசிம்மர்.

மஹாநாமா: புகழ்பெற்ற அவ்வீரர் இந்த ஆபத்தான நிலையிலும் நமக்கு வழிகாட்டுவார் என்று எனக்கும் நம்பிக்கையிருக்கிறது. இதோ பாருங்கள், அந்த வீர

சிரேஷ்டரின் வாள்—போர் முறையைப் போற்றி மக்களைக் காப்பதற்கு வாள் இன்றியமையாத கருவியாகும் என்று நம்பியிருந்தும் புத்த பகவானின் வேண்டுகோளுக்கு இணங்கி, வாளையகற்றி பிக்ஷு தீக்ஷை தரித்துக் கொண்டாரே அந்த தினம் இன்றும் என் கண்முன் இருந்து வருகிறது. அன்று முதல் அவரது வாளை அரசசபை தனது செய்நன்றியின் சின்னமாக, கடவுளைப்போலவே போற்றி வருகிறது. ஆ, இந்த வாளையேந்தியே அவ்வீரர் நமது பகைவர்களைப் பலமுறை சிதற வடித்திருக்கிருர். இந்த வாளே இன்னும் நமது மக்களுடைய ஊக்கத்தின் உருவாக விளங்கி வருகிறது. சாமந்தகர்களே, வீரரான விக்ரசிம்மரை நமது சர்வாதிகாரியாக அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து, துரிதமாக அவரிடம் தூதரை யனுப்புங்கள். அவர் மீண்டும் வந்து தமது வீர வார்த்தைகளாலும் வாள்வீச்சின் ஓசையினுலும் நமதுள்ளங்களில் கிளர்ச்சியை யெழுப்பட்டும். சேனுபதி விக்ரமசிம்மர் என்று சொன்ன மாத்திரத்தில் மக்களிடை தேசபக்தி ஓங்கிவிடும். அவரது வாளைப் பார்த்த மாத்திரத்தில் அவர்களிடையே வீரம் பொங்கிவிடும். அந்த வாளை ராஜ்ய முத்திரையுடன் அவருக்கனுப்பியழைப்போமாக ஆனுல் அவரோ சன்யாசியாக, முற்றும் துறந்த முனிவராக, ஆயுதத்தைத் தொடாதவராக இருக்கிருரே. ஆ! என்ன சங்கடமான உண்மை. இருந்தாலும் இந்தச் சங்கடமான நிலையிலிருந்து தப்பிப் பிழைக்க ஏதோ ஒரு வழியை காட்டுவது திண்ணம். சாக்கிய மக்களுக்கு ஊக்கம் ஊட்டும் செய்தியனுப்பி 'போருக்கு முந்துங்கள்' என்று அவர் சொல்லி யனுப்பிஞல்

போதாதா? இதைக் கேட்டதும் குறைவுருத அம்புக் கூட்டிலிருந்து பிரம்மாஸ்திரங்களைப்போல் நமது சாக்கிய ராஜ்யத்திலிருந்தும் போர் வீரர்கள் வெகுண்டு எழுந்து முன்னே வரமாட்டார்களோ? இந்த நெருக்கடியான நிலையில் புத்தபகவானது ஆசியும் விக்ரம சிம்மரின் ஆக்ஞையும் மறைமுகமாகவேனும் நமது ராஜ்யத்துக்குக் கிடைத்தாகவேண்டும். அவைகள் கிடைப்பதும் நிச்சயமே. அவ்விருவரும் நமது சாக்கிய ராஜ்யத்தின் சந்ததிகளல்லவா? இருவரும் இந்த ராஜ்யத்தாயின் மடிமீதிருந்து உண்டு வளர்ந்தவர்களல்லவா? தாய்க்கு உரிய கடமையை அவர்களால் மறக்க முடியுமா? மற்றும் சாக்கிய ராஜ்யத்தின்மீது நேர்ந்த இந்த பயங்கரமான படையெடுப்புக்கும் ஒரு காரணம் இருக்கிறது. வித்யுத்கர்ப்பன் புத்தரைப் பகைப்பதால் அவரது ஜாதியையே அழிக்க விரும்புகிருன். (தூதன் வருகிருன்) என்ன செய்தி கொண்டுவந்திருக்கிருய்? சீக்கிரமே சொல்.

தூதன் : மகாராஜா மன்னிக்க வேண்டும்; ராஜதானியிலிருந்து நான்கு யோசனை தூரத்திலுள்ள நமது சேனை முகாமில் பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. வித்யுத்கர்ப்பனது படைகளே நமது ராஜ்யத்தில் பகுதியை விழுங்கிவிட்டு மேலும் பொங்கி வருகின்றன. கோசல வீரர்கள் எதிர்ப்படும் சாக்கிய மக்களை வெட்டி வீழ்த்தி, வழியில் காணும் ஊர்களையெரித்து, பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவித்து வருகிருர்கள். எங்கும் பெரும் புலம்பலே கேட்கிறது. திகிலடைந்த மக்கள் திரண்டு கூட்டம் கூட்டமாக ராஜதானியை நோக்கி ஓடிவருகிருர்கள். இந்தச் செய்தியைக் கேட்டதும் நமது சேனை முகாமில் தைரி

யம் பறந்துவிட்டது. சமீபத்தில் படைகளைத் திரட்டு வதற்காக நாங்கள் கிராமங்களுக்குப் போயிருந்த போது 'யுத்தம் புரிவதே பாவம்; நாங்கள் ஆயுதங் களைத் தொடவும் மாட்டோம். போர்த்தொழில் கசாப் புத் தொழிலாகும்' என்று மக்கள் வாதுபுரிந்து எங் களை நிந்தை செய்தார்கள். அவர்களை மீறி சேனை யில் சேர்ந்தவர்கள் இச்செய்தியைக் கேட்டு முன்னே போக உத்திரவானதும் வெளிப்படையாகவே ஒழுக் கத்தையும் கட்டுப்பாட்டையும் மீறி திரும்பிப் போய் விட்டார்கள், அவர்களை அடக்கப்போகவும் பெருத்த கலவரம் உண்டாகிவிட்டது இன்றைய தினம் எந்த நிமிஷத்திலும்—

வல்லபன் : இதோ, இங்கு நிற்கும் குதிரைமீது ஏறி அப்படியே நான் அவ்விடம் வந்து சேருகிறேன். மகாராஜா, தங்களது அரண்மனையிலும் எச்சரிக்கை மண்டபத்திலும் ஆபத்து மணியை அடிக்கும்படி உடனே கட்டளையிடுங்கள். நகரமக்களைக் கூட்டி ஒரு சர்வாதிகாரியை நியமிக்க வேண்டும். ராஜ்யத்துக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தின் முழு விவரங்களையும் அவர் களுக்குத் தெரிவிக்கவேண்டும். நகரப் படைகளும் ஆயத்தமாக இருத்தல்வேண்டும். சேனுபதி விக்ரம சிம்மரிடமிருந்து வரும் கட்டளைகளைப் படைகளுக்கு அறிவித்து நான் பகைவர்களுக்கு முகம் கொடுத்து எதிர்த்துப் போராடி நிற்பேன். ஐயா, முயற்சி செய் வது நமது கடமை; அதில் வெற்றி ஆண்டவனைப் அருளைப் பொருத்தேயிருக்கும். ஆடவராயினும் பெண்களாயினும் சரி, இல்லறத்தாராயினும் அன்றி துறவிகளாயினும் சரி, சாக்கிய விதையிலிருந்து முளைத்துத் தோன்றிய மக்களே. கிளம்புங்கள். வாளை

யேந்தி வெகுண்டு எழுங்கள். இந்தச் சாக்கிய ஜாதியின்மேல் ஆணை; இந்த ராஜ்யத்தின் குடியரசின்மீது ஆணை. முந்துங்கள். இதோ நான் போகிறேன். சாக்கிய ராஜ்யத்தின் கீர்த்தி பெற்ற சேனாபதி விக்ரம சிம்மரின் மகன் நான். இன்று இந்த ராஜ்யத்தின் சேனாபதியாக இருக்கிறேன். இதைப் பகைவன் உணரும்படி செய்யாவிட்டால் என் பெயர் வல்லப சிம்மன் அல்ல.

## காட்சி 5

சுலோசனை: (மாலை தொடுத்துக் கொண்டே மெல்ல பாடி வருகிறாள்).

*குணம் மூன்றும் கடந்து நின்றாய்,*
*காளி, ஜகன்மாதா,—உனக்கு*
*மணமுள்ள வில்வதள*
*மாலையிடுவேனே—*
*ப்ரளயம் தரும் காளிக்குச் சண்டை*
*முண்ட மாலை சூட்டினார்;*
*ஒளிரும் உதயரவி போலும்*
*மாலை சூட்டுபவனே.*
*அரசனுக்கு அரசி முத்து*
*மாலை சூட்டினாளே—*
*ஹரிக்கு சத்யபாமை பாரி*
*ஜாத மாலை யிட்டாளே—*

*பூமாலை தொடுத்துக் காமதேவனுக்குச் சூட்டி*
*இறுமாப்புடன் அவனை யணைந்த ரதி தன் கண்*
*ணீர்மாலை தொடுத்து மிகநெக் குருகி வாடி*
*நைந்தழுதாள் அவனைப் பிரிந்து நின்ற போதே |*

இன்னும் ஏன் வரவில்லை? இதோ ஒரு நொடியில் வருகிறேன் என்று போனாரே. அவர் போகும் போது நான் சிரித்துக் கொண்டு விடை தராமல் இருந்து விட்டேன். எனது சிரித்த முகத்தைக்காண அவர் மீண்டும் வருவார். (மீண்டும் பாடுகிறாள்) இது என்ன? இன்னும் காணோமே. எனது வரமாலையைத் தொடுத்தாயிற்று. ஏன் இன்னும் வரவில்லை? வராவிட்டால் போங்கள்; அப்படியே போங்கள். சேனாபதி பதவியைத் தாங்க வேண்டுமல்லவா? இந்தப் புருஷர்களுக்கு அதிகாரம் கிடைத்ததற்கு முதல் அடையாளம் என்ன தெரியுமா? தங்களுடைய மனைவியிடம் பேசுவதற்குக்கூட நேரம் கிடைக்காமல் போய் விடுவதுதான். "இதோ பார், நான் பெரிய மனிதனாகிவிட்டேன், தெரிந்து கொள்" என்று சொல்லுவதுபோல இருக்கிறது. வீட்டில் அடைபட்டிருக்கிற ஒரு பெண் ஜன்மத்திடம் பேசுவது என் அந்தஸ்துக்குக் கேவலமான விஷயம் என்று சொல்லுவதுபோல இருக்கிறது. இது பெண்களது தப்பிதம்தான். இவர்கள் வெட்டி யரட்டைக்காரிகளைப் போல் எதற்கும் பேச முன் வந்துவிடுகிறார்கள். இன்றைக்கு இவர் வந்தால் நான் சொன்னபடி சிரித்துக் கொண்டு முன்னால் போய் நிற்க மாட்டேன். அவர் களைத்து வருவாரே—உடனே என்னைப் பார்க்கவில்லை யென்றால் வருத்தப்படுவாரே. அப்போது நான் சிரித்துக் கொண்டே முன்னேபோய் நிற்பேன். ஆனால் ஒரு நாழிகை நேரம் பேசமாட்டேன். (மாலையை நன்றாகப் பார்த்துக் கொண்டே) ஆனால் அப்படிப் பேசாமல் இருந்தால் அழகாயிராது—ஏனென்றால் பூஜை வேளை இதோ வந்து

விட்டது—ஆதலால் மௌனமாக இருக்கமுடியாது. கொஞ்சம் நேரம் இந்தப் பூஜை பாத்திரங்களைச் செவ்வையாக எடுத்து வைப்பதுபோல் பாசாங்கு செய்வேன். (சிரித்துக் கொண்டு) இப்படி நான் நினைப்பதையெல்லாம் அறிந்தால் எல்லாரும் சிரிப் பார்கள் சின்னஞ் சிறுமியைப்போல என்னென் னவோ மனத்தில் நினைந்து கோட்டை கட்டுகிறேன். எனது காதலர் என்னை சின்ன விளையாட்டுப் பெண் என்று சொல்லுவது பொய்யன்று—ஆனால் எனக் குத் தோன்றுகிறது. இன்பத்தில் கூடும்போது விளையாட்டுத் தனமாக இருந்தால் என்ன? துன்பத் தில் மட்டும் கம்பீரமாக, அறிவாளிபோல, பெண் களின் பட்டாளத் தலைவி போல, ஓரிடத்தில் நிலை யாக நின்று, தைரியமாக முகம் கொடுத்து, நிற் பேன். அப்போது இவர் என்னைச் சிறு பெண் என்று சொல்ல முடியுமா?

**தோழி:** (பிரவேசித்து) சேனாதிபதியிடமிருந்து வந் துள்ள வீரன் ஒருவன் வெளியே நிற்கிறான்— அவன்....

**சுலோசனை:** அவன் அல்ல. அவர் என்று சொல்லடி. அந்த சாக்ஷாத் சேனாதிபதியவர்களே வந்திருக்கிறார் கள் என்று எனக்குத் தெரியும். யாரோ வீரன் என்று சொல்லி என்னை ஏமாற்றி வெளியே கொண்டுவந்து நிறுத்தி அவமானம் செய்ய வேண் டும் என்று நினைக்கிறாயே—

**தோழி:** அம்மா, உண்மையில்.......

**சுலோசனை:** அடி, பொய்க்காரி, என்னை ஏய்க்கவா பார்க்கிறாய்? (தாமரை நூலால் அடிக்கிறாள்.)

சேனாதிபதியே வந்திருக்கிறார்—போ, அவரிடம் சொல்லு—இன்னும் வருவதற்கு நேரம் ஆகவில்லை என்று சொல்லு; இன்னும் கொஞ்சம் தாமதித்து வரச் சொல்லு.

[பாடுகிறாள்.]

*வாயிலில் நின்று வருவார் என்று வழி பார்த்து*
*வெகுவாய் சலித்துவிட்டேன்; தோழி,*
*ஆயிரம் தண்டம் இனி இட்டாலும் ஏற்காமல்*
*அலட்சியமாய் எதிர்த்திடுவேனே—*
*கண்டதும் அவர் புயத்தையாலிங்கனக் கயிற்றால்*
*கட்டிடு வேனடி; தோழி,*
*சுண்டிமுகம் சிறுத்தாலும் சிரிப்பேனோ?*
*சென்றிடுவீர் வந்தவழி என்பாயே.*

தோழி : சத்தியமாகச் சொல்லுகிறேன்; அம்மா, வந்திருப்பவர் சேனாதிபதியல்ல-ஒரு மிக்க அவசரமான, சங்கடத்தின் செய்தி வந்ததால் அவர் அங்கிருந்து அப்படியே ராஜதானியை விட்டு சேனை முகாமுக்குப் போய்விட்டார். போகும்போது பாய்ந்து செல்லும் குதிரையின்மீது இருந்தவாறே இந்த மட்டும் அந்த வீரனுக்குச் சொன்னார். “ நான் இரண்டு நாட்களில் வருகிறேன். விவரமான செய்தியைப் பின்னால் அனுப்புகிறேன். நீ சென்று வீட்டில் இதைத் தெரிவி ” என்று சொல்லிப் போனார். அந்த வீரன் வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருக்கிறான்.

சுலோசனை : என்ன ? என்னதான் சொல்லுகிறாய்? ஆ! (மணி அடிக்கிறது.) மேலும் இது என்ன ? அரண்மனையிலிருந்து, நமது ராஜதானியின் மணிக்கூண்டிலிருந்து, சங்கடமணி, ஆபத்து மணி இப்படி அடிக்

கிறதே—எத்தகைய ஆபத்து? எங்கே அந்தக் குதிரை வீரன்? அடி, வேடிக்கைக்காகவே இன்னும் நேரம் கழித்து வாரும் என்று சொன்னேனே இதென்ன எதிர்பாராத விநோத வார்த்தைகளைச் சொல்லிவிட்டேனே. ஏன் இவ்வாறு அசுபமான சொற்களை இந்தப் பிணம் சொல்லிற்று? அடி, அவர் போனபோது நான் சிரித்துக்கூட பேச வில்லையே. (மறுபடியும் மணி அடிக்கிறது.) அந்த நாசமாய்ப் போன கோசல மன்னன் இப்படி படை யெடுக்காமல் இருக்கக்கூடாதா?

## காட்சி 6

*[புத்த தேவரும் பிக்ஷு விக்ரமசிம்மரும் மற்ற பிக்ஷுக்களுடன் உட்கார்ந்திருக்கிறார்கள்.]*

விக்ரமர்: ஆ! நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே என் மனத்தே தோன்றிய பயம் இன்று பலித்துவிட்டது. கேவலம் தயையால் துஷ்டத்தனத்தையும், கருணையால் கடுஞ்சினத்தையும் வெல்ல முடியுமா? அதைப் போலவே கேவலம் அஹிம்சையால் கொலையையும் சாஸ்திரங்களால் ஆயுதங்களையும் எக்காலத்திலும் எவரும் நிறுத்தியதில்லை. இந்தக் கடுமையான உண்மை கடைசியில் இன்று உங்கள் கண்முன்பாகவே தெரிந்துவிட்டதல்லவா? பகவானே, பிறப்பு நோய் மூப்பு இறப்பு இவைகளிலிருந்தும் மனித சமூகத்தையே விடுதலை செய்வதன் பொருட்டு நினைத்தற்கும் அரிய தவத்தையும் தியாகத்தையும் ததாகதரான நீங்கள் செய்திருக்கிறீர்கள். உலகில் துன்பங்கள் யாவையும் ஒழிக்கும் உயர்ந்த மார்க்கத்

தைக் காட்டினீர். ஆசையைத் தவிர்த்தால் பிறவித் துன்பத்தைத் தவிர்க்கலாம் என்ற உயர்ந்த உண் மையையும் உபதேசித்தீர்கள். ஆனல் இவை யாவும் பரலோக விஷயங்களைப் பற்றியவையே யாகும். ஏனெனில் பிறப்பும் இறப்பும் நோயும் வயோதிகமும் இந்த பூதவுடலைவிட்டு நீங்குவதில்லை. உலகவாழ்வில் உழலுவோனுக்கு மாத்திரம் அல்லாமல் உலகைத் துறந்த புத்தருக்கும் இந்த பூதவுடலை யொதுக்க இயலவில்லையே. கடுமையான இந்த உண்மையை நாம் மறக்க முடியுமா? தங்களைப் பின்பற்றி வரும் மக்கள் ஆசையுடன் தைரியத்தையும் கைவிட்டார் கள். உங்கள் உபதேசத்தால் மனிதனது முயற்சி யெல்லாம் தொலைந்துவிட்டது. இயற்கைச் சக்தி களின் முன்னிலையில் மனிதனின் முயற்சியைப் பல னற்றதாக்கிவிட்டீர்களே. அப்படியும் நன்மை ஏதும் கிட்டவில்லை, ஆ' இத்தகைய தோல்வியிலும் வெற்றி யொன்றுள்ளது. தவிர்க்க முடியாதவைகளை எதிர்த் துப் போராடுபவன் இன்று தோல்வியின் தண்ட னைக்கு ஆயத்தமாகவே இருத்தல் வேண்டும். இம் மண்ணுலகில் பிறப்பு மூப்பு வியாதி மரணம் இவை களை அநுபவித்தே தீரவேண்டியிருப்பதால் இந்த இன்றியமையாத போராட்டத்தில் கூடுமட்டும் தீமை யகற்றி நன்மையை நாட்டுவதில் போர் முறையைக் கையாளவேண்டி யிருக்கிறது. இந்தச் செயல் முறையே உயர்ந்ததாக எனக்குத் தோன்றுகிறது. கூடுமட்டும்மக்களின் சுகத்தைப்பெருக்கி துக்கத்தைக் குறைப்பதான லக்ஷியத்தை மேற்கொண்டு செயல் ஆற்றிவரும் கர்மயோகத்தை நான் ஆதரிக்க விரும்பு கிறேன் தங்களுடைய மதத்திலோ ஆசை, விவசாயம்,

போர்த்தொழில் இவைகளை அளவுக்கு மீறித் துறந்துவிடும் கர்ம சன்யாசமே—அதாவது செயல் யாவையும் துறந்த வாழ்க்கை முறையே—சிலாக்ய மாகக் கொண்டாடப்படுகிறது. ஆனால் வாளைத் துறக்கும் விரதத்தில் விளைந்துள்ள விபரீதங்களைக் கண்கூடாக இன்று பார்க்கிறீர்கள். ஆயுதத்தை யொதுக்கும் உங்கள் உபதேசத்தை நன்மக்கள் ஏற்று, அன்பு அஹிம்சை பொறுமை இவைகளின் ஆதரவில் வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். ஆனால் தீய துஷ்டர்களோ உங்கள் உபதேசத்தை அலட்சியம் செய்து கத்தியின் பலத்தைக்கொண்டு உங்கள் மீதே ஏறி மிதிக்கிறார்கள். உங்கள் தர்மம் வெறும் ஏட்டுச்சுரைக்காயாகிறது. அதைப் பின்பற்றிய நல்லோர் துஷ்டரது வாள்வீச்சில் சிதறியழிவுற்று விழுகிறார்கள். அதனால் தீயவொழுக்கமுள்ளவர்களுக்கே இவ்வுலகில் வெற்றி நிலைத்து விடுகிறது. உங்களது உபதேசத்தால் இத்தகைய விபரீதங்கள் ஏற்படுவது திண்ணம் என்பதை நான் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே சொல்லியுள்ளேன். அன்று நான் சொன்னதெல்லாம் இன்று உண்மையாகி விட்டது. ஐயோ, இதை மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சுவாமி, எதிர்காலத்தைப்பற்றியுள்ள எனது அபிப்பிராயங்கள் யாவும் பொய்யாக வேண்டும் என்ற விருப்பத்தினால்தான் நானும் எனது இஷ்டத்துக்கு விரோதமாகவே தங்களது ஆக்ஞையின்படி ஆயுதத்தைத் துறந்து, பிக்ஷு தர்மத்தை மேற்கொண்டு அந்த விரதத்தைப் பிழையின்றி நோற்று வந்திருக்கிறேன். ஆனால் கடைசியில் நடந்ததென்ன? சாந்தியுகம்

தோன்றி அதில் ஆயுதப்போர் மறைந்து போக வில்லையே; ஆனல் ஆயுத யுத்தத்திஞலே அந்த சாந்தியென்பது பெயரளவிலேனும் இல்லாமல் போய்விட்டது. மகத நாட்டு மன்னன் பிம்பிசாரன் தங்கள் சீடனுகி அஹிம்சையை ஆதரித்து வந்தான். ஆனல் அவனது மகன் அஜாதசத்ருவோ தங்களிடம் பகையே பாராட்டி, தகப்பனுக்கு எதிராகக் கலகம் செய்து அவனைக் கொன்று அரியணையேறி நம்மவர் எல்லார்க்கும் அச்சத்தையூட்டி வருகிருன். இதற்குள் தங்களது உபதேசத்தைக் கேட்டுச் சீடனுகி அஹிம்சையை மேற்கொண்டிருந்த கோசல நாட்டரசன் பிரசேனஜித்தை அவனது மகன் வித்யுத்கர்ப்பனும் விரட்டி யோட்டி நாட்டின் ஆட்சியைக் கைக்கொண்டு விட்டான். ஆஹா! என்ன விபரீதம்! தங்களது உபதேசத்தைக் கேட்டு, தயை சாந்தி அஹிம்சை இவைகளையே பாராட்டி வந்த இரு மன்னர்களுக்கும் ஒரே விதமான கதியே ஏற்பட்டது. அவர்களது மக்களே தம்மைப் பெற்றெடுத்து ஆளாக்கிய அப்பன்மார்களிடமிருந்து ஆட்சியை அபகரித்தார்கள். உங்களது உபதேசத்தைக் கடைப்பிடித்து ஆயுதவொழிப்பைப் பேணிவந்த பெற்ருேர்கள் இருவரும் தமது மக்களின் ஆயுதங்களுக்கே இரையாகி வீழ்ந்தார்கள். ஆ! ஆ!! ஆயுதவொழிப்பு அதோகதியாகிவிட்டது. வலிவற்றவர்களின் கருணையைக் கோபமும் பகையும் கொன்று விட்டனவே!

புத்தர்: பிக்ஷு விக்ரமசிம்மரே, நீங்கள் சொல்வதைப் பார்த்தால் இன்றளவும் எமது சன்யாசச் சங்கத்தால்

உலகுக்கு நன்மை ஏதும் ஏற்படவில்லை என்பதே உங்கள் அபிப்பிராயம்போலும்.

விக்ரமர் : பகவானே ! நீங்கள் நாட்டியுள்ள சன்யாசச் சங்கத்தினலன்றி பூண்டு ஒழுகிய சன்யாச ஆசிரமத்தாலும் உலகுக்கு அருளியுள்ள உதவிக்கு அளவேயில்லை. யாவற்றையும் அறவே துறந்து வனத்தில் தவமியற்றி நீங்கள் அருளிய தத்துவ மொழிகள் என்றென்றும் உலகுக்கு வழிகாட்டிகளாக விளங்குவது திண்ணம், 'தர்மமே உலகுக்கு ஆதாரம்' என்பது முற்றிலும் உண்மையே. 'துறவறமே தர்மத்துக்கு ஆதாரம்' என்பதால்தான் துறவறமும் சுவர்க்கத்துக்குச் சமமாகப் போற்றப்பட்டு வருகிறது. உங்கள் சங்கத்தையும் அதன் உபதேசங்களையுமே எடுத்துப் பாருங்கள். இவைகளால் இந்த நாற்பது ஆண்டுகளாக எளியதும் மெய்யானதும் அருள் ஊறுவதும் குளிர்ந்ததுமான அமுதத்தால் ஆயிரக்கணக்கான ஜீவன்களின் துயரங்கள் சாந்தம் அடைந்திருக்கின்றன. யாகங்களின் வீண் தன்மையை எடுத்துக் காட்டி கணக்கற்ற உபயோகமுள்ள உயிர்களுக்குப் பிராணதானமும் அளித்திருக்கிறீர்கள். தேவ தேவதைகளின் மனம் போனவாறுள்ள கலகங்களைப் புறக்கணித்து, ஒழுக்கம், அன்பு இவைகளே உண்மையான தர்ம சாதனங்கள் ஆகும் என்பதை நிலை நாட்டினீர்கள் ; தங்களுடைய பிக்ஷுக்களும் ஊர் ஊராய்ச் சென்று நோய் வாய்ப்பட்டு வருந்துவோர்க்கு சேவை செய்து வேதனையை நீக்குகிருர்கள். 'ஒருவர் மேல் ஒருவர் பொருமை கொள்ளாதீர்கள் ; பரஸ்பரம் தயையே காட்டுங்கள் ; குற்றங்களைப் பொறுப்பதே தகுந்த

மார்க்கம்' என்ற இத்தகைய சீரிய உபதேசங்களைச் செய்து ஒவ்வொரு இல்லத்திலும் அமைதியின் குளிர்ந்த செய்தியைப் புகுத்திய உங்களது அன்பு கனிந்த சேவையை உலகம் என்றும் மறக்கவோ அன்றி அச் சேவைக்குக் கைம்மாறு செய்யவோ இயலாது. ஆயினும் மக்களால் செய்ய அரிதான உயர் முயற்சிகளை நீங்கள் இந்த நாற்பது வருஷங்களாகத் தொடர்ச்சியாகச் செய்து வந்திருந்தும் ஆயுத நிராகரிப்பின் தீமையை மாற்ற முடியவில்லையே. ஆயுதத்தைப் புறக்கணிப்பதால் கேடே விளையும் என்ற சத்ய வாக்கின் உண்மையைப் பொய்யாக்க முடியவில்லையே. ஆனால் ஆரம்பத்திலிருந்தே இந்த அபகீர்த்தி உங்கள் முயற்சிகளைப் பின்பற்றி வந்திருந்தும் அதனால் அவைகளின் மேன்மையே விளங்கி வருகிறது.

ஆனந்தன்: (பிரவேசித்து) புத்தம் சரணம் கச்சாமி; தர்மம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி. பகவானே! ததாகதரான புத்தரையும் பிக்ஷு சிரேஷ்டரான விக்ரமரையும் சந்திக்க வேண்டி, சாக்கிய குடியரசின் சார்பாக, வந்திருக்கிற ராஜப்பிரதிநிதி மிக்க மனவேதனையை விளைவிக்கவல்ல செய்தியைக் கொண்டு வந்திருக்கிறார். அதென்னவென்றால் கோசல மன்னன் வித்யுத்கர்ப்பன் சாக்கியர்மீது யாரும் அறியா வண்ணம் திடீரெனப் படையெடுத்துப் பாய்ந்து நாசம் செய்து வருகிறான்.

விக்ரமர்: ஆ! முடிவில் இந்த பயங்கரமான சேதியே வந்துள்ளது. ஆனந்தா! போ; கல்வி தேர்ந்த அந்த ராஜதூதனை புத்தர் முன்னிலைக்கு அழைத்து

வா. பகவானே! பார்த்தீர்களா? தங்களது அளவு மீறிய அஹிம்சையால் ஒரு சிலரே கருணையுடையோர் ஆகிறார்கள். எல்லோரும் அவ்வாறு ஆக முடிவதில்லையே. உலகெங்கும் ஒளிவீசி வரும் உங்கள் வாழ்நாட்களிலேயே இந்நிலை தோன்றுவதென்றால், உங்கள் அவதாரம் அஸ்தமனமான பிறகு நிலைமை எவ்வாறு இருக்க முடியும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. கொடிய வழக்கம் என்னும் பேய் இவ்வுலகில் மனித உருவிலின்றி ராஜ்ய உருவிலும் இருந்தே வரும். இதை நாம் கண்கூடாகக் கண்டே வருகிறோம். இந்தத் தலைமுறையையும் இதன் அடுத்த சந்ததிகளையும் நீங்கள் துறவிகளாக்க முடியுமாயினும் எதிர்காலங்களில் தோன்றக்கூடிய கோடிக்கணக்கான ஜீவன்களின் பூர்வகர்ம வாசனைகளும் பலன்களும் மற்றும் அவைகளின் போக்குகளும் மாறுபட்டே யிருக்கும், ஐயா, ஒருவனது உள்ளத்தில் தயை, அன்பு, ஒழுக்கம் இவைகளை நாட்டும் உபதேசம் மற்றவனது உள்ளத்தில் அத்தகைய உணர்ச்சிகளைக் கிளப்புவதில்லை. கோடிக்கணக்கான மக்களின் மனநிலை ஒரேவிதமாக இருப்பதில்லை. அதன் வளர்ச்சியும் போக்கும் பிறவி தோறும் அன்றி தலைமுறைதோறும் மாறுபட்டே வருகிறது. ஆதலால் அன்பினாலும் அஹிம்சையாலும் எல்லா மக்களின் உள்ளங்களும் கனிந்து வருவதானால் அது நல்லதுதான். ஆனால் அன்பு இல்லாத துஷ்டர்களை—பிறரை வருத்தும் கயவர்களை—நாம் தண்டனையால்தான் திருத்த வேண்டி ஏற்படுகிறது. பைத்தியம் பிடித்த நாயிடம் தண்டத்தைக் கையாளுவதில் பூத தயையே நான் காண்

கிறேன். எண்ணிறந்த உயிர்களின் நன்மையின் பொருட்டு ஒரு துஷ்டப் பிராணியைத் தண்டிப்பது உண்மையான தர்மமேயாகும்—ஹிம்சைப் பேயின் கூரிய பற்களேயும் கொடிய நகங்களேயும் அறுத்து அகற்றுவது உண்மையில் அஹிம்சையே ஆகும்.

சாக்கிய ராஜதூதன் : (பிரவேசித்து) புத்தம் சரணம் கச்சாமி; சங்கம் சரணம் கச்சாமி. பகவானே, சாக்கிய ராஜ்யத்தின் உயிருக்கே பேராபத்து நேரிட்டிருக்கிறது. சங்கடமான நிலேமையைச் சமாளிக்க இயலாமல் தத்தளிக்கிருேம். நான் கொண்டு வந்திருக்கும் செய்தி மிக்க அவசரமானது. அதை விவரமாக எடுத்துரைக்கவும் நேரம் இல்லே. என்னேக் கேட்டுத் தெரிந்துகொள்ள என்ன இருக்கிறது? யாவும் உணர்ந்த தாங்களே எனக்குச் சொல்லவேண்டும். சேனுதிபதி விக்கிரமசிம்மரே, சாக்கியர்மீது கோசல வேந்தனை கொடியோன் வித்யுத்கர்ப்பன் மின்னலேப்போல் பாய்ந்து தாக்கிக் கொண்டிருக்கிருன். நமது சேனேயோ காற்றைப் போல் பறந்து ஓடி வருகிறது. ஒரே ஒரு வீரன் மாத்திரம் இதுவரை அசையாமல் போர்க்களத்தில் அம்மன்னனேத் தடுத்து நின்று வருகிருன். அது யார் தெரியுமா? விக்ரசிம்மரே, அதுதான் உங்கள் குமாரன் வல்லபசிம்மன் மரணத் தருவாயில் தத்தளிக்கும் சாக்கிய ராஜ்யத்தின் நெஞ்சில் ஊசலாடும் இந்நிலேயிலும் அவன் உயிர் ஊட்டி வருகிருன். ஆ! ஒரே ஒரு ,விநாடி எஞ்சி நிற்கிறது. அது எது என்ருல் அதுதான் மகாசேனுதிபதியும் வீரசிரேஷ்டரும் சாக்கிய ராஜ்யத்தின் பிதாமகருமான விக்கிரமசிம்மரின் உதவியும் புத்தபகவானின் ஆசியும். எங்களுடைய

வேண்டுகோள் எல்லாம் இது ஒன்றே. வீரரான விக்ரமசிம்மர் மேற்கொண்டுள்ள துறவற ஆசிரமத்துக்கு எங்கள் மாருத பணிவைத் தெரிவித்துச் சொல்லுகிருேம். ஐயா, சாக்கிய ராஜ்யத்தின் உயிருக்கு மரண சங்கடம் நேர்ந்துள்ளது. அதை விடுவிக்கும் பொருட்டு கஜேந்திரனே போல் விக்ரமர் விரைந்து வரவேண்டும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் தகுந்த காலத்தில் இன்னலுற்ருரைக் காப்பதன் பொருட்டு தமது பிரதிக்ஞையையும் மீறவில்லையா? வித்யுத்கர்ப்பனை யெதிர்த்து வெற்றிபெருவிடில் இந்தச் சாக்கிய ராஜ்யம் அழியவேண்டியதே. அவனை வெல்லுவதற்குத் திறம்படைத்தவர் வீரவிக்ரமர் ஒருவரே உள்ளார்.

புத்தர்: ராஜதூதனே, நீ சாக்கிய நாட்டாருக்கு இந்த எமது உத்தரவைத் தெரிவிப்பாயாக. உங்கள் துன்பங்களைக் கேட்டு புத்தருக்குத் துக்கம் உண்டாயிருக்கறது. ஆனல் வித்யுத்கர்ப்பனும் அவனது கோசல நாட்டுப் படைகளும் கொண்டுள்ள துக்கத்தையும் கேட்டு புத்தர் வருந்துகிருர். ஏனெனில் நீங்கள் அவர்களது மோசடி, கொடுமை என்னும் தீயில் பட்டுத் தவிக்கிறீர்கள், அவர்களோ தங்களது பேராசை வஞ்சனையென்னும் தீயில் விழுந்து தவிக்கிருர்கள். எமக்கு இவை இரண்டும் ஒரேவிதமாகும் இருவரும் விரோதத்தை அகற்றிவிடுங்கள். பகையை ஒழித்து விடுங்கள். இதுவே எமது புத்திமதி.

விக்ரமர்: ஆனல் ஐயா, பகையைப் பாராட்டும் கொடியோன் அன்ருே அதை முதலில் விட்டுவிடவேண்டும்—நாளை முதல் ஆடு மாடுகளிடம் கொண்டுள்ள

விரோதத்தை அகற்றி விடவேண்டும் என்று புலிகளுக்குச் சற்று உத்திரவு செய்து பாருங்கள். தங்கள் சந்நிதானத்தின் கட்டளையைப் புலிகள் என்று ஏற்று நடக்குமோ அன்றைய தினம்தான் மனிதசாதியிலுள்ள துஷ்டர்களும் தீயோர்களும் ஏற்றுக்கொள்வார்கள். ஆகையால் இத்தகைய கொடியோர்களைத் தண்டத்திஞல்தான் அடக்கவேண்டும்.

புத்தர்: ஆனல் தண்டத்திஞல் பலவந்தமாக ஏற்படும் அடக்கமானது நிலையாக இருப்பதில்லையே. துஷ்டர்களைச் சாதுக்களாகச் செய்யவேண்டுமாயின் அவர்களது மனத்தை துஷ்டத்தனத்திலிருந்தும் மீளும்படிச் செய்யவேண்டும். அதுதான் சிறந்த வழி.

விக்ரமர்: வெறும் கற்பனையுலகில் அது சிறந்ததாக இருக்கலாம். ஆனல் மரணத்துக்குப் பிறகு எய்தும் சொர்க்கத்து அமுதத்தை நினைந்து ஆசைகளை அடக்குவதைப்போல அது அநுபவத்தில் சாதிக்க முடியாத காரியமாகும். பேராசை நிரம்பிய வாழ்வின் வேட்கை தூண்டிய உயிர்களுக்கு அந்த அமுதத்தைக் காட்டினும் ஊரின் மேட்டுப் பிரதேசத்தில் ஓடிவரும் சிறிய ஓடையின் ஒரு கை நல்ல நீரே குளிர்ச்சியைத் தருகிறது. புத்தக ஏடுகளில் காணப்படும் கற்பகதரு மிக்க உத்தமமானதே யாயினும் பிரத்யட்சத்தில் பார்க்கும்போது வெய்யிலுக்கு உதவும் சாதாரணமான ஆல அரசமரங்களே அதைக் காட்டிலும் பன்மடங்கு உபயோகமானதாகும். மற்றும் நான் சொல்லுகிறேன் நல்ல உபதேசத்தைக் கேட்டு துஷ்டரின் உள்ளம் நல்லொழுக்க நிலைக்குத் திருந்திவர வேண்டுமாயின் அதற்குத் தலைசிறந்த உபாயம்

தண்டசக்தியேயாகும். எனது நாற்பது வருஷத்திய அநுபவத்தின் பேரில் சொல்லுகிறேன். தீயோரின் உள்ளம் புத்தபிரானது அருள் மொழிகளைக் கேட்டும் தீய குணங்களை விட்டுவிடுவதில்லை. அத்தகைய துஷ்டனே வித்யுத்கர்ப்பன். அவனை நல்ல வார்த்தைகளால் மாற்ற முடியாது. போரில் அவனை வெல்லுவது எளிதன்று. ஆயினும் போர் புரிந்து அவனது தீய சக்தியின் காலை முறித்திடவேண்டும். ஐயா, கேவலம் நயமான நன்மொழிகளால் தற்காலிகமேனும் நன்மையேதும் கிட்டாது; நிலையாகவும் இருக்காது. அவனது கடுஞ்சினத்தின் கூரிய பற்களைப் பிடுங்கிக் கொடிய நகங்களை வெட்டிவிட வேண்டும். அதனால் அவனது பேராசை தணியா விடினும் தன்னளவில் மட்டும் தத்தளித்து நின்று விடும். மற்றும் அதனால் அவனது ரத்தவெறியினின்றும் உலகம் அச்சம் நீங்கி அமைதியுற முடியும்,

புத்தர்: பிக்ஷு சிரேஷ்டரான விக்ரமரே, தங்களது பேச்சின் மர்மத்தைத் தெரிந்து கொண்டேன். ஆனல் செயலைத் துறந்த நமது சன்யாச தர்மமோ அஹிம்சையையே மேற்கொண்டுள்ளது. எல்லையற்ற அஹிம்சையைப் பின் பற்றுவது மக்களுக்குச் சாத்தியமில்லையென்றும் கொடிய பலிஷ்டர்கள் அளவு மீறி ஹிம்சை புரியும்போது காலத்துக்கு ஒவ்வாத அஹிம்சையைச் சாது ஜனங்கள் மேற்கொள்ளுவதால் அது ஹிம்சையாகவே மாறி உலகக்கேட்டினுக்குக் காரணமாகிறது என்றும் சொன்னீர்கள். இதெல்லாம் தவிர்க்க முடியாத விஷயங்கள் அல்லவா? ஆகையால் இவ்வாறு நாம் உத்திரவு செய்வோம் கொடிய இன்னல்களை யிழைத்து வரும் பகை

வனோடு நியாயமான யுத்தத்தில் போர் செய்யும் பொருட்டு ஆயுதத்தைக் கையாளுவதற்கு இல்லறத்திலுள்ள சீடர்களுக்கு எமது அநுமதியுண்டு. வித்யுத் கர்ப்பனது கட்டுக்கடங்காத அக்கிரமமான ஆக்ரமிப்பை எதிர்த்துப் போரிட ராஜ்யம் ஆயுதத்தைக் கைகொள்ள வேண்டும். அந்த ஹிம்சையின் பாவம் நல்லொழுக்கமுள்ள போர் வீரர்களைச் சேராமல் அக்கிரமத்தைப் பின் பற்றும் துஷ்டனையே சாரும். ராஜதூதனே. போ, இந்த எமது கட்டளையைச் சாக்கியர்களுக்குத் தெரிவிப்பாயாக. தர்ம யுத்தத்தில் உங்களுடைய வாளாகிய கொடிக்கு எமது ஆசிகள் உதவுவதாகுக.

ராஜதூதன் : பகவானே, தங்களது ஆசிகளுக்கு இந்தச் சாக்கியன் நன்றியைச் செலுத்துகிறுன். சாக்கிய வாளுக்கல்லவா தாங்கள் தெய்வீக ஆசியை அளித்தீர்கள். ஆனல் அதைச் சாக்கிய மக்களிடம் மீண்டும் மீட்டுவதற்கு அந்தச் சாக்கியவாள் கொடியை தேவரீர் எனக்கு அருளவேண்டும். சுவாமி, இந்த நாற்பது ஆண்டுகளாக அத்தச் சாக்கியவாள் உறையிலிட்டவாறே தங்களது திருவடிகளில் கிடந்து வருகிறது.

புத்தர் : சாக்கியரின் உறையிலிட்ட வாளா? அது எங்கே இருக்கிறது? இவ்விடத்திலா?

ராஜதூதன் : ஆமாம், சுவாமி, இவ்விடத்திலேதான் இருக்கிறது. சாக்கிய பெரும் படைத் தலைவரின் உடலாகிய உறையிலே வாள் பிடிபோல இருந்து வரும் வீரத்தன்மை, இதுவே எங்கள் சாக்கிய ராஜ்யத்தின் வாளாகிய கொடி பகவானே, அந்தக் கொடி

முழுவதையும் எங்கள் கையில் இப்பொழுது கொடுங்கள். வீரவிக்ரமர் வாளேந்தி போர்முனையில் நின்று யுத்தக்கொம்பை ஊதி முழக்கினால் சாக்கிய நாட்டில் நரிகளும் சிங்கங்களாகிவிடுமே.

புத்தர் : அதாவது பிக்ஷுசிரேஷ்டரான விக்ரமர் வாள் பிடித்து வரவேண்டும் என்பதுதானே ? ஆ ! துறவி தனது ஆடையை இரத்தத்தில் தோய்த்து காவியாக்க வேண்டுமா ? முடியாது. ராஜதூதனே, நாங்கள் துறவிகள் ; ஆசையற்றவர்கள் ; பொது நோக்குடையவர்கள் ; சாந்தியை நாடுபவர்கள். எங்களுக்கு உலகத்துச் சண்டை சச்சரவுகளில் விழ வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு நீங்கள் யாவரும் ஒரே மாதிரிதான். ஆ ! சன்யாசி ஆயுதம் தாங்கி மனிதர்களைக் காய்கறிபோல் துண்டுபடுத்த வேண்டும் என்றும் அதற்கு நாம் அநுமதியளிக்க வேண்டும் என்றும் நீங்கள் எவ்வாறு கேட்கலாம் ? முழு பிரம்மச்சரியமும் பூரண ஆயுதத் தியாகமும் அன்றோ துறவற பிக்ஷு தர்மத்தின் இருமூல பிரதிக்ஞைகள் ஆகின்றன ? இந்தக் கொள்கையை எவ்வாறு கைவிட முடியும் ?

விக்ரமர் : பொறுத்தருள வேண்டும் பகவானே, இதை உங்களுக்கு எடுத்துச் சொல்லியே தீரவேண்டும். துறவிகள் உலக விவகாரங்களில் ஈடுபடக்கூடாது ஏனினும் நியாயம் அநியாயம் செய்வோரிடையும் வித்தியாசம் பாராட்டாமல் ஒரே மாதிரி இருத்தல் வேண்டும் என்று கூறுவீராயின் உங்களது கட்டளையைத் ததாகதரான புத்தரே மீறுகிறார் என்றுதான் சொல்லவேண்டும். சுவாமி, நீங்கள் ராஜகிருகத்தில்

இருந்தபோது அங்கே நூறு உயிர்களைக் கொல்லும் வேள்வியொன்று நடக்கவிருந்தது. அந்த பலி தானத்துக்கு மந்தை போய்க்கொண்டிருந்தபோது அவற்றில் ஒரு சிறிய குட்டி நொண்டி நொண்டி போவதைக் கண்டு உங்களுக்கு இரக்கம் ஏற்படவும் அதைத் தோள்மீது சுமந்துகொண்டு மந்தையின் பின்னால் அரச வேள்விச்சாலைக்குச் சென்றீர்கள். அங்கிருந்த அந்தணர்களுடன் வாதுபுரிந்து வேள்வி யில் உயிரை வருத்துவது பாவமாகும் என்று நிலை நாட்டினீர்கள். அதனால் குட்டியோடு அந்த மந்தை முழுவதையுமே விடுவித்தீர்கள். ஒரு சிறு குட்டிக்கும் நூறு பிராணிகளுக்கும் ஏற்பட்டிருந்த துன்பத்தை நீக்குவதற்காக நீங்கள் துறவறத்தின் நோன்பையும் புறக்கணித்து உலக வாத விவாதங்களில் பங்கு எடுத்துக்கொண்டீர்கள் அல்லவா ? ஐயா, இங்கே நூற்றுக்கணக்கான குழந்தை குட்டிகள், நூற்றுக் கணக்கான அனாதைக் கன்னிகைகள், ஆயிரக்கணக் கான நிரபராதி மக்கள், இவர்களை வெட்டி வீழ்த்தி வரும் சமயத்தில் தாங்கள் உலக விவகாரங்களில் துறவி தலையிடலாகாது என்று சொல்லுகிறீர்களே. சன்யாசிக்குச் சாக்கியனும் வித்யுத்கர்ப்பனும் சரி யென்று சொல்லலாம். துறவறத்தின் தர்மமே சம புத்தி யென்று சொல்லலாம். ஆனால் பிக்ஷுக்கள் தோல் நீக்கிக் கரும்பு தின்னுகிறார்கள் ; உமி, தவிடு அகற்றி அரிசியை உண்ணுகிறார்கள் ; கலங்கிய குட்டை நீரை விட்டு நல்ல ஆற்று நீரையே அருந்து கிறார்கள் ; நன்றாகக் கறக்கும் பசுவின் மடியில் கை வைக்கிறார்களேயன்றி பாம்பின் புற்றில் கையைப் புகுத்துவதில்லை ; தேனைக் குடிக்கிறார்களேயன்றி

கொட்டும் தேனீக்களின் கூட்டத்தை யணைத்துக் கொள்வதில்லை. அப்பொழுதெல்லாம் சமபுத்தியைப் புறக்கணித்து, நல்லது தீயது இவைகளைத் தெரிந்து கொள்ளுகிறோம்.

புத்தர் : அப்படியானால் இத்தகைய சமயத்தில் சன்யாசிகள் என்னதான் செய்ய வேண்டும் என்பது உங்கள் எண்ணமோ?

விக்ரமர் : என்ன செய்ய வேண்டுமா? பசுமாட்டின் கழுத்தைத் தனது கோரைப் பற்களால் கவ்வி வரும் புலிக்கு முன்னால் நின்று தர்மபதத்தின் பாட்டைப் பாடலாமா? அந்தப் பாட்டு முடிவதற்குள் பசுவின் கழுத்து நரம்பு கத்தரித்து அதன் ரத்தத்தைப் புலி குடித்து விடுமே. என்ன செய்ய வேண்டுமா? ஒரே பாய்ச்சலில் அந்தப் புலியின் மண்டையைப் பிளந்தெறிய வேண்டும். அதைப் போலவே துஷ்டனை வித்யுத்கர்ப்பனது படைகளின்மீது பாய்ந்து முன் பின் யோசியாமல் மிக்க மனவுறுதியுடன் எதிர்த்து நின்று தேவையானால் அதன் பொருட்டு சன்யாசத்தையும் துறவறத்தையும் துறந்துவிட வேண்டியதே. மேலும் நிரபராதிகளான ஆயிரக்கணக்கான சாக்கியப் பெண்டு பிள்ளைகளுக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும். அவர்களது நிலைக்கு இரங்கிப் போரில் புகுவது ஹிம்சையாகுமே என்று ஒதுங்கிப் போனால், இந்த நரஹிம்சையை நடத்தவிடுவது அதைக் காட்டினும் நூறுமடங்கு இரக்கமில்லாத ஹிம்சையேயாகும். இது சன்யாச நிலைக்குக் களங்கத்தை உண்டாக்காதா? பகவானே, போரில் இறங்க எனக்கு அநுமதி யளியுங்கள். துஷ்டர்களைத் தண்டிக்கும்

சக்தி என்னிடம் இன்னும் இருக்கிறது. முதலில் இனியேனும் கொடுமை செய்யாதவாறு அவனை யெதிர்த்து அடக்குவேன். குற்றமற்ற சாது ஜனங் களுக்கு இனியேனும் கொடிய துன்பம் வாராதவாறு போர்புரிந்தே தீருவேன், அதுமாத்திரம் அல்ல. இதற்குமேல் சாக்கிய ராஜ்யத்துக்கு வெற்றியையும் நாட்ட முயலுவேன்.

புத்தர் : அப்படிச் செய்வதால் ஆவது என்ன? இன்று சாக்கியர் மீது வித்யுத்கர்ப்பன் வெற்றி பெற்று வரு கிருன். நாளை அவன் மீது சாக்கியர் வெற்றிபெற் றுப் போவார்கள். இதனுல் ஆவது என்ன? வெற்றி யினுல் விரோதம் வளர்ந்துகொண்டே யிருக்கும். தோல்வியுண்டவன் துன்பமடைகிருன். ஆவலால் ஆசை யாவையும் துறந்து பொறுமை கொள்ளும் சாதுவே வெற்றி தோல்விகளைக் கைவிட்டுச் சுகமே தூங்குகிருன்.

*வெற்றியிலே பகை விதை வளருதே;*
*தோல்வியிலே துயர்வஞ்சம் தோயுதே;*
*பற்றிலா நிலையிரண்டும் துறந்த*
*புண்ணியரை இனிது உறக்கம் சேருதே.*

விக்ரமர் : ஐயோ, நான் இப்போது கேட்பதென்ன? பகவானே, நீங்கள் சொல்லுவதன் கருத்துத்தான் என்ன? தாங்கள் நிர்வாண பதவியை யடைந்ததா கத் தங்களுக்குத் தெரிந்த பின்னும் துன்பத்தால் துயரப்படும் உலகைக் கண்டு உள்ளம் கலங்கி, உலக நன்மையின் பொருட்டே உடலைச் சுமக்கிறீர்கள் என்பதாலா இவ்வாறு பேசுகிறீர்கள்? கேவலம் சுக வாழ்வுதானு துறவறத்தின் நன்மை? அவ்வாருயின்

நிர்வாண நிலையினின்றும் விழித்தெழுந்து என்று தேகத்தியாகம் செய்வீர்களோ? இன்பத்தில் உறங்குவதே உங்கள் கொள்கையாயின் ஆயுதத் துறவில் போல ஆயுதம் தரிப்பதிலும் மனவுறுதியையும் கர்ம பலத் தியாகத்தையும் கடைப்பிடிக்க முடியுமே. காலில் தைத்த முள்ளையகற்ற துறவி ஊசியைக் கையில் பிடிப்பதில்லையா? அதுபோல துஷ்டர்களான முட்களையகற்ற கையில் வாள் எடுப்பது ஏன் கூடாதோ? பலகாத தூரத்திலிருக்கும் ஒருவனுக்கு முள் தைத்து விட்டால் உங்கள் உள்ளம் கருணையால் உருகுகிறதே; அவனுக்குச் சிகிச்சை யளிக்காமல் தூங்கவும் மாட்டீர்களே, இது உங்களது உண்மையான லக்ஷியமாயின் அதில் உண்மையான உணர்ச்சிகள் இருக்க வேண்டும். ஐயா, வெற்றி பகையை வளர்க்கிறது என்றும் தோல்வியுற்றவன் அநியாயமாக வருந்துகிறுன் என்றும் சொல்லுகிறீர்களே. இதில் ஓரளவு உண்மை யிருக்கிறது. ஆனுல் அநியாயமான மனிதனுக்கு வெற்றியினுல் விளையும் துக்கத்தைப் போக்குவதற்காக நியாயமான மனிதனுக்குத் தோல்வி ஏற்படுமாறு செய்வதா? என்ன விசித்திரம்? திருடனுக்குத் திருட்டுத் தொழிலால் துன்பம் தோன்றலாகாது என்று பொருள் உடையவன் வீட்டுக் கதவைத் திறந்து வைப்பதுண்டா? தோல்வியே அநீதிக்கு தண்டனை யென்றெண்ணி, தீயோருக்குத் தோல்வி யளிப்பதே மக்களுலகுக்கு இலக்காகிய நன்மக்களின் கதிதான் என்ன ஆவதோ? இதை நாம் புறக்கணித்தால் மக்கள் இனமே அச்சமும் துயரும் நிறைந்த நரகில் விழுமல்லவா? இதனுல் உலகுக்குப் பெருங்கேடே யன்றோ

உண்டாகும்? துஷ்டர்களுக்கு தண்டனை தருவதா வது அவர்களின் துஷ்ட காரியங்களுக்கு ஒரு பிரா யச் சித்தமேயாகும். அதனால் அவர்களின் துஷ்டத் தன்மைக்கே பயம் என்னும் தடை ஏற்படுமல்லவா? அதனால் நல்ல பழக்கம் தோன்றி தீயகுணம் அகலு மல்லவா? சில சமயங்களில் பிறரது நன்மையின் பொருட்டு ஒருவன் கஷ்டப்பட வேண்டிய அவசிய மும் தோன்றுகிறது. நீங்கள் வீட்டையும் குடும்பத் தையும் துறந்து வெளியே போனீர்கள். அதனால் யசோதரைக்கு எத்தனை துயரம் உண்டாயிற்று. ஆனால் அதற்காக நீங்கள் வீடு திரும்பவில்லையே. இளம் வயதுள்ள பெண்டிர்களுக்கும் வாலிபர்களுக் கும் துறவறம் வழங்கி, அவர்களை உங்கள் சங்கத் திலே சேர்த்துக் கொண்டீர்களே, அவர்களது இல் லங்களில் அழுகைக் குரல்கள் கேட்கவில்லையா? அத னால் சில நகரங்களும் தங்களை பகிஷ்காரம் செய்து பழித்துப் பேசினார்களல்லவா? ஆ, அது மட்டுமா? தேவதத்தன் புது வழியொன்றைத் துவங்கியதைக் கண்டு நீங்கள் பகை காட்டவும் அவன் துன்பமுற்று சினங்கொள்ள இருவரிடையே விரோதம் வளர்ந்து உங்களையடித்துப் போடவும் கை வைத்தார்களே. அதனால் நீங்கள் அவன்மீது இரக்கம் கொண்டு அவன் வழியையேற்று, பகையை நிறுத்துவதற்காக உங்களது புத்த சங்கத்தைக் கலைக்க வில்லையே. கார ணம் என்ன? தேவ்தத்தனது துயரம் பகை இவை களைக் காட்டிலும் உலக நன்மையே உயர்ந்த பொரு ளாக இருப்பதுதானே? ஐயா, குற்றம் புரிந்த கய வரைத் தண்டியாமல் விட்டுவிடுவதானது லக்ஷக் கணக்கான நிரபராதிகளைக் கஷ்டத்துக்கு உள்ளாக்கு

வதாகும். இது சரியென்ருல் இந்தக் காரணத்துக் காகச் சன்யாசிகள் ஆயுதம் எடுப்பது சரியாகுமல் லவா? சுவாமி, இந்த ராஜ்யத்தின் சோற்றைத் தின்றே இந்தச் சன்யாசிகள் தங்கள் மாமிசவுடல் களை போஷித்து வந்திருக்கிருர்கள். இப்போது தந்தையைக் கொல்லவும் துணிவு காட்டிய இக்கய வன் இந்த ராஜ்யத்தின்மீது ஆயிரக்கணக்கான போர்வீரர்களை யேவி அதைத் தாக்கியழிக்க முயன்று வருகிருன். இந்த நெருக்கடியான தருணத்தில் ஒரு வாளின் வீச்சிஞல் அத்தீயோனை வீழ்த்தலாகும் என்று நன்கறிந்தும் சன்யாசி யொருவன் தனது இன்ப நித்திரை கெடுமே யென்றஞ்சி வாளைக் கையில் ஏந்த மறுத்தவனுய் மேல் போர்வையை யிழுத்துத் தன்னை மூடிக்கொள்ள முயலுகிருனே இது என்ன கீழ்த்தன்மையான சுயநலம்! ராஜ்யத் தின் பல்லாயிரப் பெண்களும் பாலர்களும் முதியோர் களும் குத்துண்டு விழுந்து அலறும் அழுகைக் குரல் களைக் கேட்டதும் அதனுல் தனது இன்ப நித்திரை கலைந்துவிடுமே என்று பயந்து அர்த்தமற்றதும் கேடு தருவதுமான பிரதிக்ஞைகளைக் காதில் அடைத்து மண்ணில் புரண்டு நிம்மதியாக நித்திரை செய்துவரும் இழிகுணம் படைத்த இந்தச் சன்யாசி களுக்கு, அவமதிப்பே உண்டாக வேண்டும். உலகம் இக்கீழ் மக்களைத் தூற்றட்டும். ஆ, சுகமாகத் தூங்கு கிருன். பிறர் துயருற்று அலற, தான்மட்டும் தனித்து குறட்டைவிட்டுக்கிடப்பதுதான் துறவியின் குறிக்கோள் போலும்? இந்த லக்ஷியம் மலைப்பாம் புக்குத் தகுந்ததாக, சுயநலம் பேணும் அல்பர்களுக் குகந்ததாக, இருக்கலாம். ஆனுல் துறவிகளுக்கு,

சன்யாசிகளுக்கு, இது என்றும் தகுந்ததாகாது. ஆதலால் எனக்கு உத்திரவு தாருங்கள். இப்போதே சாக்கிய மன்னனின் ஆசைகளும் ஆயுளும் முடிவடையும் தருணம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. இனி சற்றேனும் தாமதம் கூடாது. போய்வா என்று கட்டளை தாருங்கள். உடனே கருடனைப் போலச் சீறிப்பாய்ந்து அந்தக் கோசல மன்னனாகிய விஷப்பாம்பை, சாக்கிய மக்களின் உயிரை வாட்டி வரும் அந்தத் தீய பிணியை, அவர்களது அங்கங்களை விலங்கெனக் கட்டிவரும் கொடிய பாசத்தை, அறுத்து உடைத்துத் துகளாக்கி விடுகிறேன். சுவாமி, அந்த விஷப்பாம்பு தீண்டுவதற்கு முன்னரே நான் அங்கு போய்ச் சேரும்படி செய்தருளுங்கள். போ என்று சொல்லுங்கள்.

புத்தர்: துறவறத்தில் சிறந்து தத்துவத்தில் தேர்ந்த அறிவாளியான விக்ரமரே இவ்வாறு ஆவேசத்தால் திடீரென்று தூண்டப்பட்டது வியப்பைத் தருகிறது. எது எவ்வாறாயினும் எமது சங்கத்தில் மிக்க உயர்ந்த பிக்ஷு தலைவரான உங்களை ஆயுதம் ஏந்திப் போருக்கு முந்துங்கள் என்று சொல்ல எம்மால் இயலாது. சங்க வாழ்வுக்கு அஸ்திவாரம் போன்ற துறவறத்தில் ஆயுதத் துறவறம் பெரியதொரு பிரதிக்ஞையன்றோ? அவ்வாக்குறுதியை மீறி நடக்க எந்த பிக்ஷுவுக்கும் எமது அநுமதி இல்லை.

விக்ரமர்: ஆ! எந்த நாட்டில் இத்தகைய துறவறமே யாவற்றிலும் மேம்பட்ட தர்மமாக மதிக்கப்படுகிறதோ அந்த நாட்டுக்குக் கேடே விளைந்து அதோகதியேற்படும். வேறு என்ன நேர்ந்திட முடியும்? சாக்கிய

தூதரே, போங்கள். ராஜசபைக்குச் செல்லுங்கள், முன்யோசனையும் நீண்ட நோக்கமும் இன்றி அளவு கடந்து ஆயுதத் துறவை நோன்பென மேற் கொண்ட பெருந்தவறினால் உலக நன்மைக்கே பெருங்கேடு நேர்ந்துள்ளது என்று ஐயமறத் தெரிந் தும் நான் கட்டுண்டேயிருக்கிறேன். புத்த பகவா னது உத்தரவு கிடைக்காத காரணத்தால் நான் மந் திரத்தால் கட்டுண்ட நாகத்தைப் போலவே மீறமுடி யாமல் தத்தளித்து வருகிறேன். தமது பிடிவாதத் தின் எல்லையை புத்தரால் தாண்ட முடியவில்லையே. சாக்கிய மக்களின் காவலின் பொருட்டு, உறையி னின்றும் வாளை நீக்கி. போரில் முனைந்திட முயற்சி யும் விருப்பமும் இருந்தும் இந்த விக்ரமனால் உங்க ளது உதவிக்காகக் கிளம்ப........

ராஜதூதன் : ஹா! ஹா!! நாட்டின் அழிவையே குறிக் கோளாகக்கொண்ட அந்த அசுபமான வாக்கி யத்தை. முடிப்பதற்கு முன்னர் ஒரு வினாடி பொறுங் கள், புத்த தேவரது ஆசையின் கடைசிச் சொல்லை யும் கேட்டீர்கள். அதோடு துயரில் உழன்று திகில டைந்து மரணத் தருவாயில் தள்ளாடும் சாக்கிய ராஜ்யத்தின் கடைசிச் சொல்லையும் கேளுங்கள். அதன் பிறகே உங்களது முடிவான தீர்மானச் சொல்லைச் சொல்லுங்கள். சாக்கிய ராஜ்யத்தின் உயி நேர்ந்துள்ள பயங்கரமான சங்கடத்தின் ஆத்திரக் கொதிப்பு, அதன் மக்களின் துடிப்பு. அதன் கடைசி அபிலாஷையின் கடைசியான வார்த்தை இவைக ளைத் தெரிவிக்கும் திறமை எவர்க்கும் வாய்க்காததால் வேதங்களின் முன்னிலையில் (ராஜ்ய கருணையைப்

பற்றிய) சாக்கிய இனத்தைச் சேர்ந்த இந்த நாவே பேசட்டும்.

*[விக்ரமசிம்மருடைய வாளை யெடுத்து அவரது முன்னிலையில் வைக்கிறான்.]*

விக்ரமா : (திடுக்கிட்டு) ஆ! இது என்னுடைய வாள் அல்லவா? இது என்னுடைய கிருபாணம்; கத்தி, நான் துறவறம் பூண்டு நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. அன்று இதை நான் கீழே வைத்தேன். இந்த வாளையேந்தியே பன்னிருமுறை சாக்கிய மக்களின் பகைவர்களை மண்மீது தாழ்த்தினேன்.

ராஜதூதன் : சேனாபதியே, இந்த வாளைப் பாருங்கள். அந்தப் பன்னிரு வெற்றிக்குச் சின்னமாக இதன் பிடியில் பன்னிரு ரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த வாளை எங்கள் ராஜ்யத்தின் செல்வமாகப் போற்றி ராஜசபையில் நாட்டியிருக்கிறோம் எங்கள் படைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் இதை வணங்கியே தமது பதவியை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த வாளைத் தங்களது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்தே சாக்கிய மக்கள் அனுப்பியுள்ளார்கள். எங்களது வேண்டுகோளை யெடுத்துரைத்து உங்கள் மனதை மாற்றவே இதை யனுப்பியுள்ளார்கள். இன்று சாக்கிய ராஜ்யம் அழிந்து மறைவதாயினும் வீரருக்குகந்த முறையில் தான் அது சாவை ஏற்க வேண்டும். அதுவும் இந் நிலையில் இந்த வாளை யேந்திப் போரில் உடனே இறங்கினாலன்றி முடியாது. இந்நாள் வழிநெடுக நான் தினந்தோறும் கண்கூடாகக் கண்டுவந்த

துன்பக் காட்சியை யொருகணமாவது மனக்கண்ணுல் பாருங்கள். ஆமாபள்ளி, கேதனுவதி, லீம்பணியம் இவை யாவும் கோசல நாட்டுப்படை கொளுத்திய தீயில் வேகின்றன. அத்தீயில் படபடவென்று உடைந்து விழும் கூரை விட்டங்களின்கீழ் கிழவர்களும் குழந்தைகளும் உயிரோடு அழுந்தி யெரிந்து வருகிருர்கள். அவர்களது ஊனின் நாற்றம் காதக் கணக்கில் நாற்புறமும் பரவி வருகிறது. வெட்டு, குத்து, கொல் என்று கோசலத்தின் கணக்கற்ற படைவீரர்கள் கரத்தில் வாளேந்தி, எதிர்ப்பட்ட சாக்கியரை வெட்டி வீழ்த்தி முன்னேறி வருகிருர்கள். பெண்கள் கூட்டத்தின் மேலே குதிரைகளை நடத்துகிருர்கள். அவைகளின் குளம்புகளில் நசுங்குண்ட குழந்தைகளின் சிரங்களும் ரத்தவெள்ளமும் கூக்குரலும்.... ஐயா, சாக்கிய ராஜ்யம் உங்கள் நாடு அல்லவா? வித்யுத்கர்ப்பனும் அவனது படைத் தலைவனை சண்டனும் நீண்ட வாளேந்தி நெடுங் கொலை செய்து வரவும் நாட்டின் சிறு குழந்தைகள் யாவரும் உங்கள் காலைக் கட்டிய வண்ணம் விம்மி யழுது வேண்டுகிருர்கள். ஐயனே, தயை செய்ய வேண்டும். காப்பாற்ற வேண்டும்.

விக்ரமர்: காப்பாற்றுகிறேன். ராஜ்யத்துக்கு இத்தகைய சீர்கேடான கஷ்டதிசை நேரிட்டிருக்கும்போது எந்த சாக்கிய சன்யாசிக்குச் சுகமாக நித்திரை வருமோ அவன் நன்ருகத் தூங்கட்டும். எனக்கு அந்த நித்திரை வந்ததேயில்லை; வரவும் இல்லை. பகவானே, சேதியைக் கேட்டீர்களா? இந்த வாளை இப்போது எடுத்துக் கொள்ளட்டுமா?

புத்தர்: இது துறவறத்துக்கும் பிக்ஷுவின் கடமைக்கும் முற்றிலும் மாறுபாடானது. இதை யொட்டி இனி நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.

விக்ரமர்: சுவாமி, அப்படியா? அப்படியானல் இந்தத் துறவறம் எளிய ஜாதியை யழிக்கவே உதவுவதால் இது மனித வர்க்கத்தின் நன்மைக்கே விரோதியாகிறது. இத்தகைய துறவறத்தை நான் துறந்து விடுகிறேன் நீங்கள் சொல்லாமல் இதை நானே வலிய துறந்து விடுகிறேன். இதோ பாருங்கள். கடமையைச் செய்யவேண்டிய கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டுவிட்டேன். பாருங்கள். எனது சாக்கிய ராஜ்யமே, அச்சத்தால் வாடிய எளிய மக்களே, பாருங்கள். இந்தச் சன்யாசி இந்த வாளைக் கையில் ஏந்திவிட்டான். ஆம். ராஜ்ய தர்மத்தின் பொருட்டு, மனித தர்மத்தின் பொருட்டு, உயிர்களிடத்தே தயை காட்டும் பொருட்டு, கைவிட முடியாத சாதனம் என்றே இதை ஏந்துகிறேன். வாளே உன்னை எத்தகைய நிலைமையில் எடுத்துக் கொண்டேன் என்பதை யறிவாயா? கொடியோன் வித்யுத்கர்ப்பனை வெல்லுவது இயலாத காரியமாகி விட்டாலும் அவனது கொடிய சக்தியை யெதிர்த்து முறித்து நொண்டியாக்கிவிட்டு, ஆயிரக்கணக்கான மக்கள் உயிருடன் பிழைத்திட உதவுவேன். ஆ! சென்ற நாற்பது ஆண்டுகளாக ஆயுத நிராகரிப்பால் சாது மக்களின் உயிருக்கும் வாழ்வுக்கும் காவல் இல்லாமல் போகவே அவர்கள் துயர்க்கடலில் ஆழ்ந்துவிட்டார்கள். இத்தனை துன்பங்களுக்கும் தகுந்த பரிகாரத்தை இந்த வாளைக் கைக்கொண்ட நாற்பது நாட்களில் நாட்டியே தீருவேன். இதோ,

நான் போகிறேன். தாமதம் செய்கிற ஒவ்வொரு கணமும் மரண பாசம் சாக்கியரின் கழுத்தை யிறுக்கி வருகிறது. ஆயினும் நான் சொல்லுவேன். ஹே, சராசரங்களே, நீங்களே இதற்குச் சாட்சிகள். உலகுக்கு நன்மை செய்ய வேண்டிய சமயத்தில் அதற்கு முரணுகத் தீமையே உருவாகிய வீண் பிரதிக்ஞைகளை மேற்கொண்டு பயனேதுமற்ற இந்தத் துறவற வாழ்க்கையை — சன்யாச ஆசிரமத்தை — இதோ விட்டுவிடுகிறேன். அளவு கடந்த அஹிம்சையானது அளவு கடந்த ஹிம்சையாகவே மாறி தீயோருக்கு நன்மையையும் நல்லோருக்கு அழிவையும் தருவதால் இத்தகைய அஹிம்சை தர்மமாகாது. இது அதர்மமே யாகும். இந்தக் காரணத்திஞல்தான் நான் இதை விட்டு நீங்குகிறேன். ஆனுல் புத்தபகவானை விட்டு நீங்கவில்லை.

# அங்கம் 3

## காட்சி 1

*வித்யுத் கர்ப்பனும் கோசல சேனுதிபதியும்.*

**கோசல சேனுதிபதி :** கோசல அரசே, சாக்கியர்மீது நீங்கள் எடுத்துள்ள படையெழுச்சியின் புகழ் பாரெங்கும் பரவியிருக்கிறது. அம்மக்களின் சேனுதிபதியான வல்லபனே இன்று உங்கள் கையில் அகப்பட்டுவிட்டான். இதனிலும் புகழ் உண்டோ? அந்த வல்லபன் சிறந்த போர்வீரன் என்பது உண்மைதான். ஆம், பிடிவாதமுள்ள ஒரு பெரிய போர்வீரன்தான். ஆ! நேற்று நமது படைகளை அவன் மண்ணோடு மண்ணுய் வீழ்த்தியே யிருப்பான். ஆனுல் நல்ல வேளையாகக் கோசலத்தரசரின் அதிர்ஷ்டம் பலமுள்ளதாக இருந்தது.

**வித்யுத் கர்ப்பன் :** மற்றும் படைத் தலைவரே, உங்கள் போர் வன்மை ஓங்கியிருப்பதைக் கண்டே அந்த வல்லபன் உங்கள் கையில் வீழ்ந்தான். இப்போது இந்நிலையின் நற்பலன் முழுவதையும் நாம் அடைய வேண்டும். இதைப் பாருங்கள். இப்போதுதான் இவ்விரு கடிதங்களும் பகைவர்களிடமிருந்து வந்து சேர்ந்தன. இந்த முதல் கடிதம் அந்த கௌதம புத்தனுடையதுபோல் தோன்றுகிறது. ஆ! இந்த அறிவிலிகளின் ஆசாரியன் தான் சூ என்று சொன்னதும் உலகிலே யுத்தங்கள் நின்றுவிடும் என்று நினைத்துவிட்டான் போலும். இதோ பாருங்கள்.

இந்த புத்தன் எனக்குக் கட்டளை யிட்டிருக்கிருன், கேளுங்கள். 'பகையை நீக்குங்கள்; ஆயுதங்களை ஒழியுங்கள்' 'படை பலத்தைவிடப் பொறுமையே வலியுள்ளது.' ஆ! என் தகப்பனுக்கு இந்த கஞ்சா பிரியர்களின் பைத்தியம் எப்படியோ பிடித்தது. அதனுல் கோசல ராஜ்யம் படைபலம் குன்றிக் கேவலமாகிவிட்டது. சாக்கியர்களைப் போல் நமது சாமந்த சிற்றரசர்களும் கீழ்ப்படிய மறுத்துவிட்டார்கள். ஆ, புத்தனுடைய ஜாதி சாக்கியம் என்ற காரணத்தால் சாக்கியப் பெண்களை மணந்து கொள்வதைப் பெருஞ் சிறப்பு என்றும் என் தகப்பன் நினைத்து, அவர்களிடம் பெண் கேட்கவும் தொடங்கினுன். ஆனுல் அவர்களோ தாசியொருத்தியைத் தான் சாக்கியக் கன்னிகை என்று தந்தார்கள். அந்தப் பெண்ணின் வயிற்றில் நான் பிறந்தேன். மற்றும் பாருங்கள், இந்தச் சாக்கியர்களின் சூதினுல் உயிருள்ளவரை எனக்குத் தாசிமகன் என்ற இழிச் சொல்லும் களங்கமும் ஏற்பட்டுவிட்டன. அதை நினைத்தால் என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. இந்தச் சாக்கியப் புழுக்களை என் குதிரையின் காலடியில் நசுக்கப் போகிறேன். இப்படியிருக்க இந்த புத்தன் எனக்குச் சொல்லுகிருன். 'விரோதத்தால் விரோதமே வளர்கிறது. ஆயுதம் தன்னை ஏந்திய கையின் விரலையே நறுக்கிவிடுகிறது' என்று.

**கோசல சேனுதிபதி:** தன்னைக் கையாளத் திறமையற்றவனின் கைகளை ஆயுதம் அறுத்துவிடட்டும். மட்டரகமான பிராமண தர்மத்தை மேற்கொண்ட சாக்கியர்களுக்கே அந்த கதி ஏற்படும். நமது கோசல மன்னன்

இதற்கு அஞ்சுவானேன்? தனது நகமே தன்மேல் படும் என்று எண்ணியோ அல்லது அதனுல் வனத்திலுள்ள மற்ற விலங்குகளின் பகை வளருமே என்று அஞ்சியோ சிங்கம் தன் நகங்களை நறுக்கிக்கொள்ளுவதுண்டா? மகாராஜா, நல்ல வேளையாய் உங்கள் தகப்பனைப்போல் நீங்களும் இந்தப் பைத்தியக்காரன் வலையில் சிக்கவில்லை. கோசல நாட்டின் படை பலத்தை நன்கு திரட்டி நிலை செய்து எப்போதும் ஆயத்தமாகவே வைத்திருக்கிறீர்கள். அதனுலே கோசலம் இன்று ஒரு ராஜ்யமாக நிலைத்திருக்கிறது. இல்லாவிடின் சாக்கியர்களைப் போல நாமும் எல்லைப் புறத்தாரின் கையில் நசுங்கி இருப்போம். ஆகா, இந்த புத்தனின் உபதேசத்தைக் கேட்டு காட்டிலிருக்கும் சிங்கம் தனது நகங்களையும் தாடைகளையும் அறுத்துக்கொண்டால் நாளைக்கே அதன் முதுகின் மீது குரங்குகள் எல்லாம் ஏறிக்கொண்டு ஊர்வலமாகத் திரிய ஆரம்பித்துவிடுமே. அந்தச் சிங்கத்தை மான்களும் வேட்டையாடத் துவங்கிவிடும். அரசே, போரில் வெற்றி பெற்று திக்குவிஜயம் செய்துகொண்டே நாம் கோசல சாம்ராஜ்யத்தை நாட்டுவோம்.

வித்யுத்கர்ப்பன் : அதனுல்தான் நானும் சொல்லுகிறேன். அழையா விருந்தைப்போல வலிய வந்த இந்தக் கடிதத்துக்கு விடை என்னவென்ருல் இப்படிக் கிழித்தெறிந்து இப்படிக் காலால் மிதித்துத் தள்ளுவதுதான். இப்போது இரண்டாவது கடிதத்தைப் பாருங்கள். இது முதல் கடிதத்துக்கு முற்றிலும் மாருக இருக்கிறது. இதை எழுதியவன் யார் தெரி

யுமா? இவன் பேச்சளவில் மட்டும் சன்யாசம் செய்யாமல் ஆயுதச் சன்யாசத்தையும் செய்தவன். இதை எழுதியவன் சேனாதிபதி விக்ரமசிம்மன். அவன் பிக்ஷுவான காரணத்தால் அல்லவா சாக்கியர்கள் பலமிழந்து நமது கையில் அகப்பட்டிருக்கிறார்கள்? அவன் மீண்டும் ஆயுதமேந்தி, சாக்கியர்களின் சேனாதிபதியாகி, யுத்தத்தில் இறங்கி யிருக்கிறான். அதனால் சாக்கியர்களிடையே முன்னே கண்டிராத ஆவேசம் தோன்றியிருக்கிறது. சாக்கிய நாட்டை விட்டு வெளியேறும்படி நமக்கு இவன் ஆக்ஞை யிட்டிருக்கிறான். இவனைக் கொஞ்சம் நமது பக்கம் வசீகரித்துக் கொள்வதே நல்லது.

கோசல சேனாதிபதி : அதைக் காட்டிலும் சிறந்த உபாயம் இருக்கிறது. ஆயுதம் எடுப்பதில்லை என்ற சன்யாசத்தின் முக்கிய சபதத்தை மீறிவிட்டான் என்று குற்றம் சாட்டிப் பழித்து பகிரங்கம் செய்தால் சாக்கியர்கள் அவனை வெறுத்துப் பின்பற்றமாட்டார்கள்.

வித்யுத் கர்ப்பன் : முற்றிலும் சரி. இதையும் கவனித்து நடக்க வேண்டும். அதாவது சாக்கியர்கள் புத்தரைப் போற்றி வருவதால் அதையும் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். துறவறத்தையே நாட்டும் புத்த தர்மத்தைப் பின்பற்றியே சாக்கிய ராஜ்யத்தின் குடிகள் முயற்சியின்றி க்ஷீண தசையடைந்துள்ளனர். ஆதலால் நாமும் புத்தரைப் போற்றியே நமது காரியத்தைச் சாதிக்கவேண்டும். இந்தக் கடிதத்துக்கு நான் இவ்வாறு விடையனுப்பப் போகிறேன். 'கோசல மன்னருக்கு புத்தர் விஷயத்தில் மிக்க அன்பும் மரியாதையும் அக்கறையும் உண்டு. உலகில்.

எந்தவிதமான மோகமும் அவரைத் துறவற மார்க்கத்திலிருந்து அசைக்க முடியவில்லை. ஆயுதச் சன்யாசம், அஹிம்சை, காருண்யம் இவைகளை மெத்த கடினமான சந்தர்ப்பங்களிலும் அவர் கைவிடவில்லை. அவர் உண்மையான ஆசையற்ற முக்தர்! அவருக்குச் சாக்கியரின் சத்துருக்களிடத்திலும் அன்பு இருக்கிறது. இத்தகைய பெரும் பாக்கியத்தைப் பெற்றுள்ள சாக்கியர்கள் அவர்களது சீடர்களாதலால் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ருமல், அவரது ஆக்ஞைகளை மீறி நடந்து அவமதிப்பும் காட்டி, துறவறத்தின் தூய வாக்குறுதியையும் மீறிய பதிதனுகிய பதரை, தன் ஜாதிக்கே களங்கத்தைத் தீட்டியபாதகனை விக்ரமனைப் பின்பற்றுவது எமக்கு அளவில்லாத மனவருத்தத்தையே அளிக்கிறது. ஆதலால் புத்தபகவானை அவமதித்த அப்பாபியைப் பதிதன் என்று ஜாதியினின்றும் பகிஷ்காரம் செய்து சாக்கியர்கள் தங்களது ராஜதானியை எட்டு நாளில் எமது கையில் ஒப்புவித்தால் நாம் அவர்களை அழிக்கமாட்டோம்; ஒரு துளி ரத்தத்தையும் சிந்தமாட்டோம். இதற்கு அவர்கள் இணங்காவிடில் விக்ரமனைத் தண்டிப்பதற்காகவே நமது கையில் சிறைபட்டிருக்கும் அவன் மகன் வல்லபனை நாம் கொன்றுவிடுவோம்.

**கோசல சேனுதிபதி :** முற்றிலும் சரியே. இதை எங்கும் விளம்பரப் படுத்த வேண்டும். விக்கிரமனை எதிர்த்து நிறுத்த நமது படையில் ஒரு பகுதி இங்கே இருக்க வேண்டும். மற்ருென்று குறுக்கு வழியே சென்று திடீரென்று சாக்கியரின் ராஜதானியாகிய கபில

வஸ்துவைத் தாக்க வேண்டும். சாக்கியர்கள் சரணடைந்தால் மிஞ்சவிடாமல் அவர்களை அப்படியே வெட்டித் தள்ளவேண்டும்.

வித்யுத் கர்ப்பன் : ஆ! சாக்கியர்கள் சரணுகதியடைந்தால் சுலபமாக முடித்துவிடுவேன். அவர்கள் சண்டையிட்டாலும் நான் முடித்தே தீருவேன். என்ன நேர்ந்தாலும் சரி, சாக்கியர்களின் துன்பங்களால் எனது கொடிய ஆசை ஓங்கியே வருகிறது. அவர்களது ராஜதானியைக் கைப்பற்றி, அதன் ரத்தத்தை யுறிஞ்சிக் குடித்து, அதை அடியோடு அழித்த பின்பே திருப்தி யடைவேன். அவ்வாறு செய்தே தீருவேன்.

## காட்சி 2

*நளினியும் சுலோசனையும்*

சுலோசனு : தோழி, நான் கேட்பதென்ன? சாக்கியமக்களின் சேனுதிபதியும் எனது பிராணபதியுமான வல்லபர் பகைவர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டாரே! நளினீ, அந்த வீரச் சிங்கம் இதன் முன் யாரும் பார்த்திராத ஆற்றலைக் காட்டியிருக்கிருர். பஞ்சைப் போல்பறந்து சிதறுண்ட சாக்கியப் படைகளை யொருமித்துக் கூட்டினர்; திடீரென்று இடிபோல் முழக்கி வந்த கோசலப் படைகளை வெருட்டி அழித்துப் பின்னிடச்செய்யும் போரையும் தொடுத்தார். இறுதியில் மற்ருெரு புறத்திலிருந்து எதிரியின் இரண்டாவது சேனை வந்து அவரைச் சூழ்ந்து கொள்ளவும் தன்னந்தனியாகவே சினங்கொண்ட ஆண்களிறு போலச் சண்டையிட்டு நின்ருர். ஆ! கடைசியில் சத்

9

துருவின் கையில் சிக்கிக்கொண்டார். சகியே, அவரது வீரத்தில் குற்றமில்லை; ராஜ்யமே பலவீனப் பட்டதால்தான் தோல்வி நேர்ந்தது.

[பாடுகிறுள்]

*தோல்வியுண்டதன் தத்துவத்தையே*
*தெளிவாய்க்கண்டு கொண்டேனே*
*தெளிவாய்க்கண்டு கொண்டேனே*
*ஊழ்வினையென்ன, கோழைகள் சூழ்ந்த*
*இந்நாட்டில் வீரம் அழிந்ததே*
*இந்நாட்டில் வீரம் அழிந்ததால்*
*தாழ்விலும் தளராத நெஞ்சினர்*
*தலைமை தாங்கியும் பயனில்லை,*
*புலமை பேசியும் பயனில்லை.*

நளினீ, என் வீரகேசரி மீதுள்ள அபிமானத்தால் பெருமை கொள்ளட்டுமா? எனது பிராண வல்லபர் இப்போது என்றைக்கும் விட்டுப் பிரிந்துபோய்விட்டாரே என்று ஊசலாடும் நெஞ்சத்தைத் தேற்றும் பொருட்டாவது நான்கு வார்த்தை சொல்லட்டுமா? வெகுண்டு பாயும் பெண்புலியைப்போல வெறிகொண்டு எனது வீர ரத்தினத்தைச் சிறைகொண்ட அப்பாதகனைக் கொன்று வெட்டித் துண்டு செய்யட்டுமா? அடி சகியே, எனது உயிரான வல்லபருக்கு நாசமாய்ப்போன அந்தக் கோசல அரக்கன் என்னென்ன ஹிம்சை செய்வானே? செய்யமாட்டானே? அடீ, அந்தப் பாழாய்ப் போனவர்கள் எனது சேனாதிபதியை இழித்துக் கூறி வருத்துவார்களே! மேலும் இத்தகைய சமயத்தில் அங்கே ஆறுதல் அளிக்கும் சொல் ஒன்றேனும் உரைக்க வல்ல ஆசை எவனுக்கு இருக்கும்? அடீ, சேனாபதி பதவி வந்ததும் பெரிய

கவலையாகிவிட்டது. அதிலும் எப்போதேனும் ஒரு கணம் ஓய்வு கிடைத்தால் அப்போது உடனே திடீ ரென்று வந்து என் மார்பின்மீது தலையை வைத்துக் கொண்டே, என் கைகளை யெடுத்துத் தன் கன்னங் களில் சேர்த்துக்கொண்டே சொல்லுவார். "பெண்ணே, உன் மார்பின்மீது தலை வைத்தவுடன் கவலையும் சோர்வும் மாறிவிடுகின்றன. இப்போது என் உள்ளத்தில் எவ்வளவு ஊக்கமும் இன்பமும் ஊற்றெனப் பொங்குகின்றன என்று சொல்லட்டும்" என்று இப்படியே இன்ப வார்த்தைகளைப் பேசும் சுபாவமடி யவருக்கு. ஆனால் அக்கொடியவர்களின் ஹிம்சைகளால் தவிக்கும்போது அவருக்கு ஆறுதல் அளிக்க யார் இருக்கிறார்கள்?

நளினி : அடி பைத்தியமே, வீர புருஷர்களுக்கு அது கேவலம் மழலைச் சொல்லைப் போலத்தான் இருக்கும். அதனால் தாழ்வு ஒன்றும் இல்லை. போர் முரசொலி யின் தாளத்துக்கு இசைந்து கொன்றும் இறந்தும் வரும் படைவீரர்களது கூக்குரலின் பேரிரைச்சல் தான் அக்காளையரின் சோர்வை அகற்றி ஊக்க மூட்டும் இனிய சங்கீதமாகுமடி. உன்னையும் என்னை யும் போன்றவருக்கு உல்லாசம் தரும் தாலாட்டுப் பாட்டல்ல அவர் செவிக்கு இனிமையான சங்கீதம். மயக்கம் தரும் மனைவிமார்களின் மாமிசமயமான மென்மையான மார்பில் தலையைச் சாய்ப்பதெல்லாம் ஒரு சமயத்தில்தான். அது அவசியம் இல்லை; எப் போதும் தேவையில்லை. தோழி, ஒருகால் மதங் கொண்ட யானையின் கால்களைப் பூமாலையால் கட்டி விடலாம். ஆனால் பிறர்க்கென்றே தம்மை வழங்கும்

தியாகிகளின் கால்களை இவ்வுலக ஆசைகளைக் கொண்டு கேவலம் நம்மைப் போன்ற பெண்கள் வாழ்க்கையின் வாயிலில் கட்டி வைப்பது முடியாத காரியம் ஆகும். உலகின்பம் யாவும் அதில் காணப் பட்ட போதிலும் இத்தகைய வீரர்கள் உறுதியான நோன்பியற்றும் உத்தமர்களைப்போல, படிகக் கல் லென மாசற்று, பற்றற்று தொடர்பற்று விளங்கு வார்கள். வீரரான வல்லபரையே பார். இங்கே நீ இல்லாவிடில் ஒரு கணமேனும் சந்தோஷமாக இருக்க மாட்டாதவராய்த் தவிப்பார். அவ்வாறிருந்தும் முந் தினநாள் செய்கடமையை உணர்த்தும் போர் முரசு முழங்கியவுடனே உன்னைப் போன்ற அழகியையும் தொடையிலிருந்து கீழே இறக்கி யுதறிவிட்டு,உன்னி டம் வந்து, சேதியேனும் தெரிவிக்க ஒருகணமாவது வீடு திரும்பாமல் அப்படியே தமது நாட்டிற்காகவும் உலக நன்மைக்காகவும் கையில் வாளேந்தி மரண யுத்தத்தின் வாயில் பாய்ந்திடவே துணிந்து விட் டாரே. ஆ! அந்த வீரவல்லபரைக் காட்டிலும் எந்தத் துறவியால் நெஞ்சையும் பொறி புலன்களையும் வெல்லமுடியும்?

*[பாடுகிறாள்]*

*போரின் முரசொலி முழங்கியவுடனே*
*பொங்கியெழுந்தே ஓடிவிட்டானே;*
*ஆருயிர்போலும் அழகியின் காதல்*
*அணைப்பையும் மீறி ஓடிவிட்டானே;*
*நாட்டைக் காக்கும்போர் வேள்வித்தீயில்*
*நேரே குதித்திட ஓடி விட்டானே*
*காட்டில் தனித்தே வாழும்துறவி*
*காட்டும் த்யாகம் இதைவிடப்பெரிதோ?*

**சுலோசனை :** அதனாலேதான் அவர் அப்படி ஒரு கணத்தில் என்னைவிட்டுப் போனதற்கு நான் கோபம் கொள்ளவில்லை. இவ்வாறு பற்றற்று செய்கடனாற்றும் வீரர்களின் அன்பு ஒரு நொடிப் பொழுதேனும் தம்மீதிருப்பதை யவர்களது மனைவிமார்கள் உயர்ந்த வெற்றியென மதித்து செய்ந்நன்றி காட்டி மெச்ச வேண்டும். கேவலம் காதல் பிரேமையைக் காட்டிலும் இத்தகைய தியாகப் பிரேமையே-தியாக வீரனது அன்பே-என்னைப்போன்ற காதலிகளிடம் காட்டும் உண்மையான காதலாகும். அந்த வீரசிரேஷ்டரின் தியாகப் பிரேமைக்கு மங்களமுண்டாகும் பொருட்டே அவரது பாதியுடலாகிய நானும் துன்பத்தையே மேற்கொண்டேன். நளினி, நான் வல்லபருடைய பத்தினி, சேனாதிபதியும் ராஜ்யத்தின் பிதாமகருமான விக்ரசிம்மரின் மருமகள்: நான் கோலியன் குலத்து க்ஷத்திரியப் பெண். நளினீ, அந்த துஷ்டனை வித்யுத் கர்ப்பனையும் அவனது படையை பெண் பாம்பைப்போலக் கடித்துக் கொல்லுவேன். சேனை வீரர்களைப்போல வேடமணிந்து சாக்கியச் சைன்யத்தில் சேரப்போகிறேன். வீரவல்லபர் போர்முரசு கேட்டதும் என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கத் தாமதம் செய்யவில்லை. அவ்வாறே நானும் திரும்பிப் பாராமல் போவேன் ......இதோ பார், சொக்கட்டான் பலகை, விரித்தது விரித்தபடியே கிடக்கிறது. இது பாரடி பூமாலை; தோழி, எட்டுநாள்கூட ஆகவில்லை. எங்கள் பிரீதி சங்கமத்தின் முதல் ஆண்டு நிறைவு நாளன்று காமதேவனது பூஜைக்காக நான் இந்த மாலையைத் தொடுக்க ஆரம்பித்து எட்டு நாள் கூட ஆகவில்லை ஆ இங்

கேயே வல்லபருக்காக ஆவலோடு எதிர்பார்த் திருந்தேன்.

[பாடுகிருள்]

*நூறு நூறு பிறவியிலே நித்தம்*
*நினைவில் கனவில் எதிர்பார்த் திருந்தேனே;*
*தூறும் சூரியனைப்போலும் தூயவொளி*
*நொடியில் அணைந்தென்னைக் குருடாக்கியதே.*
*ஒருகணமேனும் அவருடன் கூடியே*
*யிருப்பதால் பிறவியின் பயன் உண்டிருப்பேன்*
*அருகிலேவந்து நான் அணைவதன் முன்னமே*
*இறகு பெற்றது போலப் பறந்து விட்டாரே.*

அந்த வேளையில் அவருடன் விளையாடுவதற்காக இந்தச் சொக்கட்டான் துணியையும் விரித்திருந்தேன். ஐயோ அவரைக் காதல் ததும்ப பிரேமையோடு எதிர்பார்த்திருந்தேன். அதே கணத்தில் காலன் தன் பாசத்தை என் காதலரின் கழுத்தில் வீசி யிழுத்ததை நான் எவ்வாறு அறிவேன். அறிந் திருந்தால் கடைசிச் சந்திப்பில் சிறுப்பிள்ளைத் தனத் தில், அவர் அன்போடு வந்திருந்தபோது நான் விளையாட்டாகக் கோபம் காட்டி மௌனமாக இருந் திருப்பேனு? ஆ! இவ்வுலகமான ஆட்டப் பலகை யின்மீது இன்பத்தின் கடைசி யாட்டத்தை ஆடி யிருப்பேனே; வாழ்வின் களியாட்டத்தை அநியாய மாகத் தொலைத்தேன்.

நளினி: ஹா, அப்படி வெறுத்துக் கொள்ளாதே; அம்மா புண்ணிய வசத்தால் இனி உனக்கு அதிர்ஷ் டமோ அநுகூலமோ கிட்டாது என்று யாரால் சொல்ல முடியும்? நமது சாக்கியப் பிதாமகர் விக்ரமர்

இப்போது யுத்தத்தில் இறங்கியிருப்பதால் வெற்றி கிட்டாது என்றோ, வல்லபர் விடுதலை பெற்றுக் காதல் ஆட்டத்தைப் பூர்த்தி செய்ய மாட்டார் என்றோ, புதியதொரு பிரீதி சங்கமத்தை மறுமுறையும் பெறமாட்டார் என்றோ, சொல்ல முடியுமா? ஆ! இதைக் காட்டிலும் விந்தையான இன்பத்தின் போக்கு இவ்வுலகில் நிகழ்ந்ததுண்டா?

சுலோசனு: நிகழ்ந்ததேயில்லை அடி, விதி என்பது மனம் போனபடி நடக்கும் அறிவற்ற சபையோரின் பிழைப்பைக் கெடுத்து, தன்னைத்தானே கண்டு வெட்கியொளியும் நாடக நடிகனே? ஆ! விதியின் நாடகங்கள் எல்லாம் இயற்கைக்கு மாறுபட்டே நின்று இன்பமாகவே முடிகின்றன போலத் தோன்றுகிறது.

நளினீ: அது உண்மைதான். ஆனால் உள்ளம் சொல்வதையும் கேட்கவேண்டும். அதற்கு இத்தகைய ஆசையைக் காட்டி தைரியத்தை........

சுலோசனு: ச்சீ, எத்தகைய உள்ளம்? உள்ளத்தில் இருப்பதைப் போலவே பேச்சிலும் இருக்குமாயின் என் உள்ளத்தின்மீது விவேகத்தின் அடையாளத்தைப் பொறித்திருப்பேன். சாவதன் முன்பு என் வல்லபர் என்னை எப்போதாவது சந்திப்பாராயின் அப்போது அவர் என் மனநிலையை அறிந்து கொள்வார். தற்போது உள்ளம் சொல்லுவதை எனக்கு உரைக்க வேண்டாம் கடமை என்ன உண்டு அதை மாத்திரம் சொல்.

நளினீ: வீரப்பெண்ணே, அப்படியானால் கேள். பகைவனது கையில் நமது சாக்கிய ஜாதி குத்துண்டு நசுங்கும்போது க்ஷத்திரியப் பெண்களாகிய நாம்

அந்தப் புரத்தில் இவ்வண்ணம் அழுது நிற்பதை விட்டு, போர் வீரரின் வேடம் பூண்டு, சத்துருவைத் தேடியலைந்து, வழி நெடுகக் கூடிய மட்டும் பழிக்குப் பழி வாங்கிக் கொண்டே முன்சென்று, வாளொடு வாள் உராய்வதால் மூளும் தீயில் காதலனை நினைந்து உடன்கட்டை ஏற வேண்டும்.

[பாடுகிருள்]

*வீரமங்கையர் உலர்ந்த விறகில்*
*மூளும்தீயில் மாய்வ துண்டோ—(வீ)*
*பழிக்குப்பழியே நாடும் வாட்கள்*
*பதறிமோதியுராய் வதனுல்*
*எழுந்தெரியும் யுத்தத் தீயினில்*
*உடன்கட்டை யேறிப்பழகும் (வீ)*

சுலோசன: ஆ! நீயும் இதே உறுதியைக் கொண்டனையா? மக்களின் நன்மைக்குக் கேடே விளைவிக்கும் இத்தகைய துறவறத்தைத் துறந்துவிட்டு—இந்தச் சன்யாசத்துக்கே சன்யாசம் தந்துவிட்டு எனது மாமன் ராஜதானிக்கு வெகு தூரத்தில் சாக்கியச் சேனையை நடத்திப் போர்புரிந்து வருகிருரோ இந்த இடத்திற்கே நாம் இருவரும் ஆண்வேடத்துடன் போவோம். அவ்வாறு போனுல் நம்மை எவரும் எளிதில் கண்டுகொள்ள முடியாது. எனது மாமனுரோ என்னை என்றும் பார்த்ததில்லை....அடீ, போ தூக்கி எறி அந்த ஆட்டப் பலகையை அந்தவாள் கொடியைச் சட்டென்று எடு. இப்போது என் விளையாட்டு நண்பரே ஒரு ஆட்டத்தைத் துவக்கியிருக்கிருர். அந்த ஆட்டத்தையே நானும் ஆடப்போகிறேன்—தோழி, என் காதல் நாடகத்தின் குருவே எனக்கு யுத்த நாடகத்தின் கலையையும் கற்றுக்

கொடுத்திருக்கிறார். முதல் வித்தையால் ரதி தேவி யின் கணவனான மன்மதனுக்கு மகிழ்வூட்டும்படி செய்தேன்—அதைப் போலவே இன்று போர்க்கடவு ளான கார்த்திகேய குமரனுக்கும் மகிழ்வூட்டுவேன். ஆ! என் குரு உபதேசித்த இரண்டு வேதங்களையும் கற்றுத் தேர்ந்துவிட்டேன். இத்தகைய இரட்டைக் கீர்த்தியை இவ்வுலகில் நாட்டுவேன்.

*[பாடுகிறான்]*

*காதல் கலத்திலே காமதேவனைத் தனது*
*கண்ணீரினால் குளிப்பாட்டினாள்—ரதி*
*கண்ணீரினால் குளிப்பாட்டினாள்—ஆ! ஆ!!*
*போரின் களத்திலே பெரும்போர் முருகனைஎன்*
*புண்ணீரினால் குளிப்பாட்டுவேன்—என்*
*புண்ணீரினால் குளிப்பாட்டுவேன்.*

## காட்சி 3

*பிக்ஷு சாகம்பட்டரும் ஒரு பிக்ஷுணியும்*

சாகம்பட்டர்: உண்மையாகவே ஒன்று சொல்லுவேன் அது என்ன வென்றால் இந்த சாம்ராஜ்யத்தைப் போல் துக்கமானது வேறு ஒன்றும் இல்லை, சன்யா யாசத்தைப்போல் சுகமும் இல்லை என்று புத்தபக வான் சொல்லுகிறாரே அது அத்தனையும் உண்மை தான் பொதுவாக இந்த புத்த சங்கத்தில் சன்யாசி யாகி இருப்பது என்னுடைய தரித்திர சம்சாரி வாழ் வைக் காட்டிலும் நூறுமடங்கு சுகமானது. இதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. நான் ஒரு சாதாரண பிக்ஷு என்ற காரணத்தால் என்னை இந்த இரண் டாந்தரமான விஹாரத்தில் வைத்திருக்கிறார்கள்.

இதில் இரண்டாம் தரமான பேர் வழிகளேயிருந்து வருகிறார்கள். அடீ, இந்த சன்யாசத்தில் வாழ்வில் உயிர்களுக்குள்ள எல்லா இன்பங்களும் ஒன்று சேர்ந்திருக்கின்றன. மேலும் இதில் வாழ்க்கையின் முக்கிய அவசியமான துன்பத்தின் லவலேசமும் இல்லை. அதுதானடீ பாடுபட்டு, கஷ்டப்பட்டு, உடல் வருந்தி உழைத்து சீவனம் செய்யும் துன்பம். அதில் சாஸ்திரத்துக்காகவேனும் ஒரு துளி கூட இந்த மடத்தில் இல்லை. உழுது விதைக்காமல் தானியம் கிடைக்கிறது; அடுப்பு மூட்டாமல் அன்னம்; மரம் செடி நடவாமல் பழம்; அவைகளை வாயில் போட்டுக் கடித்து மென்று தொண்டை வழியாக வயிற்றுக்கு அனுப்பமட்டும் என்ன முயற்சி தேவையோ அந்த மட்டில் உலக க்ஷேமத்துக்காக பிக்ஷுக்களாகிய நாங்கள் முயற்சி செய்யவேண்டும். அதிகம் சொல்லுவானேன்? ஜபம் ஜபம் என்று சொல்லுகிறார்களே, அவைகளின் மறைவில் ஒளிந்துகொண்டு விட்டால் இந்தச் சன்யாச ஆசிரமத்தில் கால் வைத்ததும் சம்பாதிக்கலாம். அதுவும் புண்ணியம் என்றே கருதப் படுகிறது. இது என்னுடைய உண்மையான அநுபவம்.

பிக்ஷுணி : ஐயையோ, உஸ், அடீயம்மா, உங்களுடைய அநுபவம் அப்படியிருக்கும் பக்ஷத்தில், சாகம் பிக்ஷுவே, என்னுடைய அநுபவமோ அதற்கு நேர் மாறாகவேயிருக்கிறது. வீட்டிலே தின்பதற்கு ஒன்றும் இல்லையென்று நான் பிக்ஷுணியாகவில்லை. ஆனால் எனக்கு வயிற்றுவலி வந்து பயங்கரமாகக் கஷ்டப் படுவேன். என் வீட்டுக்கு அக்கம்பக்கத்தில் ஒரு

கெட்ட கிழவியின் துக்கமான நிலைமையைப் பார்த்தேன். அதைப் பார்த்து நாமும் ஒருநாள் இப்படிக் கிழவியாகிவிடுவோமே என்று பயந்து போனேன். அதற்குள் அந்த ஊருக்குள் உங்களைப் போன்ற நான்கு கெட்டிக்காரப் பேர்வழிகள் பிக்ஷுக்கள் என்று சொல்லிக்கொண்டு வந்து போனார்கள். புத்த பகவானுடைய புது மதத்தில் சேர்ந்தவுடனே மனிதன் எல்லா துக்கங்களிலிருந்தும் விடுபடுகிறான், அவனுக்குக் கிழப்பருவம் இல்லை, வியாதியில்லை, சாவும் இல்லை என்று அந்த பிக்ஷுக்கள் சொன்னார்கள். அதைக் கேட்டு நான் சந்தோஷப்பட்டேன். ஆ! சாகும் வரையில் ஆயுள் முழுவதும் இப்படியே இடுப்பு ஒடியாமல் நிமிர்ந்து நின்று, நாமும் ஒய்யாரமாக அன்ன நடை நடந்து கண்ணடித்துக்கொண்டு, யௌவனத்தின் வடிகட்டின உருவமாகவே காலம் கழித்துவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் பிக்ஷுணியாகிப் பார்த்ததும் எல்லாம் ஒரே ஏமாற்றமாக முடிந்தது. துணைக்காவது நல்ல பிக்ஷுவுண்டோவென்றால் தங்களைப் போன்றவர்களே கிடைக்கிறார்கள். வேறே வழியில்லை. இப்படி திடீரென்று இதில் வந்து விழுந்ததில் என் வயிற்றுவலியும் இரண்டு மடங்கு ஆகிவிட்டதுதான் கண்ட பலன்.

சாகம்பட்டர்: அடியே, இரட்டிப்பு வயிற்றுவலியென்று சொல்லுகிறாயே. எங்களைப்போன்ற இப்பேர்ப்பட்ட இரட்டிப்பு உருவமுள்ள பிக்ஷுக்களால் அதற்கு பரிகாரம் உண்டு. தவிரவும் அந்தக் குறையொன்று இருந்தால்தான் இயற்கையான தர்மம் ஆகும். இது

புத்தருடைய தர்மம் அல்ல. மேலும் கிழட்டுப் பருவத்தைப் போக்குவதற்கு இது உத்தமமான உபாயமும் ஆகிறது.

பிக்ஷுணி: அப்படியானல் அவசியம் சொல்லுங்கள். சாகம்பிக்ஷுவே, இன்றைக்காவது சொல்லுங்கள். வாழ்நாளில் என்றென்றும் கிழவியாகாமல் இருப்பதற்கு என்ன உபாயம் இருக்கிறது?

சாகம்பட்டர்: அதுதான் இளமையிலேயே உயிரை விட்டுவிடுவது; காதலை யநுபவித்து யௌவனத்திலேயே செத்துப் போவதுதான். காலில் தைத்த கிழட்டுத்தனமான முள்ளையெடுக்க இந்த ஊசியிருக்க அதைவிட்டு புத்த தர்மம் என்ற கோடாலியை எடுத்து அதன்மீது பாய்ந்து ஓடினையே. இது உன்னுடைய முட்டாள்தனம். அதற்கு பிக்ஷுக்கள் என்ன செய்வார்கள்? மற்ற தர்மங்கள் பேசும் ஆசை வார்த்தைகளுக்கும் அதே பேச்சுத்தான். உனக்கு இவ்வளவு தெரியாமல் போய்விட்டதா? உலகத்திலுள்ள ஒவ்வொரு மதமும் மக்களின் துன்பங்கள் யாவையும் போக்கி, பிறப்பு மூப்பு நோய் சாவு இவைகளிலிருந்து விடுவிப்பதாக ஆசை காட்டுகிறது. ஆனல் ஏட்டு அளவில் உள்ள இந்தப் பேச்செல்லாம் பரலோக பாஷையில்தான் எழுதியிருக்கிறது; இந்த உலகத்து பாஷையில் எழுதவில்லை. அதை இந்த உலகத்தவர்கள் அறியவும் முடியாது. இதுகூட உனக்குத் தெரிந்திருக்கவில்லையா? எந்தப் பிறப்பை புத்தமதம் நீக்குமோ அந்தப் பிறப்போ வந்தாய்விட்டது. இதனுடைய அர்த்தம் என்னவென்ருல் இனி யாரும் எல்லாப்

பிறப்பையும் இல்லாமல் செய்து விடலாம் என்பதே. இத்தகைய ஆசைப் பத்திரங்களை இப்பிறப்புக்கு அப்பால் இனி வரும் பிறப்பில் செல்லாவதற்குத் தான் எல்லா மதங்களும் தருகின்றன. அவைகளின் மீதுள்ள விலாசத்தை இந்தக் கண்களைத் திறந்து படிக்க முயன்றும் முடியவில்லையே. கண்கள்கூட கூசிப்போய் விடுகின்றனவே. ஆகையினால் மரணம் வந்து கண்ணை கெட்டியாக மூடிவிட்ட பிறகுதான் ஏதேதோ கொஞ்சம் படிக்க முடியும். எல்லா மதங்களும் காட்டும் இந்தக் காமதேனுவை யமராஜனின் தொழுவத்தில்தான் கட்டியிருக்கிறார்கள். எல்லா மதங்களும் காட்டும் கற்பக விருக்ஷமோ சீர்பெற்ற சுடுகாட்டுக்கு அப்பால் உள்ள சிங்காரத் தோட்டத்தில்தான் இருக்கிறது. அடீ, இதுவெல்லாம் படைத்த உலகமானது செத்த பிறகுதானடி தெரியும். தனது ஏட்டில் உள்ள ஒவ்வொரு எழுத்தின் படியே துன்பங்கள் எல்லாவற்றையும் இந்தப் பிறவியிலேயே போக்கும் மதம் இதுவரையில் எங்கும் தோன்றியதில்லை. ஏனென்றால் அதைப் பின்பற்றுபவன் உண்டி பிசகினால் நோய் வாராதா? கிழவனால் தளர்ச்சி தோன்றாதா? சும்மா விரட்டினால் மரணம் உம் என்று கேட்டுவிடுமா? அப்படியிருக்க மண்டையிலே புத்தியில்லாத முட்டாள் பெண்ணே இப்படி மதப் பிரசாரத்துக்காக ஆயிரக்கணக்கான பிக்ஷுக்களை உன் வீடு வரைக்கும் அனுப்பித் தர வேண்டிய அவசியம்தான் என்ன இருக்கிறது? இத்தகைய மதத்தில் சேர்ந்துகொள்ள இந்த உலகத்திலுள்ள கோயில்களுக்குப் போவானேன்? சந்திரலோகத்திலுள்ள கோயிலை நோக்கிக் கால்

நோவ நடந்து போகிறுர்களே. இந்தக் கோயில் களில் பயங்கரமான ஜனநெருக்கம் ஏற்பட்டு நீங்கள் அவைகளின் கதவுகளை மூடித்தாளிட்டாலும் இது எங்கள் பிறப்புரிமையென்று மக்கள் கோஷமிட்டுக் கலகத்துக்கு ஆர்ப்பாட்டமும் செய்கிருர்கள். ஆனல் இந்த எல்லா மதங்களுடைய சீட்டுக்களையும் பார்த்து அவைகளுக்கெல்லாம் விலையை ரொக்கமாக இந்தப் பிறப்பில் நடைபெறும் நாணயத்தில் கொடுக்கக் கூடிய முதலாளிப் பேர்வழி யொருவனும் இல்லை. இந்தக் கேள்விக்கு விடையை நடைமுறையில் காண முடியாது. அந்த விடையைப் போலவே இந்த புத்த மதமும் மற்ற மதங்களைப் போலவே மெய்யாகவோ பொய்யாகவோ யிருக்கும்.

பிக்ஷுணி: ஐயையோ, உஸ், சாகம்பட்டரே, அப்படி யிருந்தால் தாங்கள் ஏன் மத விரோதமான உபதே சத்தை பிக்ஷுணிகளுக்குச் சொல்லுகிறீர்கள்? தவிர அவர்களோடு இந்த வகையான நெருங்கிய தொடர்பும் ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? இதை நான் புத்ததேவருடைய காதில் போட்டு? பெரிய் கலவரம் செய்து சந்திக்கு இழுத்தால்.......

சாகம்பட்டர்: அப்படிச் செய்தால்தான் என்ன? அடியே, பெண்கள் எத்தகைய மோசக் கருத்துடைய வர்கள் என்பதை புத்ததேவர் நன்ருக அறிந்திருக் கிருர். அந்த சிஞ்சாபயா இல்லையா; அவளோடு புத்ததேவர் பிரத்யக்ஷமாக இவ்வாருன நெருங்கிய சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிருர் என்று ஒரு பெரிய வதந்தி பரவியிருக்கிறதே. உலக வம்பாகிய இந்த மானங்கெட்ட வீண்பழியைக் கேட்டு பயந்து

அவரே பின்வாங்கவில்லை. அதைக் கேட்க நானும் பின்வாங்க மாட்டேன். மேலும் மதவிரோதமாக நான் சொல்லுகிறேன்—பிறப்பு நோய் முதுமை மரணம் இவைகளிலிருந்து இப்பிறவியில் மனிதனைக் கொஞ்சமேனும் விடுவிப்பதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு மதப் பிரதிக்ஞையும் கேவலம் சூதான ஒரு மாயஜாலம்தான் என்று. இதை நான் பிரத்தியட்சமாக புத்தருடைய உதாரணத்தைக் கொண்டே நிரூபிக்க ஆயத்தமாயிருக்கிறேன். முதலில் புத்தருடைய பிறப்பே வந்தேயிருக்கிறது. வியாதியைப்பற்றியென்றாலோ சொல்லவேண்டிய தேவையில்லை. முதன்முதலில் அவர் சுடுகாட்டிலுள்ள பிணத்துணிகளையே உபயோகித்தார். அதனால் கொடிய நோய் உண்டாகவும், புதிய துணிகளையும் உபயோகிக்கும்படி பிக்ஷுக்களுக்குக் கட்டளையிட்டுத் தான் மட்டும் அரசன் தந்த விலையுயர்ந்த ஆடையை அணிய ஆரம்பித்தார். முதலில் மருந்து சாப்பிடுவது பாவம் என்று நினைத்தார். ஆனால் பிறகு ராஜவைத்தியரே தினமும் வருவதும் போவதும் சகஜமாகிவிட்டது. மேலும் தனது சொந்த உடலைக் காப்பாற்றவேண்டி ரணசிகிச்சையும் செய்வித்து முன்பின் யோசியாமல் லக்ஷக்கணக்கான நோய்க் கிருமிகளைக் கொலைசெய்யவும் முனைந்தார். ஆ! அஹிம்சையால் பரலோகத்தையடைபவர்களும் சரி, அஹிம்சையைப் பிரசாரம் செய்து பிறவுயிரைக் கொல்லுவித்து இவ்வுலகிலேயே சரீரசுகம் அநுபவிப்பவர்களும் சரி, நாம் மாத்திரம் அஹிம்சையைக் கடைப்பிடித்து ஹிம்சையின் துன்பங்களை அநுபவித்து வருகிறோம். ஆ வாலிபத்தில் அவர் எவ்வளவு அழகான புருஷனைக்

காணப்பட்டார் ஒருகால் அப்போதே அவருடைய அவதாரம் முடிந்திருந்தால் உண்மையில் கிழட்டுத் தனத்தின் கையிலாவது சிக்காமல் தப்பியிருக்கலாம் என்று சாதாரண மக்கள் சொல்லுகிருர்கள். எனக்கு மேலும் தோன்றுவது என்னவென்ருல் இவ்வளவும் அடியோடு வெறும் வெட்டிப் பேச்சாகத் தொலேயக் கூடாது என்று கடவுளும் அவருக்கு நீண்ட நிரம்ப ஆயுளேயும் தந்து இப்பொழுது கிழட்டுப் பருவத் தின் கையிலும் அவரை ஒப்படைத்து விட்டார் போலிருக்கிறது. வேறு சாதாரணக் கிழவர்களேப் போலவே அவருக்கும் பற்களெல்லாம் ஆட்டம் கொடுத்து விட்டன; ஒவ்வொரு அங்கமும் தளர்ந்து வரத் தொடங்கிவிட்டது. நேராக, லக்ஷணமாக இனிமையாக இத்த மண்ணுலகில் இருந்ததற்கு அறி குறியோ அடையாளமோ ஒன்றுமே வைக்காமல் அவர் புறப்பட்டுவந்த வழியே போகும்படியான அவ் வளவு நிறைந்த, முதிர்ந்த கிழட்டுத் தனம் அவரை கெட்டியாகப் பிடித்து வாட்டி பழிக்குப்பழி வாங்கி விட்டதடீ. மேலும் சாவைப்பற்றிச் சொல்லுகிறேன் கேள். தற்போது புத்தபகவான் வரும்போதும் போகும்போதும் தமக்கு மரணம் நெருங்கி வருவ தைத் தாமாகவே பிக்ஷு வர்க்கங்களுக்குச் சொல்லி தான் இறந்தபிறகு சங்கத்தின் நிலேமையைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்திருக்கிருர். அதுவும் இல்லாமல் நிர்வாண பதவியை யடைந்துள்ள புத்தபகவா னுக்கே இத்தகைய நிலேமை வந்து கொண்டிருக்க வும், இந்த உடலுடன் அவர் எந்தெந்த சுவர்க்கத் துக்கு அடிக்கடிபோய் வந்து கொண்டிருப்பார் என்று சாதாரண ஜனங்கள் சொல்லுகிருர்களே,

அந்த சுவர்க்கத்திலிருந்து ஒரு அப்சர ஸ்திரீயாவது அவருக்கு பணிவிடை புரிய என்றைக்காவது வந்ததை நீ பார்த்திருக்கிருயா? அதனுல்தான் அடிக்கடி அப்சர ஸ்திரீகள் வருவதை எதிர்பாராதவராய் உன்னைப்போல இப்படி பிக்ஷுணி கிடைத்தாலும் சரி என்று அவளையே பக்கத்தில் வைத்துக் கொண்டு இந்த ஜன்மத்தில் துணை சேர்த்துக் கொள்ளுகிருரே இது மிக்க கெட்டிக்காரத்தனம் என்றே நினைக்கிறேன்.

பிக்ஷுணி: ஐயையோ, உஸ். என்னை யென்னவென்று சொன்னீர்கள்! கழிவாடு என்ரு? அழூமூஞ்சிப்பயலே!

சாகம்பட்டர்: அடி, கழிவாடு என்ருல் வேறு எல்லாவற்றையும் கழித்து விட்டவள் அதாவது துறந்து விட்டவள் என்றுதான் அர்த்தம், உன்னை யெல்லாரும் கழித்து விட்டார்கள் என்று அல்ல. எல்லாருக்கும் விருப்பம் உள்ளவைகளை எங்கள் கையில் ஏன் போடுவார்கள்? அதனுலேதான் எல்லோரும் எறிந்து விட்டதையும் கூட பிக்ஷுக்கள் நல்லதென்றே மதித்து ஏற்றுக் கொள்ளுகிருர்கள்.

[மணியடிக்கிறது]

பிக்ஷுணி: ஐயையோ, உஸ், பெருக்கிக் கூட்டும் வேலைக்கு மணியடித்து விட்டது.

சாகம்பட்டர்: அப்படியானுல் எனக்கு தியானம் செய்யும் நேரமும் வந்துவிட்டது. நீ போ உள்ளே.

பிக்ஷுணி: உஸ் அடியம்மா. இதோ என்னைக் கூப்பிடத் திரும்பவும் மணியடிக்கிறது. ஐயா, போகிறேன் சீக்கிரமே திரும்பி வந்து விடுகிறேன்.

[போகிருள்]

சாகம்பட்டர்: இப்போது நானும் உடனே தியானம் செய்யத் தொடங்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த விகாரத்தின் முக்கிய மடாதிபதியிருக்கிருரே ஸ்தவிரர் அவர் வந்து கூட்டிய குப்பைகளை என் தலையில் சுமத்திக்கொண்டு போகச் சொல்லுவார். அதிலும் இந்த மஹாஸ்தவிரர் இருக்கிருரே இவர் மஹா நந்தியைப்போலவே நிரம்ப நல்லவர், யாராவது சும்மாவாகவேனும் கண்களை மூடியுட்கார்ந்தால் போதும். அந்த பிக்ஷு தியானம் செய்கிருன் என்று நினைத்து அவனை எந்த வேலைக்கும் இழுத்துப் போவதில்லை. அதனுலே மடத்தின் வேலைகளைச் செய்யும் நேரம்தான் சகஜமாக என்னுடைய தியானத்தின் நேரமும் ஆகிறது. ஆமாம். பிக்ஷுவின் அடையாளம் என்னவென்ருல் எல்லா வேலைகளையும் விட்டு விடுதல். வெறுமனே கூட்டித் தள்ளுவதும் ஒரு வேலைதானே? ஆதலால் அதையும் செய்யாமல் ஒதுக்கிவிட்டு நான் பூர்ணமாகவே ஆசையற்ற தத்துவத்திற்காகக் கூடும் மட்டும் செய்யும் முயற்சி பிக்ஷு தர்மத்துக்கு அநுகூலமாகவேயிருக்கிறது. இதோ எவனே கூப்பிடுவதற்கு வந்துவிட்டான். இப்போது உடனே கண்களை மூடிக்கொண்டு தியான வேஷம் போடவில்லையென்ருல் கண்களை தேய்த்துக் கொண்டு துடைப்பத்தை யேந்திக்கொள்ள வேண்டியதுதான். ஆனுல் இது எனக்குத் தெரிகிறது. அதாவது கண்களை மூடிக்கொண்டு மடத்தின் எல்லா வேலைகளும் முடியும் வரையில் உட்கார்ந்து இருக்கும் எனக்கு தியான சமாதியில் கிடைக்காவிட்டாலும் நித்திரை சமாதியிலாவது அதைச் சாதிக்க முடிகிறது உண்மைதான். ஐயா, உட்கார்ந்துகொண்டே

நன்ருகத் தூங்குவதும் ஒரு கலேதான். அதில் எனக்கு வெற்றி கிட்டியாயிற்று, அப்பப்பா, வந்து விட்டானே இவன். (கண்களே மூடுகிருன்) அதே சமயம் பிக்ஷு ஒருவன் வருகிருன். அவன் கிட்ட வரும் போது கண்களே மூடி தூரப்போகும்போது கண்களேத் திறக்கிருன். தொலேந்தது இந்தச் சனியன். ஆனல் இன்றைக்கு இவனுக்கு என்மேல் சந்தேகமுண்டாகி விட்டதுபோலத் தோன்றுகிறது. வெறும் கண்களே மூடிக்கொண்டே நான் தியானம் செய்து கழிக்கப்போவதில்லே. தியானத்தின் வெளிப்புரத்து முதல் பரீக்ஷை கண்களேக் கெட்டியாக மூடிக்கொண்டிருப்பதுதான், ஆனல் கடைசிப் பரீக்ஷை எந்த மட்டமான பிக்ஷு பேர்வழி கிசுகிசு செய்தாலும் விழிக்காமல் இருப்பதுதான். அந்தப் பரீக்ஷையும் தோற்றுப் போகும்படி இன்று செய்யப் போகிறேன். அதற்கு இந்த பிரத்யட்சமான மந்திரம் (அபினியுருண்டையை எடுத்துக்கொண்டு) வெகுநாட்களுக்கு முன்பே பழக்கமாயிருக்கிறது. உடலிலும் உயிரிலும் உள்ள துன்பங்கள் அத்தனேயையும் ஒரு கை நொடிப்பொழுதில் பங்கம் அதாவது நாசம் செய்வதால் வெகு புராதன காலத்திலேயே இது பிராகிருத பாஷையில் பங்கி என்று புகழ்பெற்றிருக்கிறது. கஞ்சாவுக்கும் அஞ்சாத கீர்த்தி வாய்ந்தது இந்தக் குளிகை. பகவதி அபினியே இப்படிவா, கிணற்றிலே ஊற்றிலிருந்து ஜலம் கசிந்து வருவதைப்போல நீயும் என்னுடைய தொண்டையில் இப்படி தடக்கென்று விழுவாயாக. (குளிகையை விழுங்கி) ஓம் ஓம். வாமனருடைய வெளிக்கண்கள் எவ்வாறு மூடிக்கொண்டேபோயினவோ அதேசமயத்தில் மனத்

தில் உருக்கும் கண்கள் திறந்துகொண்டே வந்தன. ஆ! என்ன விசித்திரமான அலைகள். எப்படி மிதந்து கொண்டே போகிறேன். உலகில் காணவரிய சவி கல்ப சமாதியென்பது இப்படியாகத்தானே இருக் கும்? வழிகளும் உபாயங்களும் வெவ்வேருனவை, ஆனுல் தொழில் ஒன்றேதான். யோக சாஸ்திரத்தில் எனக்கு முன்னேற்றம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதில் சந்தேகம் என்ன? மேலும் அதையும் மீறி நடந்து முன்னேறி வெற்றிகொள்வேன். பார். அடே விடாதே, பிடி. நிர்விகல்ப சமாதியின் வழுக்கல் சரி வுப் பக்கமாகச் சரிந்து வந்துவிட்டேன். (தரையில் கைகளை விரிக்கிருன்) தூக்கமே. மடத்தில் எல்லா வேலைகளும் முடிந்த பிறகாவது நான் விழித்துக் கொள்ளும்படிச் செய்வாயா? இதையெல்லாம் அநுப வத்தில் பார்த்துவிட்டு சாஸ்திரங்களில் சொல்லுவ தெல்லாம் சுத்தப்பொய் என்று எவன் சொல்லு வான்? எல்லா கர்மங்களையும் துறந்துவிட்டேன். நைஷ்காம சித்தியை வெகு சீக்கிரமே அடையப் போகிறேன்.

•

பிக்ஷுணி: (தற்செயலாக வந்து) ஐயையோ, உஸ், அடியம்மா, பொய்யாகத் தியானம் செய் வதாகப் பாசாங்கு செய்யச் செய்யப் பெரியவர் தூங்கி விட்டார் போலிருக்கிறது. எழுப்பக்கூடிய மையைத் தடவிப் பொய்வேஷத்தை வெளிப்படுத்தி விடுகி றேன். பார். பொறு. (மையைத் தடவுகிருள்) உஸ் அடியம்மா. உண்மையான தியானமேதான் போலி ருக்கிறதே. மைக்குக்கூட மசியமாட்டேன் என்கிறது கலையாத சமாதி ஏற்பட்டுவிட்டதா? அப்படியானுல்

அதை ஸ்தவிரருக்குத் தெரிவித்தேயாக வேண்டுமே. ஐயா, ஸ்தவிரர் அவர்களே, இப்படி வாருங்கள் ஐயா, சாகம்பட்டருக்குக் கலேயாத சமாதி ஏற்பட்டிருக்கிறது: கலேயாத சமாதி.

சாகம்பட்டர்: கலேயா சமாதியா? அது யார் சொன்னுர்கள். இது குளிகை சமாதிதான். பொய்யாகவேனும் கலேயா சமாதியென்று சொல்லுவேனுனல் நான் குளிகைக்கு நன்றி கெட்டவன் ஆவேன். சொல்லு. குளிகைசமாதி. பங்கி சமாதி.

பிக்ஷுணி: (தன்னுடையவும் அவனுடையவும் வாய்களே பொத்திக்கொண்டு) பேசாதே, பேசாதே மெள்ள சாகம்பிக்ஷுவே, ஸ்தவிரர் கேட்டுவிட்டால்—? தெளிவடையுங்கள்.

தாகம்சிங்கு: (பிரவேசித்து) பொறு. அந்தத் திருடனேத் தெளிவடையச் செய்யவே நான் வந்திருக்கிறேன். அடே அல்பப்பயலே, சொல்லு. இந்த மரப்பாதுகை யாருடையது? திருடா, என்னுடைய மிதியடியைத் திருடியிருக்கிருய். முன்னொருநாள் என்னுடைய பையை திருடி ஜீரணம் செய்துவிட்டாய். இப்போது உன் உயிரையே ஜீரணம் செய்துவிடுகிறேன் பார். கொண்டுவா அந்த மிதியடி.

சாகம்பட்டர்: (கையைப் பிசைந்துகொண்டே) அது என்னுடைய செருப்பு.. உன்னுடையதாக இருந்தால்தான் என்ன ஆகிவிடுமோ? பிக்ஷுவான பிறகும் ஒரு மிதியடிக்காக உயிரையே விடப்போகிருயா?

தாகம்சிங்கு: விடுகிறவனு? என்னுடைய காலடியில் உள்ள மிதியடியின் காலடியிலேயே என்னுடைய பிராணன்போனுலும் சரி நிரம்ப நல்லதே.

ஆளுக்கு ஒரு செருப்பை எடுத்துக்கொண்டு அடித்துக் கொள்ளுகிறார்கள்.

**பிக்ஷுணி:** ஐயையோ, உஸ் அடியம்மா, முன்காலத் சுந்தோபசுந்தர்கள் அந்த மோகினியின் காலடியில் சண்டையிட்டார்கள். இவர்களும் ஒரு மிதியடிக்காக அடித்து அடித்துக் கொலைசெய்து கொள்வார்கள் போலிருக்கிறதே. ஐயா சாகம்பிக்ஷுவே (அவன் சிம்புகிறான்) ஐயா, தாகம்பிக்ஷுவே (அவனும் சிம்புகிறான்) ஐயையோ, உஸ் அடியம்மா!

**சிறுமி:** (திரை மறைவிலிருந்து) காப்பாற்றுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள். (பிரவேசித்து) பிக்ஷுக்களே, என்னைக் காப்பாற்றுங்கள். நான் சாக்கிய அரசரது அரண்மனையிலுள்ள ஒரு பெண். கோசலப் படையிலுள்ள அரக்கன் ஒருவன் என்னைத் தன் சேனாதிபதியான கண்டனுக்கு தாசியாக்கிவிட பின் தொடர்ந்து ஓடி வருகிறான். நான் மறுத்தால் அவன் என்னைக் கொன்று போடுவான். புத்த விஹாரத்தில் எனக்குத் தஞ்சம் அளிக்க வேண்டும்.

**சாகம்பட்டர்:** பயப்படாதே, பெண்ணே. இந்த விஹாரத்தில் எந்தப் படை வீரனாவது தலைகாட்டினால் இந்த மிதியடியைக்கொண்டு அவனையப்படியே தொலைத்து ரத்தம் கக்கச்செய்வேன்.

**சேனை வீரன்:** (பிரவேசித்து) என்ன சொன்னாய்? திருட்டுப் பயலே'

**பட்டர்:** (தரதரவென்று நடுங்கிக்கொண்டே) ஒன்றும் இல்லை. புத்த விஹாரத்தின் விதிகளின்படி சேனை வீரர்கள் ஆயுதம் ஏந்தி வருவதேயில்லை. இவளுக்குத்

துணை யாரும் இல்லாதபடியால் தொலைத்து விடுவேன் என்று சொன்னேன். நீங்கள் உள்ளே வருகிறீர்கள் என்று தெரிந்திருந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேன்.

**வீரன் :** அடே, என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா ? வா, பேடிப் பயலே.

**பட்டர் :** (பிக்ஷுணியைப் பார்த்து) வாடியம்மா, உன்னைத்தான் கூப்பிடுகிறார்.

**பிக்ஷுணி :** ஐயையோ, உஸ் அடியம்மா, ஐயா, அவர் கூப்பிட்டது என்னையல்ல.

**வீரன் :** பேடியே, அவளைக் கூப்பிடவில்லை. உன்னைத் தான் கூப்பிடுகிறேன் ! ஒளிந்து தப்பப் பார்க்கிறாயே.

**பட்டர் :** சிவ, சிவ, நாங்கள் பிக்ஷுக்கள், அஹிம்சையே எங்களது முக்கிய விரதம் அடிப்பதும் கொல்லுவதும் நாங்கள் செய்ய மாட்டோம். அத்தகைய ஹிம்சைச் சொற்களை நாவினால் உச்சரித்தால்கூட பாவமாகும் என்று கருதுகிறோம். அதனால் வீர சிரேஷ்டரே, நாங்கள் எப்படி அடிக்க முடியும்? சுவாமி, நாங்கள் அஹிம்சை விரதத்தை வெகு கடுமையாக அநுஷ்டித்து வருகிறோம் ; ஒரு முறை ஏளனம்கூறி செய்தறியோம் அர்த்தமற்ற சொற்களைச் சொல்லவும் மாட்டோம் ; எவரையும் மிரட்ட மாட்டோம் ; உரக்கக் கூப்பிடவும் மாட்டோம், க்ஷமிக்க வேண்டும். சுவாமி, தாங்கள் இந்தப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு சந்தோஷமாகப் போங்கள். ஜப மாலையை எடுத்துக்கொண்டு அஹிம்சை ஜபம் செய்யும் வேளை நெருங்கிவிட்டது.

**சிறுமி :** பிக்ஷுக்களே, அஹிம்சையை யநுஷ்டிப்பது போல என்மீது கருணை காட்டுவதும் உங்களுக்கு விரதமல்லவா?

**பட்டர் :** உனது துன்பத்தைக் கண்டு எங்களுக்குக் கருணையுண்டாகிறது. ஆனல் உன்னை விடுவித்தால் இவருக்குக் கோபம் மூண்டு விடுமே. மற்றும் காமம் தணியாததால் சேனபதி முண்டனுக்கும் துன்பம் உண்டாகாதா? அவரிடத்திலும் கருணை காட்ட வேண்டாமா? நீங்கள் இருவரும் துன்ப நிலையில் இருப்பதனல் எவருடைய துக்கத்தையும் போக்குவதற்கு நாங்கள் இந்தச் சிக்கலில் சிக்கிக் கொள்ள மாட்டோம். நாங்கள் உள்ளே போகிறோம். கருணையின் ஜபமாலையை எடுத்துக்கொண்டு ஜபம் செய்ய எங்களுக்கு உரிய நேரம் நெருங்கிவிட்டது.

**வீரன் :** அட, இவன் ஏதோ ஒரு பிக்ஷுணியின் பின்னல் தொடர்ந்து ஒளிந்துகொள்ளப் பார்க்கிறன். இழுத்துவா அவனை.

**தாகம் சிங்கு :** நானு? இந்த சாகம்பட்டனைப்போலப் பேடிப் பயல் நான் அல்ல. நான் தங்களுடைய ஜாதிக்காரன்; க்ஷத்திரியன். கையை எடுத்துக் கும்பிடுகிறேன்.

**வீரன் :** அட, ஒரு வேளை நீ ஒழுங்கில்லாத வேறு ஜாதியானகவிருந்தால் ஒரு விதூஷகன் என்று உன்னை உயிரோடு விட்டிருப்பேன். ஆனல் நீ சாக்கிய க்ஷத்திரியன். இன்றைய தினம் உன்னுடைய சாக்கிய ராஜ்யம் எங்கள் கோசல வெற்றிப் பரியின் குளம்பின்கீழ் நசுங்குண்டு தடுமாறி வருகிறதே.

அதனால் வெகுண்டெழுந்து என்னை யெதிர்த்துச் சண்டை யிட்டாலும் உன்னை யொருகால் உயிரோடு விட்டிருப்பேன். ஆனால்........

பட்டர்: ஆனால் அப்படிப் பார்க்கும் பட்சத்தில் அவன் முன்னமே க்ஷத்திரியனாக இருந்தபோது யுத்தம் ஏற்படவில்லையே. போர் தொடங்கியது முதல் அவன் பிக்ஷுவாக இருக்கிறான். மேலும் பிக்ஷுக்க ளாகிய எங்களுக்கு ஜாதி கிடையாது. இந்தச் சாக்கிய கோசல யுத்தத்தில் யார் வேண்டுமானாலும் வெற்றியடையட்டும். எங்களுக்கு அதைப்பற்றி என்ன? யாருக்கு ஜயம் உண்டோ அவரை நாங்கள் ராஜா என்று சொல்லுவோம். அதற்கு மேல் இந்த வெற்றி தோல்விகளைப் பற்றி எங்களுக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. பிரத்யட்சமாக புத்தருடைய விருப்பம் என்ன வென்றால் இந்த உலகம் மிகவும் துக்கமயமானது. அதற்காக எந்த விவேகியும் யுத்தம் செய்ய மாட்டான். அப்படி ஒருகால் அவன் யுத்தம் செய்தாலும் வெற்றியால் விரோதமே வளரு கிறது; "தோல்வியுண்டவன் துன்பம் அடைகிறான். அறிவாளியோ வெற்றி தோல்வி இரண்டையும் நீங்கிச் சுகமாக இருக்கிறான்" என்றபடி நாங்களும் சுகமாகவே இருக்கிறோம்.

வீரன்: சிவ, சிவ நீசர்களே, எனக்கு புத்தருடைய கொள்கைகளில் நம்பிக்கையில்லை என்றாலும் ததாகத ரான மஹாத்மா புத்தரின் இமயம் போன்ற மன வுறுதி யெங்கே, அதில் உற்பத்தியான தூயகங்கை நீரைப்போன்ற இந்த உபதேச வார்த்தையானது

இந்த நீசனின் உள்ளக்குட்டையில் விழுந்தவுடன் இவ்வளவு அழுக்கடைந்ததைக் கண்டு வெட்கத்தால் தலை குனியாமல் இருக்க முடியவில்லை. இப்பொழுது ஒரு நாழிகைக்கு முன்பு ஏதோ ஒரு மிதியடிக்காகத் திருட்டுத்தனம் செய்து நீங்கள் இருவரும் சண்டையிட்டதைப் பார்த்தேன். உங்களது அயோக்யத் தனத்தைக் கண்டு கொண்டேன். உங்கள் கண் முன்பாகவே சொந்த நாடும், சொந்த ஜாதியும் அழிந்து வரும்போது நாட்டுப் போரில் யுத்தம் செய்வது பாவம் என்று சொல்லுகிறீர்களே. உங்கள் பேடித்தனத்துக்காக புத்தரது அஹிம்சை என்னும் கேடயத்தின் கீழ் ஒளிந்து பதுங்குகிறீர்களே. இதைப் பார்த்தால் உங்களை ஒரே அடியாய் சிரச் சேதம் செய்துவிட வேண்டும் என்றே தோன்றுகிறது. நீங்கள் பேசும் இந்த அஹிம்சை வழியின் முறைகேட்டை நாட்டிலிருந்து அடியோடு தொலைத்து விடவே போகிறேம்

பட்டரும்-தாகம் சிங்கும் : ஆனால் நாங்கள் பிக்ஷுக்களாக இருக்கிறோம்; ஆகையால் கொல்லத் தகாதவர்கள், ஐயா, தங்களுக்கு சாஸ்திரம் தெரியாமல் இல்லை. அதை — அந்த அஹிம்சையை — ஆயுதங்களால் அழிக்க முடியுமா ?

வீரன் : பொய்யான ஆசாரங்களைப் பேணும் அயோக்கியர்களே, பொய்யான ஒழுக்கத்தைக் கொண்ட பிக்ஷுக்களே, உங்களை உயிரோடு விடுபவன் அல்ல. நீங்கள் பேசும் கருணையும் அஹிம்சையும் துஷ்டத்தனம் நிறைந்தவை. என்னை அறிவில்லாத

கழுதையென்று நினைத்தீர்கள்? இவர்களைப் பிடியுங்கள். கழுதைகளைப் போல இவர்களது மூக்கில் கயிற்றைப் போட்டு மூட்டைகளை ஏற்றுங்கள். பிறகு இவர்களைப் போர் முனையில் நிறுத்தி வையுங்கள். பகைவர்களின் அம்புகள் இவர்களது உடல்களில் துளை செய்யட்டும். இந்தப் பொய்யர்களின் பின்னால் நாமும் மறைவாக இருந்துவிடலாம்.

தாகம் சிங்கு: (சாகம்பட்டரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு) ஐயோ, அட தோழனே, மடத்திலும் க்ஷத்திரியர்களை மரணம் விடாது போல இருக்கிறதே.

சாகம்பட்டர்: இருந்தாலும் 'க்ஷத்திரியனே, முதலில் நீ அழக்கூடாது. முதலில் பிராமணனாகிய நான் அல்லவோ அழவேண்டும்? க்ஷத்திரியனான நீ சுமையைத் தாங்க வேண்டும். இதுதான் பொருத்தமானது. ஐயையோ, இப்படி அடிக்காதீர்கள்—இப்போது சாக்கிய ராஜ்யத்தின்மீது சங்கடம் வந்துவிட்டது என்பதில் சந்தேகமேயில்லை. அடேயப்பா, ஐயையோ (சேனை வீரன் இருவரையும் ஒன்றாகக் கட்டி யடித்துக்கொண்டே போகிறான்). அடே, இந்த பிக்ஷுணியை விட்டுப் போகிறீர்களே. அவளைக் கூட்டி வாருங்கள்.

பிக்ஷுணி: ஐயையோ, உஸ் அடீயம்மா—செத்துத் தொலைந்த உங்களுடன் உடன்கட்டை யேற நான் என்ன உங்களைக் கட்டிக்கொண்ட பெண்டாட்டியா? உஸ், அடீயம்மா.

*[போகிறாள்.]*

## காட்சி 4

*யுத்த சபை. ஆணுடை தரித்த சுலோசனை, விக்ரமசிம்மர், இன்னும் இரண்டு சேனைத் தலைவர்கள்.*

**விக்ரமசிம்மர் :** எஞ்சியுள்ள சாக்கிய படைத் தலைவர்களே, போரின் மும்முரமான நிலைமையில் நான் இன்று கூட்டிய அவசர யுத்த சபையின் முக்கிய காரணத்தைச் சொல்லுகிறேன். கேளுங்கள். நமது பகைவனும் கோசல மன்னனுமான வித்யுத்கர்ப்பனிடமிருந்து மிக முக்கியமான கடிதம் ஒன்று நமக்கு வந்திருக்கிறது. இது நீங்கள் அறிந்ததே. இதற்கு விடையை இந்தக் கணமே கொடுத்தாக வேண்டும். ஆ! இந்தக் கணம் அநேகமாய் நமது சாக்கிய ராஜ்யத்தின் கடைசிக் கணமாகப் போகிறது. ஏன் என்று கேட்கிறீர்களா? இந்தக் கடிதத்தில் கண்ட நிபந்தனையின்படியே வாளைக் கீழே வைத்து யாதொரு சலுகையையும் விரும்பாமல் சரணமடைவதே நல்லது என்று நீங்கள் முடிவு செய்தால் சாக்கிய ராஜ்யம் இந்தக் கணமே அழிந்து போகும். ஆனால் அவ்வாறு தீர்மானம் செய்யாமல் போரை நடத்தி வந்தால் இன்னும் நான்கோ அல்லது ஆறோ நாட்கள் நாம் எதிர்த்து நிற்க முடியும். இதன் காரணம் நீண்ட காலமாக ராஜ்யத்தின் ஆயுத பலத்தை அசட்டை செய்து வந்ததின் தீயபலனே யாகும். இப்பொழுது நாம் எத்தனை தான் முயன்றாலும் அந்தப்பலன் நம்மை விடாது. வித்யுத்கர்ப்பனது முக்கியப் படையை நீங்கள் இங்கே தடுத்து நிறுத்தினாலும் அவனிடம் வேறு சிறு துணைப் படைகள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று நமது ராஜ

தானியைத் தாக்கி வருகிறது. இந்த இரகசியச் செய்தி இப்போதுதான் தெரிய வந்தது. இவ்வா றிருக்க நீங்கள் போரை நடத்தினுலும் வெற்றி காண் பது சாத்தியமன்று. கேவலம் சத்துருவுக்கு வெற்றி சுலபமாகக் கிடைக்காதவாறு செய்வதில், நாம் யாவரும் இறப்பதற்கு முன் அரையுயிராக்கி விடுவ தில், இந்த அளவில்தான் நமக்கு மன அமைதி கிட்டும். மற்றும் இவ்வாறு செய்வதே வீரர்களின் கடமையும் ஆகும். ஆகையால் சொல்லுங்கள். இந்தச் சமயத்தில் நீங்கள் செய்யும் முடிவே நமது ராஜ்யத்தின் இறுதிச் சொல்லாக நீண்ட நாள் நமது விதியை நிர்ணயிக்க வல்லது என்பதை கவனித்துச் சொல்லுங்கள். வித்யுத்கர்ப்பனைப்பற்றி நாம் அறிய வேண்டிய முக்கிய விஷயம் இதுதான். அவனுக்கு புத்தபகவானிடத்தில் மிகுந்த மதிப்பும் அக்கரையும் இருக்கிறது. ஏனென்ருல் புத்தர் ஆயுதப்பரிகரிப்பு அஹிம்சை, தயை இவைகளைக் கேவலம் உபதேச மாத்திரம் கையாண்டு நில்லாமல் அக்கம் பக்கங்களில் எங்கும் இவ்வாறு போர்த்தீ மூண்டிருந்தும் உலகக் கவலையில் அகப்படாதவராய் ஒரே மாதிரியான உண்மையையே எடுத்துக் காட்டி வருகிருர். அவ ரது ஆயுத நிராகரிப்பான சன்யாச நிஷ்டை மிகவும் போற்றத்தக்கதாகவுள்ளது. புத்தர் இவ்வுலகிலே மிகப் பெரிய மகான்.

முதல் வீரர் : இந்த ஆயுத நிராகரிப்பில் வித்யுத்கர்ப்ப னுக்கு விருப்பம் இருக்குமாஞல் அவனே அதை மேற்கொண்டு தனது கருணையைக் காட்டவேண்டும் அல்லவா ?

சுலோசனன் : ஒரு விஷயத்தில் ஆயுத நிராகரிப்பு ஆதரிக்கத்தக்கதாகவேயிருக்கிறது. சாக்கியர்களோ அதற்கு உகந்தபடியே நினைக்கவும் தலைப்பட்டிருக்கிருர்கள். ஆ! துஷ்டனது கழுத்தை வெட்டத் தவறும் ஆயுதங்களைப் பரிகரிக்க வேண்டியதே. அத்தகைய வீண் ஆயுதங்களை விட்டுவிட வேண்டும், ஒழித்துவிட வேண்டும். நாங்கள் அதையே அனுசரிப்போம்.

விக்ரமர் : வித்யுத்கர்ப்பனின் இன்னொரு நிபந்தனையென்னவென்ருல் புத்தரது போற்றத்தக்க நோன்பிலிருந்தும் நான் தவறிவிட்டேன்; துறவியாயிருந்தும் ஆயுதவொழிப்பைப் பேணுமல் ஹிம்சையே நிறைந்த போரில் வாளெடுத்துப் பாய்ந்தேன். இதனுல் விரதம் தவறியதற்கும் புத்தரது ஆணையை மீறியதற்கும் எனக்கு தண்டனை யளிக்கவேண்டும்.

சுலோசனன் : அதுதானளித்திருக்கிருர்களே. இந்த தண்டம், இந்த அதிகாரம், ஆயுதம் ஏந்தியதே தங்களுக்குக் கொடும் தண்டனையாகும். வாளேந்திய துறவியே, இந்த தண்டனையை—தண்டனைகள் யாவும் ஒருமித்து உருவாகிய இந்த ராஜதண்டத்தை—உங்களுக்குச் சாக்கிய மக்கள் அளித்து, உங்களை ராஜ்யத்தின் சர்வாதிகாரியாக நியமித்திருக்கிருர்களே.

முதல் வீரர் : இளம் வீரனே, நீ பேசியது மிகவும் பொருத்தமானதே. வாளேந்திய சன்யாசியிடம் இந்தராஜ்யத்தை யொப்புவித்ததால் அவரைத் தவிர நாங்களும் விரதபங்கம் செய்தவர்களாகிருேம். வல்லபருக்கு நேர்ந்த அபவாதம் ஒருபுறம் இருக்க, கோசல

ரது சூழ்ச்சியில் சிக்குண்டு ஒருமுறையேனும் போரிடாமல், வாளையிகழ்ந்து அதனால் தாழ்மை யுற்று, மெலிந்துள்ள சாக்கியர்கள் பகைவனைக் கண்டு பதைத்தோடி கொல்லப்படும் விரதத்தையே பூண்டிருந்தார்கள். அத்தகையவர்கள் சேனாதிபதி விக்ரமர் போரில் இறங்கியதும் தாங்களும் இறங்கி விட்டார்கள். வீரசிரேஷ்டரே, நீங்கள் வந்ததா லன்றோ எங்களால் இந்த நான்கு நாளாகக் கோசலப் படைகளை இச்சைப்படி தொலைக்க முடிந் தது. இந்தக் கொடிய காரியத்தால் வித்யுத்கர்ப்ப னது கொடுக்கையும் நசுக்கிவிட்டோம். இது நம்மு டைய விரதபங்கம்தான். சந்தேகமில்லை.

இரண்டாவது வீரர்: புத்தபகவானைப் பாரில் சிறந்த புண்ணியர் என்று சொல்லும்போதே அவரை நான்கு முறை கொல்ல நினைந்த இந்த துஷ்டன் இவ்வாறு சொல்லிய வண்ணம் முன்னேறி வருவ தைப் பார்த்தால் கனவிலும் எதிர்ப்பைக் கருதாத அஹிம்சையானது ஹிம்சை செய்வோரிடத்தில்தான் முடிவில் சேர்ந்துவிடுகிறது என்றே சொல்லவேண் டும். புத்தரது லக்ஷ்யத்தை நமக்கு எடுத்துக் காட்டும் அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் யாவரும் எதிர்ப்பை யெண்ணாத புத்தத் துறவிக ளாவோமாயின் சாக்கிய பூமி முழுவதும் அவனது கையில்தான் போய்ச் சேரும். எதிர்ப்பை ஆதரிக்கும் வாளுடன் கூடிய அஹிம்சையைத் தழுவியிருந்தால் தன் தகப்பனைப் போலவே இந்த வித்யுத்கர்ப்பனும் நம்மை யசைக்க முடியாமல் ஓடியிருப்பான். ஆ! புத்தரைக் காட்டி நம்மிடம் தன்னல அன்பேயில்லாத

வாறு செய்ய விரும்புகிருன். உலகில் உயர்ந்த உத்தமர் என்று இவன் புத்தரை நமக்கு அறிமுகப் படுத்த வேண்டுமா ?

விக்ரமா : இனி வித்யுத்கர்ப்பன் இடும் நிபந்தனைகளைப் பற்றி உங்கள் எண்ணங்களையறிய விரும்புகிறேன். "இப்பொழுதே இந்த வினடியே, நிபந்தனை யாதும் இன்றி சரணுகதியடைந்து ராஜ்யத்தை யொப் படைக்க வேண்டும். இல்லாவிடில் சிறையில் அகப் பட்டுள்ள சேனுபதி வல்லபனை உடனே சிரச்சேதம் செய்து....." இன்னும் சொல்லுகிருன். 'இது வரை சாக்கியருக்கு நான் தந்த தண்டனை ஒரு தண்டனையா ? இதனிலும் கொடிய தண்டனையைக் காண்பீர்கள். உங்களது ராஜதானி எங்கள் கையில் கிடைத்தவுடன் பாருங்கள், குழந்தை குட்டிகளும் மிஞ்சாதவாறு யாவரையும் வெட்டித் தள்ளுவேன்"– இந்த அஞ்சத்தக்க மிரட்டலுக்கு நாம் தரும் விடை என்ன ? சொல்லுங்கள். வல்லபன் எனது மகன் ஆனதனுல் எனது மனம் இளகிவிடலாம். இது மனித இயற்கையே. நான் கொள்ளும் அபிப்பிரா யத்தையே நீங்களும் மேற்கொண்டு விடலாம் என் றெண்ணியே எந்த அபிப்பிராயத்தையும் நான் சொல்லவில்லை. பெரும்பான்மையோரின் தீர்மானத் தின்படியே முடிவு கட்டுவோம். ஒருகால் உங்க ளுக்குள் அபிப்பிராய ஒற்றுமை யேற்படாவிட்டால், அப்போதுதான் நீங்கள் எனக்கு அளித்துள்ள சர்வாதிகார உரிமையின்படி எனது முடிவைத் தெரி வித்து அதன்படியே நடப்பேன். இந்நேரத்தில் ஒரு முழுராஜ்யத்தின் சர்வநாசம் ஏற்பட இருக்கிறது.

இத்தகைய நேரத்தில் முன்பின் யோசியாத வீரமோ அச்சமோ கொள்ளாமல் சொல்வனவற்றைத் தெளிவாகச் சொல்லுங்கள்.

முதல்வீரர்: சேனுபதியே, இந்த மூன்று நாட்களாகச் சமீபத்திலே போர் நடந்தபிறகு, என்னைப் பொறுத்தவரை நான் சாவுக்கு அஞ்சவில்லை யென்பதைச் சொல்லவும் வேண்டுமா? எனது நான்கு குமாரர்களையும் என் கண்முன்பாகவே எண்ணி யெண்ணி இந்தப் போருக்கு அனுப்பினேன்; அவர்கள் கொல்லப்பட்டு விழுந்ததையும் என் கண்ணால் பார்த்தேன். ஆனால் இப்போது இந்த என்னுடைய சாக்கிய ஜாதி அடியோடு கொல்லப்படுவதை இந்தக் கண்களால் பார்க்க நேரிடுமோ என்பதே எனக்கு முதல் கவலையாக இருக்கிறது. சேனுபதியே, நாம் இனி போரிட்டாலும் ராஜதானி வீழ்ந்தே தீரும். பகைவனே பலவான். அவனை வெல்லுவது மனித முயற்சிகளால் சாதிக்க முடியாத காரியம் வீரத்தாலும் ஆண்மையாலும் செய்யக்கூடியவற்றை இந்த நான்கு நாட்களில் செய்தாகிவிட்டது. இந்த நிலைமையில் இனியும் பகைவனை எதிர்ப்பது பலனற்றதாகும்; அதனால் கேடே உண்டாகும். இனியும் எதிர்ப்பை நீடிப்பதால் ஆயிரக்கணக்கான திக்கற்ற அனாதைகளான சாக்கியக் குடிகளின் உயிருக்கே அழிவு ஏற்படுவதால் அது பாவத் தொழிலேயாகும் என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஒருகால் என்னையும் என் மக்களையும் கோழையென்று அழைத்தாலும் பரவாயில்லை. கேவலம் தன்னை வீரன் என்று சொல்லிக் கொள்ளுவதற்காக ராஜ்யத்தில்

உள்ள ஆயிரக் கணக்கான மக்களின் முழு அழிவைத் தேடுவது தேச வீரமாகுமா? அது தேசத் துரோகமே யாகும். போரினுல் சாக்கியர்களுக்கு நன்மை ஏற்படலாம் என்றெண்ணியே அதற்கு இசைந்தேன். இப்பொழுதோ சரணடைந்தாலன்றி சாக்கியரின் அழிவைச் சிறிதளவிலேனும் மாற்ற முடியாது. ஆதலால் நிபந்தனை யேதுமின்றி வித்யுத்கர்ப்பனைச் சரணடைவதே நமதுண்மையான கடமையென்று எண்ணுகிறேன்.

இரண்டாவது வீரர்:— புகழ்பெற்ற இத் தலைவருக்கே சரண் புகுவதைத் தவிர வேறு மார்க்கம் தெரியவில்லையென்ருல் நான்தான் என்ன சொல்லவிருக்கிறது.

விக்ரமர்:— நீங்கள் இருவரும் ஒரே எண்ணத்தைத் தெரிவித்தால் அதுவே பெரும்பான்மையோரின் முடிவும் ஆகிறது. அவ்வாருனுல் சரண்புகுவது சரிதாஞ?

இரண்டாவது வீரர்:— சீச்சி, நான் அதைச் சரியென்று சொல்லவில்லை. வேறு வழியில்லையே என்றுதான் சொன்னேன். சாக்கியர்கள் சரண் புகுவதைச் சரியென்று எவ்வாறு சொல்லுவேன்? ஐயா, சாக்கியர் சரண் புகுவதென்ருல் இந்த ராஜ்யம், இந்தக் குடியரசு இந்த மக்கள் சமூகம் இவைகளில் தோன்றி வளர்ந்த சூரிய வம்சத்து இக்ஷ்வாகு பிரிவின் ராஜராஜ பதவியில் விளங்கிய ஐம்பத்திரண்டு தலைமுறைகளின் மணி மகுடம் வித்யுத்கர்ப்பனது காலடியில் உதையுண்டு, நமது சிரத்திலிருந்து கீழே விழுந்து

மண்ணில் துகளாவதுதான் அதைக் கோசல ராஜ தானியின் ஒரு மூலையில் பொருட்காட்சியில் வைப் பார்கள். இதன் அர்த்த மென்னவென்ருல் சரண மடைவதேதான். ஆடு மாடுகளைப் போல் நமது கழுத்திலும் கயிற்றைக் கட்டி, காவல் வைத்து இழுத்துப்போய் வித்யுத்கர்ப்பன் முன்ஞல் கிடத்து வார்கள். அவன் மீசையை முறுக்கிக் கொண்டே, என்னடா திருட்டுப் பயல்களா, சண்டைபிடித்துப் போயிற்ரு? என்று சொல்வான். இது தவிர அவன் கோபத்தில் வெகுண்டு உதையும் தருவான். அதை யும் வாங்கிக்கொண்டு கீழே விழவேண்டும், உல கெங்கும் சாக்கிய ராஜ்யம் முழுகிப்போயிற்று என்று மக்கள் சொல்லுவார்கள். "குட்டிச்சுவராய் விட்டது. உலகத்திலே அஹிம்சையை நாட்டவெண்ணி தத்தமது உயிருக்கே ஹிம்சை செய்து கொண்டார் கள். ஒருமுறையேனும் போர் தொடராமல் ராஜ்யத் தைத் தொலேத்தார்கள். ஓட்டம் பிடிக்கும் பேடிகளா கத் தாழ்ந்தார். "இப்படியெல்லாம் பேசுவார்கள். அங்கே போய் இதையெல்லாம் நான் கேட்கவா? சட், சரணம் அடைவது சரியல்ல, அது பொருத்த மானதல்ல. மேலும் அது தடுக்க முடியாததாய் இருந்தாலும் கவலையில்லே. ஆனுல் வல்லபனைப் போன்ற வீர ரத்தினங்களே...........நான் என்ன சொல்லுவேன்? வல்லபனைப் போன்ற வீர ரத்தினங் களைக் கேவலம் சரண் புகுவதில்லை என்னும் வீண் எண்ணத்துக்காகக் கொல்லுவிப்பதா? ஆ, தகுந்த காரணம் இல்லாவிட்டாலும் இந்த சாக்கியரின் மகுடம் குடை அரண்மனை இவை யாவும் பகைவ னது வெற்றிப் பரியின் குளம்பின் கீழ் துகளாகத்

தான் போகின்றன. சாக்கிய ராஜ்யம் செத்துப் போய்விட்டது என்று உலகமே பறை சாற்றப் போகிறது. ஆனால் அந்த வல்லபனை ஏன் பலி கொடுக்க வேண்டும்? நமது ராஜ்யத்தின் வீரப் படைத் தலைவன்–சிதறுண்டிருந்த சாக்கியப் படைகளைக் கூட்டி, ஊக்கமூட்டி, பகைவனையும் தடுத்துக் கொன்று குவித்து வெற்றிநாட்டும் வீரர் தலைவன்– பகைவரால் சூழப்பட்டும் குன்ருமல் போர் புரியும் சாக்கிய ஆண்தகை அந்த வீர வல்லபன் — ஆ அவனுடைய தலையை நீ சுகமாக வெட்டிவிடு என்று பகைவனுக்குச் செய்தி அனுப்புமாறு சாக்கியர்களுக்கு நான் சொல்லட்டுமா? அத்தகைய நன்றி கெட்டவனுயின் காதல் நிரம்பிய அவனது இளம் மனைவியின் வாழ்வைக் கெடுத்து அவன் முன்னே எவ்வாறு முகம்காட்டி நிற்பேன்? ஐயா, உங்கள் குடும்பத்தில் மூன்று தலைமுறைகளிலும் ராஜ்யத்துக்காக உயிரை அர்ப்பணம் செய்திருக்கிறீர்கள். குடும்பமே அழிந்து அதன் மக்களும் ஒழிந்து போகச் செய்வதுதானு அதற்கு நாங்கள் செய்யும் கைம்மாறு? ஐயா, எஞ்சியுள்ள சத்துருக்களையும் தூண்டிவிட்டுச் சாம்பல் குவியலை எழுப்புவதெல்லாம் கேவலம் சுகமாக இருப்பதற்குத்தானு? சேனைதிபதியே, சரணே புகுவோம். இல்லையில்லை, சரண் புகவேண்டாம். ஆ! இரண்டையும் ஏற்கவேண்டியதே, இரண்டையும் தள்ள வேண்டியதே. தாமதம் செய்வதால் என்ன பலன்? பிதாமகரே, யாவற்றையும் நான் உங்களிடமே ஒப்புவித்து விட்டேன். எனக்கு அபிப்பிராயம் என்று தனியாக ஒன்றும் இல்லை. தங்களது முடிவே எனது முடிவாகும்.

விக்ரமர்:— (சுலோசனையைப் பார்த்து) ஹே இளம் வீரனே நீ சொல்லுவது என்ன? மூன்று நாட்களுக்கு முன் பேர் ஊர் தெரிவிக்காமல் படையில் சேர்ந்தாய். உன் ஆண்மையையும் வல்லமையையும் கண்டேன். பரிமீது மின்னலெனப் பாய்கிறாய்; எதிரியின் ஆயுதங்களைக் குறி பிறழாமல் அழிக்கிறாய். உன் மன உறுதியைக் கண்கூடாகக் கண்டு களித்தேன். மூன்று நாட்களில் படைத் தலைவன் பதவியை யடைந்துள்ளாய். சாக்கிய மக்களின் இளமை வாய்ந்த இந்தத் தலைமுறையைச் சித்தரித்துக் காட்டுகிறாய். தற்போது யாவும் உனது முடிவையே சார்ந்துள்ளது. ஏனெனில் உங்கள் மூவரில் ஒருவர் முடிவைச் சொல்லவில்லை. ஒருவர் சரண் புகுவதே தகுதி என்கிறார். இப்போது நீயும் அவ்வாறே முடிவு செய்தால் சரண் புகவே நிச்சயம் செய்வோம். சேனாபதி வல்லபனது உயிர் நீடித்திருப்பது வித்யுத் கர்ப்பனைவிட உன்னையே பொருத்திருக்கிறது. வல்லபனின் இளம் மனைவி அவன் மீண்டும் வரும் வழிமேல் விழிவைத்து வியாகுலத்தோடு வாயிலில் நின்றுகொண்டிருக்கிறாள். அவளை நினைத்துப்பார். சாக்கிய ராஜதானியில் மக்கள் யாவரையும் வெட்டி வீழ்த்தி வெறி பிடித்து ஆர்ப்பாட்டம் செய்யும் கோசலரின் ரத்தம் சொரியும் வாட்களை நினைந்து பார்; பிறகு பேசு. இளமை நிறைந்த உனது வல்லமையானது வற்றிய வீரர்களுக்குப் புத்துயிரூட்டிப் போரை முழக்குவதாயினும் சரண் புகும் முறையைப் பற்றியும் நான் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

சூலோசனன்: சாக்கிய ராஜ்யத்தின் பெரியவரே, சர்வாதிகாரியே, என் முடிவான எண்ணங்களை விளக்கமாகவே சொல்லுகிறேன், யாதொரு நிபந்தனையுமின்றி ஆயுதத்தைக் கீழே வைத்துச் சரணடைவதால் வித்யுத்கர்ப்பனிடம் சலுகை பெறலாம் என்றெண்ணுவது தவருகும். ஏனெனில் அத்தகைய சலுகை யென்பது அவனது அகராதியில் இல்லையே; அவன் சாக்கிய ராஜ்யத்தை முற்றிலும் அழித்து, அவர்களது மணிமுடியைக் கோசலச் சிங்காதனத்தின் அடித்தளமாக்குவது நிச்சயம்; இதுமட்டுமன்று இந்நாள் வரை சாக்கியர்களின் ஊர்களுக்குத் தீ வைத்து: அம் மக்களின் சிரங்களையும் அறுத்து, நாட்டைப் பாழாக்கி வந்ததே போல இனி சாக்கிய ராஜதானியைக் கைப்பற்றிய பிறகு செய்வதில்லை என்று அவன் உறுதிச் சொல் எதையும் சொன்னதில்லை. இதைப்பற்றி இங்குள்ள சேனைத் தலைவர்கள் இருவரும் கவனிக்கவில்லை போலும், சரணடைந்தால் இத்தகைய கொடுமை இனி ராஜ்யத்துக்கு விளையாதென்று அவர்கள் நினைக்கிருர்கள். ஆனுல் இதுவரை யிழைத்த கொடுமைகளை இனிச் செய்வதில்லை யென்று வித்யுத்கர்ப்பன் சொல்லவில்லையே. அந்தக் கடிதத்தில் அவன் சொல்லுவதெல்லாம் இதுதான். நீங்கள் சரணடையாவிட்டால் இதுவரை செய்ததைக் காட்டிலும் அதிகக் கொடுமையையே செய்துவிடுவதாகவன்றே சொல்லியனுப்பியிருக்கிருன். ஆனுல் நான் கேட்கிறேன் அவன் இதுவரை காட்டியுள்ள கொடுமையைக் காட்டிலும் அஞ்சத்தக்க கொடுமைதான் என்ன இருக்கிறது? இதுவும் தவிர, சமாதானம் பேசிய வண்ணமாகவே

கலவரமுற்ற சாக்கியர்மீது படையை யேவி வருத்திய இப் பகைவன் சொல்லுவதெல்லாம் வஞ்சனையே நிறைந்தது என்பதில் சந்தேகம் என்ன? ஆ! சாக்கிய ராஜ்யம் சீக்கிரமே அழிவுறுவது பெரும்பாலும் நிச்சயமே. வெற்றிமீது நமக்கு ஆசையும் நீங்கியது என்றாலும் சாக்கியருக்கு ஒரு ஆசையுண்டு, அதுதான் பழிவாங்கும் ஆசை சாவை நீக்க முடியாவிட்டாலும் ஒன்று மட்டும் எங்கள் சக்தியில் இருக்கிறது. அது தான் எதிரிகளைக் கொன்று குவித்து நாமும் சாவது.

முதல் வீரர்: இது உங்கள் கடமை யென்றால் உங்கள் மனம் கோபத்தால் குருடாய் விட்டதால்தான் இவ் வாறு முடிவு செய்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

சுலோசனன்: அவ்வாறு தான் இருக்கிறது, கோபங் கொண்டு செய்யும் இந்தப் பழிக்குப்பழிதான் வெறி பிடித்த யானைக்கு அங்குசம் போலாகும் ஐயா, பாம் பின்மீது கால்வைத்தால் உடனே அது சரேல் என்று திரும்பித் தீண்டுகிறது. தமதுயிர் போகப்போக எதிரியையும் சாவின் வாயிலில் சேர்த்திடுவோம். இது வெற்றி நாட்டவல்ல; பழிக்குபழி வாங்கவேண் டியே. பாம்பின் ஜாதி பழி வாங்குகிறது. அதனால் தான் சிறு பிள்ளைகள் எறும்பையும் குளவியையும் விளையாட்டாகத் துன்புறுத்துவதைப்போல் மனிதர் கள் பாம்பையும் தொந்தரவு செய்யத் துணிவதில்லை. அம்பு பட்டு காயமுண்டாலும் புலியானது பழிவாங்க ஆவேசத்தோடு பாய்ந்து வேடன் கழுத்தைக் கவ்வு கிறது. சாவதாயினும் புலி பழிவாங்கும் சுபாவ முள்ளது. இதை மனிதர்கள் அறிவார்களாதலால்

முயல் வேட்டைக்குப் போவதைப் போலப் புலி வேட்டைக்கு உல்லாசமாகப் போவதில்லை. கேவலம் எறும்பைப் பாருங்கள். மனிதர் காலில் கடித்தால் தன்னால் உண்மையில் பிழைக்க முடியாது என்று தெரிந்தும் கடிக்கிறது. உயிரோடு வாழவேண்டும் என்று கடிப்பதில்லை: அதனால் தன்னைக் கொல்லுப வனுக்கு ஏதேனும் தண்டனை தரவேண்டும் என்றே கடிக்கிறது. அப்படிக் கடித்த எறும்பு செத்தே போகிறது. ஆனால் அதன் ஜாதிக்கே இயற்கையான அந்தக் கடியின் பயத்தினால் மனிதன் மாத்திரமல் லாமல் பாம்பும் அதன் புற்றில் நுழைவதில்லை. தேனீ யைப் பாருங்கள் தேன்கூண்டு அழிபட்டதும் தேனா சையைத் துறந்துவிடுகின்றனவாயினும் தனது ஜாதிக்கு என்ன நேருமோ வென்றும் எண்ணிக் கலங்காமல் தேனழிக்கும் மனிதனை ஊர் முழுவதும் துரத்திச் செல்கிறது. அவனைக் கொட்டும் போது அதன் கொடுக்கு அவனது உடம்பில் நன்றாகப் பதி கின்றது என்றாலும் அங்கிருந்து திரும்பமுடியாமல் தேனீ அவ்விடமே கொல்லப்படுகிறது. இதை நன்றாகத் தெரிந்துகொண்டு, உயிருக்குத் துணிந்தே தேனீ செல்லுகிறது. ஏனென்றால் அவதிப்புண்ட வாழ்வைக்காட்டிலும் பழிவாங்கிச் சாவதே மனதுக்கு அமைதியையும் மிக்க உவப்பையும் தருவதாக எண் ணுகிறது. அதனால்தான் பட்டுப்பூச்சிகள் வாழும் இடத்துக்கு அஞ்சாதவன் தனிப்பட்ட ஒரு தேனீக்கு அஞ்சுகிறான். பார்க்கப் போனால் பிராணிகளின் கடுங்கோபத்துக்கென்ற இயல்பாகவே பழிவாங்கும் கொடுக்கும் கொடுக்கப்பட்டது போலும். இதற் கென்றே கடவுள் கொடுக்கைத் தந்துள்ளார்

போலும். ஆக்கிரமிப்பைக் செய்யும்போது எந்த பாவிக்கும் பழிக்குப்பழி எவ்வளவு தூரம் ஏற்படும் என்று தெரிந்தால் அதை யுணர்ந்து அஞ்சியே அவனும் தீவிரமாக முன்னேறுவதில்லை. இந்தப் பாவியின் ஆக்கிரமுப்புக்குச் சிக்காமல் எஞ்சியுள்ள உலகம் இன்புற்றிருந்து இந்தச் சாக்கிய மக்கள் மட்டும் இறந்தே தீரவேண்டுமாயினும் தனது நலனுக்கன்றி எஞ்சிய உலக மக்களுக்கு விழிப்பூட்டவேண்டியாவது நாம் வித்யுத்கர்ப்பன்மீது புலிபோலப் பாய்ந்து விழ வேண்டும். ஒவ்வொரு சாக்கியனும் குறைந்தபட்சம் ஐந்து கொடுங்கோலரைக் கொன்று பழிவாங்கிய வண்ணம் இறக்கவேண்டும். அதனால் இனியேனும் இந்தக் கொடியவன் நம்மைப்போன்ற சிறு குடியரசுகளின்மீது படையெடுத்து வாராதிருக்கக் கூடும். அவனுக்கு வெற்றி எளிதில் கிடைக்க முடியாமல் செய்யவேண்டும். இத்தகைய சமயத்தில் பழிவாங்குவது சரியான எதிர்ப்பு ஆகாது என்று தோன்றினலும் அது பரோபகார முறையில் செய்யவேண்டிய கடமையாகும். ஆதலால் உங்கள் கேள்விக்கு எனது சந்தேகமற்ற விடை இதுதான். சரணம் அன்று, ஐயா, பழிக்குப் பழியே.

விக்ரமர் : வீரத்தில் சிறந்த வாலிபனே, உன்னுடைய முடிவுக்குத் தடையாக நான் ஒன்றும் சொல்லவிரும்பவில்லை. உனது திறமை கொண்ட சொற்கள் வீரர்களுக்கு ஏற்றவைகளே, அவை உள்ளே அடங்கியிருக்கும் ஆற்றலை வெளியே கிளப்பவல்லவை உன் முடிவைத் தெளிவு படுத்தியுள்ளாய். இது யாவும் நான் அறிந்ததே அதற்கு அணுவேனும் குறை

நேரலாகாதென்றே ஒரு விஷயத்தை நினைவூட்ட விரும்புகிறேன். அது மிகப் பெரிய விஷயமாயினும் அதை நீ அடியோடு மறந்து நழுவவிட்டாயே நாங்கள் வாளைக் கீழே வைப்பதில்லை. எதிரி விடுத்துள்ள ஓலைக்கு எமது விடை சரணம் அன்று, பழியே ஆகும் இந்த உனது முடிவுரையின் ஓசை எதிரியின் காதில் விழுந்தும் அந்தப் பழியென்றும் சொல்லின் எதிரொலியாகப் பேரிடி போல அந்தக் கயவனை வித்யுத்கர்ப்பனுடைய வாள் வல்லவனது கழுத்தின் மேல் விழுந்து அவன் தலை துண்டுபட்டு மண்ணில் புரளப்போகிறதே இதை நீ மறந்தனையோ? இதைப் பற்றிச் சற்றேனும் யோசிக்கவில்லையா?

சுலோசனன்: ராஜ்யங்களுக்கிடையே வெற்றி தோல்வி வார்த்தைகள் நடக்கும்போது தனி நபரைப்பற்றி யார்தான் கவலைப்படுகிறார்கள்? பெரியவரே, அந்தக் கவலையை மேற்கொள்ளவோ அசட்டை செய்யவோ என்னால் இயலாது.

முதல்வீரர்: இத்தகைய ஒன்றுமறியாத வாலிபனுக்குக் கவலை யென்பது ஏது? இவன் சேனாதிபதி வல்லபனின் பெருமையை அறிவானா? நீ வீரன் தான்; ஆனால் ஒரு நாட்டுப்புரத்துக்காரன்; அரசியல் சபையை அறிந்திராத சாதாரணப் பயல். அட, இளம் வீரனே. வீரமே உருக்கொண்ட சேனாதிபதி வல்லபனை நீ என்றேனும் கண்டது உண்டா? அடே அன்பு நிறைந்த ஒளிவீசும் அவரது முகமண்டலத்தை ஒரு முறையேனும் பார்த்திருந்தால் உனக்கு இவ்வாறு பேச நா எழுந்திராது. அவ் வீரனின் முகம் கொடிய எதிரியின் கோடரியால் வெட்டுண்டு

மண்ணில் புரளுவதை மனத்தில் நினைத்தால் யாருக்கும் கிறுகிறுப்பு உண்டாகும். தனி நபரை யார் கவனிக்கிறார்கள் என்று கேட்கிறாய்? அடே, ராஜ்யம் ராஜ்யம் என்று பிதற்றுகிறாயே, அது என்ன ஆகாயத்தில் மிதந்து செல்லும் ஒரு தனிப்பட்ட சுதந்தரமான பொருளா? நீ சொல்லிய தனி நபர்கள் சேர்ந்ததே ராஜ்யம் ஆகிறது மேலும் விசேஷச் சிறப்பும் ராஜ்யத்தின் படைத் தலைமைப் பதவியும் பெற்று விளங்கும் வல்லபனைப் போன்ற தனி நபர்தான் இந்த ராஜ்யத்தின் உண்மையான உருவம். அடே, சென்ற முன்னூறு ஆண்டுகளாய் நமது சாக்கிய ஜாதியின் சரித்திரத்தை உருவாக்கியவை இரண்டு வம்சங்களே. அவைகளில் ஒன்று நமது ராஜ வம்சம், துறவையே பேசும் நாவினால் புத்தர் அதனை நிர்மூலமாக்கிவிட்டார். சாக்கியரின் ராஜ வம்சத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது ராஜவம்சம் இந்தப் பிதாமகரின் குலம் அது இப்போது வாளேந்த வேண்டும் என்று சொல்லிவரும் உன் நாவினால் நிர்மூலமாகி வருகிறது அடடா, வல்லபனின் இளம் மனைவி சுலோசனையும் இதுபோலவே..... ஆ! அவள் என் தங்கை மகள். சிறு வயதில் பார்த்தது தான் வானில் நட்சத்திரம் போல விளங்கினாள். பிறகு நாங்கள் தூரதேசம் போய்விட்டதால் மீண்டும் அவளைப் பார்க்கவில்லை. இன்னும் இருபது வயது கூட ஆகவில்லை. அவளது மணவினை முடிந்து இன்னும் ஒரு ஆண்டுகூட கழியவில்லை. அவளது இளமையான கொடி பூக்கும் தருணமும் இன்னும் வரவில்லையே. அதற்குள் அவளது மணவாழ்வின் இன்பத்தைத் துடைக்கத் துணிகிறாயே! எப்படித்

தான் உன் மனம் துணிந்ததோ? அடே இளம் உள்ளம் படைத்த அக்கன்னியின் கழுத்தை நய வஞ்சமாக அறுக்கிருய். இது வேண்டாம் வாலிபனே, உனக்குப் பிரியமான ஒருவன் உலகில் இருந்து நெடுநாள் பார்த்திராததால் அவனே உடனே காண வேண்டும் என்று உன்னுயிர் தவித்திடும் பட்சத்தில் உயிரே போன்ற அந்த நண்பனின் உருவத்தைக் கண்முன்னே நினைந்துபார். பிறகு அவனது இனிய முகம் கொலேயாளியின் கோடரி வீச்சிஞல் துண்டு பட்டு ரத்தம் பீறிடப் புரளும் கோரக் காட்சியையும் கண் முன்னே உன்னுள்ளத்தில் தோன்றும் துக்கத் தைக் காட்டினும் நூறு மடங்கு துயரத்தை அடை வாள் அந்த இளமங்கை சுலோசனே. உண்மையில் சிரச்சேதம் செய்யப்பட்ட சேதி அவள் காதில் பட்டது என்றும் நினேத்துப் பேசு. பிறகு உனக்கு இச்சையானதைச் சொல்லு. இதைக் காட்டிலும் அதிகமாக நான் என்ன சொல்ல முடியும்?

சுலோசனன்: நான் சிறிது நேரத்துக்கு முன்புதான் சொன்னேன். ராஜ்யம், உலகு இவைகளின் நன்மை தீமைகளில் தனி நபர்களின் இன்பதுன்பங்களே இரண்டாவதாகவே கருதவேண்டும். ஆனல் இந்தக் கேள்வியிலும் என் எண்ணத்தைச் சொல்லுவேனு ஞல் ஒன்று கேட்கிறேன். நாமும் வாளேக் கீழே வைத்துவிட, எதிரியும் வல்லபரை உயிரோடு வைத் திருக்கிருன் என்றே வைத்துக் கொள்வோம். அப் போது அவன் எந்தக் காரணத்தால் வைத்திருப் பான்? சாக்கிய ராஜ்யத்தைத் துகளாக்கி கோசல நாடு திரும்பிச் சென்றதும் வித்யுத் கர்ப்பனது வெற்

றித் தேருக்கு முன்பாக தோல்வியுண்ட சாக்கியரின் படைத் தலைவன் இவன்தான் என்று வல்லபரை இழிச்சொல் கூறி அவமதிக்கத்தானே? பல்லைப் பிடுங்கிய புலியை பெண்டிருக்கும் குழந்தைகளுக்கும் சுற்றிக் காட்டுவதைப்போல வல்லபனையும் சுற்றிக் காட்டுவதற்குத் தானே? இவ்வாறு அவமதிப்புண்டு உயிர் வாழ்வதிலும் ஆத்ம தியாகமான மரணத்தையே அவர் விரும்புவார் என்றே தோன்றுகிறது. சேனைத் தலைவரே உலகில் உயிரே போன்ற மனிதர் ஒருவர் எனக்கு இருக்கிறார். இன்றும் இருக்கிறார். (பெருமூச்சு விட்டு) இந்த பயங்கர நிலையில் அவரை நான் மீண்டும் சந்திக்க இயலாது என்றாலும் ராஜ்யத்தின் நன்மையின் பொருட்டு அவரது சிரச்சேதத்துக்குச் சீக்கிரமே சம்மதிப்பேன். அந்தக் காரணத்தின் பொருட்டே அவ்வளவு சீக்கிரமே இன்று நான் எனது அன்பருடைய என்னுடைய வல்லபருடைய ....(முகம்மாறி) சுவாமி; மன்னிக்க வேண்டும். தனி நபர் விஷயத்தில் என்னை யிழுக்கவேண்டாம், ஆ! வல்லபரின் இளம் மனைவி வாயிலில் நின்று அவர் வருகையை எதிர் பார்த்திருப்பாள். அங்கே அவள் முணுமுணுத்து அழுத முகத்துடன் இருப்பதைக் காட்டிலும் பகைவனின் ரத்தத்தில் குளித்து கணவனுக்காக வஞ்சம் தீர்த்துக் கொண்டு, இருண்ட வாழ்விலிருந்தும் வெளிவந்து, காதலன் சென்றவழியே தானும் சென்று அவனைச் சந்திக்க வேண்டும்.

முதல் வீரர் : சிறுவனே உனது கடுஞ் சொற்கள் ஒரு வேளை நாடகத்தில் வீர ரசமே உருவெடுத்தால் போலத் தோன்றி நாடக நாயகிக்கு ஆறுதல் அளிக்க

லாம். ஆனால் உண்மையில் சிறுபெண்ணின் பிஞ்சுள்ளம் எவ்வளவு இளகியது என்பதை உன்னால் கற்பனையிலும் காணமுடியுமா? நெஞ்சையே கேட்டுப் பார். ஒருக்கால் வல்லபனின் காதலி உன்னை நேரில் சந்தித்து, துயர்நிறைந்த கூந்தலை யவிழ்த்து, கண்ணீர் வழியும் கொடிய பார்வையுடன் "என் காதலனைக் கொல்ல வேண்டாம். ராஜ்யத்துக்காக என் அன்பரைக் கொல்லவேண்டாம். ஏனென்றால் ராஜ்யம் நிலைக்காது. நில்லாது—கேவலம் உலகத்தின் மக்கள் உன்னை வீரன் என்று புகழ்வதற்காக என் மணாளனை மரணவாயிலில் தள்ள வேண்டாம். சிறிதேனும் கருணைகாட்டு" என்று புலம்பினால் அவளுக்கு என்ன ஆறுதலைச் சொல்லுவாய்?

சுலோசனன் : இவ்வாறு சொல்லுவேன். "பெண்ணே இந்தச் சாக்கிய ராஜ்யத்தில் நீ மட்டுமன்று; ஒவ்வொரு வீட்டின் வாயிலிலும் உன்னைப்போலவே ஏதோ ஒரு இளம் மனைவி பகைவனால் காதலன் கொலையுண்ட சேதி கேட்டு சோகத்தின் ஆவேசத்தில் கூந்தலவிழ ஓவென்றழுது கொண்டே நிற்கிருள். அவ்வாறு யாவரும் அலறி நிற்க, தனித்த உனது துயரைமாத்திரம் கண்டு உள்ள முருகிக் கண்ணீர் சொரிவதற்கு அந்தச் சாக்கிய ராஜ்யத்தின் கண்களில் ஒரு துளியேனும் மிஞ்சவில்லை. பிதாமகரே, நான்கு ஐந்து நாட்களுக்கு முன், அந்தச் சேனையில் சேருவதற்கு முன், நானும் அவ்வாறே வாயிலில் நின்று எனது ஆருயிர் அன்பனை எதிர் பார்த்துத் துயருற்றேன். (பெருமூச்சு விட்டு திகைத்து தனக்குள்) ஆ! என்ன சொல்லிவிட்டேன்.

என் மனம் மீறிவிட்டது. சிக்கலிலிருந்து நழுவு கிறது; அறிவே உறுதிகொள்.

விக்ரமர் : அவ்வாருயின் வீர வாலிபனே, நீ ஏன் கலக்கமடைகிருய்? தைரியம்கொள் மனதில் தோன் றியதைச் சொல்.

சுலோசனன் : (தேற்றிக்கொண்டு) சுவாமி, மன்னிக்க வேண்டும். என் பேச்சு சற்று திணறிவிட்டது. என் மனம் என்ன சொல்லுகிறது என்று கேட்டீர்கள்! ஆ! போரில் இறங்குவதற்கு முன்பாகவே அரசன் கெட்ட பிரசாரம் செய்வோரைச் சிறையில் அடைத்து விடுகிருன். அதைப்போலவே என்னுடைய மனதை அறிவானது சிறையிலிட்டு அதன் வாயை மூடி முத்திரையிட்டுவிட்டது; மேலும் விவேகம் என்னும் கடுங்காவலேயும் நியமித்துள்ளது. ஆதலால் என் மனதில் அபிப்பிராயம் என்பதேயில்லே. ஆனுல் ஒரு எண்ணம் உண்டு. சேனுதிபதியின் உறவினுல் சொல்லுகிறேன். சேனுதிபதியின் உயிருக்காக ராஜ் யத்துக்கும் மனித முறைக்கும் கீழான கோழைத் தனமே பொருந்தும். சரணுகதி யடைந்து என் றென்றும் மாசுபடுவதைக் காட்டிலும் நம் எல்லோ ருடைய உயிரையும் பலிதந்து பகைவன்மேல் வஞ் சம் தீர்த்துக் கொண்டே போர்முனேயில் முற்படு வோம் அதுதான் பொருத்தமானது என்றே எனக் குத் தோன்றுகிறது. என்னுடைய தீர்மானம் என்ன வென்ருல் என்னேப் பொறுத்தமட்டில் நானே வல்ல பன் தங்களது மகன், இயல்பான வீரன், சாக்கியச் சேனுபதி, ஒரு வீர மகளின் கணவன்—வல்லபரது சிரச்சேதத்துக்கு நான் சம்மதிக்கும் காரணம்

அதுவே. நாம் சரண் புகுந்து அவர் விடுபட்டாலும் அவரது கொலைக்கு நாம் அஞ்சினோம் என்று அறிந்து அவர் தானே சிரச்சேதம் செய்து கொள்ளத் தவற மாட்டார் ஐயா, சரணம் இல்லை சமர் தான்; ரணம்தான்; யுத்தமேதான்-அதுவே எனது கடைசி வார்த்தை.

விக்ரமர்: நன்று. நன்று, மணவாழ்வு பூண்ட இளம் வீரனே. வயது முதிர்ந்த துறவியரும் தோல்வியுற்றுத் தலை சாய்க்கும் வண்ணம் மனத்தையடக்கத் துணிந்து விட்டாய். இது முற்றிலும் உண்மையே அடா, மனிதன் தனது கரத்திலுள்ள துணிப்பந்தைச் சகஜமாக எறிந்துவிடுவதைப் போலவே மண வாழ்விலும் வீரன் தர்மம் சேதம் இவைகளுக்காக நீதியான போரில் தனது தலைவியைத் தனது கையால் வெட்டி எரித்துவிடுகிறானே. இவனைக் காட்டிலும் புலனடக்கித் தொடர்பற்றுப் பற்றற்ற துறவி எவன் இருக்கமுடியும்? கேளுங்கள்—சேனைத் தலைவர்களே. இந்த யுத்த சபையின் இறுதியான சொல்லைக் கேளுங்கள், இவ்விள வீரன் சரண்புகச் சம்மதித்திருந்தால் அதுவே பெரும்பான்மை யோரின் முடிவாக இருந்திருக்கும். ஆனால் இவனது முடிவுரை போரே என்றாகிவிட்டது. தவிர நீங்கள் இருவரும் மாறுபட்ட முடிவைச் சொன்னீர்கள் ஆகையால் கடைசி முடிவு என் எண்ணத்தையே பொருத்து நிற்கிறது. எனது முடிவான தீர்மானம் இதுவேதான். அந்த இளம் வீரனின் முடிவுரையே சாக்கிய ஜாதியின் முடிவுரையுமாகும். அதாவது சரணம் அன்று; சமர்தான், ரணம்தான், சென்று

வாருங்கள். நான்கு தினங்களாக இடைவிடாமல் போர்புரிந்த படைக்கு சற்று ஓய்வுதந்து நாளையே விண்ணினின்றும் அடி விழுவதேபோல் பகைவன் மீது பாய்ந்து விழுங்கள். சாக்கிய மக்களின் கடைசிச் சொல்லை உச்சரித்துக் கொண்டே செல்லுங்கள். யுத்தசபையைக் கலைத்து விடுங்கள்.

எல்லோரும்: சரணம் அன்று, சமரேதான், சரணம் அன்று. சண்டையேதான்; கொன்று வீழ்த்திக் கொண்டே மரணம்.

## காட்சி 5

*(ஆண் கோலத்தில் சுலோசனையும் நளினியும்)*

சுலோசனை: (இங்கும் அங்கும் பார்த்து) நளினீ. பார்-இதோபார். என் நெஞ்சிலே ரத்தக்கறை தெரிகிறதே. ஏனடி, நான் ஒரு பெருங்கொலை செய்து விட்டு வந்திருக்கிறேன்.

நளினீ: மகாராணி, இது என்ன? நீங்கள் இன்று போருக்கு வந்து மூன்று நாட்கள் ஆகிறது. இந்த மூன்று நாளும் நம் நாட்டுப் பகைவர்களின் ரத்தத்திலே குளித்து வந்திருக்கிறீர்கள். புகழ் பெற்ற போர்முனையில் வீர மாதரின் மீதுள்ள ஆடையிலே எதிரியின் குருதிபட்டு அது சிவந்து விளங்குவது சகஜம் தானே.

சுலோசனை: அடீ, மார்பின் மீதுள்ள ஆடையன்று. மார்பின் உள்ளே இருக்கும் நெஞ்சிலே, இதயத்

திலே, பார்! ஒவ்வொரு நாளும் பகைவரின் படை வீரர்களை வெட்டி வீழ்த்தும்போது அவர்களது ரத்தம் பீறிட்டுத் தெறித்ததால் மார்பின் மீதுள்ள வஸ்திரம் சிவப்பு நிறம் அடைந்துள்ளது; ஆனால் அதன் கறை யொன்றும் உள்ளத்தின் அகன்ற வெண் பரப்பில் படுவதில்லை. ஆனால் நளினீ, இன்று நான் ஒரு நிரபராதியை, பழி பாவம் அற்ற வனைக் கொலைசெய்து வந்திருக்கிறேன். தீயோன் ஒருவனை இரகசிய மாகவோ வெளிப்படையாகவோ செய்த கொலையன்று; ஆனால் நல்லான் ஒருவனது கொலை; என் தொடையின் மீது நம்பிக்கையோடு நித்திரை செய்யக் கழுத்தை வைத்தவனுடைய கொலை, அந்த ரத்தக்கறை என் இதயத்தின்மேல் பரந்து வந்தது போல் தோன்றுகிறது. அந்த பயங்கரக்கொலையை நினைத்தாலும் யாரோ என்னைக் கொலைகாரி யென்று கூவிப்பிடிப்பதற்காகத் துரத்தி வருவதுபோல் அச்சம் உண்டாகிறது. அதனால் இந்தக்கொலையின் அடையாளமே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். ஆனால் இதோபார், என் நெஞ்சின் மீது அந்த மாசற்ற உத்தமனின் ரத்தக்கறை எவ்வாறு பாய்ந்தி ருக்கிறது தெரியுமா-அடி, மெல்ல மெல்ல என் உள்ளத்தைக் காண்பாய். என் கண்களுக்குள்ளே குனிந்து பாரடி, என் இதயம் புலப்படும். செய்நன்றி கொன்ற கொலைப்பாதகத்தின் ரத்தக்கறை இதயத் தில் அப்படியே ஒட்டிக் கொள்ளுகிறது என்று சொல்லுகிறார்கள்; அதிலும் நான் சிந்தியது ஒரு காதலனது ரத்தம்.

(பாடுகிறாள்)

*அன்பெலாம் என்மேல்வைத்து, இதழிலே முத்தமிட்டு,*
*இன்பமாய் என்தொடை மீதே கண்வளர்ந்த போதினிலே*
*கொஞ்சியவாறு அவன்கழுத்தை வெட்டியந்தரத்தத்தை*
*வஞ்சனையால் புழுதிமேல் சிந்திவிட்டேனே, தோழி.*

நளினீ: சுலோசனா மஹாராணி யம்மாளே, இது என்ன இப்படிப் பேசுகிறீர்கள்? யாருடையகொலை? அன்பன்யார்? வீரப்பெண்மணியே, இப்படி திடீரென்று ஏன் மாறு பட்டிருக்கிறீர்கள்? எனக்கு பயமுண்டாகிறது அது என்ன வென்று தெளிவாகச் சொல்ல மாட்டீர்களா?

சுலோசனை: என் அன்பன் யாரென்று உனக்குத் தெரியவில்லையா? அடீ, யார்மீது நான் அன்பு கொண்டிருந்தேனோ, எவன் என் மீது அன்பு கொண்டிருந்தானோ, அந்த என்னுடைய வல்லபன். நளினீ, நான் வல்லபனைக் கொலை செய்து விட்டு வந்திருக்கிறேன். வாளினால் கொல்லவில்லை. அடி, அத்தகைய நன்றி கெட்டவளுக்கு வாளின் முனையும் மழுங்கிப் போகிறது. இதோ பார், என்னுடைய நாவின் முனை. நன்றிகெட்ட பாவியான நான் செய்துள்ள கொலையை வாளின் நுனியும் செய்யக் கூடும். அந்தக் கொலையை நாவின் நுனியாலே செய்துவிட்டேன். நளினீ; எனது நாவினால் என்னுடைய வல்லபனையே சிரச் சேதம் செய்து விட்டேன். அன்பைக் காட்டி நடித்த வண்ணமே என் கணவனைக் கொன்றுவிட்டேன்.

*(நடுங்கிய வண்ணம் மஞ்சத்தின் மீது விழுகிறாள்)*

நளினீ: ஏதோ அவச்சொல்லையே பேசுகிறீர்களே; மகாராணி! மகாராணி! இது என்ன? சுவாசக்

காற்று சிறிதேனும் வரவில்லையே! இப்போது என்ன செய்வேன்? சுவாமி, சுவாமி. யாரேனும் திடீரென்று நமது கூடாரத்துள் வந்து விட்டால் இந்நிலையில் நமது மாறு வேடம் பகிரங்கமாகி விடாதோ?

சுலோசனை: உண்மையில் இப்போது நான் ஆண் கோலத்தில் இல்லையா? இந்த என்னுடைய நடிப்பு, நாடகத்தை நடித்துக் கொண்டிருக்கும்போது நாடக மேடையிலிருந்து வேடம் தரித்த படியே சபை நடுவே யுள்ள நண்பனைக் கண்டதும் சட்டென்று கூப்பிடும் பக்குவமில்லாத நடிகனைப் போல எனது மறதியான நடிப்பு சிரிக்கக்கூடியதாகிறது. இது உண்மையே. நீ மாத்திரம் உனது ஆண்வேடத்தில் அப்படியே நம் கூடாரத்து வாயிலில் காவல் புரிந்தபடி யமர்ந் திடு. நான் உன் அறையில் என் மனத்தோடு சிறிது நேரம் பேசிப் புலம்புகிறேன். ஆண்கோலம் தரித்து நான் வெளி வந்தது முதல் என் எளிய உள்ளத் தைச் சிறையிலடைத்து அதன் வாயையும் பூட்டி விட்டேன். விலங்கு பூண்ட வல்லபன் கை என்று திறக்குமோ அன்றே சிறைப்படுத்திய என் நெஞ் சையும் திறப்பதாக உறுதி சொன்னேன். ஆனல் அவ்வுறுதி இந்நேரம் நிற்க இயலாத படி நானே செய்துவிட்டதுடன். நளினீ, இதற்குக் காரணம் என்ன வென்று கேட்கிருய்? கேவலம் நான் சம் மதிக்காத காரணத்தினுல் சத்துருவைச் சரணடைய முடியாமல் போய்விட்டது. அடி, சாக்கியர் சரண் புகாவிடில் வல்லபனை வெட்டித் தள்ளிவிட எதிரி உத்திரவு செய்திருக்கிருன். இன்று இருபதாவது இரவு. நாளை விடிந்ததும் எதிரியின் மீது கடை

சித்தாக்குதல். இந்நேரம் எங்கள் யுத்த தீர்மானம் அவன் காதுக்கு எட்டியிருக்கும். உடனே அடுத்த விஞடியே அவனுடைய கரத்திலுள்ள வாள் என் வல்லபனுடைய கழுத்தின் மேல்.......ஐயோ, ஐயோ, இனி என் வல்லபர் என்னை எவ்வாறு சந்திப்பார்? என் உள்ளத்தில் உள்ள சேதிகளைப் பேசவோ பேசிக்கேட்கவோ இப்பொழுது எவ்வாறு வர முடியும்? என்யோசனையை, என்முடிவுரைக் கேட்க உலகம் முழுவதும் எஞ்சியிருக்கிறது இந்த யோசனையை, புத்திமதியை, இந்த எட்டுநாட்களாக சொல்லிக்கொண்டே யிருக்கிறேன். ஆனல் இப்போழுது தனிமையில் என் உள்ளத்தில் உள்ள விஷயங்களைச் சொல்லிக்கொள்ள என் மனத்தைத் தவிர வேறு எவரும் எஞ்சிநிற்கவில்லை. ஆதலால் இப்போது சிறைபட்ட என் இதயத்தின் மூடியைச் சற்று திறக்கப் போகிறேன். இப்பொழுது சிறிது நேரம் என்னுடையவளாகவே இருப்பேன். என் நாடகத்தின் காட்சிகள் யாவும் முடிந்தன. கடைசி காட்சி மட்டும் இப்போது எஞ்சியுள்ளது. நாடக ஆசிரியரின் பாடத்தை உருப்போட்டு அப்படியே பேசிவிட்டு. இரண்டு காட்சிகளுக்கும் இடையே உள்ள நேரத்தில், திரை மறைவில் சுய உருவங்கொண்டு சுய நிலைமை பெற்று, நடிகர்கள் தங்களது சொந்தப் பேச்சில் ஈடுபடுவதைப் போலவே நானும் சற்று ஈடுபடுவேன், விவேகமற்ற வீரவார்த்தைகளை மட்டும் கிளிப்பிள்ளைபோல் சொல்லிவிட்டு. இப்போது கணநேரம் என் சொந்தப்பேச்சில், சிறுபிள்ளைத்தனமான பேச்சில், என் மனத்தோடு. ஏகாந்தத்தில் இருக்கப்போகிறேன். ஆமாம், ஏகாந்தம்,

உயிரினும் இனிய ஒருவனின் உயிருக்கு உலைவைத்த ஏகாந்தம், போ, உன் அறைக்குள்ளே. நளினீ, இந்த எனது நாடக வேடத்தைச் சற்று களைந்தெறி. பிறகு காவல் தரும் வாயிலில் போயிரு.

(இருவரும் உள்ளே போகிறார்கள். உள் திரை திறக்கிறது)

**சுலோசனை:** (பெண் வேடத்தில் கண்ணாடியின் முன் பாக) ஹும், இப்போது என்னைத் தெரிந்து கொண் டேன். இது நான் தான், அந்த சுலோசனை தான், முன்னே இப்படித்தான் இருந்தேன். ஒரு எட்டு பத்து நாட்களுக்குமுன் கையால் காமதேவனுடைய பூஜைக்காக மாலை தொடுத்துக் கொண்டே, மாலைப் பாட்டை வாயில் பாடிக்கொண்டே, மனதில் என் வல்லபனை யெதிர்பார்த்துக்கொண்டே, என்னுடைய வீட்டில், படுக்கையறையில் அறியாத சிறு பிள்ளைத் தனமான அந்த ஏகாந்தத்தில், இப்படித்தான் இருந் தேன். ஆனால் பிறகு என்ன நடந்தது? அதை மறந்து விட்டுவா; மனமே, என்னுடன் பேசு. விவேகம் என்னும் உன் மாமியார் நித்திரை செய் கிறாள். இந்த நேரம் உள்ளபடி பேசு. வீட்டில் தினசரி வேலை முடிந்தபிறகு, மாலை வேளையில் சிறிது நேரம் ஆலயம் செல்லவோ ஓய்வுகொள் ளவோ மாமியார் சொன்னால் அந்த நேரம் மாட்டுப் பெண் கவலை யற்ற நகையோடு பேசிக்கொண்டிரு பாள் அல்லவா? எனது வாழ்வின் நாளும் கழிந்து மாலை நெருங்கி வருகிறது. ஆகையால் மனமே, போ. தாமதமின்றி கோவிலுக்குப் போய் வரலாம் நட. (வல்லபனது படத்தை யெடுத்துக்கொண்டு) இதோபார், என் கடவுளே, என் வல்லபனே, என்

ஆருயிர் அன்பனே, இப்படிக்கொஞ்சம் மார்போடு அணைந்து கொள்ளுகிறேன்.

(பாடுகிருள்)

ஆருயிர் போலும் அன்பரே,
இன்றிரவு ஏகும் முன்னே
காரிகை யென்னை ஓர் முறை மார்பில்
ஏற்றுக் கொள்ள மாட்டீரா?
ஆயுளும் தனமும் இல்லையாயினும்
யாவருக்கும் ஒரு மரணம் உண்டே
நேயரே, உமக்கது என்றும் இல்லையே
நானும் நீரும் தனித்த ஏகாந்தத்தில்—(ஆ)

ஆஹா, இத்தனை நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஏகாந்தத்தில் என தன்பனுடன் இவ்வாறு சகஜமாகப் பேசும்போது என்னுள்ளத்தில் எவ்வளவு குதூகலம் தோன்றுகிறது! சீக்கிரமே திரும்பி வருவதாக இருந்தீரன்றே? நமது மனைவியின் முதலாண்டு நிறைந்தது என்று அந்த ஆண்டு நிறைவின் விழாவைக் கொண்டாட இருந்தீர் அல்லவா? அந்த விழாவில் எல்லா நலனுக்கும் உறைவிடமான காமதேவனது பூஜையை நடத்த வேண்டுமல்லவா? அப்படியிருக்க சீக்கிரமே வரவேண்டுமல்லவா? காரணமில்லாமல் மீண்டும் கோபம் காட்டி நான் இப்போது காலம் கழிக்க மாட்டேன். விளையாட்டுக்கேனும் வாய் மூடி மௌனமாக இருக்க மாட்டேன். நான் கேட்டுக் கொள்ளுவதெல்லாம் இது தான். இப்போது மறுபடியும் சொல்லுங்கள். பெண் என்பவள் புருஷருக்குக் கால் விலங்குதானு அல்லது

ஊக்க மூட்டி விலங்கையுடைக்கும் கூட்டாளிதானு? அன்பரே, இந்தப் போரில் கொடிய எதிரிகளை யழித் தீரல்லவா? அதுபோலவே உமது மனைவியும் அக்கொடிய எதிரிகளை யழித்திருக்கிருள். தங்கள் கரத்தினின்றும் வாள் நழுவிய பின்பும் நான் பகை வனுக்குக் காட்டிக் கொடுக்கவில்லை ஆதலால் காதல் வீரரே, நான் உங்களுக்கேற்ற மனைவிதானல்லவா? இப்போது சொல்லுங்கள் பெண் என்பவள் ஆட வனுக்குக் கால் விலங்கா? அன்றி ஊக்கமூட்டும் கூட்டாளியா? ஆண்களின் குறைகளைப் பூர்த்தி செய்பவள் அல்லவா? இந்தக் கேள்விக்கு எத்தகைய விடை தந்து என்னை மீண்டும் திணரச்செய்வீர் என்று எனக்கு நன்ருகத் தெரியும். ''நீ சொல்வது உண்மையே என்று வைத்துக்கொள். ஆனல் உனக்கு குரு யாரோ? நீ யாருடைய சிஷ்யையோ?'' என்று நீங்கள் கேட்பீர்கள். தாங்களே தான் எனது குரு. நன்று; வல்லபரே; ஆண்மையின் விதிகளை யும் விதிவிலக்குகளையும் நீங்களே சூத்திர முறையில் எனக்கு எடுத்துக் காட்டினீர்கள். ஆ! தர்மத்தையும் அதர்மத்தையும் ஆராய்ந்து விளக்கிக்காட்டினீர்கள், சூதறியாத சிவனர்மீது பஸ்மாசூரனைப்போல, கடைசி யில் தங்களது உயிருக்கே வந்து விட்டது, பிறகு நடந்த யுத்த சபையில் தங்களுடைய தலைமீது தான் அந்த ஆராய்ச்சியின் தத்துவம் கைவைத்துவிட்டது, ஆ! இத்திரிய நாசத்தையே இந்திரிய ஜயம் என்று சொல்வார்கள். ஆனல் அவ்வாறு இந்திரிய நாசம் செய்ய வேண்டியதில்லை. உலக நன்மையின் பொருட்டு முறைப்படியான சாதனங்கள் பயன் படாதுபோகும் போது தனித்த ஆளின் சுகங்களை

பலிதந்திட ஆயத்தமாயிருப்பதுவே உண்மையான இந்திரியநாசமாகும்; இதுவே உயர்ந்த கர்மயோகம். இதைச் செய்யும் சம்சாரி துறவியைப் போலவே விதேக முத்தியையடைகிருன் இதைத்தானே உங்கள் தந்தையாரின் தர்ம சூத்திரம் என்று சொல்லி இதன் படிதானே கங்கணம் கட்டிக்கொண்டு நடந்தீர்கள். எனக்கும் அந்தக் கங்கணத்தையே கட்டினீர்கள் நீங்கள் கற்பித்தபடியே நானும் நடந்துகொண்டேன். அதில் தவறிருந்தால் அது உங்கள் படையில் ஒழுக்கம் குறைந்தால் தான் ஏன் ஏன்று கேட்பீர் களா? காரணத்தைச் சொல்லுகிறேன். அந்த யுத்த சபையில் அந்தக்கொடிய முடிவைச் சொன்ன வள் நானல்ல. சாக்கியச் சேனுதிபதி வல்லபரு டைய நெருங்கிய பாடங்களிலும் ஒழுக்க முறையிலும் நன்கு ஈடு பட்ட அவரது சுதேச வீரன் ஒருவன் தாம் அவ்வாறு முடிவு சொன்னது, ஆனல் இப் போது மாத்திரம் நான் சுலோசனை, எனது வல்ல பரின் சிறு பிள்ளைத்தனமான தோழி; அவரது நன்மையை நாடும் மங்கை. ஆ! காமதேவனின் பூஜைக்காக நான் பூ தொடுத்துக் கொண்டிருந்தேன், தாங்கள் அப்போது புறப்பட்டீர்கள். ஆ! அம்மா, என்னவெல்லாம் நடந்தது!

அவள் என்ன தவறு செய்துவிட்டாள்? அழி யக்கூடிய இவ்வுலகில் பூக்கள் வாடித்தான் போகும், இதழ்கள் உதிர்ந்துதான் போகும்; வாசனையும் போய்விடும். ஆனல் இதற்காக உலகத்தின்மீது குற்றம் சாட்டவா? உலகை நொந்து பலன் என்ன? காரணம் என்னவென்ருல் இவ்வுலகில் பூக்கள்

பூத்தே தீரும்; வாசனையும் வீசியே தீரும்; ஆதலால் உன் துயரை மறந்துவிடு.

[பாடுகிருள்]

*அரும்புகள் எல்லாம் கட்டவிழ்ந்தலர்ந்தே*
*திரும்பத் திரும்ப மண்ணில் விழுந்தாலும்:*
*நிரம்பிய வன்னப்பூ விதழ் எல்லாம்*
*துரும்பென வாடி யழிந்தாலும்,*
*அரும்பினிலே யந்தக் குறுநகையின்று*
*திரும்பவும் வாரா தொளிந்திடுமா?*
*நிரம்பிய பூக்களும் இதழ்விரியாமல்*
*அரம்பைபோல் வியனுல கோடிடுமா?*

ஆ! இதை மறந்துவிட்டேனே. பூக்கள் மலர்ந்திருக்கின்றன. அன்போடு இன்பமாக யாவரும் ஏற்றுக்கொள்ளுகிருர்கள். எத்தனை அன்பு! எத்தனை இன்பம்!! ஆ! எத்தனை அலங்காரம்? எத்தனை புஷ்பாஞ்சலி பூஜை! அதை ஆண்டவனுக்கு இட்டு வணங்கும் பாக்கியத்தை நான் பெறவில்லை. அன்றைய தினம் நேரம் கழித்து வந்ததும் காதலின் மௌனத்தில் காலம் மெல்லப் போய்க்கொண்டிருந்தது. ஆ! அப்பொழுதே அதை விரைவில் தொடுத்து அவரது கழுத்தில் நான் போடவில்லையே—ஒரு தரமேனும் உங்களிடமிருந்து பெறவேண்டும் என்றும் சொல்லவில்லை. ஆனுல் இன்னம் ஒருமுறை கூடுவேன்; எவ்வாரு? சுவர்க்கம் இருக்கிறதென்று சொல்லுகிருர்களே—தீயோரை அழிக்கும் அறப்போரில் கொல்லப்படுவோர் சுவர்க்கம் போவதாகச் சொல்லுகிருர்களே. அப்படியானுல் என் வல்லபர் கொல்லப்பட்டு சுவர்க்கம் சென்று தேவனுக வீற்றிருப்பார். போரில் இரவில் வாளெதிர் நின்று

சாவை ஏற்று எனதன்பனைத் தொடர்ந்தே நானும் சுவர்க்கம் போவேன். அப்போது இந்த மாலை வேண்டும். விண்ணுலகில் இம்மண்ணுடல் தெய்வி கம் அடையுமாயின் இப் பூக்களும் அங்கு தெய்வீ கத்தை ஏன் அடையாது? இந்த இரவு கழிந்ததும் நாளை இந்நேரம் சுவர்க்கத்தின் வாயிலில் அடி யெடுத்து வைத்தவுடன் என் வல்லபர் ஒரு தேவன், நான் ஒரு தேவ மங்கை, இது தெய்விகப் பூமாலை— ஆம், பாரிஜாத மாலையாகிவிடும். அறைகுறையாக நின்ற என் காமதேவன் பூஜையும் முடியும். என் வல்லபன் தென்பட்டதும் அவரது கழுத்தில் இப்படிப் போடுவேன்—ஒரு முறை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா என்று கேட்பேன்-அவர் தனது கை களை இப்படி விரித்து அந்த அகன்ற மார்பில் என்னை இப்படி ஏற்றுக்கொள்வார். என்னுடைய கைகளை அந்த வீரத் தோள்களில் இப்படி வைத்துச் சாய்ந்து, அந்த நெஞ்சின்மீது இப்படிக் கண்மூடிக் கொண்டே காதல் சமாதியில் அவருடன் இப்படியே லயித்துப் போவேன்—(இதற்குள் அவளது விரித்த கரங்களில் வல்லபன் வந்து நிற்கிறான்.)

வல்லபன்: சுலோசனா, என் அன்பே!

சுலோசனை: யார்? வல்லபனா? ஆச்சரியம்! பக்த னுடைய தியானம் உண்மையானால் தெய்வம் நேரே தோன்றும் என்பார்களே, அது சிறிதேனும் பொய் பொய் அன்று; நான் சுவர்க்கத்தில் இருக்கிறேனா அல்லது கனவிலா? சுவாமி, நீங்கள் என் மனத்தின் கேவலம் தோற்றம்தானா? ஆ! யாரை நான் உண்மையென்று நினைத்தேனோ அவர் மனத்

தோற்றமாகப் போஞரா? யாரைத் தோற்றமாக எண்ணுகிறேஞே அவர் இப்படிக் கண்ணெதிரே நிற்கிருர். இந்தத் தோற்றம் உண்மையேதான். அப்படியாஞல் என் வல்லபரே, சொல்லுங்கள். தாங்கள் வெறும் தோற்றம்தாஞ? அல்லது உண்மையாகவே அந்த உண்மை வல்லபரேதாஞ? நீங்கள் இருப்பது மண்ணுலகம்தாஞ அல்லது சுவர்க்கமா?

வல்லபன்: அன்பே, நான் சாக்ஷத் வல்லபனே. இந்த மாய உலகில் முன்போலவே இப்பொழுதும் உண்மையாகவே இருக்கிறேன். எனக்கும் இது மறு பிறப்போ என்றுதான் ஐயம் தோன்றுகிறது. ஆஞல் அதையெல்லாம் மறந்துவிடு. இப் பிறப்பாஞல் என்ன? மறுபிறப்பாய் இருந்தால்தான் என்ன? சொர்க்கமாஞல் என்ன? சொர்ப்பனமே யாஞலும் என்ன? உண்மையாஞல் என்ன, வெறும் தோற்றமே யாஞலும் என்ன? ஒரு விஞடிக்குள் நாம் சந்தித்திருக்கிரேம். ஆதலால், வா; இந்த ஆலிங்கனமான இன்பக் கடலில் இருவரும் ஒரே மூச்சாய் குதித்து முழுகலாம், வா–(ஆலிங்கனம் செய்து கொள்ளுகிருர்கள்) சுலோசஞ!

சுலோசனை: வல்லபா!

வல்லபன்: எனக்குச் சிரச்சேதம் நேர்ந்தாலும் கவலையில்லை. ஆஞல் கொடும் பகைவனைச் சரண் புகுவது சரியன்று என்று உன் முடிவைத் தெரிவித்தது உண்மைதானே?

சுலோசனை: ஆம்! அன்பரே.

வல்லபன்: எனக்குக் கோபம் உண்டாகிறது.

சுலோசனை: இல்லை; அன்பரே, அது முடியவே முடியாது. நல்லது, இதோ ஒரு நொடிக்குள் திரும்பி வருகிறேன் என்று நீங்கள் அன்றைய தினம் ராஜ சபை சென்றீர்கள்; தேசீய யுத்தத்தில் முரசொலி கேட்டதும் என்னை அப்படியே விட்டுப் போய் வருகிறேன் என்று சொல்வதற்கும் வராமல், ஒரேயடியாய் போய்விட்டீர்களே! அது உண்மையல்லவா?

வல்லபன்: ஆமாம். கண்ணே, கடமை வீரனைப் பின்வாங்க விடாதே.

சுலோசனை: அப்படியானால் எனக்கு மிகவும் கோபம் உண்டாகிறது.

வல்லபன்: இல்லை; அன்பே, அது முடியாது-நீயொரு வீர மங்கையல்லவா?

சுலோசனை: அவ்வாறாயின் சாக்கியர்கள் சரணடைதல் கூடாது என்று நான் முடிவு செய்தால் உங்களுக் கோபம் வர நியாயம் இல்லை. ஏனென்றால் நீங்கள் ஒரு வீர ரத்தினம். ஆனால் அன்பரே, என் மனம் இன்னும் கலக்கமாய் இருக்கிறது. நம் முன் ஒருவரோ அன்றி இருவருமோ கனவு காண்கிறோம். இல்லாவிடில் நாம் இருவரும் கூடிய வாய்ப்பு எவ்வாறு நேர்ந்தது? தங்கள் விடுதலை எவ்வாறு ஏற்பட்டது? நான் இங்கிருப்பதை எவ்வாறு அறிந்தீர்கள்? உடனே சொல்லுங்கள்-விரிவாகக் கேட்பதை விட. புண்ணியவசத்தால் கிட்டியுள்ள இந்நேரத்தில், உங்கள் மார்பில் என்னையே மறந்து பேச்சற்று

செயலற்றுத் தூங்குவதே எனக்கு இன்பமாக இருக்கிறது. என்ருலும் அதைக் கொஞ்சமாவது கேட்க விருப்பம் உண்டாகிறது.

வல்லபன்: நான் அடிபட்டு எதிரியின் கையில் சிக்கிய பிறகு, சென்ற நாலைந்து நாட்களில் உனது வீரத்தால் சாக்கியர்கள் எதிரியின் படையை முறியடித்ததால் கோசலப் படையானது பலம் குன்றி, குலைந்து திகிலுண்டது. என் சிறையில் காவல் செய்த படை வீரர் இருவரும் காயமுற்று மயக்க மடைந்தனர். ஒரு நாள் ஒரு ஊரில் உள்ள உணவு யாவற்றையும் பகைவன் படைக்கு பலாத்காரமாகக் கொண்டு வர நேர்ந்த சாக்கியக் குடியானவன் அங்கு நிற்பதைக் கண்டேன். அவன் என்னைத் தெரிந்துகொண்டான். காவலர்கள் மயங்கியுள்ள அந்நிலையில் மிகுந்த துணிவுடன் சிறையைத் திறந்து என்னை வெளியேற்றினுன். அவனது தோழனைப் போல வேடம் பூண்டு நானும் எதிரியின் படைகளிலிருந்தும் நழுவினேன். நமது சேனையை யடைந்ததும் சேனுபதியும் என் தந்தையுமான விக்ரமசிம்மனிடமிருந்து யுத்த சபையின் முடிவை அறிந்து கொண்டேன். அச் சபையில் பகைவனிடம் சரண் புகுவதை வெறுத்து சாக்கிய ராஜ்யத்தின் நினைவிலும் களங்கத்தை யாதரிக்காத அந்த இளஞ் சிறுவனை, சாக்கிய மக்களின் தூய உருவமே போன்று விளங்கிய அவ்வீரனைக் காண விரும்பி, உன் கூடாரத்துள் வந்தேன். — வெளியில் நின்ற காவலாளன் என்னைத் தடுத்து நிறுத்தாமல் கலக்கமுற்றுக் காலில் விழுந்தான்—அவனது தலையைத் தூக்கிப் பார்த்தேன்.

அவள்தான் நளினி. அவளிடமிருந்து இரண்டு வார்த்தையில் எல்லாம் தெரிந்துகொண்டேன். சாக்கிய வீரத்தின் உருவாக நின்ற அந்தச் சிறுவன் என்னுடைய சுலோசனையே—சிறு பிள்ளைத்தன மாக எளிதில் குற்றம் கண்டு கோபிக்கும் என்னு டைய காதலியே—என்றறிந்தேன். இனி நாளைய கடைசிப் போரில் நான் சேனுதிபதியில்லை; இந்த எனது குட்டிச் சேனுதிபதியின் ஆணையின்கீழ் உள்ள சேனை வீரனுகவே இருப்பேன்.

சுலோசனை: இனி நாளைய விஷயம் நாளைக்கு; நேற் றைய விஷயம் நேற்றைக்கு. அன்பரே, கடைசி யான நாளைய தினமும் கொடிய நேற்றைய தினமும் கொண்ட கத்திரிக்கோலின் இடையே சிக்கிய இன்றைய தினத்தின் சிறிது நேரத்தைமட்டும் நினை வூட்டுங்கள். இந்த என்னுடைய வல்லபரின் ஆலிங்கனத்தில் உருகி லயித்து மறந்திருக்கும் அவரது சுலோசனையே நான் என்று மட்டும் நினை விருக்கிறது. அன்பரே. அன்று எவ்வாறு சென்றீர்களோ அவ்வாறே இன்றும் வந்தீர்கள்; இரண்டும் சாவைத் தரவல்லவை; எதிர்பாராதவை; இரண்டையும் சகிக்க முடியாது வல்லபரே, என்னைக் கொஞ்சம் தொடையில் ஏற்றுக் கொள்ளுங்கள். காம வேளின் பூஜைக்காக வாடியுள்ள என் மாலையை இப்படிக் கழுத்தில் சற்று அணியுங்கள். என் கண் களிலிருந்து பெருகும் நீராஞ்சனத்தால் ஹாரத்தி எடுக்கட்டுமா? நாதா, எனக்கு நிரம்ப நித்திரை வரு கிறது. காமதேவனே, எனது காதலின் கடைசிச் சந்திப்பின் இரவில் இந்த இனிய மயக்கத்தில் என்

வாழ்வின் கடைசித் திரையும் விழச் செய்வாயாக. ஆனால் சற்று பொறுங்கள். நாளை விடிந்ததும் போருக்குக் கிளம்ப வேண்டும். காதல் படுக்கையின் மீது போலவே போர்க்களப் படுக்கையிலும் உங்களுடன் கூடியே உறக்கம் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆசையை நிறைவேற்ற ஒன்று வேண்டும். இல்லாவிடில் போரின் ஆசையால் என் காதல் வாழ்வின் நித்திரையிலும் இடையிடையே திடுக்கிட்டு எழுந்திடுவேன்–நாதா. நாதா எங்கே இருக்கிறீர்கள்?

வல்லபன்: என்ன, சுலோசனா? சுலோசனா. இதோ நான் இங்கேயே இருக்கிறேன் என்ன? என்ன?

சுலோசனை: ஏதோ விதமான பொறுக்க முடியாத கலக்கம் எனக்கு உண்டாயிருக்கிறது. நல்ல மயக்கம் தரும் மூர்ச்சை-இல்லை, இல்லை, இனிமையான மரணம்.

வல்லபன்: இதன் அர்த்தமென்ன? பேசிக்கொண்டிருக்கும் போதே என் காதலி நினைவு தவறிவிட்டாளே, இவள் நாடி........சீச்சீ, வஞ்சனையறியாத காதலே, விவேகமற்ற மனமே, இது மூர்ச்சையன்று; என் காதலியின் வாழ்வின் இழை மரணத்தில் சுற்றிக்கொண்டிருக்கிறது. யமனே, நீ அவளை வலிய இழுத்துச் செல்லப் பார்க்கிறாய். ஆனால் நான் விடமாட்டேன். எதிரியின் கையில் நான் அகப்பட்ட போது உனது பாசம் என் கழுத்தில் விழுந்தது. நான் நழுவி விட்டதைக் கண்டு வெகுண்டு என்னைத் தொடர்ந்து இங்கே வந்திருக்கிறாயா? அவ்வாறானால் உன் நியமம் தவறிவிட்டது–

இது என் கழுத்து. அது என் காதலியின் கழுத்து. பயிற்சியற்ற வில்லாளி போல குறி தவறி பாசத்தைப் போடுகிருயே-இதை என் கழுத்தில் போடு- ஐயோ, இவள் போய்விட்டாளே. எனது கொடிய ஆலிங்கனத்தில் சிக்கியது போல் தோன்றி நழுவிப் போய்க்கொண் டிருக்கிருளே-இனி என்ன செய் வேன்?... ....என் காதல் களஞ்சியமே, சுலோசனு, செல்வமே-என்ன செய்வேன்? நளினி, நளினி!

நளினி : (உள்ளே நுழைந்து) சுவாமி, இது என்ன? தாங்கள் திடீரென்று விசனத்தால் கலக்கம் கொண் டிருக்கிறீர்கள்?

வல்லபன் : மூர்ச்சையிலிருந்து வழுக்கி என் சுலோசனை திடீர் என்று மரணக்குழியில் நழுவி விழுந்து விட்டாளே.

நளினி : மகாராஜா, இது என்ன அவச்சொல்? இது எங்ஙனம் நேர்ந்தது?

வல்லபன் : அடீ, எப்படி என்ருல் என்ன? சில நாட் களுக்கு முன் யுத்த சபையில் அவள் எனது கொலைக் குச் சம்மதித்தாள். அதற்குப் பழிவாங்குவதுபோல் இந்தச் சண்டாளன் வந்து சேர்ந்தேன். முன்பு அவளைத் தனியே திடீரென்று விட்டு யுத்தகளத்தில் மரணத்தின் வாயில் புகுந்தேன். அதனல் துயர் பொறுக்காத அவள் நான் திடீரென்று வந்ததும் சந் தோஷத்தால் அதிர்ச்சியுற்று இறந்துவிட்டாள். நளினீ, துக்கம் என் நெஞ்சில் அடங்கமாட்டேன் என்கிறது. இந்தச் சேனை முகாமின் ஒழுக்கத்தை மீறி எனது :ஊமைச் சோகம் ஆரவாரம் செய்யப் பார்க்கிறது.

நளினி : (உற்றுக் கேட்டு) ஆரவாரமா?—இது என்ன? எங்கேயோ உரத்த ஆரவாரம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறதே.

வல்லபன் : அடீ, ஆரவாரமன்று, அது என் நெஞ்சிலுள்ள ஊமைத் துயரத்தின் எதிரொலி.

*[போர்க்கொம்பு ஊதுகிறது. 'பகைவரின் படையெடுப்பு! எழுந்திருங்கள்!' என்று சொல்லிக் கொண்டே சாக்கிய வீரர்கள் வருகிறார்கள்.]*

சாக்கிய வீரன் : படையெடுப்பு: படையெடுப்பு. சேனாதிபதியே, பகைவரின் படைத் தலைவனான சண்டன் எங்கள் கூடாரத்தில் வடக்கிலிருந்து திடீரென்று படையெடுத்து வந்து தாக்குகிறான். பொழுது விடிந்ததும் பகைவரின் மீது நாம் கடைசி முறையாகத் தாக்குவதாயிருந்தோம். அதற்கு முன்னதாகவே சத்துரு திடீரென்று தாக்கிவிட்டான். இனி இந்த இரண்டில் ஒன்று பார்த்து விடவேண்டும் என்று சர்வாதிகாரியான விக்ரமசிம்மர் உத்திரவு தந்து விட்டார். எல்லோரும் அவ்விடமே சென்று பகைவரையடித்துக்கொன்று குவிக்க வேண்டும். இதுவே அவருடைய ஆக்ஞை.

வல்லபன் : தலையால் வணங்குகிறேன். இதோ எடுத்தேன் வாளை. எழுந்திரு. சுலோசனையே. நமது இனத்தின் சத்துரு, வந்துவிட்டான். கடைசி யுத்தம் என்று சொன்னோமே, அது இதுதான். எழுந்திரு. உலக நன்மைக்காகத் தனித்துள்ளவர் சுகத்தைத் தள்ள வேண்டுவதைப் போல், மரணத்தை

யும் கூட ஒரு கண நேரம் தள்ளி வைக்க வேண்டும்.

[மீண்டும் ஆரவாரம். 'முந்துங்கள். உறையிலிருந்தும் வாட்களையெடுத்து முந்துங்கள்' என்ற கோஷங்கள் கேட்கின்றன.]

சரி, முந்துகிறேன். நளினீ, நான் போகிறேன் போரில் அடியுண்டதும் என் அன்பின் அருகில் உயிரை விடுவதற்கு வருவேன். அதுவரை என் காதலியின் சவத்தைக் காப்பாற்று. நான் திரும்பி வராவிடில் அதை இந்தக் கொட்டகையோடு அக்னி தேவனுக்கு இரையாக்கி விடு, ஆ! அன்பே! இனி.... போகப் போக....உன் காதலின் கடைசி விடை.... போ, யுத்தவாத்தியம் முழக்கு; போருக்கு ஆயத்த மாகுங்கள்.

[படை வீரர்களோடு போகிருன்.]

சுலோசனை : (திடுக்கிட்டு விழிப்படைந்து) இது என்ன? ரணபேரி, போர்க்கொம்பு அல்லவா ஒலிக்கிறது (கையால் தடவிப் பார்த்து) வல்லபரே, என்னை யெழுப்புங்கள். கைகொடுங்கள். (திடுக்கிட்டெழுந்து) என் வல்லபர் போய்விட்டாரா? ஏன், அவர் வந்திருந்தார் அல்லவா? என்ன, இது எல்லாம் சொப்பனமோ?

நளினீ : இதென்ன புனர்ஜன்மம்! சகியே, வா. முதலில் என்னை நன்ருகத் தழுவிக்கொள். தேவீ, கலவரப்படாதே. வல்லபர் உண்மையில் வந்திருந்தார். ஆனல் எதிர்பாராத அந்த இன்பம் தாங்காமல் நீ

ஸ்மரணை தப்பிவிட்டாய். அது கண்டு நீ இறந்த தாக எண்ணி நாங்கள் புலம்பத் தொடங்கியதும் வட புறம் நமது படைமீது எதிரிகள் தாக்கினார்கள். அங்கே பெரும் போர்க் கலவரம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் உடனே அதில் வல்லபர் குதித் திறங்கினார்.

சுலோசனை: என்னை யிப்படியே போட்டுவிட்டுப் போய் விட்டாரா? போருக்குப் போகும்போது என்னை யெழுப்புங்கள் என்று நான் சொல்லியிருந்தேனே; ஏமாற்றி விட்டாரல்லவா?

நளினீ: மரணத்திலிருந்தும் மனிதர்கள் யுத்தத்துக்காக எழுந்திருக்கிறார்கள் என்று அவருக்கு எப்படித் தெரியும்?

சுலோசனை: தெரிந்திருந்தது. மரணத்துக்காக நான் மூர்ச்சை வாயிலில் அடிவைத்த போதே கண்டிப்பா கச் சொல்லியிருந்தேன். அதாவது கடைசி யுத்தத் துக்குமுன் மரணமாவது கொஞ்சம் ஓய்வு தரவேண் டும் என்று. வல்லபருடன் யுத்தமஞ்சத்திலும் உடன் படுக்கை கொண்டு என் ஆசையைத் தீர்க்க வேண்டாமா?

*[போர்முரசு முழங்குகிறது]*

நளினீ: இந்தப் பெரிய ஆரவாரத்தின் பயங்கர அலை கள் உனது கூடாரத்திலும் நுழைந்து விட்டனவா?

சுலோசனை: என்ன பார்க்கிறாய்? இந்தவாளை யுருவு கிறேன். இதோ அதில் குதித்துப் பாய்கிறேன்.

நளினீ: ஆனால் மூர்ச்சையினால் நீ மிகவும் களைத் திருக்கிறாயே.

சுலோசனை : இன்னும் நீ புரிந்து கொள்ளவில்லையே ஸ்மரணை தப்பியதால் களைத்துப் போகவில்லை; நான் மரணத்தினுல் செத்துப்போய் இருக்கிறேன். ஆனுல் வீரர்களின் சிரங்கள் துண்டுபட்டாலும் அவர்களின் முண்டங்கள் போர் புரிவதை நீ கேட்டதில்லையா? நளினீ, என் முண்டமும் அவ்வாறே போர் செய்யும். சாக்கியர்களுக்காகப் பழிவாங்கிக் கொண்டே, பகைவர்களின் தலைகளை யுருட்டிக்கொண்டே, எனது வல்லபர் எங்கிருப்பாரோ அந்த இடத்துக்கே போய்ச்சேரும்.

நளினீ : அப்படியானுல் இந்தப் பெண் வேடத்தையாவது மாற்றிக்கொள். மறுபடியும் பழைய ஆண் கோலத்தில்.... ...

சுலோசனை : அடி, அந்த வேடத்தின் பேச்செல்லாம் தீர்ந்ததடி. அப்போது என் ஆடை போரிட்டது. இப்போது நானே போரிடுவேன். பெண் வேடத்தில் தான் பவானி யுத்தம் செய்தாள். பெண் வேடத்தில் தான் வீரமங்கையருக்கு தைரியம் பத்து மடங்கு அதிகரிக்கிறது. நான் பெண் வேடத்திலேயே போரிடுவேன்.

*[அதே சமயம் 'கோசலத்துக்கு ஜயம். கொள்ளை யடியுங்கள், கொல்லுங்கள்' என்று கூவிக் கொண்டே கோசலப் படை வீரர்கள் வருகிருர்கள்.]*

நளினீ : பார், தோழி? இதோ சத்துரு.

படை வீரர்கள் : கொல்லுங்கள், உடையுங்கள்.

ஒருவீரன் : ஆனால் இவள் ஒரு பெண்.

இரண்டாவது வீரன் : ஆனால் இவள் சாக்கிய ஜாதி.

எல்லா வீரர்களும் : அப்படியானால் கொல்லுங்கள்.

சுலோசனை : அதோடு அவள் போரில் வல்லவள் என்று சொல்லிச் செத்துப்போங்கள்.

*[போர் துவக்குகிறாள்]*

எல்லா வீரர்களும் : கோசலத்துக்கு ஜயம்! (என்று கூவிக் கொண்டே சண்டையிடுகிறார்கள்.)

சுலோசனையும், நளினியும் : பழிக்குப்பழி. (கோஷமிட்டுப் போர் செய்கிறார்கள்)

*[படை வீரர்களில் சிலர் இறந்து விழுகிறார்கள். சிலர் பின்னடைய எல்லோரும் போரிட்ட வண்ணம் வெளியே போகிறார்கள்.]*

## காட்சி 6

*ஒருபுறம் சேனாதிபதி சண்டனும் மற்றொருபுறம் அவனது ஆட்களும் வருகிறார்கள்.*

சண்டன் : அடே, நமது சேனையில் மிஞ்சியவர்கள் இவ்வளவுதானா?

ஆட்கள் : ஆமாம், மகாராஜா, உங்கள் உத்திரவின் படியே இந்த பயங்கர யுத்தத்தில் எஞ்சிச் சிதறுண்டிருந்த கோசல வீரர்களை இரகசியமாக ஒருங்கு கூட்டி வந்திருக்கிறோம். பகைவர் பக்கமும் முழு

நாசமே நேர்ந்துள்ளது. ஐயா, சாக்கிய சேனுதிபதி சுலோசனன் யாரென்று தெரியுமா? உண்மையில் அது வல்லபனது மனைவி சுலோசனையே.

சண்டன்: ஒரு பெண்ணு? திடீரென்று எதிர்பாராத வண்ணம் இரவில் நான் தாக்கியபோது சாக்கியர்கள் யாவரும் வீரம் காட்டியே போர் புரிந்தார்கள். எனினும் யாவரினும் உயர்ந்த வீரத்தை அந்தப் பெண் காட்டியிருக்கிருள் என்பது உண்மையே. ஆ! ஆண் கோலத்தில் காலனைப் போலப் போர் புரிந்தாள். காரிருளிலும் வல்லபனைத் தொடர்ந்து கடும்போர் தொடுத்தேன். அப்போது அவள் காயமடைந்தும் இடைவிடாமல் சண்டை செய்து வந்ததை தூரத்தில் கண்டேன்.

ஆட்: அவள் அங்கு அநேகமாய் உயிரற்றவளாகி விட்டாள். சாக்கியப் படைகளில் விக்ரமன் ஒருவரே காயமுண்டும் வீழ்ந்திடாமல் சில துணைவர்களுடன் ரத்த ருசி கண்ட புலி போல் உங்களைப் பின் தொடர்ந்து வருவதைப் பார்த்தேன். எஞ்சியிருந்த சாக்கியர் யாவரும் கோசலவாட்களுக்கு இரையாயினர். சேனுதிபதி சண்டரே, உங்களது......

சண்டன்: சாக்கியர்கள் இன்று ஆசை முழுவதையும் கைவிட்டுப் போரிட்டார்கள். போரின் ஆரம்பத்தில் அவர்கள் இந்த உறுதியைக் காட்டியிருந்தால் நாம் பின்வாங்கியே யிருப்போம். சாக்கியரின் கடைசிப் படையை யழித்துவிட்டேன். இந்த வெற்றியைக் காட்டிலும் உயர்ந்த காரியம் ஒன்று உண்டு. அதையும் சாதித்து வித்யுத்கர்ப்ப மன்னனின் பாதங்களில்

சமர்ப்பிக்க வேண்டும். ஆ! சாக்கியர்களின் அடை யாளம் முழுவதும் அழிந்துவிட வேண்டுமானல் இந்த புத்தன் இல்லாமல் ஒழியவேண்டும் திடுக் கிடாதே. அவன் இருந்தால், கோசலர்கள் சாக்கியர் களை நிர்மூலமாக்கிவிட்டார்கள் ஒன்று இதர ஜாதி யைச் சேர்ந்த மக்களின் உள்ளத்தில் நம்மீது துவே ஷமே தோன்றிவரும். அந்த வெறுப்புணர்ச்சியை நிரப்பியே வருவான். ஆதலால் அவனையும் இந்தத் தாக்குதலின் ஒழித்துக்கட்ட விரும்புகிறேன்.

ஆள்: ஆனல் தாங்கள் உயிரோடு இங்கிருந்து நழுவு வதே முடியாது போலத் தோன்றுகிறதே.

சண்டன்: அடே, "இந்தச் சாக்கியர்கள் புத்த பகவானு டைய கட்டளையை மீருமல் இருக்கவேண்டுமானல் போரிடுவதை நிறுத்தவேண்டும். அப்போது நாமும் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்வோம். புத்தரும் அவர்களை ஹிம்சை வழியிலிருந்தும் திருப்ப வேண்டும்," என்று இவ்வாறு முன்னடியே அந்த புத்தனுக்கு அழைப்பு அனுப்பியிருந்தோம். அதற் காக நாளை இரவு இங்கு வருவதாக அவனும் சம்ம தித்திருந்தான். இன்னும் பொழுது விடியவில்லை. அவன் இப்பொழுது காட்டின் அருகிருந்து இவ்வழி யாக அப்பாலுள்ள விஹாரத்துக்கு வரக்கூடும். ஆம்! அந்த வழியில் நீங்கள் யாவரும் பதுங்கிக் கொண் டிருங்கள். அவன் வரவில்லையென்ருல் நழுவி விட வேண்டும். அவன் வந்தாலோ, அஹாஹா, அவன் தலையை அப்படியே வெட்டித் தள்ளி இந்தச் சாக்கிய அழிவின்மேல் ஒரு கலசம் போல ஏற்றுவேன். இந்த வேலையில் எஞ்சியுள்ள நம் வீரர்கள் இறந்து போன

லும் கவலைப் படமாட்டேன். அவனது ஆயுதப் பரிகரிப்பின் உபதேசத்தால் சாக்கியர்கள் மெலிந்து அழிந்தாலும் அதனால் நமக்கு நல்ல பலனே ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் அவனது பிதற்றல் நமது மன்னனையும் மயக்கிவிடலாமல்லவா? ஆதலால் போங்கள், சிதறிக்கிடக்கும் சவங்களுக்கப்பாலுள்ள குவியலையும் தாண்டி அந்த வழியில் பதுங்கியிருங்கள்.

[எல்லோரும் போகிறார்கள்.]

சுலோசனை : (ரத்தம் சொரிய விரிந்த கூந்தலுடன் பிரவேசித்து) இந்தக் காரிருளில் போர்க்களம் முழுதும் ஒவ்வொரு பிணமாகத் தேடிப் பார்த்தேன். என் வல்லபர் காயமுண்டு கிடக்கும் இடம் தெரியவில்லையே. சண்டையில் எனக்குதவ நளினி வந்தபோது எங்கிருந்தோ எனது வல்லபனின் பலத்த கர்ஜனை கேட்டது. ஆருயிரே, சாக்கியர்களுக்காக முடிந்த மட்டும் பழிவாங்கியாயிற்று. இனி உயிரை விடவேண்டியதே. இருந்தாலும் ஒரு கணமாவது அதை விடாமல் பிடித்துத்தான் ஆகவேண்டும். போர்க்களத்தில் கிடக்கும் என் வல்லபருக்குத் தீ மூட்டும் வரையிலாவது இந்த உடலைச் சுமந்தே தீர வேண்டும். வல்லபா, உங்களைப்பற்றி விசாரித்தறியவும் ஆட்கள் மிஞ்சவில்லையே. தெய்வங்களே, பூதங்களே, பிரேதங்களே, வன தேவதைகளே, உங்களில் யுத்த தேவியர் யாரேனும் இருப்பாரானால் குச் சொல்லுங்கள். சாக்கியச் சேனாதிபதியும் வீர கேசரியுமான என் வல்லபர் காயமுண்டு எங்கு கிடக்கிறார்? ஆ! வல்லபா! யுத்த மஞ்சத்தில் என்னுடன்

கூடப் படுக்கவேண்டாமா? அவ்வாறிருக்க தனிமை யிலா இருக்கிறீர்கள்? நான் துணைக்கு வந்திருக் கிறேன். சற்று பொறுத்திட வேண்டும். வல்லபா! வல்லபா!!

வல்லபன் : (யுத்த களத்திலிருந்து சற்று எழுந்திருந்து) ஆ! இது என்ன? சுலோசனையின் குரல்போல் கேட் கிறதே. அவள் என்னைவிட்டு மரணத்தின் மறு கரையை யடைந்திருந்தாளே. அவள் குரல் அருகே தெளிவாகக் கேட்குமளவு நான் வெகு சமீபமாக வந்திருக்கிறேன். மூர்ச்சை யென்னும் தோணி என்னை விரைவில் இவ்விடம் சேர்ந்திருக்கிறது போலும்.

சுலோசனை : வ ல் ல ப ன், எங்கு இருக்கிறீர்கள்? வல்லபா!

வல்லபன் : அன்பே, சுலோசனு, உண்மையில் நீதானு?

சுலோசனை : (அங்கு ஓடிச் சென்று) அன்பா, நானே தான். நாதா, யாவற்றையும் வெறுத்துத் தள்ளி, உங்களைத் தொடர்ந்து வந்த சுலோசனுதான். மடி மீது இறந்துகிடந்த என்னைக் கீழே கிடத்திவிட்டு நீங்கள் தனியாகப் போருக்குப் பாய்ந்தோடியபோது நான் மிகவும் திடுக்கிட்டேன். மரணத்திலிருந்தும் கூட ஒரு கணம் விழித்துக்கொண்டு வாக்குறுதியின் படியே உங்களைத் தொடர்ந்து வந்து எதிர்ப்பட்ட பகைவர்களை வீழ்த்திக்கொண்டே தங்களது பாதங் களை யடைந்துவிட்டேன். காதல் மஞ்சத்துத் தோழரே, இந்தப் போர் மஞ்சத்திலும் எனக்கு இடம்

தரவேண்டுமல்லவா? ஆ! எனது கடைசியபிலாஷை நிறைவேறியது.

[பாடுகிருள்,]

காதலரங்கில் ஆடும் பெண்ணைக்
கணவன் அருகே காணலாம்:
சூதறியாத மஞ்ச மும்சரியே,
சாவுசிந்துபோர்முனையும் சரியே.

* * *

வல்லபன் : பிராணன்களே, எனது பொறி புலன்களின் கடைசி மூச்சு இதுதான். இந்த மந்தவொளியில் என் காதலியைப் பார்க்கச் சற்று அனுமதி தாருங்கள்.

சுலோசனை : ஆகா, அன்பரே, அந்தக் காமதேவனது காதல் மஞ்சத்தைப் போலவே செய்கடனுற்றிய போரின் மஞ்சமும் எவ்வளவு மெதுவாக இருக்கிறது.

வல்லபன் : அதனுலேதான் யுத்த தர்மப் படுக்கையான அறப்போரின் மஞ்சம் மங்களமாகவும் புண்ணியமாகவும் புனிதமாகவும் கருதப்படுகிறது

சுலோசனை: இத்தகைய மரணத்திஞல் தங்கள் வாழ்க்கை பயன் பெற்றதாகிவிட்டது. தங்கள் வரலாறும் சுபத்திலே முடிகிறது.

வல்லபன் : சுகத்திலும் துக்கத்திலும் முடிவதெல்லாம் நாம் எதைச் சுகமாகக் கருதுகிரேமோ அதைப் பொறுத்தேயிருக்கிறது. உலக நன்மைக்காக இருக்கும்வரை போரிடுவதே என் வாழ்நாளின் பேராசை. அது இன்று நிறைவேறியதால் மரணமே இன்பமான முடிவு. ஆ! சுலோசனு! என் அருகில்தானே இருக்கிருய்? எனது கடைசி வார்த்தை...

சுலோசனை: இதுவும் அவ்வாறே என் கடைசி வார்த்தை.

[அவனது மார்பின் மீது தலையை வைத்து விழுகிருள். அதே சமயத்தில் தீபமேந்தி விக்ரமசிம்மரும் படை வீரர் களும் வருகிருர்கள்.]

விக்ரமர்: இவ்விடம் எங்கிருந்தோ ஓசை கேட்டதே. இங்கு வந்து பார்ப்போம்—வாருங்கள். ஐயா, இவன்தான் எனது வீரமைந்தன் வல்லபன்; சாக்கிய வீரப் படைத் தலைவன் வல்லபன். ஆ! ஆ!! ஐயோ!—(அடக்கிக் கொண்டு) இல்லை, இல்லை. தன்யன்; தன்யன்; பிறவி பயனுடையதாகிவிட்டது. இவள்தான் என் மருமகள், வல்லபனின் தர்ம பத்னி, சாக்கியரின் போர்த்தெய்வம், சுலோசனை. நன்று, நன்று; மகளே, இவ்விரவு யுத்தப் போராட் டத்தில் சமர்புரித்த இந்தச் சாக்கிய இளம் வீரன் சுலோசனன் என் மருமகள் சுலோசனையே யென்று நீ கோசலரிடையே இடியெனப் போரிட்டபோதே தெரிந்துகொர்ண்டு நான் ஆனந்தத்தாலும் ஆச்சரி யத்தாலும் பரவசமானேன். இப்பொழுது இங்கு உன்னை ஒருமுறை மந்திர சக்தியால் கட்டுண்ட இடி யேறுபோல மரணப்படுக்கையின் மீது ஆருயிர் நாதனை யணைந்த வண்ணம் உயிர் நீப்பதைப் பார்த் தும் எனது மகிழ்ச்சியும் வியப்பும் இரட்டிப்பு ஆயிற்று. ஐயா, வீராதி மக்களான இந்தக் காதலர் களின் நியமந்தவருத காதலொழுக்கமானது துற வறத்தின் நியமந்தவருத பிரமசரிய வொழுக்கத்தைப் போலவே தூய்மையும் புனிதமும் கொண்டதாகும்; பரோபகாரத் தன்மையிலோ அதனிலும் உயர்ந்த

தாகும். சாக்கியர்களில் யசோதரா தேவி துறவறம் ஏற்றது முதல் ஸ்ராவிகா மகாபிக்ஷுணியென்று சொல்லப்படுகிருள். அது பொருத்தமானதே. ஆனல் காதலை வழிபட்ட இந்த இளங்கன்னியின் பண்பும் புலனடக்கமும் யசோதராவின் துறவறத்தைப் போலவே சிறந்ததாயினும் உலகம் கண்டிராத முறையில் தன்னையே முழுதாக அர்ப்பணம் செய்த காரணத்தால் அதனிலும் தியாகத்தில் உயர்ந்ததேயாகும். காதலை வழிபடும் மக்களே, உங்களது பவித்ரமான பிரேமையைக் காட்டிலும் பற்றற்ற துறவறமும் வேறுண்டோ? நல்லொழுக்கமும் வீரமும் மிகுந்த என் மருமகளே, வீரரில் சிறந்த ஆண் தகை வல்லபனுக்கு மரண மஞ்சத்தில் நீயளித்துள்ள உனது ஆலிங்கனமே உங்கள் காதல் வழிபாட்டின் கடைசி ஸம்ஸ்காரம் ஆகும். கடவுள் வழிபாட்டிலுள்ள அறவொழுக்கத்தைப் போலவே இதுவும் மங்களமும் புனிதமும் வாய்ந்தது; இது உலகின்கண் இளங் காதலர்களுக்கு மங்களத்தையே தரவல்லது.

*[சண்டன் படைவீரர்களுடன் எட்டிப் பார்த்துப் பதுங்கிய வண்ணம் வருகிருன்.]*

சண்டன்: நாம் எதிர்பார்த்தபடி அவ்வளவு ஆட்கள் விக்ரமனிடம் இல்லையே. மற்றும் இவர்கள் காயமடைந்தவர்கள். பாயுங்கள். புத்தனுக்கு முன்பாகவே இந்த வழி வந்துள்ள நமது வேட்டையை வெட்டி வீழ்த்துங்கள்.

*[கோசல அரசனுக்கு வெற்றி என்று கூச்சலிட்டுப் பாய்கிருர்கள்.]*

விரதத்தைக் கைவிட்ட விக்ரமா, நான் உன்னையே தேடிக் கொண்டிருந்தேன். இதை வாங்கிக்கொள்.

*[வாளை வீசுகிறான்]*

விக்ரமர் : அடே, துஷ்ட மிருகமே, நானும் உன்னையே தேடிக் கொண்டுதான் இருந்தேன். இதை வாங்கிக்கொள்.

*[வாளை யுயர்த்துகிறார்.]*

*[புத்தரும் சீடனும் பிரவேசிக்கிறார்கள்.]*

சீடன் : ஹா, ஹா, ததாகதரான புத்தர் உங்களிருவரையும் அமைதியாக யிருக்கும்படி யுபதேசிக்கிறார். ஏனென்றால் அவர் அமைதியை நிலைநாட்டவே வந்துள்ளார்.

சண்டன் : ஓடிப்போ, சிங்கத்தின் வாயிலுள்ள மானைப் பிடுங்குகிறாயா?

*[விக்ரமர் மீது பாய்கிறான்]*

புத்தர் : (விக்ரமரை யணுகி) விக்ரமரே. சேனாதிபதி சண்டரோ போர் வெறி மூண்டிருக்கிறார். தூண்டப்பட்ட பாம்பைப் போன்றுள்ள கோபத்தை யாராலும் அடக்கமுடியாது. ஆனால் நீங்களோ அறிவுள்ளவராயிற்றே. உங்களுக்கு எமது தர்ம சூத்திரம்தான் தெரியுமே. "சாந்தத்தால் சினத்தை வெல்லவேண்டும். நற்குணத்தால் தீயோரை மாற்றவேண்டும்."

சண்டன் : அடே, நீசமான புத்தா! என்னையா தீயோன் என்கிறாய்? கோசல சேனாதிபதியான நான் தீயவனா? உன் நாவையே அறுத்து விடுகிறேன் பார்.

*[புத்தர் மீது பாய்கிறான்]*

விக்ரமர் : (சண்டனையடித்து காயம் செய்து கீழேதள்ளி அவன் நெஞ்சின்மீது காலை வைத்து மிதித்து), பக வானே, தேவரீரது சாந்தத்தால் அவனது கோபம் சிறிதேனும் சாந்தமடைந்ததா? ஏன் இவன் இவ் வாறு வெறி கொண்டான்? நல்லோரைக் காக்கும் இந்த வாள் மாத்திரம் இடையே வராதிருந்தால் சாது சிரேஷ்டரான புத்தரைச் சண்டன் கொன் றிருப்பானே.

புத்தர் : எது எவ்வாருயினும் உங்களுக்கு இத்தகைய கொலை தகாத காரியமாகும், நீங்கள் துறவியல்லவா?

விக்ரமா : ஆ! அந்தக் காரணத்துக்காகவே, உலகைத் துன்புறுத்தி வந்த துஷ்டனை வெட்டி வீழ்த்தும் பொறுப்பு என் வாளைச் சேர்ந்திருந்தது. அதையும் செய்தாயிற்று. இந்தச் சண்டாளனைக் கடைசியில் நானே கொன்றேன். போரில் பட்டுள்ள புண்களால் சிதைவுற்ற இந்த எனது சடலம் இதோ ஒரு நொடிப் பொழுதில் மண்மேல் சாய்ந்திடப்போகிறது; ஆனாலும் இவ்வுடல் தனது செய்கடனைச் செவ் வனே செய்தபின்புதான் விழும்-நன்று! இவனுடலி னின்றும் பீறிட்டெழுந்த ரத்தத்தால் எனது துறவுக் கோலமும் இந்தத் துறவறவாளும்....

புத்தர் : என்றென்றும் கழுவினாலும் நீங்காத பாவக் கறையால் களங்கப்பட்டே யிருக்கும்.

விக்ரமர் : பகவானே, இந்தப் பிரத்யட்சமான, கண் கூடான வெளிச்சத்தில் சற்று வந்து பார்த்தால் உண்மை தெரியும். இன்னும் இது செந்நிறமாகவே யுள்ளது; கரு நிறமன்று, கண் படைத்தவர் யாவரும்

இதைச் சொல்ல முடியும். அத்தீயோனின் ரத்தம் தோய்ந்ததால், இந்தத் துறவின் ஆடையிலிருந்து வாழ்க்கை நோயும் வெளுத்த சாயமும் போய், உதய சூரியனைப் போலச் செந்நிறமே ஒளி பெற்றுத் திகழு கிறது. நாற்பது ஆண்டுகளாக வாளையேந்தாத துற வறத்தில் நான் சேகரிக்க முடியாத பரோபகாரத்தை யும் புண்ணியத்தையும் இந்த நொடிப் பொழுதில், கணக்கற்ற நிரபராதிகளுக்கு உயிர்ப் பிச்சை வழங் கிய இத் துறவியின் வாளைக்கொண்டே, சேகரித்து விட்டேன். உலக நன்மையையே உயர்ந்ததாக எண்ணிச் செயலாற்றுவதே துறவறத்தின் செங்கட ஞயின் அதை இன்று ஆர்வத்தோடு செய்தே யிருக் கிறேன். ஆதலால் நான் உண்மையான துறவி யாக, சன்யாசியாக, பிக்ஷுவாக, இன்றே விளங்கு கிறேன்.

**புத்தர் :** பெருந்தன்மை வாய்ந்த விக்ரமரே, இம்மண் ணுலகின் லாப நஷ்டப் பார்வையைக் கொண்டு பார்த்தால் உங்கள் மறுப்புரையின் நடத்தை மாசற்ற முறையில் சிறந்து விளங்கலாம்; ஆனல் மறுவுலகக் கருத்துடன் ஆராய்ந்தால் நீங்கள் ஏற்றுக்கொண்ட துறவறத்துக்கு உகந்த அஹிம்சை யென்னும் உயர் நோன்பிலிருந்து இக் கொலையால் தவறிவிட்டீர் என்றே சொல்லுவேன். இச்செயலால் உங்களைப் போன்ற பற்றற்ற உயர் ஞானியும் பெருந் தியாகியு மான பிக்ஷு சிரேஷ்டர் ஒருவர் நிர்வாணத்துக்கு; வெகு அருகே வந்தும் அதையடையாமல் இழந்து விட்டார் என்றே சொல்லுவேன்.

**விக்ரமர் :** தீயோனை சண்டனது கொடுமையால் இனி எண்ணற்ற நிரபராதிகள் ஹிம்சை யடையாதவாறே

நான் அவனை வெட்டி வீழ்த்திவிட்டேன். இந்தக் குற்றத்தின் காரணத்தால் எனக்கு நிர்வாண பதவி கிடைக்காவிடில் அத்தகைய நிர்வாணத்தை நான் எள்ளி நகையாடுகிறேன். எண்ணற்ற மக்களுக்கு நேர்ந்திடும் கொடுமைகளுக்கே உதவுவதால் அடையப்பெறும் நிர்வாணமும் ஒரு நிர்வாணமா? அது நரகமேயாகும்.

*[தர்மன் கண்முன் தோன்றுகிறான்.]*

தர்மன் : ஆனால் ஹே! உயர்ந்த கர்மயோகியான வீர சிரேஷ்டனே, நீ நிர்வாணம் இழந்தவனாக மாட்டாய். அதற்கு மாறாக இந்த ஆத்ம ஆகுதியினால் நிர்வாணபதத்தை யடைந்துள்ளாய் ஏனென்றால்,

எண்ணில் யோகத்துறவியும்,
போர்முனை
ஏகியே வுயிர் நீத்திடும் வீரனும்
மண்ணில் இவ்விரு ஆண்தகை யாளரே
மாசில் சூரியமண்டலம் மீறுவர்.

விக்ரமர்:— ஹே தெய்வீக புருஷனே, நீ யார்? தேவனோ, அன்றி தேவதூதனோ?

தர்மன்:— மக்கள் அறம் யாவினுக்கும் இருப்பிடமான தர்மமே யான் புத்த தேவனே, நீ துறவிகளுள் சிறந்தவனாவாய், மக்களினத்துக்கு நீயிழைத்துள்ள உதவி எல்லையற்றதே. இந்தச் சாக்கிய ராஜ்யமும் சாக்கிய ஜாதியும் இன்று அழிந்தனவாயினும் இவை யிரண்டும் மண்மீது உன்னைத் தோற்றுவிப்பதான தமது வாழ்க்கைக் கருத்தினை நிறைவேற்றிய பின்னரே அழிவெய்தினவாதலால் அவைகள் அழிவற்ற சிரஞ்சீவிகளேயாகும். உனது குளிர்ச்சி

பொருந்திய எளிய தர்மோபதேசத்தால் பரவச முற்று, தேவர்களும் தானவர்களும் மாந்தர் குலங் களும் உனது ஜன்ம பூமியை யாவற்றினும் புனித மான புண்ணிய பூமியாகக் கருதித் தேர்ந்து, இதற்குத் தத்தமது ஆழ்ந்த பக்தியை விளக்கவல்ல வணக்கங்களைச் செலுத்துவதற்காக, இம் மண்ணுல கின் மூலைகளிலிருந்தும் திரண்டு வந்து, இந்தச் சாக்கிய ஜாதியின் இதிகாசத்தையும் புராணத்தையும் பயிற்சி செய்வார்கள். மன்னர்களும் சக்ரவர்த்தி களும் தமது மகுடங்களையும் உயர்ந்த மாணிக்கங் களையும் உனது உருவத்துக்கும் சிலைக்கும் சூட்டி வழிபடுவார்கள். பலயுகங்களாக மண்மீது எவரையும் வாழ்த்தி வணங்கியறிந்திராத கோடானு கோடி மாந்தர்கள் தியான நிலையில் உள்ள உன் உருவத் தின் திருவடிகளில் சிரந்தாழ்த்திப் பணிவார்கள் ஹே பரிவ்ராஜக மகாகர்ம சன்யாசியான புத்தனே நீ நிர்வாண பதவியையடைய உரிமையடைந் துள்ளாய். ஆனால் வீரர்களில் உயர்ந்தவனும் தூய கர்மயோகியுமான விக்ரமனே, நீயும் அதே நிர்வாண பதவியை யடைய உரிமையடைந்திருக் கிறாய் ஏனெனில் மக்கள் இனத்துக்கே மிக்க நன்மையை நாட்டும் பொருட்டுஉனதுயாவற்றையும் துறந்து, வலியவந்த போரில் உலக நன்மையின் பொருட்டுப் போர் செய்து உலகை வருத்தி வந்தவனை வதை செய்தாய். இதுவே உனது தர்மத்தின் முக்கிய சாரமென்று தேர்ந்தாய். அதன் பொருட்டு நீ உன் உயிரையும் வழங்கி விடப் பின் வாங்கவில்லை. துரதிருஷ்டவசமாக பிற்றைய காலத் தில் புத்தனைப் போல் உனது நினைவுகள் தனிப்பட்டு

வழங்கி வராமல், பிற்காலத்தவர் தனிப்பட்டமுறை யில் உனது பெயரை மறந்திட்டாலும், புகழ் என்பது இவ்வாறு தான் தகுதிக்குத் தக்க முறையில் அமை யாமல், இருந்தும் இல்லாததாக நிலேயற்றிருக்கும். மற்றும் உனது கர்மயோகத்தின் உண்மையை மறந்த உன் சாக்கிய ஜாதி, ஆயுத பலத்தை அலட் சியம் செய்து விவசாயத்தையும் போர்த் தொழிலேயும் காதல் வாழ்வையும் அளவுக்கு மீறிப் புறக்கணித்து மெலிவுற்று. வலிவில் ஓங்கிய தீயோரின் ஹிம் சைக்கு பலியாகிக் கொடும் தண்டனேக்கு ஆளாகிய தைப் போலவே இந்த ஹிந்து நாடு முழுவதும் அதே காரணத்திஞல் யவன, ஹூண, சாகர்களின் அரக்கத் தன்மை பொருந்திய ஆக்கிரமிப்புக்கு பலியாகி வீழ்ச்சியுறும். இன்று சாக்கிய ராஜ்யத் துக்கு நேர்ந்துள்ள அழிவானது நாளேய ஹிந்து நாடு முழுவதற்குமே நேரிடப்போகிற அழிவுக்கு ஒரு எடுத்துக் காட்டேயாகும்; சிறியதொரு அளவிலே காலன் செய்து பார்த்த முதல் சோதனேயே இது வாகும். வீர சிரேஷ்டஞன விக்ரமா துறவறத்தில் காணும் இகபர நன்மைகளேக் காட்டினும் உயர்ந்த உலக நன்மைகளேக் நாட்ட வல்லதென்று நீ யுபதே சித்துக் கடைப்பிடித்த இந்தச் சுபகாரியத்தில் நேரிடும் துன்ப நிலேயை விடுவிக்கவல்ல சாதனம் கர்மயோகமேயாகும். அதையே சக்தி வழிபாடாக நம்பிப் பணியாற்றுவதால் இவ்வுலகிலும் மறுவுல கிலும் மாந்தரிடை நிலேபெற்று நிற்கும் பேரறத்தின் உருவமும் நோக்கமும் திண்ணென வுறுதியுற்று நாட்டப் பெறும். இக்காரணத்தால் நான் தேர்ந்த உயர் முடிவு இதுதான்.

துறவும் பற்றுதல் நீங்கிய தொழிலும்
திண்ணிய நன்மை பயப்பன வாயினும்
துறவறத்தினும் பற்றுகள் நீங்கிய
தொழில் முறையறம் சால் புடைத்தாகுமே.

(ஆறும் காட்சி முற்றும்)

நாடகம் முற்றும்

ஓம் தத்ஸத்

★

UNIVERSITY EXTENSION LIBRARY
12 MAR 1961
MADURAI